கணேஷ் & வசந்த்

In

# யவனிகா

சுஜாதா

# யவனிகா

சுஜாதா

உயிர்மை
பதிப்பகம்

# 1

'புதிய வண்டி வாங்க வேண்டாம்!' என்று சொல்லியும் வசந்த் பிடிவாதமாக லோன் எடுத்து வாங்கி அதை வாசலில் கொண்டு நிறுத்தியதில் கணேஷுக்குக் கடும் கோபம். "இத்தனை பெரிய வண்டி எதுக்குடா... ஏறத்தாழ ஓனிக்ஸ் லாரி மாதிரி இருக்கு!"

"பாஸ், கேஸ் காகிதங்களுக்கு 'ஜென்'ல எடம் போறலை. சில சமயம் ரெண்டு பேரும் கதவுக்கு வெளியில பிரயாணம் செய்ய வேண்டியிருக்கு. அப்பால கட்சிக்காரங்களை ஆட்டோல வரச் சொன்னா வக்கீலை மாத்திடறாங்க."

"எனக்கென்னவோ டி.வி—ல மகனோட அமிதாப் வர்ற விளம்பரத்தைப் பார்த்து வாங்கிட்டன்னு தோணுது!"

"எஃப்.டி.வி—யில அமிதாப் வர்றாரா என்ன?"

"அல்லது கேர்ள் ப்ரெண்ட்ஸ்கிட்ட ஜெர்க் விடறதுக்கா?" என்றான் கணேஷ்.

"பரவாயில்லை... பாஸ்... தமிழ் நல்லா இம்ப்ரூவ் ஆயிருக்கிங்க."

"சகவாசம் அப்படி."

"பாஸ்... அருள்மிகு வக்கிர காளிமாதா இன்ஜினீயரிங் காலேஜ் மொஃபசல் பொண்ணுங்ககூட வேன்ல ஏற மாட்டாங்க. ஒரு மாட்டிஸ், சாண்ட்ரோ அல்லது அதம பட்சம் யமஹாக்குத்தான் வர்றாங்க. ரொம்ப ஸ்மார்ட்டா ஆயிட்டாங்க"

"பார்க் பண்ணவே இடம் இல்லை. இத்தனை பெரிய வண்டி, பெட்ரோல் விக்கிற விலையில..."

"டீசல் பாஸ். ஒரு லிட்டர்ல செங்கல்பட்டு வரை போகலைன்னா வலது கையைக் கழட்டிக் கொடுக்கறேன்னிருக்காரு சேல்ஸ்மேன். அத்தனை எகனாமிக்கல். ஜப்பான் இறக்குமதி. அப்படியே பூ கணக்கா ரெமி மார்ட்டின் உள்ள போறா மாதிரி போவுது."

"மறுபடி குடிக்க ஆரம்பிச்சியா?"

"சாஸ்திரத்துக்குக் கால் இன்ச் பாஸ். அதும் எப்பவாவது திருவள்ளுவர் தினம், அம்பேத்கர் தினம், ராமானுஜர் திருநட்சத்திரம்னு... என்னா பிக்—அப்!"

"எத்தனைடா கொடுத்தே?"

"இப்பல்லாம் காசு கொடுக்க வேணாம். கையெழுத்து... அவ்வளவுதான்."

"அதுக்கப்புறம் அடுத்த ஜன்மம் வரைக்கும் தவணை கட்டணும்."

"ஆனா, அடுத்த நிமிஷம் வண்டியைக் கொண்டுவந்து நிறுத்திர்றாங்க. அதும் கணேஷ் கையெழுத்துன்னா..."

"ஒரு தவணை கட்டிருக்கல்ல?"

"ஹவுது! மத்ததை நூறு இன்ஸ்டால்மெண்ட்ல தத்திதத்திக் கட்டிரலாம்."

"அப்ப நம்பிக்கை இருக்கு. தவணை கட்டாட்டி, வேனை ஓட்டிக்கிட்டுப் போயிடுவாங்கல்ல?"

"பாஸ்... நம்ம மாதாந்திர வருமானம் அஞ்சு இலக்கம். இந்த மாதிரிக் கொஞ்சம் செலவழிச்சாத்தான் டாக்ஸ் பெனிஃபிட் வாங்க லாம். அடிக்கடி இன்கம்டாக்ஸ் கட்டறோம் ஞாபகம் இருக்கில்லை."

சும்மா சொல்லக் கூடாது. வேன் அருமையாக இருந்தது. சுட்ட செங்கல் நிறம். முன்–பின் பகுதிகளுக்குத் தனித்தனி ஏஸி. ஸீட்டுகள் பவ்பவ் என்று இருந்தன. முதுகுக் கண்ணாடிக்குக்கூட வைப்பர். வசந்த் உள்ளே ஜிலுஜிலாப்பெல்லாம் பண்ணி, ஆயிரம் வாட் சவுண்ட் சிஸ்டம் வைத்து, சி.டி. ப்ளேயர் வைத்து ஜெனிபர் லோபஸை அலறவிட்டான். என்ன என்னவோ ஹாங்காங், சிங்கப்பூர், அலங்காரக் குஞ்சல சஞ்சலங்கள், மேல்நாட்டு வாசனை, ரிவர்ஸ் கியர் போடும்போது 'சிநேகிதனே' பாட்டு. சுயம்வரத்துக்குப் போகும் பஞ்சகல்யாணிக் குதிரை போல் நின்றது. கணேஷ் பிரமித்தான்!

"என்னடாது... காரா சின்ன வீடா?"

"பாஸ்... இருக்கப்போறது மூணு வருஷம்!"

"அதுக்கப்புறம் சாவப்போறியா?"

"இல்லை, காரை மாத்தப்போறேன். 'வெங்கட்ராமன் அண்ட் வெங்கட்ராமன்'ல ஆறு மாசத்துக்கு ஒரு புது கார் மாத்தறாங்க. ஐ.டி. அட்வான்டேஜ் இருக்கு. அப்துல் ஜாஃபர் கேஸ் ஒண்ணு ஜெயிச்சுக் கொடுத்தமே. பர்மா பஜார்ல... திருட்டு விசிடி அரெஸ்ட் பண்ணியதை எல்லாம் பக்திப் படங்கள்னு ரிலீஸ் வாங்கிக் கொடுத்தமே..."

"ஆமாம்... எவிடன்ஸ் பத்தலைன்னு விட்டுட்டாங்க."

"ஜெயிச்ச சந்தோஷத்தில பாய், கடையே உன்னுதுன்னுட்டார். குட்டியா ஒரு டி.வி.கூட வெச்சுக்கலாமான்னு யோசிக்கறேன். நிறைய ஷகீலா படங்கள் வி.சி.டி. வெச்சிருக்கார். நல்ல பிரிண்ட்."

"உன்னை மாதிரி ஆளுங்கதான் இண்டஸ்ட்ரியையே நாசம் பண்றீங்கடா."

"தியேட்டர்ல காட்ட மாட்டேங்கறாங்களே."

இன்னமும் ப்ளாஸ்டிக் பிரிக்காத இருக்கைகளில் வீற்றார்கள். வசந்த் ஜன்னல் கண்ணாடியை இயக்க அது சுவாசித்தது. காருக்குள் பச்சை ஒளி விரவியது. பின்ஸீட்டில் 'எக்ஸ்க்யூஸ் மீ...' என்று குரல் கேட்டுத் திரும்பினான் கணேஷ். "மிஸ்டர் கணேஷ், உங்ககூட பேசணும். ஸாரி... உங்க வாட்ச்மேன் உள்ளே விட மாட்டேன்னுட்டார். வேற வழி தெரியலை... அதனால காருக்குள்ளே..." என்றாள்.

"திஸ் இஸ் கால்டு ட்ரெஸ்பாஸ்" என்றான் வசந்த்.

"அப்படின்னா..?"

"அத்துமீறல்! இதுக்கு அபராதம், ஜெயில்வாசம் உண்டு. களி உண்டு. ஐ.பி.சி. செக்ஷன் 441."

"கணேஷ் நான் உங்ககூட பேசணும்."

"பேசுங்க."

"நேரமாகும்."

"பாஸ்... வெங்கடாச்சாரிக்குப் பதினொண்ணுக்கு அப்பாயின்ட்மெண்ட் கொடுத்திருக்கோம். மிஸ், வாட் யுவர் நேம் இஸ்... நீங்க சாயங்காலம் வாங்க மூணு மணிக்கு..."

"அதுவரைக்கும் காத்திருக்க முடியாது."

"ஏன்?"

"என்னை அரெஸ்ட் பண்ணப் போறாங்க..."

கணேஷ் அந்தப் பெண்ணைப் பார்த்தான். வசந்த் ஏன் அவ்வளவு சுவாரஸ்யம் காட்டவில்லை என்பது புரிந்தது. மிகுந்த கற்பனை ஒத்துழைப்புடன் பார்த்தால்தான் அழகாக இருப்பாள் என்று தோன்றியது. ஏறக்குறைய பையன் போல் இருந்தாள் ஸாரி—தாள். வரிசையைத் திருத்தும் முயற்சியில் பற்களில் பிரேசஸ் போட்டிருந்தாள். அதனால் சிரிக்க மறுத்தாள். கையில் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியின் 'சோளாஸ்' புத்தகம் வைத்திருந்தாள். ஏறக்குறையத் திராவிடக் கழக ரேஞ்சுக்குக் கறுப்புச் சட்டை அணிந்திருந்தாள். பட்டன்கள் திறந்திருந்தாலும் உள்ளே அப்படியொன்றும் விசேஷமாகத் தெரியவில்லை. மேலும் மிச்ச சொச்ச உடலமைப்பையும் சட்டை மழுப்பியது. மேக்கப் இல்லை.

"நேரமாயிருச்சு பாஸ்."

"போலீஸ் எதுக்காக உங்களை அரெஸ்ட் பண்ண வர்றாங்க?" என்றான் கணேஷ். அவனுக்கு க்ளையண்ட் இஸ் எ க்ளையண்ட்.

"யவனிகாவுக்காக!"

"உங்க பேரா?"

"என் பேரு கௌரி."

"நினைச்சேன்; யவனிகாங்கறது தங்கையா?"

அவள் பொறுமையிழந்து, "கணேஷ், அது ஒரு பெரிய கதை. டயம் கொடுத்திங்கன்னா விவரமா சொல்றேன். இத்தனை டிராஃபிக் மத்தியில என் கதையைச் சொல்றதுக்குத் தயக்கமாக இருக்குது. அதும் இவர் என்னை முறைச்சுப் பாக்கறபோது எனக்குப் பேச்சு அடைச்சுப் போவுது ப்ளீஸ்..."

அவள் கண்களில் பயம் இருந்ததை கணேஷ் உணர்ந்தான்.

"பாஸ், வி ஆர் கெட்டிங் வெரி வெரி லேட்... ஏங்க, இறங்குங்க வண்டியைவிட்டு... என்ன அடாவடித்தனமா இருக்குது!"

கணேஷ், "ஒண்ணு பண்ணுங்க... கூட வாங்க. நாங்க ஜி.என். செட்டி ரோடு வரைக்கும் ஒரு கேஸ் விஷயமா போறோம்."

"தாங்க்ஸ்." என்று அழுந்தி உட்கார்ந்தாள்.

"பாஆஆஸ்!"

"ஓட்டுடரா புதுவண்டியை!"

வசந்த் தன் கோபத்தைக் காட்டி விருட்டென்று புறப்பட்டான். முன்ஸீட்டில் அவள் மூக்கு மோதி கண்ணாடி கழன்று விழுந்தது.

"கொஞ்சம் ஸ்லோவா ஓட்டுங்க." என்றாள்.

வசந்த், "இதுதான் ஸ்லோ. நான் ஃபாஸ்ட்டா ஓட்டினா ரோடுல கால்மணிக்கு அஸ்ஃபால்ட் எரியற வாசம் வரும்."

"போறப்ப என் கேஸ் என்னன்னு சொல்லட்டுமா?"

"பாருங்க பாஸ்... நேரம் 28 காரட் பொன்னு. கிடைக்கிற சந்தில நான் மூணு மேட்டர் ப்ரீஃபிங் பண்ணியாகணும். கம்முனு வந்திங்கன்னா திரும்பப் போறப்ப உங்க கேஸைச் சொல்லலாம் என்ன?"

"சரி."

கார் டீசல் என்றாலும் மௌனமாகவே ஜப்பானுக்கு நன்றியுடன் சென்றது.

"திஸ் கார் இஸ் ப்யூட்டிஃபுல்... எங்க வாங்கினீங்க?"

"திருவல்லிக்கேணி கோயில்ல... பேசாம வர்றீங்களா?"

அண்ணா மேம்பாலத்தின் கீழ் கதீட்ரல் சாலையிலிருந்து இடது பக்கம் திரும்பி சரேலென வலது பக்கம் திரும்பினான்.

"இந்த வழியாவா போறீங்க?" என்றாள்.

"பாருங்க, எனக்கு சென்னை சாலைகள் இடது உள்ளங்கை மாதிரி அத்துப்படி. இந்த அண்டர்பாஸ் வழியாத்தான் ஜிஎன்.செட்டி ரோட்டில நுழைய முடியும்."

"அது சரிதான்... ஆனா இந்த காரு அதுக்குள்ள நுழையுமான்னு..."

"ஏன் நுழையாது..." என அவன் சொல்லி முடிப்பதற்குள் அந்த கார் மேம்பாலத்தின் அடிப்பாதையில் நுழைந்து உயரம் போதாமல் அதன் கேரியர் கூரையைச் சிராய்த்து ஹர்ரக் என்று அமானுஷ்ய சத்தம் வந்து மாட்டிக்கொண்டு இன்ஜின் அணைந்து பரிதாபமாக நின்றது.

"ஷ்ஷிட்!" என்று ஸ்டியரிங்கை கைகளால் மோதினான் வசந்த்.

"என்னடா ஆச்சு... ஏன் நின்னு போச்சு?"

"பாஸ்... நான் 'ஜென்'னை ஓட்டறேன்னு நினைச்சுக்கிட்டு நுழைஞ்சுட்டேன்."

கௌரி "அதான் நான் சொல்ல வந்தேன்... அதுக்குள்ள..."

"பாருங்க... சொல்றதை முன்னால சொல்லியிருக்கணும். பஞ்சதந்திரக் குரங்கு மாதிரி மாட்டினப்புறம் சொல்லக் கூடாது."

"அப்பவே சொன்னனே."

"ர்ரர்ர்ர் இனிமேலும் வெறுப்பேத்தாதீங்க. புத்தம்புது கார்!"

"இப்ப என்ன பண்றது?"

"இன்னபா... காரு சிக்கிகிச்சா? பாத்து வரக் கூடாதா? வண்டி புச்சா..." என்று போகிற வருகிற ஆட்டோக்கள் எல்லாம் விசாரிக்க...

"பாஸ்... இடத்தைவிட்டு இரண்டு நிமிஷத்தில நாம விலகலைனா, அனுதாபத்தாலேயே கொன்னுடுவாங்க."

மேல்பாகம் நசுங்கி சரியானபடி மாட்டிக்கொண்டிருந்தது. "எப்படி அதை வெளியில எடுக்கறது?" என்றான் சுற்றுமுற்றும் வந்து. கணேஷ் கவலைப்படாமல் 'A Beautiful Mind' படித்துக்கொண்டிருந்தான். "காராஜுக்கு போன் பண்ணி யாரையாவது வரவழை" என்றான் புத்தகத்திலிருந்து கண்ணை எடுக்காமல்.

"ஒரு ஐடியா சொல்லட்டுமா?" என்றாள் கௌரி.

"கொஞ்ச நேரம் சும்மா இருக்கீங்களா?" என்று அதட்டினான் வசந்த். "இதை இப்ப ஓட்டினா கூரை முழுக்க தனியா வந்துரும். மாப்பிள்ளை ஊர்வலத்துக்குத்தான் பயன்படும். ப்யூட்டிஃபுல் கார்னு வாயை வெச்சப்பவே தோணிச்சு ஏதாவது விபரீதமாகும்னுட்டு..."

"நான் ஓட்டச் சொல்லலை... வேற ஐடியா."

"என்ன ஐடியா?" என்றான் கணேஷ்.

"சக்கரங்கள்ல கொஞ்சம் காத்தைக் குறைச்சுட்டா ஒரு இஞ்ச் உயரம் குறையும்."

கணேஷ் யோசிச்சு "ப்ரில்லியண்ட்" என்றான்.

வசந்த், "இதை நான் அப்பவே யோசிச்சேன்" என்றான்.

அவள் கொடுத்த யோசனையின்படி கொஞ்சம் காற்றை

இறக்கியதும் வேனை விடுவிக்க முடிந்தது.

"பக்கத்தில் பெட்ரோல் பங்க்ல காத்து போட்டுக்கலாம்" என்றாள்.

"தெரியும். இதெல்லாம் சொல்ல வேண்டியதில்லை."

கணேஷ் அவளை நேராகப் பார்த்தான். "வசந்த், திஸ் கேர்ள் இஸ் வெரி ஸ்மார்ட்! லாட்டரல் திங்கிங் இருக்கு."

"வசந்த்துக்கு என்னைப் பிடிக்கலை. நான் அழகா இல்லை." என்றாள். அவள் கண்களில் நீர் தெரிந்தது.

"மை காட்... நெஞ்சு நக்கல்ஸ்..? மிஸ் கௌரி, எனக்கு - உங்களை - ஜாக்கெட் தெச்ச தையக்காரன்கிட்ட மும்தாஜ் சொன்னாப்பல - பிடிக்கிறது."

"தையக்காரனா..?"

"புரியலைன்னா, விட்டுத் தள்ளுங்க... உங்களுக்கு மெக்சிக்கோ சலவைக்காரி ஜோக் தெரியுமா?"

"தெரியுமே! 'மூணாவது ஜென்டில்மேன் தன் பெயரையும் அட்ரஸையும் கொடுத்துவிட்டுப் போகட்டும்'தானே?"

"ஆளை விடுங்க."

வண்டி மெள்ளச் சென்றுகொண்டிருந்தது. சிக்னலில் வழிப்போக்கர்கள், "புது கார் பாரு... ஏன் வாத்தியாரே ஜொறுங்கிருக்க?" என்று கேட்க வசந்த், "வேண்டுதல் தலைவா" என்றான்.

கணேஷ், "நாம போறது என்னடா கேஸ்? சட்டுன்னு சொல்லு."

"மூணரை லட்சம் கேக்கறாங்க பாஸ்."

"ஓ! சினிமா கம்பெனியா? நீ என்ன சொன்னே?"

"இருபத்தஞ்சாயிரத்துக்கு செட்டில் பண்ணிரலாம்னேன். அதுவே டி.வி. அறிவிப்பாளர் சொல்றாப்ல 'பகன் கொல்லை'. கோர்ட்டுக்குப் போனா, ஒரு பைசா கிடைக்காது. கிடைச்சாலும் அப்பீல் பண்ணியே தள்ளிருவோம்னேன். மானப் பிரச்னையாம்... தமிழ் சினிமாவுல யாருடைய மானமும் மூணரை லட்சம் பெறாதுன்னேன். பார்த்துரலாம்ங்கறார் ஐயங்கார். தீவிர ஹிந்துத்வா!"

"அவுட் ஆஃப் கோர்ட் செட்டில் ஆக மாட்டாங்களே..?"

"மாட்டாங்களாம்!"

"லா பாயிண்ட்டை அவுத்துவிடு."

கௌரி, அவர்கள் இருவரையும் பெரிய விழிகளுடன் கவனித்துக் கொண்டிருந்தாள். கணேஷுக்குக் கண்களால் மாலை போட்டுக் கொண்டு, தாடையை முன்ஸீட்டின் பின்பகுதியில் வைத்துக் கொண்டு... தெண்டுல்கரைப் பார்க்கும் சிறுவன் போல!

"ஃபிலிம் கம்பெனி பெரிய கம்பெனிதான். லீகல் அட்வைஸர், வரதாச்சாரி. காண்ட்ராக்டெல்லாம் பக்காவா போட்டிருக்காங்க..."

"காண்ட்ராக்ட்ல டைம் பார் இருக்கா?"

"அதுதான் கொஞ்சம் குழப்படியா இருக்கு. மூணரை லட்சமே குறைச்சல்... ஒரு முப்பது லட்சம் நஷ்டம்ங்கறாரு! உட்டாலக்கடி... வேணும்னா இருபத்தாறு கொடுக்கறோம்னேன்."

"லட்சமா..?"

"நீங்க வேற... ஆயிரம்!"

"ப்ரிசிடென்ட் இருக்கா... ஹாலிவுட்ல ஏதாவது இருக்குமே..?"

"அங்க எல்லாமே pay and play."

"அவளுடைய வக்கீல் வாதம், ரெடியாத்தான் இருந்தேன்... அவங்க பயன்படுத்தலைன்னா, என்ன செய்ய முடியும்?"

"தமிழ் பேசுவாளா?"

"என்ன பாஸ் கேள்வி? தமிழ் சினிமால தமிழ் பேசற கதாநாயகிங்க யாராவது உண்டா? சில வேளையில கேனத்தனமா கேக்கறீங்க..."

"டேய்... நான் சினிமாவே பார்க்கறதில்லைடா!"

"கோடம்பாக்கத்தின் தேசிய மொழி தெலுங்கு பாஸ்... தேசிய உணவு பான்பராக்..."

"நீங்க எந்த நடிகையைப் பத்திப் பேசிக்கிட்டிருக்கீங்க?" என்றாள் கௌரி.

"தமிழ்ல தேஜோமயி சௌத்ரி, மலையாளத்துல ஓமனக் குட்டி, தெலுங்குல ஜெயகல்பனா... ஐ திங்க் ஷி இஸ் எ பெங்காலி... ஆனா, கொஞ்சம் கொஞ்சம் தமிழ் பேசறா!"

அவள் கண்கள் பிலால் கடை சாஸர் அளவுக்கு விரிந்தன. "உங்களுக்கு தேஜூவைத் தெரியுமா?"

"அவங்கதான் என் க்ளையண்ட்!"

தேங்கா பத்தை கிடைத்த எலியைப் போல ஒரு சத்தம் எழுப்பினாள்.

"என்னாச்சு..?"

"ஐ எம் த்ரில்டு... நாம தேஜூவைச் சந்திக்கப்போறமா?"

"இல்லை... அவர் வக்கீலை! எங்களுக்கெல்லாம் அந்தப் பாக்கியம் கிடையாது..."

அவள் முகம் விழுந்தது.

"ஒருக்கால் பாத்தா, அவங்ககிட்ட ஒரு ஆட்டோகிராப் வாங்கித் தர்றீங்களா?"

"நிச்சயமா... அதர்னே எங்க வேலை!"

ஜி.என். செட்டி ரோட்டிலிருந்து விலகி அரைவட்ட மைதானச் சந்தில் 'அட்வகேட் அண்ட் நோட்டரி பப்ளிக்' என்று போட்டிருந்த ஒரு வீட்டின் முன் வசந்த் மண்டை நசுங்கிய புதிய வண்டியை

நிறுத்தினான்.

வேதாந்தாச்சாரி, வெங்கடாச்சாரி இருவருமே இருந்தார்கள். வேதாந்தாச்சாரி 'க்ரியேட்டிவ் ஃபிலிம்ஸ்' கம்பெனியின் வக்கீல். அவர்கள் கொடுத்த அட்வான்ஸைத் திரும்பக் கேட்கிறார்கள்.

வெங்கடாச்சாரி, நடிகையின் வக்கீல். 'கால்ஷீட் கொடுத்தாயிற்று... நீங்கள் பயன்படுத்தாததற்கு நான் பொறுப்பல்ல' என்கிற வாதம். கோர்ட்டில் வாதாட கணேஷைக் கேட்டிருக்கிறார்.

"கணேஷ், என்ன இப்படி லொள்ளு பண்றீங்க..? இருபத்தஞ்சாயிரமா... ஒரு நாள் ஷூட்டிங் எக்ஸ்பென்ஸ் எத்தனை தெரியுமா?"

"இது யாரு புதுசு... ஜூனியரா?"

"வருங்கால க்ளையண்ட்... பேரு மண்டோதரி, ஸாரி... கௌரி!"

"இவங்ககிட்ட ஏம்மா வந்தீங்க..? ரெண்டு பேரும் மொடா முழுங்கியாச்சே!"

"வேதாந்தாச்சாரி... அநியாயம்... ஏம்ப்பா, மூணரை கோடி கொடுத்து சினிமா எடுக்கறீங்க. மூணரை லட்சம் சுண்டைக்கா? என் க்ளையண்டுக்கு ஆப்பர்சூனிட்டி லாஸ்ட். எவ்வளவு தெரியுமா? வேற எங்கயாவது நடிச்சு காசு வாங்கியிருந்தா கேக்கலாம்."

"சார், நான் அவங்களைப் பார்க்க முடியுமா?" என்றாள் கௌரி.

"முடியுமே! இங்கதான் இருக்காங்க"

"இல்லைன்னாங்களே?"

"வக்கீல் வீட்டுக்கு சினிமா நடிகைங்க வந்ததா சரித்திரமே இல்லை."

"அது ஒரு மாதிரிப்பா... ஒரு பெரிய பாம்பே ஸ்டாரோட முடிச்சுப் போட்டு நிருபர்கள் துரத்தறாங்கன்னு இங்க தலைமறைவா இருக்கறதுக்கு வந்திருக்கா. பாக்கறியா? உருகிப்போயிடுவே! தட் கேர்ள் இஸ் ய டிலைட். சொத்தையே எழுதி வெச்சுருவ! கணேசா, ரெண்டு பேருக்கும் வேண்டாம்... இன் ப்ரின்சிபிள் ஒரு லட்சத்தைத் திருப்பித் தந்துடச் சொல்லு. ஜட்ஜ்கிட்ட சொல்லி வித்ட்ரா வாங்கிடறேன்."

"இருபத்தஞ்சாயிரத்துக்கு மேல ஒரு பைசா பேறாது."

"என்னடா... அடிமாட்டு விலைக்குக் கேக்கறே? உனக்கு எவ்வளவு இதுல?

"இருபத்தையாயிரம்..."

"முழுப் பணத்தையும் கொடுத்துடுங்க வக்கீல் சார்." என்று குரல் கேட்டு நிமிர்ந்தபோது, அந்தப் பெண் தேவதை போல மெள்ள இறங்கி வந்தாள்.

2

மனோரஞ்சிதம் என்று ஒரு வாசனைப் பூ உள்ளது. கணேஷைக் கேட்டால் அதன் Arlabotrys odorostissimus என்னும் பாட்டனி பெயரையும் சொல்வான். என்ன வாசனையை நினைத்துக்கொண்டாலும் அந்த வாசனை தரும் என்பார்கள். வசந்த், 'இது உட்டாலக்கடி' என்கிறான். ஆனால், மாடிப்படியில் இருந்து இறங்கி வந்த தேஜோமயி சௌத்ரி யார் போல் இருக்கிறாள் என்று நினைத்தாலும் அவள் போலவே இருந்தாள். சரோஜாதேவி, வைஜயந்தி மாலா, மாதுரி தீட்ஷித், ப்ரீத்தி ஜிந்தா, ஐஸ்வர்யா ராய், கரீனா கபூர் வரை எல்லார் சாயலும் இருந்தது. "வா தேஜு" என்றார் வெங்கடாச்சாரி. "இதான் லாயர் கணேஷ்."

"கணேஷ்... உங்க பத்தி கேல்விபட்டிருக்கேன்" என்றாள் வேற்றுமை உருபுகளைப் பற்றிக் கவலையேபடாமல். "ஸாரி... டமில் கொச்சை பேசுவேன்" என்றாள். சோபாவுக்கு வலிக்கும்போல உட்கார்ந்தாள்.

"தமிழ் பேசறீங்களே... அதுவே தமிழன்னை செய்த பாக்கியம்ங்க. மணியை முழுங்கின குயிலை முழுங்கினாப்பல" என்றான் வசந்த்.

"புரியலை. மஜாக் பண்றீங்களா?"

"கோடம்பாக்கம் வந்துட்டிங்கள்ல... ஒரு வருஷத்தில எல்லாம் தெளிவா புரிஞ்சுக்குவீங்க..."

அவள் விழித்தாள். "கொஞ்சம் தீரே தீரே பேசுங்க... ஆனா, நீங்க சொல்றது மாதிரி இன்னும் ரண்டு படத்தில ஓன் வாய்ஸ் டப்பிங்னு டைரக்டர் விஜி சொல்லிருக்கார்."

அவள் மாடிப்படி இறங்கினது தொடக்கம் அவள் மீதிருந்த பார்வையை வசந்த் அகற்றவில்லை. கண்கொட்டக் கூட மறந்திருந்தான். அவன் முகத்தில் முட்டைபோடப் போகும் கோழி போல அல்லது கவிதை எழுதப்போகும் வேலையில்லா பட்டதாரி போல ஒரு வித அவஸ்தை தெரிந்தது.

அந்தப் பெண் சில மணித்துளிகள் முன்தான் பிறந்து இன்னும் பாலிதீன் பிரிக்கவில்லை போலத் தோன்றினாள். பெரிய கரிய விழிகள். இரானிய நிறம். விழிகளின் தாக்கத்தைச் சமாளிக்க ஆஞ்சநேயரால்தான் இயலும். கெட்ட எண்ணங்

களையும் மனமஷ்டுகளையும் அலம்பிவிடும் மெல்லியல் பார்வை. இவள் கேட்டால் ஒரு காக்கடா பூவுக்குக்கூட கடல் கடந்து மலைகளைத் தாவி அசுரனைக் கொன்று கொண்டுவரத் தயாராயிருந்தான் வசந்த். கணேஷ்கூட சற்று அதிர்ந்துபோய் அவளைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டிய சிரமத்தில் இருந்தான். அவளுக்கு லேசான பூனைக் கண்ணா அல்லது நீல கோலி போல கண்களா தெரியவில்லை. காண்டாக்ட் லென்ஸாகவும் இருக்கலாம். அடிக்கடிக் கண்ணைச் சிமிட்டினாள். கச்சிதமான மார்பு. தமிழ் சினிமா கேட்கும் தேகக்கட்டு இல்லாத அவள் வெற்றி ஆச்சரியம்தான். எப்போதாவது விதிவிலக்காகக் கோடம்பாக்கம் ஓரிரு ஒல்லி நடிகைகளை அனுமதிக்கிறது. அந்த வகையில் வந்தவள்.

கௌரி அவளை "நீங்க நிஜம்தானா! தொட்டுப் பார்க்கலாமா?" என்றாள். நோட்டுப் புத்தகத்தில் எட்டு கையெழுத்து வாங்கிக் கொண்டாள். நண்ப நண்பிகள் யாருமே நம்பப்போவதில்லையாம்.

"பேர் என்ன?" என்று கேட்டு,

"டு கௌரி வித் லவ்" என்று உச்சரித்துக்கொண்டே கையெழுத்திட்டாள். விரல்கள் அதற்கே சிவந்தன.

" 'மிஸ். தேஜோமயி'ன்னு உங்களைக் கூப்பிட்டு முடிக்கிறதுக்கே நேரமாகும்போல இருக்கு."

"தேஜு கூப்பிடுங்க... இல்லை முன்னி. நீங்க என் ஃபாதர் சமான்."

"அவ்வளவு வயசா தெரியறாரா பாஸ்!"

"ஸாரி... ஸாரி! அந்த அர்த்தத்தில் சொல்லலை... அண்ணன் சமான். ஸாரி!"

"பரவாயில்லை, நானு?"

"நீங்க இன்னொரு அண்ணன்."

"வேற ரோலுக்கு சான்ஸ் இல்லையா? என் பேர் வசந்த்."

"வழியாதிங்க. அம்ஜத் பலி போட்டுருவான் வசந்த்" என்றாள் கௌரி.

"கணேஷ் சார், போல்னே சார் லாக்தானே... கொடுத்துருங்க. சம்பத் சார்கிட்ட சொல்லிட்டேன். எனக்கு அக்ரிமெண்ட் பேப்பரைத் திருப்பி வாங்கிருங்க. தலை சுத்துது..."

"அம்ஜத் யாரு? சம்பத் யாரு?"

"தனியா சொல்றேன், உங்ககிட்ட மட்டும். நீங்க ஃபிலிம்ஃபேர் படிக்கிறதில்லையா?" என்றாள் கௌரி.

"பாஸ் படிக்கிற ஒரே பத்திரிகை – வால் ஸ்ட்ரீட் ஜர்னல்."

"முழுப் பனத்தையும் கொடுத்துடலாம்னா எங்க உதவி தேவையே இல்லையே உங்களுக்கு..."

"போனா போவுது வக்கில் சார்... அம்ஜுகிட்ட சொன்னா உடனே கொடுப்பான். ஆனா, கேக்க மாட்டேன்."

கௌரி அவளிடம் " 'கண்ணோடு கண்' படத்தில் ப்ளைண்ட் கேர்ளா வந்திங்க. வசந்த், என்ன ஆறது தெரியுமா? ஆபரேஷன் பண்ண டாக்டரே மொலஸ்ட் பண்ணவன். என்ன ஒரு டைடலம்மா பாருங்க."

"அப்படியா? என்ன பண்றான்? கண் பார்வை வந்ததும் விட்ட இடத்தில் தொடர்றானா? பாத்தே ஆகணும்."

"அது என்ன கதை?"

" 'கண்ணோடு கண்' ஞாபகமில்லையா? என்னங்க நீங்க ஆக்ட் பண்ண படம்ங்க..."

"ஓ யா. ஞாபகம் வந்துருச்சு. எங்க! ஒரு நாளைக்கு சுவிட்சர்லாந்து, ஒருநாள் நியூஸிலாண்டு, ஒரு நாள் சவுத் ஆப்ரிக்கா, ஒரு நாள் பல்லாவரம் க்வாரினு என்ன கதை ஓடிக்கிட்டிருக்குன்னே மெமொரில இருக்கிறதில்லை. சம்பத் சார் மூணரை வருஷம் கமிட் பண்ணிருக்கார்."

"சம்பத்ங்கறது?"

"சம்பத் சார்" என்று அழைக்க, அடுத்த அறையிலிருந்து சம்பத் வந்தார். மாநிறமாக, அகன்ற நெற்றியில் ஒற்றை இட்டுக்கொண்டு இரண்டு செல்போனில் பேசிக்கொண்டு வந்தார். மாலை போட்டிருந்தார். கரிய உடையில் இருந்தார். "வெள்ளிக்கிழமை ஜெட்ல புக் பண்ணிட்டு வின்ஸர் மேனர்ல ரூம் போட்டுருங்க. பெங்களூர் ஷூட்டிங் முடிச்சுட்டு பை ரோடு ஊட்டி வந்துருவோம். ஒரு நாள் போதுமில்லை... பாட்ச் வொர்க்தானே..?"

"ஹாய்... ஐம் சம்பத். தேஜுஸ் பி.எஸ். கணேஷ், உங்களைப் பத்தி கேள்விப்படாதவங்க யாரு..? 'வணக்கம் தமிழக'த்தில வந்திங்கல்ல..."

"இல்லீங்க. ஸ்டார் நியூஸ்லதான் வந்திருக்கார்."

"நான்கூட லா படிச்சிருக்கேன்."

"எடம் மாத்திக்கலாமா?"

"வெரி ஃபன்னி. தேஜு சொல்றாப்பல கோவை கவுண்டருக்குக் கொடுத்துத் தொலைச்சுடலாம். 2003 வரைக்கும் கால்ஷீட் இல்லை பாருங்கோ" என்று ஒரு சிறிய இரண்டு இஞ்ச் அகல நோட் புத்தகத்தைக் காட்டினார். அதில் 'ரோஜாவோ ரோஜா – 17, என் மனதுக்கு இனியவளே – செப்டம்பர் பத்து பதினாலு, முதலை – 18, நியூஸிலாண்டு, மலேசியா, ஸ்டார் ஷோ' என்றெல்லாம் பரிபாஷையில் எழுதியிருந்தது.

"புரியலை... அந்தப் பொண்ணைப் போட்டுப் படுத்தறேள். அது தெரியுது" என்றான் வசந்த்.

"கமிட் ஆயிருக்கில்ல... அட்வான்ஸ் வாங்கியிருக்கில்ல..."

"பாதியைத் திருப்பிக் குடுத்துருங்களேன்."

"செலவழிச்சாச்சு... சுவாஹா! தேஜா மேடம்" என்று கைக் கடிகாரத்தைத் தட்டிக் காட்டி "பிரசாத் போகணும்மா."

"சிக்கல்தான்!"

கௌரி " 'கணவன் மனைவி'ல நீங்க டைவர்ஸ் பேப்பர்ங்களைக் கிழிச்செறியறீங்க பாருங்க, சூப்பர்ங்க."

"அப்படியா... யு லைக் இட். அம்ஜுக்குக்கூடப் போட்டுக் காட்டணும் குட்லக்ல..."

"அம்ஜு... அம்ஜு! ஹூ இஸ் திஸ் அம்ஜு?"

அப்போது அங்கே இருந்த போன் ஒலிக்க, அவள் கண்கள் விரிந்து உடல் பரபரத்தது. அதை சம்பத் எடுத்து, "அம்ஜத் ஷா" என்று அவளைக் கோபமாகப் பார்த்துக்கொண்டு போனை சட்டையில் தேய்த்துக் கொடுக்க, அவள் அதை ஆர்வத்துடன் பிடுங்கிக் கொண்டாள்.

"அலோ அம்ஜு... ஹவ்வார்யூ? ஸ்வீட்டிப் பை. தின் தின்னே நீந் நை ஆத்தி யார்?" என்று கிறீச்சிட்ட குரலில் பேசிக்கொண்டு கார்ட்லஸை எடுத்துக்கொண்டு அடுத்த அறைக்குச் சென்று கதவைச் சாத்திக்கொண்டாள்.

"சம்பத், பட்சி யாரு?" என்றான் வசந்த்.

"ஏன் கேக்கற போ வசந்த். ஒவ்வொரு நாளும் ஃப்ளைட்டைப் புடிச்சு வந்துர்றான். ஷெராட்டன்ல நம்ம செலவில தங்கறான். திங்கறான். போட்டு துவைக்கறான் இவளை. ஷூட்டிங்லகூட விடறதில்லை. ஸ்பாட்லயே வந்து உட்கார்ந்துக்கறான். அடிக்கடி 'பச்பச்சுன்னு' முத்தம் கொடுக்கறான். நன்னாவா இருக்கு நம்ம தமிழ் கல்ச்சருக்கு? போட்டோ எடுக்காம அடைகாக்க வேண்டியிருக்கு என்னடா காதல் இது?"

அவர் வாசனைப் பாக்கு டப்பாவைத் திறந்து சிறு பிளாஸ்டிக் ஸ்பூனில் வாயில் எடுத்துப் போட்டுக்கொள்ள, அதன் வாசனை பஸ் ஸ்டாண்ட்வரை பரவியது.

"இத்தனைக்கும் அவனுக்குக் கல்யாணம் ஆயி கிளி மாதிரி பொண்டாட்டி. ரெண்டு சின்னப் பொண்ணுங்க. இதுக்குப் பகவான் அழகையும் திறமையும் கொடுத்திருக்கார். ஆனா, கிறுக்கு. லைஃபை கெடுத்துக் குட்டிச்சுவராக்கணும்னு வலுக்கட்டாயமா நிக்கறா... எங்க கொண்டு விடும்னு தெரியலை... நீங்க புறப்படுங்க. இவ பேசி மாயறதுக்குக் குறைந்தபட்சம் நாப்பதஞ்சு நிமிஷம் ஆகும். எஸ்.டி.டி – லியே சொத்தை எழுதி வைங்கறான்" – உள்ளே அவள் பேசுவது 'லவ்யு லவ்யு அம்ஜி' என்று திரும்பத்திரும்பச் சொல்வது லேசாகக் கேட்டது.

"பாஸ்... வாங்க போகலாம். இனிமேலும் இந்த உரையாடலைக் கேட்டா பாயைத் தேட வேண்டி வரும். நமக்கு டயம் இல்லை. பாய் இருக்கா சம்பத்?"

"மாடியில இருக்கு."

"போய்ப் பிறாண்டுங்க. வர்றோம்."

திரும்பச் செல்லும்போது மண்டை நொறுங்கியிருந்த வேனை கணேஷ் ஓட்டி வந்தான்.

"ஸ்மூத்தாத்தான் போவுது. காம்ப்ரெஹென்ஸிவ் இன்ஷுரன்ஸ் இருக்கில்லை?"

"இருக்கு பாஸ்."

"இதுக்கெல்லாம் இன்ஷுரன்ஸ் பே பண்ணுவாளோ? வசந்த் பண்ண மிஸ்டேக் இல்லையோ?"

வசந்த் கடுப்பாகி, கௌரியை வம்புக்கிழுத்தான். காரணம் கணேஷ்தான். "இவ்வளவு இன்டெலிஜெண்டா அந்த டயர் விஷயமா யோசனை சொன்னீங்க, தேஜுகிட்ட ஆட்டோகிராப் கேட்டு வழியறீங்களே... ஒட்டலியே?"

"கணேஷ்... நீங்க அவ நடிச்ச படம் ஏதாவது பார்த்திருக்கீங்களா?"

"இல்லை."

"அதான். ஒரு முறை பாத்துட்டீங்கன்னா அது என்ன தோசிப்படமா இருந்தாலும் இவளுடைய நடிப்பினால ஒரு உசரு உசரும் பாருங்க... டி.வி–யிலகூட பார்த்ததில்லை?"

"டி.வி–யில பாஸ் நியூஸ் மட்டும் பார்ப்பார். நான் மிட்நைட் மசாலா மட்டும். அதுவும் சவுண்டு இல்லாம."

"எனிவே, நீங்க கொடுத்த யோசனைக்கு நன்றி, என்ன வசந்த்?"

"ரொம்பத்தான் இம்ப்ரெஸ் பண்ணினதா நினைச்சுக்காதீங்க. நான் ஒரு ரிடில் சொல்றேன். நீ எவ்வளவு புத்திசாலி பார்க்கலாம்.."

"ஐயோ... நான் உங்களோட எல்லாம் ஒப்பிட்டா மண்டுங்க."

"எவ்வளவு மண்டு பார்க்கலாமே, டேபிள் டென்னிஸ் தெரியுமா?"

"தெரியும். பிங்பாங்னுகூட சொல்வாங்க."

"அது என்ன பாங்கோ, அந்த சைஸுக்கு ரெண்டு பொண்ணுங்க உங்க காலேஜ்ல அந்த ஆட்டம் ஆடிக்கிட்டு இருக்கீங்க. ( "வசந்த்" – கணேஷ் அதட்டல்) அப்ப பந்து அடிச்சதில மிஸ் ஆயி ஹாலுக்கு வெளியே உருண்டு புல்லில் ஒரு பள்ளத்தில் விழுந்துருது. பள்ளம் ஆழமா இருக்கு. கையை விட்டா ரீச் பண்ண முடியலை. பள்ளம் கொஞ்சம் கோணலா வேற இருக்கு. குச்சியை விட்டு எடுக்கவும் முடியாது. வேற எப்படி பந்தை எடுப்பீங்க..?"

"சரியா புரியலை...?"

வசந்த் ஒரு காகிதத்தை எடுத்துப் படம் வரைந்து காட்டினான்.

அவள் கண்ணாடியைக் கழற்றி விட்டு சற்று நேரம் யோசித்தாள்.



"உங்களுக்கு விடை தெரியுமா? நல்லா வரையறீங்களே."

"தெரியுமே. ஆனா, சொல்ல மாட்டேனே" என்றான். "ராத்திரி முழுக்க யோசிச்சு மருகி மண்டி போட்டுக் கெஞ்சினா சொல்வேன். 'வாக்குவம் க்ளீனர்'னாதீங்க. பந்து உடைஞ்சுடும்."

"சொல்ல வேண்டாம். யோசிக்கிறேன்."

"குழப்பத்தில் உங்க மேட்டரை மறந்தே போயிட்டோம். என்ன சொல்லுங்க... யவனிகான்னு ஏதோ சொன்னீங்க. அது யாரு?"

"யவனிகாங்கிறது ஒரு சிலைங்க. சோழர் காலத்துப் பஞ்சலோகச் சிலை. 'யவனிகா ப்ரான்ஸஸ்'னு நான்கு தேவதைகளோட சிலை. ரம்பா, ஊர்வசி, மேனகா, திலோத்தமான்னு. நீங்க அதைப் பார்த்தீங்கன்னா தேஜோமயியை எல்லாம் மறந்துருவீங்க."

கணேஷ் பரபரப்படைந்தான். "வெயிட் எ மினிட்! 'யவனிகா ப்ரான்ஸஸ்'. ராஜேந்திரன் 2 திருமலவாடி இன்ஸ்க்ரிப்ஷன்ஸ்!?"

"ஆமாம்."

"யு மீன்... உங்ககிட்ட ஒரு யவனிகா இருக்கா?"

"இருந்தா... இப்ப இல்லை..."

"உடையார் வீர ராஜேந்திரன் செய்விச்சது?"

"அதேதான்."

"பாஸ்... இங்க என்ன ஓடிக்கிட்டிருக்குதுன்னு கொஞ்சம் சொன்னீங்கன்னா நான் மயிரைப் பிச்சுக்கறதை நிறுத்த சௌகரியமா இருக்கும்."

"வசந்த், யவனிகாங்கறது கி.பி.1060–61ஐச் சேர்ந்த அற்புதமான நான்கு சிலைகள். அதைப் பத்தி தனியா ஆராய்ச்சிப் புத்தகங்களே நாற்பது இருக்குது."

"சிலையா... வெண்கலச் சிலையா... மலேமலேல வர்ற மாதிரி..."

"அதையெல்லாம் பீட் அடிக்கும். அவ்வளவு அற்புதமான சோழர் காலத்துப் பஞ்சலோகச் சிலைகள். மொத்தமே நாலுதான் உலகத்தில இருக்கு. ஒண்ணு ஜெர்மனி ம்யூனிச்ல ஒரு ப்ரைவேட் கலெக்ஷன்ல. ஒண்ணு நியூயார்க் மெட்ராபாலிட்டன் மியூஸியம் ஆஃப் ஆர்ட், ஒண்ணு பிரிட்டிஷ் மியூஸியத்துல. நாலாவதுதான் எங்க இருக்குன்னு எத்தனையோ ஹேஷ்யங்கள்."

"நான்காவதுதான் த. ராஜ செல்லையாங்கறவருடைய ப்ரைவேட் கலெக்ஷன்ல இருந்தது. இந்தக் கையால தொட்டுத் தடவியிருக்கேன். குழந்தை மாதிரி பராமரிச்சிருக்கேன் கணேஷ் சார்."

"எங்க அது?"

"திருடு போயிருச்சு. அதுக்குத்தான் உங்ககிட்ட வந்திருக்கேன்" என்றாள்.

"என்ன மதிப்பிருக்கும்?" என்றான் வசந்த்.

"நான் சொல்றேன். மூணாவதுக்குப் பத்து மில்லியன் கொடுத்தாங்களாம். அதும் 1978–ல"

"ரூபாயா?"

"டாலர்."

"அதாவது நாப்பத்தஞ்சு கோடி..?"

"ஆமாம்! வசந்த் உங்க பந்தை எடுக்கறது எப்படின்னு தெரிஞ்சு போச்சு" என்றாள்.

## 3

“டேபிள் டென்னிஸ் பந்து தண்ணில மிதக்குமில்லையா வசந்த்?” என்றாள் கௌரி. அவள் கண்களில் குறும்பும் வெற்றியும் தெரிந்தது.

“மேலே சொல்லாதீங்க. உங்களுக்கு விடை தெரிஞ்சுருச்சு. நீங்க புத்திசாலி. நான் அம்பேல்” என்றான் வசந்த்.

“சில வேளையில் ‘நீ’ங்கறீங்க... சில வேளையில ‘நீங்க’. ஏதாவது ஒரு வழிக்கு வாங்க.”

“நான் உங்களை மறுபடி மடக்கற வரைக்கும் ‘நீங்க’ நீங்காது.”

“வசந்த்... புரியலை... தண்ணி, டேபிள் டென்னிஸ் பந்து... மேட்டர் என்னடா? நான் சரியா கவனிக்கலை.” என்றான் கணேஷ்.

“பாஸ்... ஒரு குழில பிங்பாங் பந்து விழுந்துருச்சு. கை விட்டு எடுக்க முடியலை. சேதமில்லாம எப்படி எடுப்பேன்னு மேடமைக் கேட்டேன்.”

“குழில தண்ணி கொட்டினா தானா மிதந்து வருது. இதைப் போய் ஒரு புதிர்னு! என்ன வசந்த், என்னை ஏமாத்திட்டீங்களே... இதைச் சொல்லுங்க. இதே குழில ஒரு குருவி விழுந்துருச்சு. கை எட்டலை. எப்படி எடுப்பீங்க?” என்றாள் கௌரி.

“அப்புறம் சொல்றேன்” என்றான் வசந்த்.

“உங்களுக்கு யவனிகா காணாமப் போனது கவலையில்லையா... அதை விட்டுட்டீங்களே...” என்றான் கணேஷ்.

“ஓ ஸாரி... என் ப்ராப்ளமே இதுதான். பஸில்னா முக்கியமான விஷயத்தை விட்ருவேன். உங்களை அழைச்சுட்டுப் போகத்தான் வந்தேன் கணேஷ். ராஜா சார் எப்படியாவது ரெண்டு பேரையும் கூட்டிக்கிட்டு வரச் சொல்லியிருக்கார்.”

“ராஜா சார்ங்கறது?”

“நான் சொல்லலையா... ராஜ செல்லையா. அவருடைய ப்ரைவேட் மியூஸியத்திலிருந்துதான் யவனிகா சிலை காணாமப் போச்சு.”

“இதில நீங்க எங்க வர்றீங்க...?”

"நான்தான் அதைத் தொலைச்ச பாவாத்மா. துர்பாக்கியவதி. எனக்குப் பதினஞ்சு நாள் கெடு கொடுத்து இருக்கார். அதுக்குள்ள கண்டுபிடிக்கலைன்னா போலீஸ்கிட்ட சொல்லி என்னை அரெஸ்ட் பண்ணிருவாங்க... பலி!"

வசந்த், "ஓ யா?" என்றான் சந்தோஷமாக.

"கதை ஆரம்பிக்கிறபோது மத்தியானத்துக்குள்ள அரெஸ்டுன்னிங்க?"

"அப்படிச் சொன்னாத்தானே வருவீங்க. டைம் கொடுத்திருக்கார். இப்ப நீங்க பத்து நிமிஷம் வந்துட்டுப் பெரியவரை சந்திச்சுக் கொஞ்சம் தைரியம் சொல்லிட்டு போறப்ப அப்படியே திருடுபோன இடத்தையும் பார்க்க முடியும்."

"என்ன வசந்த்?"

"சில்லறை புரளுமா?"

கௌரி தன் கைப்பையிலிருந்து பத்தாயிரம் ரூபாய்க்கான நூறு ரூபாய் கற்றைகள் இரண்டை எடுத்துக் கொடுத்தாள். "வாங்கிக்கங்க..."

"நோட்டு அடிக்கிறீங்களா..?"

"இது எதுக்கு?" என்றான் கணேஷ்.

"அவரை வந்து பார்க்க முன்பணம். உங்க நேரம் பொன்னானதுன்னு அவருக்குத் தெரியும்."

"நாங்க கேஸை எடுத்துக்கலைன்னா?"

"திருப்பிக் கொடுக்க வேண்டாங்க... நீங்க வந்து கேஸைப் பத்திக் கேட்கப் போற ஒரு மணி நேரத்துக்கு இதுன்னார்."

"பரவால்லை வசந்த். நாம நாரிமன், கே.கே. வேணுகோபால் ரேஞ்சுக்கு வந்துட்டோம்டா."

அவள் கையைப் பிடுங்கி நோட்டுக் கற்றையை அழுத்தி, "வெச்சுக்கங்க, எங்களைப் பத்தி தெரியாது அவருக்கு" என்றான் கணேஷ்.

"தெரியும். நான்தான் சொன்னேன்."

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"கோர்ட்ல பாத்திருக்கேன். அந்த மறுபிறவி கேஸை எடுத்துட்டு வாதாடினப்ப..."

"பாஸ்... தினேஷ்குமார், சீனு கேஸை சொல்றாங்க."

சென்னையில் இந்த மாதிரியான வீடுகள் உள்ளனவா..! க்ரீன்வேஸ் சாலையில் ஐயப்பா கோயில் தாண்டி அமைதியான இடத்தில் ஏக்கர் கணக்கான புல்வெளிகளைக் கடந்து பச்சை இருட்டில் ஒளிந்திருந்தது வீடு. காம்பௌண்ட் சுவர்கள் அதன் பிரம்மாண்டத்தை முழுவதும் மறைத்தன. திருட முயற்சிப்பவர்கள் பதினாறு அடி

ஏறி முள் கம்பியை வெட்டித்தான் மறுபுறம் குதிக்க முடியும். அவை மின்சாரக் கம்பிகள் போல பீங்கான் இன்சுலேட்டர்கள் தெரிந்தன. ஏழை நாடான இந்தியாவில் இம்மாதிரி வீட்டில் ஓரிருவர் வாழ்வது அநியாயம் என்று அந்த வீடே சொல்வது போல இருந்தது. வாசலில் இருந்த சிறிய எலெக்ட்ரானிக் சாதனத்தில் கௌரி தன் பையிலிருந்து ஐடி கார்டை எடுத்து ஸ்வைப்பினாள். பச்சை விளக்கு எரிய, மோட்டாரால் இயங்கிய கன இரும்புக் கதவு மெள்ளத் திறந்தது. கௌரியைப் பார்த்ததும் கூர்க்கா அடையாளம் கண்டுகொண்டதாகத் தெரிந்தது. வேனை அனுமதித்தான். அதன் மண்டை நசுங்கலைப் பார்த்து ஏதோ கேட்க விரும்பி, நமக்கு எதற்கு வம்பு என்று ரத்து செய்தான். உள்ளே பாதை வளைந்து வளைந்து போய்க்கொண்டே இருந்தது. முடிச்சு முடிச்சான கொரியன் கிராஸ் விரிந்த புல்தரையில் ஒரு புள்ளிநாய் அவர்களுடன் ஓடி வந்தது. கட்டடம் முழுவதுமே கண்ணாடியால் கட்டப்பட்டு பத்து சதவிகிதம்தான் கல் சுவர். மூன்று கார்கள் தாராளமாக நின்றுகொண்டிருந்த போர்டிகோ. அதில் ஒன்று பி.எம்.டபுள்யூ. அதன் பின்னால் கணேஷ் நிறுத்தின வேனை அது துச்சமாகப் பார்த்தது. சீருடை அணிந்த காரோட்டி கையுறைக் கைகளால் இல்லாத தூசியைத் தட்டிக்கொண்டிருந்தான். எதிரே நீச்சல்குளமும் டென்னிஸ் கோர்ட்டும் ஜிம்மும் தெரிந்தன.

வாசலில் நின்றுகொண்டிருந்த ராஜ செல்லையா அவர்களை வரவேற்றார். "வாங்க... கௌரி உங்களைப் பத்தி ரொம்ப சொல்லிச்சு. என்ன சாப்டறீங்க..? ஜூஸ் ஏதாச்சும்... பாமிக்ரனெட் ஜூஸ் நல்லது. டே அப்பா, ஜூஸ் கொண்டு வாப்பா. உக்காருங்க."

அவர்கள் வரவேற்பறையில் உட்கார்ந்தார்கள். ராஜ செல்லையாவுக்குக் கணேஷின் வயதுதான் இருக்கும். வழுக்கையால் மூத்தவராகத் தெரிந்தார். "நீங்க லா காலேஜ் எந்த இயர்? நான் முதல் வருஷம் படிச்சு நிறுத்திட்டேன்."

கணேஷுக்கு இப்போது அவரை ஞாபகம் வந்துவிட்டது. ஒரு பெரிய தொழிலதிபர் குடும்பத்தின் இரண்டாவது மகன். மூத்தவர் ஓடியாடி உலகை வென்று பல தொழில்களை வெற்றியுடன் கவனித்துக் கொண்டிருக்க... இவர் பந்தயக் குதிரைகள், பழங்காலச் சிற்பங்கள், கிளைடர், மைக்ரோலைட், ஏரோப்ளேன் ஓட்டுவது, ஃபார்முலா ரேஸிங், விண்ட் சர்ஃபிங், ப்ரிட்ஜ் ஆட்டம், அரிய தபால் தலைகள், பிரிட்டிஷ்காலத்து ஞாபக சாமான்கள், சதுரங்க ஆட்டம் இதில் எல்லாம் ஈடுபாடுடையவர். சென்னையில் உள்ள எல்லா நுனிநாக்கு ஆங்கில நிறுவனங்களுக்கும் புரவலர். எல்லா சந்தேக கேஸ் சமூகசேவகங்களுக்கும் ரிப்பன் வெட்டி. திருமணமாகவில்லை.

"கௌரி சொல்லிச்சா கணேஷ்? விலைமதிப்பில்லாததுங்க... 'யவனிகா ப்ரான்ஸஸ்'னு கலெக்டர்ஸ் சர்க்கிள்ல ரொம்ப பிரசித்தி பெற்றது. அதுல ஒண்ணு எங்கிட்ட இருக்கிறதே பலருக்குத் தெரியாது.

முட்டாள் பொண்ணு என்ன செஞ்சதோ... அலார்மை பைபாஸ் பண்ணிருச்சோ தெரியலை. கௌரி, உனக்கு இருக்குது நகத்தில ஊசி. அது மட்டும் கெடைக்கலை... பலி போட்டுருவேன். என்ன விலை தெரியுமா?"

"கௌரி சொன்னாங்க."

"இருந்தாலும் கோர்வையா சொல்லலை இல்லையா? ரொம்ப கெட்டிக்காரப் பொண்ணுங்க. ஒரே சமயத்தில நாலு விஷயத்தை யோசிக்கும். வெகுளி. என்ன பண்ணிருக்கா... ஏஸி ரிப்பேர்னு சொல்லி ஒருத்தன் வந்திருக்கான். கதவைத் திறந்துவிட்டிருக்கு. கண்காணிக்கலை. அதுபாட்டுக்குப் புத்தகம் படிச்சுக்கிட்டிருந்திருக்கு. லெளட்டிட்டான். வாங்க பார்க்கலாம்" என்று எழுந்து துடிப்பாக நடந்தார்.

"முதல்ல என் மியூஸியத்தைப் பாருங்க. நவாப் சாலர்ஜங் மாதிரி இல்லைன்னாலும் எங்கிட்ட சில அரும்பொருள்கள் உள்ளன."

வசந்த் – "அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். இந்த யவனிகா மேட்டரை மட்டும் சொல்லுங்க."

அவர் முகம் சுருங்கியது. "உண்மைதான். நீங்கள்லாம் பிஸி லாயர்ஸ். என்னை மாதிரி 'ஐடில் ரிச்'சுக்கு அதிக நேரம் செலவழிக்க முடியாது. கௌரி, அட்வான்ஸ் கொடுத்தல்ல?"

கௌரி, "இன்னம் எடுத்துக்கலை" என்றாள்.

"அட்வான்ஸ் பெரிசில்லை... நீங்க கேஸை எடுத்துக்க ஒரு இன்சென்டிவ். உங்களுக்குத் தேவைப்படறப்ப வெச்சுக்கங்க. வர்ற மகாலட்சுமியை வேணான்னாதீங்க."

"திருட்டு நடந்த இடத்தைப் பார்த்துடலாமா..." என்றான் கணேஷ்.

அவனுக்கு அந்தப் பணத்தை வாங்கிக்கொள்வதில் தயக்கம் தெளிவாக இருந்தது.

மாடிக்குச் செல்லும் மரப்படிகளிலேயே பற்பலவிதமான அரிய கலைப்பொருள்கள் இருப்பதை கணேஷ் கவனித்தான். பல நவீன வண்ணச் சித்திரங்களும் இருப்பதைப் பார்த்தான். ரெம்ப்ராண்ட், டெகா, வான்காஃப், பால் கோகேன் போன்றவர்களின் அற்புதமான பிரதிகள் இருந்தன. "இது ஒரிஜினல் ஷகால்" என்றார் ராஜா.

"தலைகீழா மாட்டிருக்கீங்களோ?"

"சே, இல்லைடா."

"இந்த இங்க்கு தெளிச்ச நாய் கடிக்குமா..?" அது அவர்களுடன் படி ஏறி வந்தது. ஈட்டி போன்ற உடல்வாகு கொண்ட டால்மேஷியன் கண்களருகே ரோஜா நிறம்.

"கூட நான் இருக்கறப்ப யாரையும் கடிக்காது."

கல்லால் சிலை, செம்பால் சிலை, காது மூக்கு உடைந்த புத்தர் தலை...

"இது அசோகர் காலத்துதுங்க" என்றார். "ஆப்கானிஸ்தான்ல அநியாயமா பாம் போட்டு துளைச்சான் பாருங்க. அதில ஒரு பீஸ் கேட்டிருக்கேன். போராபுதூர் தெரியுங்களா உங்களுக்கு? கம்போடியா?"

"எனக்குக் கிராப்பட்டிபுதூர்தாங்க தெரியும். திருச்சி."

சிறிய அழகான பெட்டிகளில் பழங்காலத்துப் பட்டாக்கத்திகளும் ஆபரணங்களும் வைத்து அழகாக ஒளி அமைக்கப்பட்டிருந்தன. "இந்தக் கத்தி ராஜராஜ சோழன் பட்டமேற்பின்போது பயன்படுத்தினது. என்ன வருஷம் தெரியுமோ..?"

"கி.பி. 985 ஜூன் 25-லிருந்து ஜூலை 27-க்குள்ள..."

"உங்களுக்குச் சோழ சரித்திரம் தெரியுமா?" என்றார் ஆச்சரியத்துடன்.

"அவருக்குத் தெரியாதது ஒரே ஒரு விஷயம் மட்டும்தான்– 'காதல்.' "

"நம்ம கட்சி" என்றார் ராஜா. "கணேஷ் நீங்க சொல்ற தேதி..."

"கோனேரிராஜபுரம் இன்ஸ்க்ரிப்ஷன்படி ராபர்ட் சிவெல் பேட்டை கால்குலேட் பண்ணிருக்காரு."

"கௌரி, கொஞ்சம் தள்ளியே நடங்க. பாஸ் கோனேரிராஜபுரத்தில புகுந்துட்டா வெளியே வர மாட்டார்."

"கணேஷ் யூ அமேஸ் மீ. இந்தக் கத்தியை மைக்ராஸ்கோப்பில பாத்தா உறைந்த ரத்தம்கூட இருக்கும். டி.என்.ஏ.கூட எடுக்க முடியும். இந்தக் காதணி குந்தவை பிராட்டி போட்டுக்கிட்டிருந்தது."

வசந்த் – "சார் எனக்கு ஒரு சந்தேகம். அந்தக் காலங்கள்ல பெண்கள் ஜாக்கெட் போட்டிருந்தாங்களோ?"

"வசந்த்!"

"பாஸ்... ஒரு சரித்திர ஆர்வத்தாலதானே கேட்கறேன்."

"அவங்கள்லாம் கச்சுன்னு ஏதோ அணிந்ததா சொல்வாங்க."

"அதெல்லாம் பத்மவாசன் படத்திலதாங்க. சிலைகளைப் பார்த்தா சும்மா காத்தோட்டமா ஃப்ரீயா இருந்தாப்லதான் தெரியுது. ரொம்ப அசௌகரியமா இருக்கும் இல்லையா கௌரி?"

அவள் "அந்த மாதிரி இருந்தா நல்லா இருக்கும். உண்மையிலேயே 'பிரா'ங்கறதுதான் கொஞ்சம் அவஸ்தை" என்றாள்.

"டெவில்ஸ் டிக்ஷனரில பிரா என்பது பெரும்பாலும் காலியாக இருக்கும் உடைன்னு சொல்லிருக்கு."

"அளக்காதிங்க. ஆம்ப்ரோஸ் பியர்ஸ் நானும் படிச்சிருக்கேன்."

"என் பாயிண்ட் என்னன்னா சோழர் காலத்துல பிரா

போட்டிருந்தாங்களா?"

"வசந்த்... இந்த உள்ளாடை ஆராய்ச்சியை அப்புறம் வெச்சுக்கலாமா?"

மாடிப்படி முடிவில் இருந்த பெரிய ஹாலில் அவர்கள் நுழைந்தார்கள். தரையில் பாலீஷ் போட்ட மரப்பாளங்கள் வேறிருந்தன. மத்தியில் நடுநாயகமாக ஒரு கண்ணாடிப் பெட்டி செங்குத்தாக நின்றிருந்தது. கண்ணாடி உடைந்திருந்தது. பெட்டி காலியாக இருந்தது. கசங்கிய நீல வெல்வெட் தெரிந்தது. கண்ணாடிச் சில்லுகள் அருகே சிதறியிருந்தன.

கணேஷ் "இந்தக் கண்ணாடியெல்லாம் யாராவது தொட்டாங்களா?"

"இல்லை. கலைக்காமத்தான் இருக்கு."

"பிரிண்ட்ஸ் எடுக்கலாம். இதுக்குள்ளதான் சிலை இருந்ததா..?"

"ஆமாங்க."

"அலார்ம் சிஸ்டம் ஏதாவது இருந்ததா?"

"நிச்சயமா. மியூனிக்லருந்து வாங்கி வைத்திருக்கேன்."

சுவரில் இருந்த கீ போர்டில் எண்களை ஒத்தினார். "அங்கே போய் நின்னு பாருங்க."

வசந்த் அதனருகில் நின்றதும் 'ஊய் ஊய்' என்று ஊளை கேட்டது.

"இந்த அறை பூராவும் இன்ஃப்ரா ரெட் பரவியிருக்கு. எனேபிள் பண்ணிருக்கேன். பெட்டியைத் தொட்டாலும் அலறும்" என்று மறுபடி எண்களை ஒத்தியபோது ஊளை நின்றது.

"அன்னிக்கு ஏன் அலறலை?" என்றான் கணேஷ்.

"டிஸ்ஏபிள் பண்ணி வெச்சிருக்கணும்"

கணேஷ் சுற்றுமுற்றும் பார்த்தான். "இந்த அலார்மை இயக்க யார் யாருக்குத் தெரியும்?"

"கௌரிக்குத் தெரியும். எனக்குத் தெரியும். என் ட்ரஸ்ட்டி பார்ட்னர் நடேசனுக்குத் தெரியும்."

"பார்ட்னர் எதில... டென்னிஸ்லயா?"

"இந்த மியூஸியம் ட்ரஸ்ட்டா?"

"ஆமாங்க, பிரதர்தான் அமைச்சுக் கொடுத்தான். என் பிரதர் தெரியும் இல்லை? ராஜ ராமையா."

"தெரியும். பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்ட். ஆர்.ஆர்.க்ரூப்."

"பாவம்... அவன் சம்பாதிக்கிறான். நான் செலவழிக்கிறேன். எனக்குப் பணம் துரத்தறதில் ஆர்வம் இல்லை. குதிரைகள், நாய்கள், சிலைகள், கடல் அலைகள்... இது மேலதான் எனக்குப் பிரியம். கார் ரேஸ், பங்கி ஜம்ப்... I want to play with danger. போதுமான

அளவு சொத்து எங்கப்பா வெச்சுட்டுப் போயிருக்கார். அப்பப்ப போர்டு மீட்டிங்ல மட்டும் உட்கார்ந்துட்டு காபி சாப்பிட்டுட்டு வந்துருவேன். சம்பாதிக்க பிரதர் இருக்கான். செலவழிக்க நான். அதனால இந்த மாதிரியான செலவுகளை எங்கப்பா த. ராஜ கங்கையா பேர்ல ட்ரஸ்ட் ஏற்படுத்தி மியூஸியம், மற்ற சமாச்சாரங்களைக் கவனிக்கறோம். டாக்ஸ் பெனிஃபிட் ஏதோ கிடைக்குதாமே?"

"அப்படியா?" என்றான் கணேஷ். அவன் கண்கள் சுற்றிலும் அலைந்தன. ஜன்னல் கதவுகள் உள்ளே தாளிட்டிருந்ததைக் கவனித்தான். "கௌரி, நீங்க சொல்லுங்க... எப்படிக் காணாமப் போச்சு?"

"ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பெட்டியைத் திறந்து சிலையைத் துடப்பேன். இதுக்குன்னு லிண்ட் லோஷன் எல்லாம் தனியா கொடுத்திருக்கார் ராஜா சார். போன வெள்ளிக்கிழமை துடைச்சுட்டு வெச்சது நல்லா ஞாபகம் இருக்கு. அலார்மை எனேபிள் பண்ணாப்பலதான் ஞாபகம். ரொம்ப ஹைடெக்ங்க. எனக்குச் சில வேளை தடுமாறும்."

"டிஸ்ஏபிள் பண்ணிருந்தாலும் வாசல்ல கூர்க்காவைத் தாண்டி, எலெக்ட்ரிக் வேலியை, நாயைத் தாண்டி ஒருத்தன் வரணுங்க. அத்தனை பாதுகாப்பு கொடுத்திருக்கேன். எனக்கென்னவோ ஏஸி டெக்னீஷியன் மேலதான் சந்தேகம்... இந்தப் பொண்ணு அலார்மை அணைச்சு வெச்சிருக்கறப்ப லவுட்டிக்கிட்டுப் போயிருக்கலாம்னு. அவன் விலாசம் வெச்சிருக்கேன். அவனை முதல்ல விசாரிங்க."

"சிலை எவ்வளவு பெரிசிருக்கும்?"

"மூணு அடி. அற்புதமான சிலை. உலகத்திலேயே மொத்தம் இந்த மாதிரி நாலு..."

"சொன்னாங்க... ஒண்ணு மியூனிச், ஒண்ணு லண்டன், ஒண்ணு நியூயார்க்."

"அதும், இந்தச் சிலை இருக்கு பாருங்க... என்னா ஃபினிஷ் தெரியுமா?"

"ப்ரான்ஸ் காஸ்டிங்ல இண்டியா சோழநாட்டுக் கலைஞர்களை அடிச்சுக்க இப்பக்கூட உலகத்திலேயே ஆளு கிடையாதுன்னு ராபின்சன் எழுதியிருக்கார். படிச்சிருக்கேன்" என்றான் கணேஷ்.

"குமரேசான்னு ஒருத்தரை சந்திச்சே ஆகணும் நீங்க."

"இதன் மதிப்பை அறிஞ்சவன்தான் திருடியிருக்கணும். சாதாரண திருடனா இருந்தா மற்ற பளபள வெள்ளி சாமான்களை விட்டிருப்பானா?" என்றான் கணேஷ்.

"தங்கம்கூட இருக்குது."

"பாஸ்... நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"இன்ஸைடு ஜாப்" என்றான் கணேஷ்.

வசந்த் அங்கே வைத்திருந்த ஒரு கற்சிலையைச் சந்தேகமாகப் பார்த்தான்.

"அம்மா அழகாத்தான் இருக்காங்க. சுமை சுமையா ஸ்தன்ய பாரங்கள். கடைவாய்ப்பல்தான் கொஞ்சம் வெளியே தெரியுது."

"காளி சிலைங்க. நல்லூர்ல கும்பகோணம் பக்கத்தில கிடைச்சுது. பன்னிரண்டாம் நூற்றாண்டு..."

"பன்னண்டாம் நூற்றாண்டைவிட்டு இந்தண்டை வர மாட்டீங்க போல. இன்சைட் ஜாப்னு எப்படிச் சொல்றீங்க பாஸ்?"

"விலைமதிப்பற்ற பலதும் இருக்கறப்ப, இதை மட்டும் குறிவெச்சு திருடிருக்கான் பாருங்க, கில்லாடி..."

கணேஷ், "மிஸ்டர் ராஜா! நீங்க ஏன் போலீஸைக் கூப்பிடலை?"

"சிலை என்கிட்ட இருக்கறதே தெரியக் கூடாதுங்க. ப்ரைவேட் சர்க்கிள்கள்லதான் தெரியும். வெளியே தெரிஞ்சா கவர்ன்மெண்ட் எடுத்துக்கிடும்னு ஒரு பயம். இது ஹெரிடேஜ் சமாச்சாரங்க. கல்ச்சுரல் மினிஸ்ட்ரியிலிருந்து ஏற்கெனவே ஒரு கடுதாசி வந்துருச்சு."

## 4

"இந்தச் சிலையை முதல்ல எங்க வாங்கினீங்க ராஜா?"

"ஏன் கேக்கறீங்க... நான் அவளைத் தேடிப் போகலை. யவனிகா என்னைத் தேடி வந்தா. அது பெரிய கதை. பாருங்க. இது நம்புவீங்களா? திருப்புவனத்தில ஒரு வீட்டுக் கிணத்தில கிடந்தது. அதை எடுத்துப் பாத்திரக்கடைக்குக் கொண்டுபோயிருக்காங்க. அவன் எடுத்துக்க மாட்டேன்னுட்டான். 'சொம்புக்குடம்னா எடுக்கறேன். சிலை வேண்டாம்'னிருக்கான். தற்செயலா டூர் போயிருந்த நான் அங்கே இளநி குடிச்சுட்டு இருந்தப்ப ஒருத்தன் அதைக் காட்டி 'இதை வெச்சுட்டு நூறு ரூபா கொடுங்க ஐயா... சாப்பாட்டுக்கு இல்லை'ன்னான். 'எங்கய்யா கெடைச்சுது?'ன்னேன். கெணத்திலேன்னான். ஜஸ்ட் இமாஜின்... அப்புறம் ஆதண்டிகேட் பண்றதுக்கு போட்டோ அனுப்பிச்சு கெமிக்கல் சாம்பிள் அனுப்பிச்சு ஸ்காலர்ஸுக்கு எழுதி மூணு வருஷம் ஆச்சு. அதிலேயே ஜெர்மன்காரங்க ஏமாத்த இருந்தாங்க. பத்தாயிரம் டாய்ஷ் மார்க் தரேன்னபோது உஷாராயிட்டேன்."

"அதன் விலைமதிப்பு அதைவிட மிக அதிகம்னு உணர்ந்துக்கிட்டீங்க."

"ரொம்ப கரெக்ட். இன்னிக்கு அதன் மதிப்பு க்ரே மார்க்கெட்ல எவ்வளவு தெரியுமா?"

"சொன்னாங்க. டென் மில்லியன்னாங்க."

"அது 78–ல..." என்றாள் கௌரி.

"அதைப் போய் அசால்ட்டா தொலைச்சாச்சு. என் புத்தியைச் செருப்பால அடிக்கணும். இந்தக் கவனமில்லாத முட்டாள் பெண்கிட்ட பார்த்துக்கச் சொன்னேன் பாருங்க. முட்டாள்... முட்டாள்!"

"கணேஷ் கண்டுபிடிச்சுக் கொடுத்துருவார் சார்" என்றாள் கௌரி, கண்ணீருடன்.

"கண்டுபிடிக்கலைன்னா? தவணை முறையில சம்பளத்தில கழிச்சுப்பிங்களா? ஏழு ஜென்மம் ஆகும். பாஸ் எனக்கென்னவோ..."

"ஷட்அப் வசந்த். எனிவே மிஸ்டர் ராஜா... எங்களுக்கு

முதல் விவரங்கள் தெரிஞ்சுருச்சு. நாளைக்குக் காலைல சொல்றோம்."

அவர்கள் விடைபெறும்போது கௌரி மூக்கை இம்சை பண்ணிக் கொண்டு தயங்கி அணுகி, "கணேஷ், என்னை வெஸ்ட் மாம்பலத்தில எறக்கி விட முடியுமா?"

"வாங்களேன்."

போகும்போது மௌனமாக வந்தாள். திரும்பிப் பார்த்ததில் சத்தமில்லாமல் அழுதுகொண்டிருந்தாள்.

"எதுக்கு அழுவுறீங்க? நீங்க அந்த ஜாதி இல்லைன்னு நினைச்சேன்" என்றான் வசந்த்.

"பூட்டிக்கிட்டு போறப்ப சிலை பத்திரமா இருந்தது வசந்த். அலார்மை ஆன் பண்ணதாத்தான் ஞாபகம். ஏழை சொல் அம்பலம் ஏறாது. அநாவசியமா என் மேல பழி வந்துருச்சு. சிலையைக் கடைசியில் பாத்தவ நான்தான்னு ராஜா போட்டுத் துளைக்கிறார். அவர் கோபத்தைப் பார்க்கலை நீங்க."

"பாஸ்... நீங்க என்ன நெனைக்கறீங்க?"

கணேஷ் தீவிர யோசனையில் இருந்தான்.

"வசந்த், கௌரி, கேளுங்க. நீங்க ரெண்டு பேரும் லாட்டரலா திங்க் பண்ணிப் பாருங்க. ஒரு டவுனைக் கடந்து நடந்து போறீங்க. புதூர்னு ஒரு இடத்துக்குப் போகணும். ஒரு நாற்சந்தி வருது. அதில ஒரு சைன்போர்டு இருக்கு. ஆனா, அது ஏதோ லாரி அடிச்சு சைடுல கிடக்குது. எது புதூருக்கு வழின்னு ரெண்டு பேருக்கும் தெரியலை. விசாரிச்சுத் தெரிஞ்சுக்கவும் அக்கம்பக்கம் யாரும் இல்லை. எப்படிச் சரியான பாதையைக் கண்டுபிடிப்பீங்க?" என்றான் கணேஷ்.

"இதுதான் உங்க புதிரா?" என்றாள் கௌரி.

"அப்படித்தான் வெச்சுக்குங்களேன். உங்களுக்கு 'லாட்டரல் திங்கிங்' இருக்கானு கண்டுபிடிக்கிறேன்."

"நான் ஸ்கூல்ல 'கேர்ள் கைடா' இருந்தபோது, ஜனாதிபதிகிட்ட குடியரசு தினத்தில் பரிசெல்லாம் வாங்கியிருக்கேன்."



"அப்படியா? நான் வாங்கினதில்லை. ஏன்னா, நான் கேர்ள் கைடா இருக்க முடியாது." என்று அட்டகாசமாகச் சிரித்தான் வசந்த்.

"நாட் அட் ஆல் ஃபன்னி."

"பின்ன என்னங்க? பாஸ் ஒரு ம்மன்னா போட்டுக் கடுமையா யோசிச்சுக்கிட்டிருக்கறப்ப... கேர்ள் கைடு, ஜனாதிபதின்னுகிட்டு... எப்ப அது? வி.வி.கிரி காலத்திலயா?"

"ச்! அப்ப நான் பொறக்கவே இல்லை. கணேஷ் சொன்ன இந்தப் புதிருக்கு எனக்குச் சின்னப் பிள்ளையிலயே விடை தெரியும்னு சொல்ல வந்தேன்..."

"அப்படியா! என்ன சொல்லுங்க, பார்க்கலாம்."

"கெஞ்சுங்க."

"கெஞ்சறது எங்க பரம்பரையிலேயே கிடையாது. அதும் பெண்கள்கிட்ட..."

"தேஜோமயிகிட்ட ?"

"அது பெண் இல்லைங்க, தேவதை வம்சம்!"

"அவளுக்கு லேசா ஒண்ணரைக் கண்ணு... கவனிச்சீங்களோ? கண்ணை எங்க கவனிச்சீங்க? போனாப் போவுது, சொல்லிடட்டுமா கணேஷ்? வசந்த் பாவம், தெரியாம முழிக்கிறார்..."

"அப்டின்னு நினைச்சுக்கிட்டிருக்கீங்கல்ல... அங்கதான் நீங்க இந்த வசந்த்தை ராங் மேத்தமாட்டிக்ஸ்... தப்புக்கணக்குப் போட்டுட்டீங்க பாஸ். சொல்லட்டுமா ?"

"ம்."

"அந்த நாற்சந்தியில் திசை காட்டி விழுந்து கிடக்குல்ல... அதை எடுத்து நிமிர்த்தி வந்த வழியில, வந்த ஊரைக் காட்டற மாதிரி நிறுத்தினா... மற்ற ஊர்களுக்கான சரியான பாதையைக் கண்டுபிடிக்க முடியும்."

"பார்த்தியா கௌரி... வசந்த் என்ன ப்ரிலியண்ட்னு!"

கௌரி, "இப்ப நான் ஒரு புதிர். சீதாவும் ராதாவும் ஒரே வருஷம் ஒரே தேதியில பொறந்தவங்க. ஒரே அப்பா, அம்மாவுக்குப் பொறந்தவங்க. ஆனா அவங்க ரெட்டைக் குழந்தைங்க இல்லை. எப்படி? கணேஷ், நீங்க சொல்லக் கூடாது."

"ஏன் ?"

"எனக்கென்னவோ முந்தின புதிருக்கு வசந்த்கிட்ட நீங்க விடை சொல்லியிருப்பீங்கனு தோணுது."

"தோடா! எனக்கென்ன தோணுதுனு சொல்லவா ?"

"என்ன ?"

"கோவிச்சுக்காதீங்க... அந்த யவனிகா சிலையை நீங்களே எடுத்திருப்பீங்களோனு தோணுது..."

சட்டென்று அவள் முகம் சிறுத்து, உதடுகள் துடித்தன. கண்ணைக் கொட்டிக் கொட்டிக் கண்ணீரைக் கட்டுப்படுத்தினாள். வண்டி டிராஃபிக் லைட்டில் நின்றிருந்தது. அதன் கதவைத் திறந்து, "பார்த்து..." என்று வசந்த் சொல்வதற்குள், "குட்பை" என்று சொல்லிவிட்டு, ஆட்டோவை நிறுத்தி ஏறிக்கொண்டு சென்று விட்டாள்.

கணேஷ், "என்னடா வசந்த்?" என்றான்.

"பின்ன என்ன பாஸ்? வந்ததிலிருந்தே வெறுப்பேத்திக்கிட்டே இருந்தது அந்தப் பொண்ணு!"

"இன்டெலிஜெண்ட் கேர்ள்டா! மனம் புண்படும்படியா பேசிட்டே."

"இல்லை பாஸ். சும்மா ஒரு ஜெர்க் விட்டுப் பார்த்தேன். அந்தப் பொண்ணுதான் ப்ரைம் சஸ்பெக்ட். அலார்மை நிறுத்தத் தெரியும். அந்தச் சிலையைத் திருடிக்கிட்டுப் போறதுக்கு அதிகப்படியான வாய்ப்பு அந்தப் பொண்ணுக்குத்தான் இருக்கு."

"திருடறதையும் திருடிட்டு, நம்மகிட்டக் கண்டுபிடினு வந்து நிக்குமா? அறிவுகெட்டத்தனமா பேசாதே."

"இதுகூட ஒரு தந்திரமா இருக்கலாம். எனக்கென்னவோ, அவ பார்வையே சரியில்லை. ஒரு முறை காபி எஸ்டேட்ல ஒருத்தர் செஸ் ஆடக் கூப்பிட்டாரே... ஞாபகமிருக்கா? உங்களைவிட, தான் புத்திசாலினு காண்பிக்கிறதுக்கு... அந்த மாதிரி கேஸோ என்னவோ?"

"இது அப்படி இருக்காதுன்னு நினைக்கிறேன்."

"பாஸ், ஒரு வாரம் டைம் கொடுங்க. பொண்ணு சொல்றது உண்மையா, பொய்யானு கண்டுபிடிச்சுடறேன்."

"எதனால இந்தச் சந்தேகம் வந்தது உனக்கு?"

"கண்ணாடி சிதறி விழுந்து இருந்ததில்லே. அது எப்படிப் பொட்டிக்கு வெளியே விழுந்திருக்கும்?"

"மத்லப்?"

"கண்ணாடியை உடைச்சு, உள்ளே இருக்கிற சிலையைத் திருட வந்தான்னு வெச்சுக்குங்க. உடைஞ்ச கண்ணாடி, பொட்டிக்கு உள்ளதானே விழுந்திருக்கணும். வெளியில எப்படிச் சிதறிச்சு?"

"நல்ல பாயிண்ட்ரா! அதாவது, பெட்டியைத் திறந்து சிலையை எடுத்துட்டு பெட்டியை உடைச்சு திருடு போனதா காட்டறதுக்குக் கண்ணாடி உடைக்கப்பட்டு இருக்கலாம்கறே!"

"ஆமாம் பாஸ்..."

"சாத்தியம்தான். ஆனா அதைக் கௌரிதான் செய்திருக்க முடியும்னு எப்படிச் சொல்வே?"

"மூணு பேருக்குத்தான் அலார்ம் தெரியும். ராஜா சார் எடுத்திருக்க முடியாது. இன்னொருத்தர் டிரஸ்ட்டி."

"அவரையும் ஒரு முறை பார்த்துரலாம். கேஸ் அத்தனை சிம்பிள் இல்லைனு தோணுது..."

கணேஷ் வேனில் விட்டுச்சென்ற செல் போனில் 'மிஸ்டு கால்' என்று நான்கு இருந்தது. நான்கும் ஒரே நம்பர்... புதிய நம்பர்!

அதை டயல் செய்து, "கணேஷ் ஹியர்... ஹூ இஸ் திஸ்?"

"மிஸ்டர் கணேஷ், ஹாய்... ஐயாம் அம்ஜத் ஷா."

"ஹலோ மிஸ்டர் அம்ஜத்..."

"இஸ் தேஜு வித் யு?"

"நோ!"

"ஷ்யூர்? அவங்களை நீங்க மறைக்கலையே?"

"நோ... நான் எதுக்கு மறைக்கணும்?"

"குட் ஃபெர் யுர் ஹெல்த்... டேக் கேர்!"

"என்ன பாஸ்?"

"அடிதடி பார்ட்டி மாதிரி பேசறான். நான் எதுக்கு அவளை மறைச்சு வைக்கணும்?"

"யாரை?"

"தேஜுவை..."

"பொறாமை பிடிச்ச காதலன். சம்பத் சொன்னாரே, தினம் ப்ளேனைப் புடிச்சு வந்து ஷெராட்டன்ல வந்து தங்கி, புரொட்யூசருக்குச் செலவு வைக்கறான்னு. கல்லுளிமங்கன் போலிருக்கு!"

"எனக்கென்னவோ இவன் வந்து... ஆளை விடு, சினிமாக்காரங்க சங்காத்தமே வேண்டாம்."

"நம்மை அது விடாது போலிருக்கு!" என்றான் வசந்த், மூலை திரும்பியதும்.

அவர்களின் தம்புசெட்டி அலுவலக வாசலில், கேசரி பவுடர் கலரில் ஒரு சொனாட்டா கார் வீதியை அடைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தது. சுற்றிலும் சிறுவர்கள், கண்ணாடிக்குள் எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அவர்களை தேஜு 'ஷு... ஷு...' என்று விரட்டிக்கொண்டிருந்தாள்.

இவர்கள் கார் நின்றதும் டிரைவர், "மேடம் வந்திருக்காங்க." என்றான்.

"தெரியும். தெருக்கோடியிலேயே பர்ஃப்யூம் சொல்லிடுச்சே!"

கணேஷ் கதவைத் திறக்க, அவள் வெளியே வந்து சுற்றிலும் பார்த்தாள். கறுப்புக் கண்ணாடி போட்டிருந்தாள். டி–ஷர்ட்டில், அவள் தோன்றும் குளிர்பான விளம்பரம் எழுதியிருந்தது. ஜீன்ஸ் அணிந்திருந்தாள். டி–ஷர்ட்டுக்கும் அதற்கும் உள்ள, வெயில் அதிகம் படாத இடைவெளி வசந்த்தைப் படுத்தியது.

"வாங்க... என்ன விஷயம்? மறுபடி காண்ட்ராக்ட் வயலேஷனா?"

"ஓய்... இந்தப் பொண்ணு 'ராஜுவின் ரோஜா' படத்துல ஆக்டிங் கொடுத்திருக்கில்லே... தலைவருக்குத் தங்கச்சியா! என்னமோ பேரு... தலைவா, இவங்க பேரு இன்னாங்க?"

"அன்னக்கிளி தொண்டா..." என்றான் வசந்த்.

"ஓய்... இன்னா நக்கலா?"

தேஜோமயி உள்ளே நுழைந்து நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"இதுதான் உங்க ஆபீஸா? பாத்ரூம், பெட் எல்லாம் இருக்குதா?"

"ஏன்?"

"ராத்திரி இங்கே தங்கலாமா? என் பேரண்ட்ஸ் என்னைப் பிச்சு எடுக்கறாங்க – நான் அம்ஜத்கூடப் பளகறது தப்புன்னுட்டு. அவுங்களுக்குப் பயம். ஃபேமிலி என்னாலதான் ஓடுது..."

"நேச்சுரலி!"

"அம்ஜத் போன் பண்ணிச்சா?"

"பண்ணிச்சு!" என்றான் வசந்த்.

"என்ன கேட்டுச்சு?"

"தேஜு வந்துச்சான்னு..."

"நீங்க என்ன சொல்லிச்சு?"

" 'தேஜுவா... அது யாருன்னே தெரியாதே'னு."

அவள் முகம் மலர்ந்தது. "தாங்க்ஸ்!"

"ஏங்க, போன்ல அப்படி உருகினீங்க... 'ஹாய் அம்ஜத், ஸ்வீட்டி பை, லாலிபாப், ஸோ ஸ்வீட், ஐ லவ் யூ டா'னு!"

"அம்ஜத் வொய்ஃப் போன் பண்ணிச்சு. எதுக்காக எம் புருஷன்மேல ஹாத் லகாதினு... பஹுத் காலி தி!"

"காலின்னா?"

"திட்டு... நான் என்ன செய்தேன் தெரியுமா?"

"என்ன செய்தீங்க?"

"அவன்தான் ஃபிலிம் ஃபேர் அவார்டுல பாத்தான். மத்ததெல்லாம் விட்டுட்டான். முதல்ல தமில் கேர்ள்னு நினைச்சுக்கிட்டு மஜாக் பண்ணான். நான் இந்தியில பேசவும் ஆடிட்டான்."

"எப்ப லவ் வந்தது?"

"அது வந்து, ஒரு பாட்டு ஸீன் எடுக்கறதுக்காக ராஜஸ்தான் போயிருந்தப்ப... டெக்காயிட்டி ஃபிலிம் எடுக்க, அவங்க யூனிட்டும் வந்திர்ந்திச்சு. ஒரே ஓட்டல்ல தங்கினப்ப, போர் அடிச்சுச்சுனு புக்ஸ் கேட்டேன். மகாதேவி வர்மா கவிதைங்களைப் படிச்சுக் காட்டறேன்னு ரூம் வந்துட்டான். அப்பலர்ந்து பீச்சே பீச்சே வர்றான். மேல வுயறான். தன் ஷுட்டிங் அல்லாம் கான்சல் பண்ணிட்டு, யஹான் ஆக்கே பைட்தா ஹை! இப்பக்கூட மெட்ராஸ் வந்தாச்சு. ஷுட்டிங் வெளியூர் போயிருக்கிறதா சொல்லிருக்காங்க. கணேஷ், இன்னா செய்வேன்? அம்ஜத் என்னை ரியலா ரியலா லவ் பண்ணுது!"

"எத்தனை வயசு அதுக்கு... ஸாரி, அவனுக்கு?"

"சாலிஸ், நாப்பது... பாத்தா தெரியாது. பாடி ட்ரிம்மா வெச்சிருக்கான்!"

"உனக்கு?"

"பதினேழு... ஸாரி, பதினெட்டு! கணேஷ் நான் என்ன பண்ணுவன்?"

"எனக்குக் காதல் சமாச்சாரம் எல்லாம் அவ்வளவு பரிச்சயம் இல்லை. காதல்ங்கறதே ஹார்மோன் விஷயம்னு நம்பறவன் நான். வசந்த், நீ சொல்லுது."

வசந்த் சிரித்துக்கொண்டே, "அவனை 'கிட்ட வராதே நாயே... குத்தே எட்டிப் போ' சொல்லி அனப்ச்சர்றது. அவனுக்கு உன் வயசில ஒரு பொண்ணு இருக்காம்... ஒருவேளை, தந்தை பாசமோ?"

"மத்லப்?"

"பெடர்னல் அஃபெக்ஷன்..."

"நோ, நோ... குட்டிக் குளந்தைங்க, ஸோ க்யூட்!"

"குழந்தையும் காட்னானா?"

"போட்டோ காட்டிச்சு!"

"பாஸ், சில பேருக்கு மச்சம் பாருங்க. திஸ் மேன் இஸ் கெட்டிங் எவே வித் பிகமி, அடல்டரி, அண்ட் சைல்ட் மேரேஜ்! ஐ.பி.சி. வேற வேற 14 செக்‌ஷன்ல தப்பு பண்றான்."

"அவனைப் பாத்தா யாரும் மயங்கிருவாங்க... இன்னா பாடி!"

"என்னைக் கேட்டா, கல்யாணம் பண்ணின ஆளோட சிநேகம் வெச்சுக்கறது எந்த பாடிக்கும் நல்லதில்லை. பி.பி. ஜாஸ்தியாகும் ரெண்டு பேருக்கும். மேலும் மும்பைக்காரங்க திடீர்னு கத்தியை எடுத்துக் குத்திருவாங்க..."

"அம்ஜத் அப்படில்லை. டிவோர்ஸ் பண்றதுக்கு ரெடியா இருக்கான். எல்லாத்தையும் வுட்டுட்டு வர்றேங்கறான்."

"தேஜு, நீங்க அவனை ஒரே ஒரு கேள்வி கேளுங்க... அந்தாளு எந்த ஊரு?"

"மும்பை போரிவ்லி."

"நான் சினிமா விட்டுட்டு, உங்கூட போரிவ்லி வந்துர்றேன். அதுக்கப்புறம் கல்யாணம் பண்ணிக்கலாமானு கேட்டுருங்க..."

"யெஸ் சொல்வான். ஹி ரியலி லவ்ஸ் மி."

"சொல்லமாட்டான். கேட்டுப் பாருங்க..."

"இப்பவே கேட்டுர்றேன். கேன் ஐ யூஸ் திஸ்?" – கணேஷின் செல்போனை எடுத்து, அதில் எண்களை ஒத்தினாள்.

"அம்ஜத்! தேஜு போல்தி... மை டாகி டாகி..." – நாய்க்குட்டி பாஷையைத் தொடர, அடுத்த அறைக்குச் சென்றாள்.

கணேஷ், வசந்த்தைப் பார்க்க... அவன் தோளைக் குலுக்கினான்.
சற்று நேரத்தில் வெளியே எட்டிப் பார்த்தாள்.
"கணேஷ், அம்ஜத் இங்க வரலாமா... கேக்குது!"
"வேண்டாம்..." என்றான் வசந்த் பதறிப்போய்.
"வரச் சொல்லு" என்றான் கணேஷ் நிதானமாக.

# 5

சில பேரைப் பார்த்த கணமே வெறுக்கத் தோன்றும். இதற்குத் தோற்றம் காரணமல்ல. பழகும் விதம், உடலசைவுகளிலும் பேச்சின் தொனியிலும் பாணியிலும் உள்ள அராஜகம், சில சமயம் உடலமைப்பு, வாசனை—இப்படி எத்தனையோ காரணங்கள் இருக்கும்.

அம்ஜத்தைப் பார்த்த கணத்தில் கணேஷுக்கு அவன் மேல் வெறுப்பு வாசலிலேயே ஏற்பட்டதற்கு எளிய காரணம்தான். உள்ளே நுழையுமுன் வாலை சிநேகமாக ஆட்டிக்கொண்டு, வசந்திடம் அன்றைய பொறை பிஸ்கட்டுக்காக வந்த சிம்மி என்னும் பேட்டை நாயை ஒரு உதை உதைத்தது. அது வீலென்று கத்தி, வாலை ஒளித்து வைத்துக்கொண்டு தன் சிநேகிதர்களை அழைத்துவர ராயபுரம் நோக்கி ஓடியது.

அம்ஜத் என்கிறவன் உள்ளே வரும்போது ஷூவைக் கழற்றவில்லை. கால் மேல் கால் போட்டு, சோபாவைச் சொந்தமாக்கிக்கொண்டு, சிகரெட் பற்றவைத்து ஆஷ்ட்ரே இருக்கிறதா என்று பார்க்காமல், காபி கோப்பையைப் பயன்படுத்தி... வெறுப்புக்குக் காரணங்கள் போதாதா?

"தேஜு, ஏ கார்ட்டூன் தோனோ கோன் ஹை?" (இந்த இரு கோட்டுச் சித்திரங்களும் யார்?)

தேஜு "ஷட் அப்..." என அதட்டி, "இது கணேஷ். இது வசந்த்..."

பின்வரும் உரையாடல் இந்தியும் ஆங்கிலமும் கலந்திருந்தது. நம்முடைய வாசகர்களின் வசதிக்கு முக்கியமான வார்த்தைகளைத் தமிழில் தருகிறோம்.

அம்ஜத் கையைச் சொடக்கி, "ஏ வசந்த்... ஏக் காம் கரோ என் காரில் ஒரு பாட்டில் இருக்கிறது. அதை எடுத்து வா... சபாஷ்! அப்படியே காரைச் சரியாக பார்க் பண்ணிடு. இந்தா சாவி..."

வசந்த், "எனக்கு என்ன குடுமியா?" என்றான் தமிழில்.

"க்யா... க்யா?"

கணேஷ் "அம்ஜத், இது ஆபீஸ், பொது இடம். இங்கே யாரும் குடிப்பதில்லை. நீங்கள் இதையெல்லாம் ஓட்டலில் வைத்துக்கொள்ளலாம்..."

"சரி, என்ன கொடுக்கப்போகிறாய்? நாரியல் பானி, நிம்பு பானி (இளநீர், எலுமிச்சை தண்ணி)... எதாவது கொடு. என்ன பார்ட்னர்?" என்ற தேஜுவின் கையைத் தட்டி, ஸ்டாண்ட் பை ஜெனரேட்டர் புறப்படுவதுபோல் சிரித்தான்.

மேஜை மேல் இருந்த பத்திரிகையை மேய்ந்தபடி, "என்னைப் பற்றி ஏதாவது வந்திருக்கிறதா?" என்றான்.

"வராது. இது எகனாமிக் டைம்ஸ்..." என்றான் வசந்த்.

அம்ஜத்தின் நாற்பது வயசு, தோற்றத்தில் தெரியவில்லை. கருநீல இறக்குமதி டி-ஷர்ட் அணிந்து இருந்தான். அதன் ஒரே பட்டன் திறந்து, உள்ளே தங்கத் தாம்பு தெரிந்தது. மிடில் ஈஸ்ட் வாசனையுடன், நல்ல சிவப்பாக இருந்தான். கையில் லூஸாகத் தங்க பிரேஸ்லெட் போட்டிருந்தான்.

தலைமயிர் சற்றே பின்வாங்க ஆரம்பித்திருந்ததை, ஷாம்பு போன்ற சமாச்சாரங்களால் புசுபுசுவாக்கி, வழுக்கை அறிகுறிகளைச் சாமர்த்தியமாக மறைத்திருந்தான். 'விக்கோ?' என்ற சந்தேகம் வந்தது கணேஷுக்கு.

முகத்தை இருபது வருஷ ஆர்க் லைட்டும் ஜினான் லைட்டும் உலர வைத்திருந்தது. கடுமையான வெளிச்சத்தைப் பார்த்ததால், கண்களுக்குக் கீழே குளுப்பை விழ ஆரம்பித்திருந்ததை மேக்கப் சமர்த்தினால் கூர்ந்து கவனித்தால்தான் கண்டுபிடிக்க முடிந்தது.

இதையெல்லாம் தேஜோமயி மதிப்பதாகவோ, கவனிப்பதாகவோ தெரியவில்லை. வந்ததிலிருந்து அவனைத் தாய்முகம் நோக்கும் சேய் போலப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் எங்கு திரும்பினாலும் அங்கு திரும்பினாள்.

"தேஜு, போல் பேபி..."

"கணேஷ் சொல்கிறார்... கணேஷ் சொல்லுங்க"

கணேஷ் செருமிக்கொண்டு, "அம்ஜத்... தேஜு உங்களை மிகவும் விரும்புகிறாள் என்பதும் அவளை நீங்கள் அதே மாதிரி விரும்புவதும் இப்போது இந்தியாவில் பொது அறிவு. உங்களுக்குக் கல்யாணம் ஆகியிருப்பதுதான் பிரச்சினை..."

"இதெல்லாம் பேசியாயிற்று. தேஜு சம்மதித்தால், பெட்டிஷன் போட்டு விடுதலைப் பத்திரம் வாங்கிவருவேன். அவளுக்கும் ப்ராப்ளம் இல்லை. சாலா... (இந்தியில் சரளமாகப் பயிலும் திட்டு வார்த்தை) விதுவுடன் சுற்றிக்கொண்டிருக்கிறாள். எல்லாவற்றையும் துறந்துவிடத் தயாராக இருக்கிறேன்."

"தேஜுவும் தயாராக இருக்கிறாள்."

"மத்லப்?"

"சினிமாவில் நடிப்பதைத் துறந்துவிட்டு, உங்களுடன் வந்துவிடத் தயாராக இருக்கிறாள்."

தேஜு உற்சாகத்துடன், "அம், அம்ச்சு பேபி... காதலுக்கு முன்னால் சினிமாவெல்லாம் பெரிசில்லை."

அம்ஜத்தின் முகம் சட்டென்று மாறியது.

"முட்டாளே... இவள் பல படங்களுக்கு காண்ட்ராக்ட் போட்டிருக்கிறாள். சொன்னாளா? அதெல்லாம் என்ன ஆவுது?"

"அதெல்லாம் பேசித் தீர்க்கிறோம். நடித்துக்கொண்டிருக்கும் படங்களை முடித்துக்கொண்டு, காத்திருக்கும் எல்லா புரொட்யூசருக்கும் அட்வான்ஸைத் திருப்பிக் கொடுத்துவிடுவோம். இன்றுகூட ஒரு மூணேமுக்கால் லட்சம் திருப்பிக் கொடுப்பதாகத் தீர்மானித்தோம்."

"என்னைக் கேட்காமல் ஏன் செய்தாய் தேஜு?"

"அம்ஜத், நாங்கள் அவள் வக்கீல். எப்படியும் இரண்டு மாதம் டபிள் ஷிஃப்ட் வொர்க் பண்ணி, எல்லா கமிட்மெண்ட்டையும் முடித்துவிடுவாள். என்ன... கொஞ்ச வருமானம், இவளுடைய வருமானம், குறைந்துவிடும்! உங்களுக்குத்தான் ஏகப்பட்ட வருமானம் இருக்கிறதே?"

"யார் சொன்னார்கள்? ஐ.டி. கட்ட வேண்டிய பாக்கியே ஆறு கோடி இருக்கிறது. ஜுஹு பிராப்பர்ட்டி அட்டாச் பண்ணப் போகிறார்கள்..."

"அம்ச்சு, இதை நீ என்னிடம் சொல்லவே இல்லையே!"

"ஷட் அப் யூ டம்மி!"

கணேஷ் இந்த இடைச்செருகலைப் பொருட்படுத்தாமல், "அதன்பின் அவள் சுதந்திரமானவள். இடையே நீங்கள், உங்கள் சொந்த பந்தங்களைத் துண்டித்துக்கொண்டு வர அவகாசமும் கிடைக்கும். இதை ஒரு அக்ரிமெண்ட்டாக டிராஃப்ட் பண்ணியிருக்கிறோம். வசந்த், அதை எடுத்துக்கொண்டு வா..."

வசந்த் திகைத்து, "என்ன பாஸ்... உட்டாலக்கடியா?"

"ஏய்... ஏய்... அங்ரேசி மே போலோ..." (ஆங்கிலத்தில் பேசு!)

கணேஷ் அவனைக் கண்ணால் அதட்ட, கணேஷ் சுற்றுகிறான் என்பதை அறிந்து, "இதோ எடுத்து வருகிறேன்" என்றான்.

"வெயிட் எ மினிட்... வெயிட் எ மினிட்... ஏக் மினிட்... அந்தக் கட்டத்துக்கு இன்னும் நாங்கள் வரவில்லை. நீங்கள் சொல்வதைச் செய்தால், தேஜுவின் சம்பாத்தியம் நின்றுவிடும்."

"ஆம் அச்சு. கட்டின புடவையுடன் வருவேன். ஒரு சப்பாத்தி சப்ஜி போதும். சந்தோஷமாக இருப்போம். இந்த மாதிரி இப்பத்தான் ஒரு படத்தில் எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் புறப்பட்டு வருகிற மாதிரி கதையில் நடித்தேன். அது என்ன படம்? 'மஞ்சள்'..."

"மஞ்சள், குஞ்சள்... இவர்கள் இரண்டு பேரும் தப்பாக அறிவுரை தருகிறார்கள் உனக்கு."

"அம்ஜத்!"

"ஏய்... க்யா நாம்? கணேஷ், அவசரப்படாதே... எதையும் கமிட் பண்ணாதே... நாங்க பேசித் தீர்க்கணும்."

"பேசுங்க."

"இப்ப இல்லை... மும்பை போனபின். இப்ப, ஐ நீட் ட்ரிங்க்."

"அம்ச்சா, உன் மனைவியுடைய ஆசாமிகளை அடக்கி வை. போனில் கூப்பிட்டு மிரட்டுகிறார்கள். பிரேஸ்லெட் வாங்கி வரேன்னியே என்னாச்சு?"

"லெட் மி திங்க், லெட் மி திங்க்... அவசரப்பட வேண்டாம். ஐ நீட் ய ட்ரிங்க்."

"தினம் குடிப்பீங்களா?"

"அல்மோஸ்ட்! வசந்த், கார்ல பாட்டில் இருக்கு. எடுத்து வாயேன்."

"பேச்சுவார்த்தை முடியட்டும்... செலிப்ரேட் பண்ணலாம்."

"அம்ஜு, எனக்குப் பணம் கிணம் எதும் வேண்டாம். உன் காதல் மட்டும் போதும்."

"போதாதுங்கறார் அம்ஜத். அப்படித்தானே?"

அம்ஜத் "இப்போதைக்குப் போதாது" என்றான்.

"ஏன் கை நடுங்குது?"

"ஐ நீட் மை ஷாட்." என்றான்.

"அது வேற உண்டா? கோக்கா, க்ராக்கா?" (இரண்டும் போதைப் பொருள்கள்.)

"நீங்க என்ன பேசுறீங்க?"

"டைம் எடுத்துட்டு, நல்லா திங்க் பண்ணிப் பாருங்க அம்ஜத். நாளைக்கு நான் போன் பண்ணுகிறேன்."

"மும்பை ஃப்ளைட் கிளம்பிருக்குமா?"

"லேட் நைட் ஒரு ஏர் இண்டியா இருக்கு. காலியாகப் போகும்."

அம்ஜத் விரைவாக எழுந்து, "ஸ்வீட் ஹார்ட்... நாளன்னிக்கு மறுபடியும் வரேன்."

"என் ப்ரேஸ்லெட்?"

"இந்தா" என்று தன் கையில் இருந்ததைக் கழற்றிக் கொடுத்தான்.

"பை... பை..." என்று டாட்டா காட்டிப் புறப்படும்போது, பட்டை பாட்டிலிலிருந்து அப்படியே ஒரு மடக்கு குடித்துவிட்டுத்தான் புறப்பட்டான்.

அவன் போனதும் தேஜோமயியின் அழகான புருவங்கள் கவலைப் பின்னலில் ஏறக்குறைய தொட்டுக்கொண்டன.

"என்ன கணேஷ். இப்டி சொல்ட்டுப் போறான். என்ன அர்த்தம்?"

"ப்ளெய்ன் அண்ட் சிம்பிள்! அவனுக்கு உன் மேல் காதல் இல்லை. உன் சம்பாத்தியத்தின் மேல்தான்!"

"நோ... நோ... இதோ, நாளை களிச்சு வந்துருது!"

கணேஷ், "தேஜு"... உன்னைவிட ரெண்டு மடங்கு அதிகம் வயசானவனை லவ் பண்றதா சொல்றீங்க. அவன்கிட்ட என்ன இருக்கு?"

"அதை எப்படிச் சொல்றது?" என்றான்.

"நாளைக்கு அவன் திரும்ப வந்தா, இனிப்பிள்ளை மாதிரி இதையே சொல்லுங்க... சினிமாவை எப்ப விடறதுன்னு. அப்பவாவது புத்தி கிடைக்கும்..."

"யாருக்கு?"

"உங்களுக்குத்தான். அவனுக்கு இந்நேரம் புத்தி வந்திருக்கும்."

அவள் போனதும் கணேஷ், "இந்தப் பொண்ணு மரமண்டைடா... மத்த வேஷங்கள்ல நடிச்சு நடிச்சு, தன் வேஷத்தை முழுக்க மறந்துட்டா. நல்ல கேரியரையும் நல்ல சம்பாத்தியத்தையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிக்கிட்டு, கல்யாணம் ஆனவன் பின்னால போயி, எதுக்காகத் தான் இப்படி வாழ்க்கையைச் சிக்கலாக்கிக்கறாளுகளோ?"

வசந்த், "காரணம் சொல்லட்டுமா பாஸ்? போறப்ப, நீங்க அவன்கிட்ட என்ன இருக்குன்னு கேட்டப்ப, அவ ஒண்ணு சொன்னா... ஞாபகமிருக்கா?"

"'அதை எப்படிச் சொல்றதுன்னு புரியலை'ன்னா..."

"புரியலையா? அவன் நல்லா..." என்று வசந்த் அசிங்கமாகக் கிண்டலடிக்க... கணேஷ், அவன் மேல் கையில் அகப்பட்ட புத்தகத்தை எறிந்தான்.

மறு தினம் கணேஷ், ஒரு பெரிய குளிர்பான கம்பெனிக்கு எதிராக ஒரு சிறிய ரெஸ்டாரண்ட்டில் வேலை செய்த செல்வி என்கிற பெண்ணுக்காக வாதாட வேண்டியிருந்தது.

செல்வி அந்த ரெஸ்டாரண்ட்டில் அந்த கம்பெனியின் பாட்டில்களை வைத்து அடுக்கும்போது ஒரு பாட்டில் வெடித்து, ஏறக்குறையக் கையை இழந்துவிட்டாள். கம்பெனியிடம் கணிசமான நஷ்டஈடு கேட்டு ஒரு மனித உரிமைச் சங்கத்தின் சார்பில் கணேஷ் தோன்றினான். சங்கத்தின் கவலை செல்வியைப் பற்றியதில்லை என்பது அவனுக்குத் தெரியும்.

குளிர்பான கம்பெனி ஒரு மல்ட்டி நேஷனல். பெரிய வாயர்களை ஏற்பாடு பண்ணி, பேரைக் காப்பாற்ற நிறையச் செலவழித்தி-

அவர்கள் வாதம், கம்பெனிக்கும் அந்தப் பெண்ணுக்கும் எந்த ஒப்பந்தமும் கிடையாது. பாட்டில்களை அடுக்க வேண்டும் என்ற கட்டாயம் அவளுக்கு இல்லை. பாட்டில் வெடித்தது அவளுடைய கவனக்குறைவினால் இருக்கலாம். பாட்டில் வெடித்ததால்தான் கை இழந்தாளா என்பதே நிரூபிக்கப்படவில்லை.

கணேஷ் தடாலடியாக "ஒப்பந்தமோ இல்லையோ, பொது மக்களுக்குக் குளிர்பானம் தருபவர்களுக்கு ஒரு பொறுப்பு, கடமை உள்ளது. அது பத்திரமான வெடிக்காத பாட்டில்களில் விற்பது. பாட்டில் வெடித்ததால், அவர்கள் கடமை தவறிவிட்டார்கள். இது, அந்தக் குளிர்பானத்தின் வழக்கமான பயன்பாட்டில் நேர்ந்த சம்பவம். ஒவ்வொரு ஊரிலும் இம்மாதிரிதான் கையாள்வார்கள். இம்மாதிரியான விபத்து நிகழலாம்..."

வசந்த், கணேஷின் குறிப்புகளைப் பார்த்துப் பிரமித்தான்.

"பின்னிட்டீங்க பாஸ்."

"அமெரிக்காவில் ஒரு கேஸ் இப்படி ஆயிருக்கு. மெல்வின் பெல்லைங்கறவன் சாமர்த்தியமா ஜெயிச்சுக் கொடுத்தான். ஆமா... காதுல என்னடா கடுக்கன்?"

"என்ன பாஸ்... ஒரு வாரமா போட்டுக்கிட்டிருக்கேன். இன்னிக்குத்தான் கவனிக்கிறீங்க."

"இப்ப இதான் ஃபேஷனா... ஒத்தை கடுக்கன்?"

"ஆமா பாஸ்! காது மாத்தினா டேஞ்சர். தப்பா அர்த்தமாயிடும்."

"இப்படியெல்லாம் இருக்கா! குடுமி வளக்கப் போறியா?"

"அதான் ஐடியா! யங் அண்ட் யப்பி லுக் கிடைக்கும்..."

அப்போது "மே ஐ கமின்..." என்று குரல் வந்தது. கௌரி இன்று பாவாடை, தாவணி அணிந்து வந்திருந்தாள். பள்ளிப் பெண் போல் இருந்தாள். கிராப்பைச் சிரமப்பட்டுச் சேகரித்து, ரிப்பனில் அடக்கியிருந்தாள். அவள் நோக்கம் வசந்த்தைக் கடுப்படிப்பதே எனத் தோன்றியது.

"வா கௌரி" என்றான் கணேஷ்.

"நேத்து வந்த கௌரிதானே நீ?"

"சாட்சாத்!"

"உள்ளே வந்துட்டு, என்ன 'மே ஐ கமின்' வேண்டிக்கிடக்கு? நான் நினைச்சேன் – உன்னை வாழ்க்கையில கடைசி முறையா பாத்தாச்சு... குற்றவாளிகிட்ட தூக்குப் போடறவன் சொன்னாப்பல, இனிமே நம்ம பாதையில் குறுக்கிடப் போறதில்லைனு! அவ்வளவு ஆவேசமாப் புறப்பட்டுப் போனே... வெளிநடப்பு செய்ற ஜார்கண்ட் எம்.பி. மாதிரி!"

"கணேஷுக்காகப் போனாப் போறதுன்னு திரும்பி வந்தேன்..."

"தோடா!"

"நான் சொன்ன புதிருக்கு விடை கிடைச்சுதா?"

"என்னது?"

"சிதாவும் ராதாவும் புதிர்..."

"ப்ச்! அதைப் பத்தி யோசிக்க டயம் கிடைக்கலை. தேஜு மேட்டர்ல பிஸியா இருந்துட்டோம்."

"மீசையில மண் ஒட்டலைங்கறீங்க."

கணேஷ், "அப்பவே அதுக்கு விடை எனக்குத் தெரிஞ்சுருச்சு. என்ன புதிர் அது? சிதாவும் ராதாவும் ஒரே வருஷம், ஒரே தேதியில, ஒரே அப்பா–அம்மாவுக்குப் பிறந்தவங்க. ஆனா, அவங்க ரெட்டைக் குழந்தை இல்லை... அதானே?"

"அதான்!"

"காரணம், அவங்க ட்வின்ஸ் இல்லை. ட்ரிப்லெட்ஸ்! கூட ஒரு கிதாவும் உண்டு. ட்ரிப்லெட்!"

அவள் ஏமாற்றத்துடன், "கண்டுபிடிச்சுட்டீங்க கணேஷ்... நீங்க கண்டுபிடிக்காத ஒரு புதிர் நான் சொல்லியே ஆகணும்."

"பொறந்து வரணும்."

"கடுக்கன் நல்லாருக்கு வசந்த்."

"கேலியா?"

"சீரியஸாவே... உங்க முகத்துக்குக் கடுக்கன் நல்லாவே இருக்கு. பொட்டு வெச்சுட்டா, கிருஷ்ண பரமாத்மா மாதிரி இருப்பீங்க."

அவள் காசு கொட்டினது போலச் சிரிக்க... கணேஷ், "கடுக்கனை வெச்சு ஒரு புதிர் சொல்லட்டுமா? ஒரு ஏரியாவில் எண்ணூறு ஆண்கள் இருந்தாங்க. அவங்கள்ல மூணு விழுக்காடு வசந்த் மாதிரி ஒரு காதுல கடுக்கன் போட்டிருந்தாங்க. மொத்தம் தொண்ணூத்தேழு சதவிகிதத்துல பாதி பேர் ரெண்டு காதுலயும் கடுக்கன் போட்டிருந்தாங்க. மீதி பேர் காதுல கடுக்கனே இல்லை. அந்தப் பேட்டையில மொத்தம் எத்தனை கடுக்கன்?"

6

கௌரி அகலமான கண்களால் கணேஷையே பார்த்துக் கொண்டிருந்தாள். அதில் ஏதாவது வித்தியாசமான அல்லது விபரீதமான அர்த்தம் இருந்தால் அதைக் கவனிக்க அவனுக்கு அக்கறை இல்லை. 'யவனிகா கேஸ் என்ன ஆச்சு' என்றான் கணேஷ் யதார்த்தமாக.

"கணேஷ்... நீங்க சொன்ன மாதிரி கேஸ் அத்தனை சிம்பிள் இல்லை. ராஜா சாரோட யவனிகா ட்ரஸ்ட் மெம்பர் நடேசன் சார், சிலை திருடு போன அன்னிக்கு ஒரு முறை வந்து போனதா தோட்டக்காரன் சொன்னான்."

"அப்ப ராஜா இருந்தாரா?"

"இல்லை. நானும் இல்லை. ஒரு போன் பண்ணிக்கிறதா சொன்னாராம்."

"அவருக்குப் பெட்டியைத் திறக்க அலார்மை செயலற்றதாக்கத் தெரியுமா?"

"தெரியும்."

"பின்ன எதுக்காக ராஜா ஏ.ஸி. டெக்னீஷியன் மேல பழி போட்டார்?"

"அதான் எனக்கும் தெரியலை. அவன் அழுதுட்டான்."

"நடேசன் இப்போ எங்கே?"

"கும்பகோணம் போயிருக்காராம்."

"அங்க ஏதாவது கம்பெனி இருக்கா இவங்களுக்கு?"

"இல்லை. அபூர்வ அயிட்டங்கள் கலெக்ட் பண்றதுக்கு அப்பப்ப ராஜாதான் கும்பகோணம் போவார்."

"அப்படியா?"

"பாஸ்... அவ்வளவு வேல்யுபிளான விஷயம் தொலைஞ்சு போயிருக்கு. அதுக்குண்டான பரபரப்பு பத்தலை அவர்கிட்ட. அசால்ட்டாகத்தான் இருக்கறதா தோணிச்சு பாஸ்" என்றான் வசந்த்.

கௌரி, "நீங்க சொல்றது புரியலை" என்றாள்.

"எங்களுக்கும் குன்ஸாத்தான் இருக்கு."

"குன்ஸ்ன்னா?"

"மங்கலா, தேசலா பழைய தியேட்டர்ல சினிமா

பார்க்கறாப்பல..."

"என்ன சினிமா?"

"அழகி முத்தமிட்டால்."

"என்னைக் கூட்டிட்டுப் போறீங்களா?"

"அண்டர்ஏஜ்னு உள்ள விட மாட்டாங்க."

"கௌரி... ஏதாவது விசாரணைன்னு போலீஸ் உங்களைத் தேடி வந்தா எனக்கு உடனே போன் பண்ணுங்க. அவங்களுக்கு எப்படிப் பதில் சொல்றதுன்னு சொல்றேன். வசந்த், இந்த மாதிரி ஹெரிட்டேஜ் பொருட்களை ப்ரைவேட் கலெக்ஷன்ல வெச்சுக்கலாமா? இது தேசத்தின் சொத்தில்லையா? இதைப் பத்தி ஆக்ட் என்ன சொல்லுதுனு பாத்துரு. நான் கோலா கம்பெனியை ஒரு கலக்கு கலக்கிட்டு வரேன்."

கௌரி கிளம்பும்போது ஒரு முறை திரும்பிப் பார்த்தாள். "எண்ணூறு கடுக்கன்" என்று சொல்லிவிட்டுத் தன் ஸ்கூட்டியில் ஏறிச்சென்றாள்.

அவள் போனதும் கணேஷ், "இந்தப் பொண்ணு என்னை அசத்தறா" என்றான்.

"எப்படி பாஸ் கண்டுபிடிச்சா?"

"அதை நீதான் கண்டுபிடியேன்!"என்ற கணேஷ், "எதுக்கும் இந்த யவனிகா சமாச்சாரத்தை விசாரிக்கக் கொஞ்சம் அவகாசம் ஒதுக்கணும். எப்ப நாம் ஃப்ரி?" என்று கேட்டான்.

"ராஜரத்தினம் கேஸ் வேற இன்னிக்கு ஹியரிங் வருது. எட்டாவது தடவை. ஒத்திப் போடாம இருந்தா ஒருவழியா நம்ம சப்மிஷனை முடிச்சுரலாம் பாஸ்!"

ராஜரத்தினம் என்பவர் தன் ஸ்கூட்டரில் அலுவலகம் செல்லும் போது கார்ப்பரேஷன்காரர்கள் விட்டுச்சென்ற ஒரு ராட்சஸ மிக்ஸிங் இயந்திரத்தின் மேல் மோதி, தூக்கி எறியப்பட்டு முழங்காலில் முறிவு ஏற்பட்டு, டாக்டர் ரிப்போர்ட்டின்படி 'டார்சாலிஸ் பிடிஸ்' என்னும் ரத்தக்குழாய் சேதப்பட்டு உடனே ஆபரேஷன் செய்யாததால் வலதுகால் நிரந்தரமாகச் சேதம் ஏற்பட்டு நொண்டும்படியாகிவிட்டது. அதனால் அவருக்கு வேலை போய்விட்டது. அவர் ஒரு கால் பந்தாட்டக்காரர். ஸ்போர்ட்ஸ் கோட்டாவில் வந்தவர். கணேஷ் பத்து லட்சம் ரூபாய் நஷ்டஈடு கேட்டிருந்தான். கார்ப்பரேஷனுக்கான லாயர் சீனிவாசராவ், 'இந்த நஷ்டஈட்டுத் தொகை அதிகம். அப்படியே கொடுக்க வேண்டுமெனினும் அதை காண்ட்ராக்டர்தான் கொடுக்க வேண்டும்' என்று வாதிட்டார். காண்ட்ராக்டர் 'இந்த நஷ்டஈடு கொடுத்தால் போண்டியாகி விடுவோம்' என்று கெஞ்சினார்.

கணேஷ் காரசாரமாக வாதாடினான் : "கார்ப்பரேஷன் சாலைகளை மக்களுக்கு இலவசமாகத் தருவதில்லை. வருடாவருடம் சாலை

வரியை அதிகரித்துவருகிறார்கள். கிடைப்பது பெரும்பாலும் குண்டும் குழியும். போதாக்குறைக்குப் பொறுப்பில்லாத காண்ட்ராக்டர்கள். இவர்களிடையே மக்கள் சதா இவ்வகையிலான அபாயத்தில் வாழ்கிறார்கள்..."

"அதிருக்கட்டும் கணேஷ்! எந்த ஆதாரத்தில் பத்து லட்சம் கேட்கிறீர்கள்?" என்றார் நீதிபதி ராயுடு.

"என் கட்சிக்காரருக்கு வயது 31. அவர் அறுபது வயதுவரை உழைக்கக்கூடியவர். சம்பாதிக்கக்கூடியவர். இந்த விபத்தினால் அவரது சம்பாத்தியம் கணிசமாகக் குறைந்துவிட்டது. இரண்டு பெண் குழந்தைகள். பத்து லட்சம் மிகக் குறைவு. நீதிபதி மனமுவந்து இதைவிட அதிகம் நஷ்டஈடு கொடுப்பார் என எதிர்பார்க்கிறோம்."

கணேஷின் வாதங்களைக் கேட்டுவிட்டு நீதிபதி தீர்ப்பை ஒத்தி வைத்தார். வெளியே வந்தபோது, "கணேஷ், கார்ப்பரேஷன்கிட்ட பணமில்லைப்பா" என்றார் அவர்கள் வக்கீல். "பேசாம ஒரு லட்சத்துக்கு ஒப்புக்கோ. காண்ட்ராக்டர்கிட்ட வாங்கி செட்டில் பண்ணிடறேன்... என்ன வசந்த், சொல்லுப்பா... பி ப்ராக்டிக்கல்."

வசந்த், "ஒரு லட்சம் ரூபாய் ஜுஜுபி. முதல் இன்ஸ்டால்மெண்டா வேணா ஒப்புக்கறோம். மத்த ஒன்பது?"

"எங்களைக் கேனையங்கன்னு நினைச்சீங்களா? உங்களுக்கெல்லாம் விவஸ்தையே கிடையாது. அப்பீல் போட்டுத் தள்ளிடுவோம். வாய்தாவிலேயே ஒரு வருஷம் வாங்கிடுவோம். உங்காளு அதுவரை நொண்டிக்கிட்டே ஓ போட்டுக்கிட்டிருப்பாரா?"

"சீனிவாசராவ், நியாயம் கிடைக்கிறப்போ கிடைக்கட்டும். அப்ப யார் ஓ போடறாங்க பார்க்கலாம். இது ஒரு உதாரண கேஸ்."

"கோலாக்காரன் கேஸ் ஊத்திக்கிச்சாமே."

"யார் சொன்னா? இன்னும் எங்க ஆர்க்யுமெண்டே முடியலை."

"அங்க ஆர்க்யுமெண்ட் முடிஞ்சிருச்சு."

"உங்களை கண்டெம்ப்ட்ல உள்ள தள்ளணும்."

கோர்ட்டைவிட்டு வெளியே கான்டீனுக்கு காபி சாப்பிட வந்த போது கணேஷ், "கௌரி! நீ இங்க என்ன பண்ணிக்கிட்டிருக்கே?"

கௌரி, "கோர்ட்ல இருந்தேனே பார்க்கலையா? நீங்க ஆர்க்யு பண்ணதைக் கேட்டுக்கிட்டே இருக்கலாம். சங்கீதம்போல இருந்தது."

"இதுக்குப் பேர்தான் ஜோ–ஜோ. பாஸ் இதுக்கெல்லாம் மயங்க மாட்டார்... கட்டை பிரம்மச்சாரி."

"இல்லை வசந்த். அந்த ஜட்ஜுடைய 'பாடி லாங்வேஜ்' பார்த்தா நீங்கதான் ஜெயிப்பீங்கன்னு தெரியுது."

"எப்படிச் சொல்றீங்க..." என்றான் கணேஷ்.

"நீங்க பேசினப்ப உன்னிப்பா கேட்டார். எதிர்க்கட்சி வக்கீல்

பேசினப்ப புருவத்தைச் சுருக்கிக்கிட்டார்."

"அந்த அளவுக்குக் கவனிச்சீங்களா? வெரிகுட்."

"ஆமா, உங்களுக்கு கோர்ட்டுக்குள்ள டாமிநாய் போல சுத்தறதைத் தவிர வேற வேலை இல்லையா?" என்று கேட்டான் வசந்த்.

"உங்களை அழைச்சுட்டுப் போக வந்தேன். டிரஸ்ட் மெம்பர் மிஸ்டர் நடேசன்னு சொன்னேன் பாருங்க... அவர் உங்களைச் சந்திக்க விரும்பறார். ஃப்ரீயா இருந்தா இப்பவே போகலாம்."

நடேசன் ஆர்.ஏ.புரத்தில் ஓதுக்குப்புறமா பாலத்தருகில் இருந்த ஃப்ளாட்டில் இருந்தார். சுமார் 1,550 சதுர அடி மத்யதர வர்க்க ஃப்ளாட். உள்ளே ஆடம்பரமில்லை. திரைச்சீலைகள் நிஜமாகவே சீலைகள். டி.வி. கள்ளிப்பெட்டி மேல் வைக்கப்பட்டு இருந்தது. உட்கார்வதற்கு டெல்லி மோடா. அந்த ஃப்ளாட்டில் லேசான சீரழிவும் தற்காலிகமும் தெரிந்தன. மேஜை மேல் ப்ளாஸ்டிக் கோப்பைகளில் அரை கப் காபி இரண்டு இருந்தது – ஏடுடைய செவியோடு. நடேசன் சிறு பையன் போல இருந்தார். நெற்றியில் ஸ்திரமாகப் பச்சை குத்தின பொட்டு. டை அடிக்க முழு மனசின்றி இங்குமங்குமாக நரைத்திட்டுகள் – குறிப்பாக வகிடருகில் தெரிய, நிறைய தலைமயிர் வைத்திருந்தார். வாழ்க்கை அவரை அலைக் கழித்திருக்கிறது என்பது புருவத்தின் சுவடுகளிலிருந்து தெரிந்தது. இருந்தும் சிரிப்பு அழகாக இருந்தது. மெகாசீரியலில் அடிக்கடி கண்ணாடியைக் கழற்றி மனைவிக்குப் பணியும் பாத்திரம்போல இருந்தார்.

"வாங்க கணேஷ்... செல்லா சொன்னான், சிலை காணாமப் போனதா. 'எதுக்கடா வெட்டி ஜாமான்களை வாங்கிப்போட்டு ரொப்பறே. உன் அண்ணன் பாஞ்சு பாஞ்சு எவ்வளவு துடியா சம்பாதிக்கிறான்? நீயும் ஏதாவது சம்பாத்தியத்தைப் பார்க்கக் கூடாதா?'ன்னா, 'மாமா உங்களுக்கு என்ன'ங்கறான். என்ன எதுக்கோ டிரஸ்டியா போட்டுத் தொலைச்சு இருக்காரு. எல்லாம் அவங்க அண்ணாதான்."

"நீங்க அவருக்கு உறவா?"

"ஒண்ணுவிட்ட மாமா உறவு. ஒண்ணாவது சம்சாரம், ரெண்டாவது சம்சாரம்னு கங்கையா குடும்பத்தோட சொத்து பிரிஞ்சு போச்சு. ஒரு பக்கம் சைடு வாங்கி பிரிஞ்சு போய் அவன் கோடில புரள்றான். நான் ரியல் எஸ்டேட்! இதான் பாத்ரூம், இது பெட்ரூம், தெக்க பாத்த வீடு, வாஸ்து மூலைன்னு தலைல எப்படி எழுதிருக்கோ... அப்படித்தானே நடக்கும். டிரஸ்ட்ல போட்டுத் தொந்தரவு! சில்லறையும் அதிகம் இல்லை. ஒரு சிட்டிங்குக்கு ஆயிரம் ரூபாய் தரான். முந்திரிப்பருப்பு, பிஸ்கட்டுன்னு கதை பண்ணிடுவான். ராம மூர்த்தின்னு ஒரு செக்ரெட்ரி இருக்கான். ஒண்ணாம் நம்பர்

கஞ்சன்."

"திருடு போன அன்னிக்கு பங்களாவுக்குப் போயிருந்தீங்களா?"

"ஆமா. . . நான் பங்களாவுக்குப் போன அப்புறம்தான் திருடு போயிருக்கணும்."

"எதுக்குப் போனீங்க?"

"சிட்டிங் ஃபீஸ் வாங்க."

"கும்பகோணத்திலிருந்து எப்ப வந்தீங்க?"

"காலைலதான். அங்க பூர்வீக நிலம் இருக்கு. கும்பகோணம் போயிருந்தது எப்படித் தெரியும் உங்களுக்கு?"

"கௌரிதான் சொன்னாங்க."

"கௌரி... என்ன நான் ஏப்பம் விட்டாலும் வக்கீல்கிட்ட சொல்லிடறியா? நல்ல பொண்ணு, பாவம். ஏம்மா... செல்லையா தொந்தரவு செய்யறானா? போலீஸ்கிட்ட சொல்லிட்டாங்களா? நீ எதுக்கும் பயப்படாத... நீ அதை எடுத்திருக்கவே முடியாது. அத்தனை கனத்தைத் தூக்கறதுக்கு உனக்கு சக்தி கிடையாது. கால்ல போட்டுப்ப."

வசந்த், "ஏங்க நடேசன்... உங்களுக்கு அதனுடைய அலார்ம் எப்படி இயங்கறது, எப்படி டிஸ்ஏபிள் பண்றதுன்னு தெரியுமா?"

"என்னவோ எளுதிக்கொடுத்தான். எனக்கு அது ஒரு எளவும் புரியலை. எனக்கு கால்குலேட்டரையே சரியா இயக்கத் தெரியாது. பாஸ்வேர்டு பத்து செகண்டு டிலே... இதெல்லாம் யாருக்குப் புரியும்?"

"இந்த அலார்மைப் பத்தி யார்கிட்டயாவது நீங்க பேசியிருக்கீங்களா?"

"எனக்கே புரியலை. மத்தவங்களுக்கு எப்படித்தான் புரிய வைக்க முடியும்? ஆமா, துருவித் துருவிக் கேக்கறீங்களே... என்ன விஷயம்?"

"சிலையைக் கண்டுபிடிக்க செல்லையா பதினஞ்சு நாள் அவகாசம் கொடுத்திருக்கார்."

"முடியலைன்னா?"

"போலீஸுக்குப் போகப் போறார்."

"முதல்ல அந்தச் சிலையை இவன் வெச்சுக்கறதே தப்பு, தேசச் சொத்து, ஹெரிடேஜ்ங்கறாங்க..."

"அதைத் தனிப்பட்டு விசாரிக்கப் போறோம். நடேசன்... குடிக்கத் தண்ணி இருக்குமா?" என்றான் வசந்த்.

"மினரல் வாட்டர் இல்லை, பரவால்லையா?"

"பரவாயில்லை."

அவர் உள்ளே செல்ல வசந்த் அந்த ஹாலை நோட்டம் விட்டான்.

அலமாரியில் இருந்த பச்சை நிற பிள்ளையார் சிலையை எடுத்துப் பரிசோதித்தான். அடுக்கி வைத்திருந்த கடிதங்களையும் செய்தித் தாள்களையும் லேசாகப் புரட்டினான்.

"சார்... ரியல் எஸ்டேட் பக்கங்களை மட்டும்தான் வெச்சிருக்கார்."

அவர் உயரமான தம்ளரில் தண்ணீர் கொண்டுவந்தார்.

"மெட்ரோ வாட்டரே இப்பல்லாம் நல்லா இருக்கு."

"நடேசன்... உங்ககிட்ட யாராவது சமீபத்தில் சிலையைப் பத்தியோ அலார்ம் பத்தியோ விசாரிச்சாங்களா? யார்கிட்டயாவது ஏதாவது பேசினீங்களா?"

"இல்லைப்பா! நீ கேக்கறதால முக்கி யோசிக்கிறேன். இப்ப க்ளையண்ட்டுக்கு சி.பி.ராமசாமி ஐயர் ரோட்டுல டீலக்ஸ் ஃப்ளாட். நாலே நாலு ஃப்ளாட் ஒரு பெண்ட் அவுஸ். கவர்டு கார் பார்க் காட்டணும். வாங்கிக்கிறயா?"

"என்ன விலை?"

"உனக்காக நாப்பத்தோரு லட்சம்."

"பாக்கி நாப்பது லட்சத்து அம்பதாயிரத்துக்கு எங்கே போவோம்?"

கணேஷ், "சரி நாங்க வர்றோம். சிலையைப் பத்தி என்ன ஞாபகம் வந்தாலும் இந்த நம்பருக்கு போன் போடுங்க."

"நான் எடுத்திருப்பனோன்னு சந்தேகம் ஏதாவது இருக்கா...?" என்றார் கவலை முகத்துடன்.

"இல்லை" என்றான் கணேஷ்.

திரும்ப காருக்கு வந்ததும் தேஜுவிடமிருந்து இரண்டு மெஸேஜ் செல்லில் இருந்தது. Please see me. Urgent.

வசந்த், "கௌரி, நீங்க இங்கேயே கழண்டுக்கறீங்களா இல்லை ஒட்டிக்கிட்டு வர்றீங்களா? நாங்க தேஜுவைப் பாக்கப் போறோம்."

"ஏன்?"

"ஒரு புதிர் சொல்லலாம்னு! நாலு காலு, ஒரு வாலு, பெரிய காது, ஒரு ட்ரங்க் உள்ள பழுப்பான மிருகம் எது?"

"யானை."

"இல்லையே!"

அவளை யோசனையுடன் ஆழ்வார்பேட்டை சிக்னலில் உதிர்த்துவிட்டு அவர்கள் புறப்பட்டபோது வசந்த், "பாஸ்... நடேசன் அலமாரிலருந்து தட்டினேன் இதை!" என்றான்.

நியூயார்க் முத்திரையிட்ட ஒரு வெளிநாட்டுக் கடிதம் அது.

# 7

அந்தக் கடிதத்தில் 'Dear Sir, The invoice may be sent by fedex or DHL to our Manhattan address. On receiving the same the first payment will be deposited' என்று எழுதியிருந்தது.

"இதை எதுக்கு எடுத்து வந்து எங்கிட்ட காட்றே?"

"இந்த நடேசன் முழியே சரியில்லை பாஸ். இவன்தான் சிலையைத் திருடி வித்திருக்கான்."

"சில பேருக்கு முழி அப்படித்தான் இருக்கும். இப்ப உன் முழி சரியா இருக்கா? யாராவது உன்னை நம்பி அரை மணி நேரம் தங்கச்சிங்களை விட்டுட்டுப் போவாங்களா?"

"என்ன பாஸ்... சும்மா பேசுவனே ஒழிய... கௌரியைக் கேட்டுப் பாருங்க."

"கௌரி உன்னைக் கவரலை. அவ்வளவுதான்."

"அவளுக்கு உங்க மேல ஒரு க்ரஷ். ஒவ்வொரு முறையும் உங்களைப் பாக்கறப்ப நாலு காலையும் தூக்கற நாய்க்குட்டி விசுவாசம் அவ கண்கள்ல ஜொலிக்குது."

"எனக்கு இதுக்கெல்லாம் நேரமில்லை. நடேசன் எதுக்குக் கும்பகோணம் போனார்னு மட்டும் கண்டுபிடி. அப்புறம் பார்க்கலாம்."

"சொன்னாரே, பூர்வீகச் சொத்து."

"பூர்வீகச் சொத்துங்கறது என்ன – ஒரு ஆட்டுக்குட்டி, கறிவேப்பிலை மரம்... இப்படியா? நிஜமாகவே சொத்தானு பாரு. நீ சொன்ன பாரு, அந்தக் கண்ணாடி உடைஞ்ச சமாச்சாரம்... அதில் விஷயம் இருக்கு. சிலையை எடுத்தவங்க திருட்டு போனாப்பல காண்பிச்சிருக்காங்க. அது தெரியுது. சிலையை மூணு பேர்தான் எடுக்க முடியுமா பாரு. வேற யாருக்காவது வாய்ப்பு இருக்கா பாரு."

கணேஷ் செல்லில் இருந்த நம்பரைத் தேர்ந்தெடுத்தான்.

"கணேஷ் ஹியர்... போன் பண்ணிருந்தீங்களா?"

"கணேஷ்... உங்களை எத்தனவாட்டி கால் பண்றது?"

"விஷயம் என்ன சொல்லுங்க."

"அம்ஜு‾வால எனக்குப் பெரிய நுக்ஸான். ஒரு பிக்சர்

கேன்சலாயிருச்சு. ஹீரோ அடிச்சுட்டான்."

"ஓ காட்! அம்ஜுவுக்கு நல்ல அடியா?" என்றான் குரலில் சந்தோஷத்துடன்.

"இல்லை. அம்ஜு ஹீரோ அடிச்சுட்டான்."

"உங்களால் தமிழ் இலக்கணமே எளிமையாய்க்கிட்டு வருது."

"புரிலை."

"நான் என்ன பண்ண முடியும்? புரொட்யூசரை வெச்சு செக்யூரிட்டி போடச் சொல்லுங்க."

"கணேஷ்... ஐம் டெஸ்பரேட். அம்ஜுவை எப்படியாவது கள்ட்டி விட்ருங்களேன்."

"கள்ட்டி விடறதுக்கு அவன் என்ன ஹெக்ஸாகனல் நட்டா? பாருங்க, இது உங்க பிரச்சினை. நீங்க அந்தாளை என்கரேஜ் பண்றதாலதான் அவன் வரான். முகத்தில் அறைஞ்சாப்ல சொல்லிடுங்க, 'நாயே... இனிமே வராதே'னு!"

"சொல்ச்சு. நை மான்தா."

"நாங்க வக்கீல்! கோர்ட்டுல ஏதாவது கேஸ் போட்டா வாதாடலாம். இல்லை, அவன் இந்த மாதிரி என்னைத் தொந்தரவு பண்றான்னு போலீஸ் ப்ரொட்டெக்ஷன் கேட்டு மனு எழுதித் தரேன். அவ்வளவு தான் முடியும்... அல்லது ஒண்ணு பண்ணலாம்."

"என்ன?"

"காதலனை மாத்திடுங்க" என்றான்.

"ஒரு நிமிஷம்... இன்னொரு போன் வந்திச்சு" என்று சொல்லி, இந்தப் பேச்சை அநாதையாக விட்டுவிட்டாள்.

"அம்ஜு லாலிபாப்!" என்று அவள் கூறுவது கேட்டபோது, கணேஷ் செல்லை மடக்கி, "இவளுக்கு விவஸ்தையே கிடையாதுரா."

"பாஸ்... பத்திரிகை பார்த்தீங்களா நீங்க? வெள்ளிரதம் வார இதழ்ல **குடித்துவிட்டு மும்பை காதலன் செட்டில் கலாட்டா! தேஜோமயி சௌத்ரியின் படப்பிடிப்பு ரத்து! புரொட்யூசர் கடும் கோபம்!"**

"எல்லாமே ஒரு செட்-அப் பப்ளிசிட்டி ஸ்டண்ட்டோனு தோணுது. அந்தப் பொய் உலகத்தில் மக்கள் கவனத்தைக் கவர இந்த மாதிரி தந்திரங்களெல்லாம் தேவைப்படுதுனு நினைக்கிறேன்."

"பாஸ்... இதை மும்பைக்காரங்கதான் தொடர்ந்து பண்ணுவாங்க. அந்த வாரம் கிசுகிசு வரலைன்னா டென்ஷன் ஆய்டுவாங்களாம். அதே கல்ச்சர் நம்மகிட்டயும் பரவிக்கிட்டிருக்கு. இதைக் கேளுங்க... 'தேஜு இது விஷயமாக நகரத்தில் பிரபல வக்கீல்களான கணேஷ்-வசந்த் இருவரின் உதவியை நாடிச் சந்தித்துப் பேசியிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் சட்டப்படி பாதுகாப்புக் கொடுப்பதாக உறுதி

அளித்திருக்கிறார்கள். இந்த உறுதி மட்டும்தான் காரணமா, இல்லை அந்த இளம் வக்கீலின் மேல் தேஜஃவுக்குச் சிறப்பு பார்வையா என்று பட்சி கேட்கிறது.' நம்ம போட்டோகூட வந்திருக்கு பாஸ்!"

"அடுத்தது நடிக்கக் கூப்பிடுவாங்களா?"

"நடிக்கிறதாவே சொல்லிடுவாங்க."

அவர்கள் அலுவலகம் திரும்பியபோது, "ஓ... ஓ... ட்ரபிள்!" என்றான் வசந்த். ஒரு வெள்ளை அம்பாஸடர் கார் நின்று கொண்டிருந்தது. நம்பர் ப்ளேட்டில் ஓரத்தில் 'கவர்ன்மெண்ட் ஆஃப் இண்டியா ஏ.எஸ்.ஐ.' என்று எழுதியிருந்தது.

"கணேஷ்!" என்ற அந்த சஃபாரி சூட், லேசான ரேபான் அணிந்த அதிகாரியின் கைகுலுக்கல் அழுத்தமாக இருந்தது. "நான் ராஜதுரை எஸ்.பி. சி.பி.ஐ.!" அவருடன் வந்தவரைப் பார்த்தமாதிரி இருந்தது. "இவர் மாணிக்கவினாயகம். ஆர்க்கியாலஜிக்கல் சர்வேல சூப்பிரண்டெண்டிங் ஆர்க்கியாலஜிஸ்ட். டெம்பிள்ஸ் அண் ஹெரிடேஜ்" என்றார்.

கணேஷ் பதற்றப்படாமல், "வாங்க... உள்ள வாங்க" என்றான். "உக்காருங்க..." என்றான். அவர், "உங்க நேரத்தை வேஸ்ட் பண்ண விரும்பலை. யவனிகா ப்ரான்ஸஸ் ஒண்ணு மிஸ்ஸிங். அந்த கேஸை நீங்க விசாரிச்சிக்கிட்டு இருக்கீங்களா?"

கணேஷ் உஷாரானான்.

"புரியலை."

"ராஜ செல்லையாங்கறவர் அது காணாமப் போனதா சொன்னாரா?"

"எது?"

மாணிக்கவினாயகம், "யவனிகா ப்ரான்ஸஸ்ங்கறது நம்ம இந்திய தேசத்தின் சொத்து. சோழர்கள் காலத்தைச் சேர்ந்தது. உலகத்திலேயே மொத்தம் நாலுதான் இருக்கு. அதுல மூணு பரதேசம் போய்டுச்சு. நாலாவது இந்தியாவில் இருக்கிறதை வலை போட்டுத் தேடிக்கிட்டிருக்கோம்."

வசந்த், "ஏன் அதை ப்ரைவேட்டா வெச்சுக்கக் கூடாதா?"

"கூடாது சார்! நூறு வருஷம் பழசான எதுவுமே கிடைச்சா அரசாங்கத்துகிட்ட கொடுத்துரணும்... காசு, காப்பர் ப்ளேட்னு. உங்களுக்குத் தெரியாததா?"

"என் ஃப்ரெண்ட் தாத்தா வயசு 101. அவரோட பல்லுகூட பத்திரமா இருக்கு. அதை அரசாங்கத்துகிட்ட கொடுத்துரணுமா?"

அந்த அதிகாரி நகைச்சுவையை விரும்புகிறவராகத் தெரியவில்லை.

கால் இன்ச்கூடச் சிரிக்காமல் முகம் இறுகி, "இந்தாளு ராஜ செல்லையா அப்சர்வேஷன்ல இருக்கார். அவர் உங்களை அணுகினா எழுத்து மூலமா அவர்கிட்ட வாங்கிக்கங்க. அவர்கிட்ட அந்தச் சிலை இருக்குனு ஆதாரம் வேணும். அதுக்கப்புறம் அவர் மியூஸியத்தை சீல் பண்ணலாம். சோதனை போடலாம். என்னமோ கோல்மால் நடக்குது."

"நீங்க சொல்றபடி பார்த்தா, ப்ரைவேட் மியூஸியமே இருக்கக் கூடாதுனு சொல்றீங்களா?"

"அப்படி இல்லை. குடும்பத்தைச் சேர்ந்த சொத்து, நாட்டைச் சேர்ந்த சொத்துனு ரெண்டு வகை இருக்கில்ல. அது நாட்டைச் சேர்ந்ததுன்னா, எங்க டிபார்ட்மெண்ட் அதுக்குரிய தொகை கொடுத்து எடுத்துக்கிடுவாங்க."

"இது, அவர் குடும்பத்தில் வந்திருக்கலாமில்லை?"

"ஆதாரம் காட்டணும். குடும்பச் சொத்தா இருக்க முடியாது. யவனிகாவைப் பத்தி எபிக்ராஃபிக் ரிக்கார்டு இருக்கு."

"அப்படியா?" என்றான் செயற்கை வியப்புடன்.

"கணேஷ், நீங்க புத்திசாலியான லாயர். நியாயமான கேஸ்களைத் தான் வாதாடுவீங்கனு தெரியும். இது என்ஃபோர்ஸ்மெண்ட் டைரக்ட்ரேட், நார்க்காட்டிக்ஸ் பீரோ பலதும் ஆர்வம் காட்டற கேஸு. எங்க ஆபீஸ்ல ஒரு பெரிய ஃபைல் இருக்கு. இன்றைய தேதிக்கு அந்தச் சிலையினுடைய மதிப்பு பதினஞ்சிலிருந்து இருபது மில்லியன் டாலர் சொல்றாங்க."

"வாவ்!" என்றான் வசந்த்.

அப்போது கணேஷின் செல் அடித்தது. "கணேஷ்... ராஜா ஹியர். உங்களைப் பார்க்க சி.பி.ஐ. எஸ்.பி ஒருத்தர் வருவாரு. அவர்கிட்ட சிலையைப் பத்தி எதும் சொல்ல வேண்டாம். கவர்ன்மெண்டுக்கு அந்தச் சிலையை நான் வெச்சிருக்கறதே குற்றம். அதனால..."

"நான் அப்புறம் பேசறேன். விசிட்டர்ஸ் வந்திருக்காங்க..." என்று போனை வெட்டினான்.

"யாரு... செல்லையாவா?" என்றார் ராஜதுரை. கெட்டிக்காரன் என்று மனசுள் நினைத்தான் கணேஷ்.

"இல்லைங்க. எங்க பார்ட்னர் ஒருத்தர் கேஸ் சம்பந்தமா..."

"உங்க செல் நம்பர் தரமுடியுமா?"

"வசந்த், நம்ம கார்டு குடுரா."

அவர்கள் இருவரும் செல்வதற்கு முன் ராஜதுரை, கணேஷின் தோளில் கைவைத்து, "ஒரு ஃப்ரெண்ட்லி அட்வைஸ். எனக்கு டெல்லியிலிருந்து வந்த மெயில்ல உங்க ரெண்டு பேர் பேரும் சந்தேகத்துக்குரியவர்கள் பட்டியல்ல இருக்கு. சோட்டா பகதூர்

பேரோட உங்க பேரைப் பார்த்தபோது திக்குன்னுச்சு. உங்களைப் பத்தி எனக்குத் தெரியும். அரசாங்கத்துக்கு விரோதமா எதும் செய்ய மாட்டீங்க. அதனாலதான் முன்னெச்சரிக்கையா சொல்லிட்டுப் போக வந்தேன். இப்ப க்ரே மார்க்கெட்ல முக்கியமான பண்டமாற்று இம்மாதிரியான புராதனக் கலைப்பொருள்கள், தந்தம், பாம்புத் தோல், புலித்தோல் இவற்றுக்கு மிக அதிகமா விலை கொடுக்கப் பலர் இருக்காங்க. அதும் இந்தச் சிலை கெடைச்சா பெரிய விஷயம். அங்குள்ள ப்ரைவேட் மியூசியம்கள் எவ்வளவு வேணா தரத் தயாரா இருக்காங்க. அதைக் கவர்வதற்கு ஒரு போதை மருந்துக் கூட்டமே இயங்கறது. மும்பைக்காரங்க சம்பந்தப்பட்டிருக்காங்க. கோல்டன் ட்ரையாங்கிள் தெரியுமில்லை... நீங்க அதில் மாட்டிக்காதீங்க கணேஷ்." என்று முதுகில் வலுவாகத் தட்டினார்.

"தாங்ஸ்... நான் வெறும் லாயர்!" என்றான் கணேஷ். அவர்கள் சென்றதும் தீர்க்க சிந்தனையில் ஆழ்ந்தான். "பாஸ்... கதை சிக்கலாயிட்டிருக்கு... லாகிரி வஸ்துவெல்லாம் உள்ளே நுழைஞ்சிட்டிருக்கு" என்று விசிலடித்தான்..

"ஏதோ நம்மை அறியாம ஒரு வியாபாரம் நடக்குதுடா."

"கண்டுபிடிக்கணுமா பாஸ்?"

"அப்படித்தான் தோணுது. இல்லைன்னா நாம மாட்னோம். முதல்ல இந்த செல்போனை மாத்து. இனிமே மானிட்டர் பண்ண ஆரம்பிச்சுருவாங்க."

வசந்த் ஏடிஎம்—முக்குப் போய்ப் பணம் எடுத்துவரப் புறப்பட்டான்.

கணேஷ் பாத்ரூமுக்குச் சென்று 'ஹிண்டு'வின் குறுக்கெழுத்தில் ஆழ்ந்தான். அவனுக்குச் சிந்தனையை நிதானிக்க க்ராஸ்வேர்டும் பாத்ரூம் தனிமையும் தேவைப்படும்.

அப்போது அந்தச் சத்தத்தைக் கேட்டான்.

இந்தத் தருணத்தில் கணேஷின் அலுவலகத்தின் அமைப்பைப் பற்றிக் கொஞ்சம் விவரிக்க வேண்டியிருக்கிறது. (கதை ஸ்லோவாகச் செல்கிறது. துணுக்கு ஸ்டைலில் வேண்டும் என்கிறவர்கள், இந்தப் பாராவைத் தாவிவிடலாம்!) சமீபத்தில் வசந்தின் முயற்சியால் பார்டிஷன்களாகப் பாகுபடுத்தப்பட்டு, ஸ்ப்ளிட் ஏ.ஸி. போட்டு சௌகரியமாக இருந்தது அலுவலகம். ஒரு சிறிய ஹால். அதில் நான்கு பேர் உட்கார இடம். குள்ள மேசை, க்ளையண்டுகளுடன் பேச இரண்டு வட்டமேசை, குட்டி அறைகள், ஒரு பொது பாத்ரூம், மத்தியானங்களில் ஆசுவாசப்படுத்திக்கொள்ள ஒரு திவான்... ராத்திரி லேட்டானால் தங்குவதற்காக இடது கோடியில் ஒரு படுக்கையறையும் அதன் இணைப்பு பாத்ரூமும். அந்தப் படுக்கை அறையிலிருந்துதான் சத்தம் வந்தது. ஏதோ நகர்த்துவது போலவும் டாய்லெட்டின் ஃப்ளஷை இயக்குகிற சிற்றருவி சத்தமும் கேட்டது.

"வசந்த்!" என்றான் மெலிசாக.

"வசந்த்தையா காரை எடுத்துக்கிட்டு வெளியே போயிருக்காரய்யா."

"துரை, ஆபீஸ் எப்ப தொறந்தீங்க?"

"காலைலங்க."

"யாராவது என்னைத் தேடிக்கிட்டு வந்தாங்களா... உக்கார வெச்சியா?"

"இல்லைங்களே."

"பின்ன... பாத்ரூம்ல யாரு?"

"யாரு?" என்றான் துரையும். "ஒரு வேளை... கௌரி!" என்று விளித்தான் கணேஷ். மௌனம்...

கதவைச் சோதித்துப் பார்த்தான். உள்ளே தாளிட்டிருந்தது. "உள்ள யாரோ இருக்காங்க துரை. என்ன வாட்ச்மேன்ப்பா நீ? யார் வர்றாங்க, போறாங்கனு பார்க்க மாட்டியா? சத்திரம் மாதிரி இருக்குது ஆபீஸ்."

"நான் இடத்த விட்டு மெய்யாலுமே விலகலைங்க."

"பின்ன... எப்படி உள்ள தாப்பா போட்டிருக்க முடியும்? யாரோ உள்ள இருக்காங்க. ஒண்ணு பண்ணு... பின்பக்கமா போய் வெண்டிலேட்டர் அல்லது ஜன்னல் திறந்திருந்தா, எட்டிப் பாரு."

பின்னே சென்றவன் திரும்ப வந்தான். "யாரோ போத்திக்கிட்டுப் படுத்திருக்காங்க."

கணேஷ் உஷாரானான்.

அதற்குள் வசந்த், "என்னடா துரை?"

"பெட்ரூமுக்குள்ள ஆளுங்க."

"துரை, நீ என்ன பண்றே... அலமாரில சாவிக்கொத்து இருக்குது பாரு டூப்ளிகேட் சாவிங்க..."

கணேஷ், "உள்ள தாப்பா போட்டிருக்குரா மடையா. எட்டிப் பார்த்தா, யாரோ போத்திக்கிட்டுப் படுத்திருக்காங்களாம்."

ஏற்பாடு எதற்கும் தேவையின்றி, அந்தக் கதவு தானாகத் திறந்தது. தேஜோமயி!

# 8

“என்னங்க எந்தக் கதவைத் திறந்தாலும் நீங்க வரீங்க” என்றான் வசந்த் ஆச்சரியத்துடன். தேஜோமயி அந்த இடத்தை ஐந்து நிமிஷத்தில் சொந்தமாக்கிக்கொண்டிருந்தாள். ஃப்ரிஜ்ஜிலிருந்து குளிர்பானம், வெண்ணெய், ஜாம் தடவிய ரொட்டி... எல்லாவற்றையும் சேகரித்துக்கொண்டு டி.வி-யை ஆன் பண்ணியிருந்தாள். கார்ட்டூன் நெட்வொர்க்கில் பூனை எலியைத் துரத்திக்கொண்டிருந்தது.

“வசந்த் இதில் கே. டி.வி. வராதா?”

“தேஜு, முதல்ல சொல்லுங்க. எதுக்காக இங்க வந்தீங்க?”

“அம்ஜத் என்னை விடாம துரத்துது... செட்டு செட்டா போய்த் தேடிக்கிட்டிருக்கு... குடிச்சுட்டுக் கலாட்டா பண்ணுது... க்யா கரும் தெரியலை. சம்பத் சார்தான் சொன்னார், கொஞ்ச நாள் கணேஷ் ஆபீஸ் போய் இருங்கன்னு. போன் பண்ணலையா?”

“என்னது... கொஞ்ச நாளைக்கா?”

“ஆமா. இந்த கஸ்டம் சால்வ் ஆறவரைக்கும் நான் இங்கதான் இருக்கப் போறேன். என்ன செலவு ஆதோ... சம்பத் குடுத்துரும்.”

“வெய்ட் ய மினிட்.” சம்பத்தை வசந்த் கோப விரல்களால் ஒத்தினான்.

“சம்பத், நாங்க என்ன எதிராஜ மடமோ, பரகாலமடமோ நடத்தறமா... இல்ல, திருவல்லிக்கேணி மெஸ் நடத்தறோமா?”

சம்பத் அந்த முனையில் “தேஜு வந்தாளா... எல்லாம் சொல்லிருப்பாளே?”

“பாருங்க சம்பத்... இந்த ஆபீஸ்ல முதல்ல பெண்களுக்கு இடம் கிடையாது. அதும் சினிமா நட்சத்திரங்களுக்கு... அதும் பம்பாய் மாஃபியா துரத்தற சினிமா நட்சத்திரங்களுக்கு. நீங்க என்ன பண்றீங்க... உடனடியா மஞ்சளா ஸ்கார்ஃப்பும் கறுப்புக் கண்ணாடியும் எடுத்துக்கிட்டு கால் டாக்ஸில வாங்க. இந்தப் பொண்ணை அழைச்சுட்டுப் போய் புரொட்யூசருக்கு முத்துக்காடு, மகாபலிபுரம்ல பஞ்சாயத்து நிலத்தில சீப்பா வாங்கின பீச் பங்களா இருக்கும். அங்க கொண்டுபோய் வையுங்க.”

"எல்லாம் ட்ரை பண்ணிப் பார்த்துட்டம்பா. எங்க போனாலும் எப்படியோ தெரிஞ்சுண்டு வந்துர்றாம்பா. யூனிட்ல யாரோ தகவல் கொடுத்துர்றாங்க. உங்க இடம்தான் சேஃப். வர மாட்டான்."

"எப்படிச் சொல்றீங்க?"

"வந்து கலாட்டா பண்ணாலும் நீங்க 'திருப்பி அடிப்பேண்டா. படவா பேத்துருவேண்டா'ன்னு அதட்டுப் போட்டா பயந்துருவான்."

"நோ வே" என்று போனை வைப்பதற்கு முன் "வசந்தா, வெச்சுராதே... ரெண்டு நாளைக்குக் குட்டியைச் சமாளிச்சுருப்பா. அவளால உபத்திரவமே இருக்காது. ஒரு பொம்மை புஸ்தகம், ஒரு ஸ்ப்ரைட், ஒரு பிட்ஸா போதும்."

கணேஷ் போனை வாங்கி "சம்பத், நீங்க வேற தளத்தில இயங்கறீங்க. இப்ப, இன்னும் பத்து நிமிஷத்தில் அவளை அழைச்சு கிட்டுப் போகலை... அம்ஜத்துக்கு போன் பண்ணிருவோம்."

"வேண்டாம்பா" என்றார் பதற்றத்துடன். "கடங்காரன் வந்தா காண்ட்ராக்ட் எல்லாம் கான்சல் ஆயிடும். அன்னிக்கு செட்ல வந்து எல்லாத்தையும் போட்டு உடைச்சி எட்டு லட்ச ரூபா நஷ்டம். கலாட்டா பண்ணிட்டான்."

"அதுக்கு அவளுக்கு ப்ரைவேட் செக்யூரிட்டி ப்ரொட்டெக்ஷன் கொடுங்க. செட்ல விசிட்டர்ஸை கண்ட்ரோல் பண்ணுங்க. போலீஸ் பாதுகாப்பு கேளுங்க. எங்க கழுத்தை அறுக்காதீங்க."

இவர்கள் பேசுவதை மௌனமாக, கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தவள் கண்களில் நீர் வடிந்தது.

"என்னைக் காப்பாத்த மாட்டீங்களா?" என்றாள்.

"பாருங்க... சினிமா நடிகைகளைக் காப்பாத்தறது எங்க தொழில் வட்டத்துக்கு மிகவும் அப்பாற்பட்டது."

"புரிலை... இன்னிக்கு ஒரு நாள் கணேஷ்... நான் எதும் உங்களுக்குக் கஸ்டம் கொடுக்கமாட்டேன். நாளைக்களிச்சி ஐதராபாத் போறம்... அதுவரைக்கும்..."

கணேஷ், "வசந்த், கௌரியை வரச்சொல்லு" என்றான்.

"வசந்த்.. நீங்களா... எனக்கு போனா!"

"உடனே வா. உன் அபிமான நட்சத்திரம் தேஜு வந்திருக்காங்க. இன்னிக்கு ராத்திரி இங்க தங்கணும். நீங்க என்ன பண்றீங்க... ஒரு பேபி டூத் ப்ரஷ், ஃபாரெக்ஸெல்லாம் எடுத்துக்கிட்டு உடனே வாங்க. அவளுக்கு கம்பெனி கொடுக்க."

போனை வைப்பதற்குள் முதுகில் ஒரு நீலப்பை அணிந்து இரண்டு மூன்று புத்தகங்கள், ஒரு ஸ்க்ராபிள் போர்டு சகிதம் வந்துவிட்டாள்...

'தேஜு' என்று கட்டி அணைத்துக்கொண்டாள்.

"வசந்த், ஒரு பீட்ஸா ஆர்டர் பண்ணிருங்க."

"நேரம்" என்றான்.

கௌரியிடம் தன் மனதைத் திறந்துகொண்டிருந்தாள் தேஜு.

"அப்பா மிலிட்டரி ஆபீஸர்... ஊர் ஊரா டிரான்ஸ்ஃபர் பண்ணுவாங்க. எஜுகேஷன் நல்லாருக்குன்னு இங்க அம்மாகூட மெட்ராஸ்ல நானும் சிஸ்டரும் தங்கினம். எனக்கு சினிமா பிடிக்கவே இல்லை. அம்மாதான் இன்சிஸ்ட் பண்ணாங்க. தங்கச்சியை உள்ள கொண்டாந்தாச்சு. அப்பா தண்ணி தெளிச்சுவிட்டாச்சு. அவருக்கு கான்டீன்ல ரம்மும் கிளப்ல கால்ஃபும் போதும். இந்த அம்ஜத்தை விடறதுக்கு ஒரு வழி சொல்லுங்க கௌரி."

"கல்யாணமானவன்கூட பேசறது தப்பில்லை... டிட் யு ஹேவ் செக்ஸ்..?"

"யா..."

"தப்பு!"

"தப்புதான். தீதி போன்ல அரைமணி அழுதுச்சு... 'என் ஹஸ்பெண்டை விட்டுரு... வேற யாரையாவது புடிச்சுக்க'ன்னு சொல்லி. நானா புடிச்சு வெச்சுக்கறேன்? அம்ஜத்தான வந்து உயுது."

"தேஜு, பாருங்க... உங்க மேல காதலோட தமிழ்நாட்டில் ஒரு கோடி இளைஞர்கள் இருக்கறாங்க. அத்தனை பேரையும் உங்களால காதல் பண்ண முடியாது. கணேஷ் என்ன சொல்றாரோ அப்படிச் செய்யுங்க."

"கணேஷ் தெர்த்திருங்கறாரு."

"தெர்த்திருங்களேன்..."

"டர் லக்தா ஹை (பயமா இருக்கு) பர்டனர்... பயம்."

வெள்ளிரதம் பத்திரிகையில் தன் போட்டோவைப் பார்த்தாள். "என்ன போட்ருக்கு."

கௌரி படித்தாள். "தேஜு இது விஷயமாக நகரத்தில் பிரபல வக்கீல்களான கணேஷ்–வசந்த் இருவரின் உதவியை நாடிச் சந்தித்துப் பேசியிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் சட்டப்படி பாதுகாப்புக் கொடுப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள். இந்த உறுதி மட்டும்தான் காரணமா, இல்லை, அந்த இளம் வக்கீலின் மேல் தேஜுவுக்குச் சிறப்புப் பார்வையா என்று பட்சி கேட்கிறது."

வசந்த், "இந்தாங்க" என்று பிட்ஸாவைக் கொண்டுவந்து கொடுத்து "எல்லாத்தையும் நீங்களே சாப்பிடாதீங்க."

"வசந்த், இந்த நியூஸ் பாத்தீங்களா... உங்களுக்கும் தேஜுக்கும் முடிச்சுப் போட்டு..."

"வேற வேலையில்லை பத்திரிகைக்காரங்களுக்கு. டொமடோ சாஸ்ல குளுப்பாட்டறீங்களே..."

"கணேஷ், எனக்கு ஒரு ஐடியா தோணுது. இந்தக் கட்டுக்கதையை இன்னும் கொஞ்சம் இழுத்துக்கிட்டு போனா என்ன?" என்றாள் கௌரி.

கணேஷ் யோசித்தான். "குட் ஐடியா... என்ன வசந்த்?"

"என்னது?! என்னது?! என்ன ஓடிக்கிட்டிருக்கு?"

"தேஜுவை நீ காதலிக்கிறே... ஏன், கல்யாணம்கூடப் பண்ணிக்கப் போற..."

"மை காட்... ஆர் யூ க்ரேஸி?"

"தேஜு, நீங்க என்ன சொல்றீங்க? உங்களுக்குள்ள அவசரமா ஒரு நட்பு... ஃப்ரெண்ட்ஷிப் ஏற்பட்டு, வசந்தை நீங்க கல்யாணம் செய்யப் போறதா ஒரு வதந்தியைப் பரப்பிட்டா அம்ஜத் ஆஃப் ஆயிடுவான் இல்லையா?"

"இதைவிடக் கேனத்தனமான ஐடியா இருக்க முடியாது" என்றான் வசந்த்.

தேஜு "ஐ லைக் இட்... ஐ லைக் இட்" என்றாள்.

"நோ!" என்று அலறினான் வசந்த்.

"ஏண்டா, ஜஸ்ட் ஃபர் ஃபன்!"

"என்ன பாஸ், மாட்டிவிடப் பாக்கறீங்களா... அவன பாத்தா சோட்டா ஷகில், சோட்டா ராஜன் ரேஞ்சுக்கு இருக்கான். அவன் கேர்ள் ஃப்ரெண்டை டாவடிக்கிறேன்னா பலி போட்டுருவான்."

"பயப்படறியா? ப்ரொடெக்ஷன் கொடுக்கச் சொல்றேண்டா."

"பயம் இல்லை... எவ்வளவோ பேட்டை ரௌடிங்களைச் சமாளிச்சிருக்கேன் பாஸ்... ஆர் யூ ரியலி சீரியஸ்? இந்தக் கிறுக்குத் தனமான ஐடியாவை எப்படி நீங்க சம்மதிக்கிறீங்க... எங்க இந்த கௌரி?"

"இதில் விஷயம் இருக்குது. சம்பத்தை போன்ல பிடி."

"சம்பத், கணேஷ் பேசறேன்... ஒரு பேச்சுக்கு இந்த அம்ஜத் மேட்டரை சுமுகமா தீர்த்து வெக்கறோம்னு வெச்சுக்கங்க..."

"கணேஷ், வயித்தில பால்ப்பா. புரொட்யூசர் எல்லோரும் அம்பதுவரைக்கும் லட்சார்ச்சனை பண்ணுவாங்க. அத்தனை சிக்கல் அவனால. ஏழு படம் நிலுவையில் இருக்கு..."

"அப்ப ஒண்ணு பண்ணுங்க. லோக்கல், வடநாட்டு பிரஸ்ஸையும் கூப்ட்டு எதாவது ஒரு ஃபைவ் ஸ்டார் ஓட்டல்ல பிரஸ் கான்ஃபரன்ஸ்

வைங்க."

"தாராளமா. ஒவ்வொருத்தருக்கும் கவர்ல பெரிய நோட்டோட வெக்கறேன். என்ன கான்ஃபரன்ஸ், எதுக்கு?"

"என் அசிஸ்டண்ட் வசந்தும் தேஜோமயியும் ஒரு என்கேஜ்மெண்ட்டை அறிவிப்பாங்க."

மறுமுனை மௌனமாகியது.

"சம்பத், ஆர் யூ தேர்?"

சற்று நேரம் கழித்து, "அதிர்ச்சில போனைக் கீழே போட்டுட்டேன். ப்ரில்லியண்ட்!"

"அதுக்கப்புறம் ரெண்டு பேருக்கும் ஒரு வாரம் பத்து நாளைக்கு சாதா டிரஸ்ல செக்யூரிட்டி ஏற்பாடு பண்ணணும்."

"ஓ... தாராளமா பண்ணிட்டா போச்சு... 'ப்ளாக் கேட்'டையே கொண்டு வந்துட்டா போச்சு."

"யூனிஃபார்ம் வேண்டாம். மஃப்ட்டியில் இருக்கணும்."

"கவலையே இல்லை... நம்ம உசைனிகிட்ட சொன்னா எட்டுருக்குக் கொண்டுவந்துருவார். அடிதடி கலாட்டா இருக்குமா?"

"இருக்கலாம்."

போனை வைத்துவிட்டு, "தேஜு, நாங்க சொல்றதைக் கவனமா கேளுங்க. உங்களுக்காக பெரிய ரிஸ்க் எடுக்கப் போறோம். அதுக்கு ஃபீஸ் வாங்கிருவோம். வேற விஷயம்... ஆனா, உங்களுக்கு அம்ஜத்தைத் துண்டிக்க வேண்டியது முக்கியமா இல்லையா?"

"ரொம்ப... எல்லா காண்ட்ராக்ட் பாதிச்சிருச்சு... சம்பத் குய்யோ முறையோ கத்துது."

"அதுக்கு நீங்க வெளிப்படையா கொஞ்ச நாளைக்கு வசந்த்கூட கேர்ள் ஃப்ரெண்ட் மாதிரி சுத்தணும். படப்பிடிப்பில் ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்து லஞ்ச் டயத்துல இருக்கணும். எதாவது பப்ளிக் ஃபங்ஷனுக்கு சேர்ந்து போகணும்... அப்பப்ப ஒருத்தரை ஒருத்தர் பிரியமா பாத்துக்கணும்."

"அதில் எனக்கு ப்ராப்ளம் இல்லை" என்றாள்.

"இவனுக்கும் ப்ராப்ளம் இருக்காது."

"இதனால என்ன ஆகும்?"

"அம்ஜத் கடுப்பாயிருவார்."

"கடுப்பாகி..?"

"அதுக்கப்புறம் நடக்கறதைப் பாருங்களேன்" என்றான் கணேஷ்.

"கணேஷ், நீங்க என்ன சொன்னாலும் செய்யறா மாதிரி சொல்ரிக்கு சம்பத்."

அப்போது அவளது கைப்பையில் செல்போன் ஒலித்தது.

"அம்ஜதாத்தான் இருக்கும்... ஆன்சர் பண்ணவா?" என்றாள்.

"அதை வசந்த்கிட்ட கொடுங்க" என்றான் கணேஷ்.

"ஹலோ!"

"ஹூ இஸ் திஸ்? கால் தேஜூ!"

"தேஜூ இஸ் பிஸி. எனி மெசேஜ்?"

"மெசேஜ்கி பச்சே... கூப்பிடுரா அவளை."

"வார்த்தையை அடக்கிப் பேசு."

"எங்க அவ, நீ யாரு?"

"அவளுடைய பாய் ஃப்ரெண்ட்!" என்றான் வசந்த்.

9

வசந்த் சொன்னதில் அம்ஜத் அதிர்ச்சி அடைந்தான். "உளறாதே... என்னைத் தவிர அவளுக்கு பாய்ஃப்ரெண்ட் கிடையாது."

வசந்த், "அப்படி நினைத்துக்கொண்டிருக்கிறாய். நீ சென்னை பேப்பர் படிக்கிறதில்லையா? எல்லா பத்திரிகை களிலும் வந்துவிட்டதே! வேணுமென்றால் தேஜுவின் வெப்சைட்டில் பார். எங்கள் இருவர் போட்டோக்களும் இருக்கும். லுக் அம்ஜத், நீ கல்யாணம் ஆன கேஸு... நான் கல்யாணம் ஆகாத கேஸ். உனக்கு வயது அம்பது. எனக்கு அதில் பாதி." தேஜுவைப் பார்த்துக் கண்ணடித் தான்.

"அவளை மணக்க இரட்டிப்புத் தகுதி எனக்குத்தான் உண்டு. இதை எந்தச் சின்னக் குழந்தையும் சொல்லும். இனி நீ சென்னைக்கு அவளைத் தேடிக்கொண்டு வந்தால் கைது செய்யப்படுவாய். உன் மேல் ஒரு ந்யூசென்ஸ் கேஸ் போட்டிருக்கிறோம்."

"கேஸ்கி பச்சே! சாலா... இதோ அடுத்த ப்ளேனைப் பிடித்து வந்து உன்னை முட்டிக்குக் கீழ் வெட்டிப் போட வில்லையென்றால் என் பெயர் அம்ஜத் இல்லை."

"எந்த ஃப்ளைட்டில் வருகிறாய் சொல். போலீஸ் காத்திருப்பார்கள். உன் விலங்கு சைஸ் என்ன? ஜோக்ஸ் அபார்ட், அம்ஜத்பாய்... தேஜுவை விட்டுவிடுவதுதான் உன் ஆரோக்கியத்துக்கு நல்லது."

"நீ யார் அதைச் சொல்ல?"

"சொன்னேனே... அவளுடைய புதிய பாய் ஃப்ரெண்ட்."

"அவளைக் கூப்பிடு முதலில்."

"அவள் இனிமேல் என் அனுமதி இல்லாமல் தும்மக்கூட மாட்டாள். யாருடனும் பழக மாட்டாள். மேலும் உன் மனைவியின் குடும்பத்தினர் அவளைப் பயமுறுத்தியிருக் கிறார்கள். அதற்கும் ஒரு கம்ப்ளெயிண்ட் கொடுத்திருக் கிறோம். அம்ஜத்பாய், ரொம்ப நேரம் பேசியாயிற்று... பை! இதுதான் நமக்குள் கடைசி உரையாடலாக இருக்கட்டும்." செல்போனை மடக்கியதும் தேஜுவைப் பார்த்தான்.

"திருப்திதானே?"

"எனக்கு பயம் இருக்கு வசந்த். அவன் பத்மாஷ்."

"பாஸ், நீங்க சொன்னீங்கன்னு தடாலடி பண்ணியாச்சு. இந்தப் பொய்யை எத்தனை நாள் நடத்தணும்?"

"அம்ஜத்தை அரெஸ்ட் பண்ற வரைக்கும்" என்றான் கணேஷ்.

"புரியலை."

கணேஷ், "சமயம் வரும்போது புரியும் பாரு."

"தேஜு, நாம ரெண்டு பேரும் லவர்ஸ்." அருகில் இருக்கையைத் தட்டி, "கொஞ்சம் பக்கத்துல உக்காச்சிக்க. யாராவது பாப்பாரஸி இருந்தா போட்டோ எடுப்பாங்க."

தேஜு, 'அதுக்கென்ன' என்று அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

"நான் பாய் ஃப்ரெண்டா இருக்கணும்னா இந்த செண்ட்டு போட்டுக்கிட்டு வராதீங்க. புனுகுப்பூனை மாதிரி, சரோஜாதேவி நாவல்ல வர்ற மாதிரி, வெறியூட்டும் வாசனையா இருக்குது. அப்படியே முழங்காலை மார்ல வெச்சு கிஸ் அடிச்சுருவேன்."

கணேஷ், "பயப்படாதீங்க. அதெல்லாம் செய்யமாட்டான். கௌரி, நீங்க தேஜுகூட இருங்க. நாங்க ஒரு ப்ரீஃப் தயாரிக்கணும்."

"வேற ஏதாவது ஆர்டர் பண்ணணும்னா பண்ணிக்கலாம். ஏ.ஸி. இருக்கு ரூம்ல. குளிர் அதிகமா இருந்தா ஃபைல் தர்றோம்... போத்திக்கங்க" என்றான் வசந்த்.

கௌரி வீட்டுக்கு ஒரு போன் பண்ணிக்கொண்டாள்.

"அப்பா, நான் ராத்திரி தேஜோமயிகூட தங்கறேன். சிலையா? இன்னும் அலையா அலைஞ்சிக்கிட்டிருக்காங்க."

அலுவலறையில் நுழைந்ததும் வசந்த், "பாஸ்... கதை, வசனம் போற போக்கு சரியில்லை. அம்ஜத் என்ன பண்ணுவான்கறீங்க?"

"கண்டிப்பா அவன் உன்னைத் தாக்க வரலாம். எதுக்கும் ராஜேந்திரன்கிட்ட சொல்லி வெக்கறேன். படக்குனு புடிச்சு உள்ள தள்ளிருவார்."

மறுதினம் காலை பதினோரு மணிக்கு அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பு ஷெராட்டனில் நிகழ்ந்தது. தேஜுவும் வசந்தும் கைகோத்துக் கொண்டு வந்தபோது ஃப்ளாஷ்கள் பளிச்சிட்டன. நூறு பளிச்சுகளுக்கு அப்புறம் அவர்கள் நாற்காலியில் உட்கார... பி.ஆர்.ஓ. வேல்முருகன், "இந்தப் பத்திரிகை சந்திப்பு தேஜுவின் சினிமா வாழ்க்கையில் ஒரு முக்கியமான திருப்புமுனையை அறிவிப்பது. இதைப் பற்றி மட்டும் கேள்விகள் கேட்கலாம். மற்ற வதந்திகளைப் பற்றிக் கேட்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். குறிப்பாக,

முக்கியபக்காரர்களைப் பற்றி எதுவும் வேண்டாம். மிஸ்டர் வசந்த் பேசுவார்."

வசந்த் கடைசி வரிசையில் கணேஷை ஒரு முறை பார்த்தான். 'இப்படி மாட்டிவிட்டீங்களே... நியாயமா?' என்று கண்ணால் கேட்டான். கணேஷ் 'பிளந்துகட்டு' என்று கட்டைவிரலை உயர்த்தினான். சம்பத் உற்சாகமாக கோலிவுட் சம்பிரதாய 'கவர்'களை விநியோகித்துக்கொண்டிருந்தார்.

வசந்த் அபாரமான கற்பனை வளத்துடன் ஒரு கதையை முன் வைத்தான்.

"மிஸ் தேஜோமயி எங்களை ஒரு காண்ட்ராக்ட் விஷயமாக அணுகியபோது, என் சீனியர் கணேஷுக்காகக் காத்திருந்தபோது சகஜமாகப் பேசிக்கொண்டிருந்தோம். இருவருக்கும் பல பொது ஆர்வங்கள் இருப்பதை உணர்ந்தோம். மேலும் ஓர் ஆச்சரியம்... நான் ரோசரி பள்ளியில் நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த போது தேஜுவும் அங்கே வந்து சேர்ந்தார். நான் லாயரானேன். அவர் நடிகையானார். ஆனால், விதி எங்களை மறுபடி சேர்த்துவிட்டது. இருவரையும் அறியாமல் காதல் வந்துவிட்டது."

"பள்ளியில் ஏதாவது காதல் கடிதம் எழுதின அனுபவம் உண்டா?"

"கமான்! நாலாம் வகுப்பு. எதெது எதெதற்கு வைத்திருக்கிறது என்பதைப் பற்றியே குழப்பம் தீராத வயது. ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே ஒரு வித்தியாசம் தலைமயிர்தான் என்று நம்பின அறியாப் பருவம். கொச்சைப்படுத்தாதீர்கள்."

"மிஸ் தேஜு... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? வடநாட்டு நடிகர் அம்ஜத்..."

"அம்ஜத்தைப் பற்றிய பேச்சு இந்தக் கூட்டத்தில் வேண்டாம்."

"அம்ஜத்தா அது யாரு?"

"உங்கள் திருமணம் எப்போது?"

"தேஜு ஒப்பந்தித்த எல்லாப் படங்களும் முடித்த பின்னர் செஷல்ஸ் தீவுகளுக்குக் கொஞ்சநாள் சென்றுவிட்டு ஒருவரை ஒருவர் நன்கு அறிந்த பின்தான் கல்யாணம். எங்களிடையே சில கருத்து வேறுபாடுகள் உள்ளன."

"உதாரணம்..."

"அவள் எட்டு குழந்தைகள் வேண்டும் என்கிறாள். நான் ஏழு போதும் என்கிறேன்" என்றான் வசந்த், சீரியஸாக.

சிரிப்பு அலை ஓய்ந்தபின் "பெற்றோர்களுக்குச் சம்மதமா..?"

"இன்னும் சொல்லவில்லை... இனிமேல்தான்."

வசந்த் அவளருகில் அவள் தோளை அணைத்துக்கொண்டு நிற்க, மீண்டும் நூறு பளிச்சுகள். அவன் முகத்தை வாசனை பார்க்க

இன்னுமொரு நூறு பளிச்சுகள். நாளை அனைத்து செய்தித்தாள்களிலும் வரப்போகிறது.

கணேஷ், "மும்பை பேப்பர்ல வருமில்லையா வேல்?"

"டைம்ஸ்லருந்து வந்திருக்காங்க. நிச்சயம் வரும். கணேஷ் சார்... நிஜமாவே ரெண்டு பேருக்கும் காதலா?"

"அப்படித்தான் தோணுது. நான் அவங்க பர்சனல் விஷயத்தில் தலையிடறதில்லை."

"உங்க கல்யாணம் எப்ப?" என்றாள் கௌரி.

"எனக்கு ஏத்த பெண் இருந்தாக்கூட அவ என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டா..."

"ஏன்?"

"பண்ணிக்க சம்மதிச்சா அவ எனக்கேத்த பெண் இல்லை! உடி ஆலன் சொன்னாப்பல... என்னைப் போய் மெம்பரா அனுமதிக்கிற எந்த கிளப்லயும் நான் சேரமாட்டேன்."

"ஏதாவது சப்பைக்கட்டு காரணம் சொல்லுங்க."

தேஜூவை காரில் அனுப்பிவிட்டு அவர்கள் அருகில் வந்தான் வசந்த்.

"எல்லாம் சொல்லிட்டேன் பாஸ். செல்போன் ஆஃப். போன் வாய்ஸ் மெய்ல். எங்க தங்கி இருக்கான்னு ரெண்டு நாள் யாருக்குமே தெரியக் கூடாது. சம்பத் எல்லாம் பாத்துப்பார்."

"என்ன கௌரி... எப்படிப் போச்சு என் டிராமா?"

"பிரமாதம்... கட்டி முத்தம் கொடுக்காத குறை."

"சே... தமிழ்ப் பண்பாடு என்ன ஆறது?" என்றான் கணேஷ்.

"இல்லை பாஸ். எச்சப் பண்ணாம ஒண்ணு குடுத்தாச்சு."

"இந்த விவகாரம் முடியறதுக்குள்ள படுக்க வெச்சிருவிங்க."

"என்னால சிரிக்கக்கூட முடியலை. எங்கே இந்த வேல்முருகன்? ஒரு டயட் கோக்கை வெச்சுக் கதை பண்ணிட்டார். எனக்குப் பசிக்குது."

"வாங்க பாஸ்... காபி ஷாப் போகலாம். பக்கோடா அருமையா இருக்கும்."

நீச்சல்குளத்தருகில் ஓரிரு கிழபோல்ட்டுகள் பாய்ச்சலுக்குப் பதிலாக தொபக்கடீரித்துக்கொண்டிருக்க, கணேஷ் ஆர்டர் செய்த பக்கோடா வந்து அதை ஒரு விள்ளல் கடிப்பதற்குமுன் அவன் தட்டு பறிக்கப்பட்டு வானத்தில் பறந்தது.

அப்போதுதான் அவர்களைக் கவனித்தான். வெளியூர் ஆசாமிகள் போல் இருந்தது. கெட்ட காரியங்களுக்கென்றே படைக்கப்பட்டவர்கள். கறுப்புச் சட்டை, அரை தாடி, உக்கிரமான கண்களுடன் ஓர் இரண்டாம் தர இந்திப் படத்தின் அடியாட்கள் போலவே

இருந்தார்கள். ஆனால், இது படமல்ல... நிஜம்.

கணேஷ் எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டுவிட, அவன் தன் இருக்கையிலிருந்து மூர்க்கத்தனமாக இழுக்கப்பட்டான். வசந்த், டாய்லெட் போயிருந்தவன் திரும்ப வந்தபோது கௌரி வலியன் குருவி மாதிரி கூச்சல் போடுவதைக் கவனித்து, "பாஸ், க்விக்... தண்ணில பாஞ்சுருங்க" என்று கத்தினான். அவர்களை நோக்கி ஓடினான்.

கணேஷ் நீச்சல்குளத்தில் பாய்வதற்கு முன்பே கரையில் இழுக்கப்பட்டு, மார்பில் மிதிக்கப்பட்டு, முகத்தில் உதைக்கப்பட்டு, மூக்கு உடைந்து ரத்தமாயிற்று. வசந்த் ஓடிவந்து அமானுஷ்யமாகக் கூவிக்கொண்டு அவர்களில் ஒருவனைத் தேர்ந்தெடுத்து முழங்காலால் அவன் மர்மஸ்தானத்தில வெடித்தான். அவன் மூச்சுத்திணறி இரும ஆரம்பித்தான். கணேஷைப் பிடித்து இழுத்தவனை சட்டையைப் பற்றினான். பட்டன்கள் வெடித்தன. வசந்த் அவன் கையை மடக்கித் திருப்ப, மளுக்கென்று ஏதோ உடையும் சத்தம் கேட்டது. அவன் விடுவித்துக்கொண்டு ஓட, தனியார் செக்யூரிட்டிகாரர்கள் வருவதற்குள் அவர்கள் எதிர்ப்பக்கம் கடந்து கண்ணாடிக் கதவுகளை உதைத்துத் திறந்து ஓடிப்போய் காரில் பாய்ந்து மறைந்தார்கள்.

கணேஷ் புறங்கையை வாய்மேல் வைக்க, ரத்தம் கசிந்தது.

வசந்த், கணேஷ் சற்றே மயக்கம் அடைந்த நிலையில் இருப்பதைப் பார்த்துத் துரத்தலைக் கைவிட்டான். "என்னப்பா செக்யூரிட்டி நீங்க... சாப்பிட போய்ட்டிங்களா? உங்களுக்கு ஒரு சீருடை... பாட்ஜ்!"

"அவங்களைப் பார்த்தா நம்மூர்காரங்களாத் தெரியலை. இந்தில பேசிக்கிட்டே போனாங்க... 'பாகோ பாகோ'ன்னு."

"அட்ரஸ், டெலிபோன் நம்பர் எதும் கேட்டு வெச்சுக்கலையா! உங்களுக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு பேட்டா... ஒரே ஒரு வேலை கொடுத்தா இப்படிப் போய் சொதப்புவிங்களா... பார்த்த உடனே ஆடுகூட சொல்லும் அடியாட்கள்னு!"

"கார் நம்பர் நோட் பண்ணி வெச்சிருக்கோம் சார்."

"அவங்க இந்நேரம் மும்பை போய்ச் சேர்ந்திருப்பாங்க."

கணேஷுக்கு ஓட்டல் டாக்டர் மூலம் முதலுதவி தரப்பட்டது. சற்று சுதாரித்து லவுஞ்சில் உட்கார்ந்தான்.

"பாஸ், வெரி ஸாரி. நான் வாங்க வேண்டிய அடி."

"ராஜேந்திரனைக் கூப்பிட்டு கார் நம்பரைக் கொடுத்து முடிஞ்சா ஏர்போர்ட்ல ப்ளாக் பண்ணி செக் பண்ணச் சொல்லு."

"பிரஸ்மீட் நடக்கறப்பவே கவனிச்சேன். அவங்க நமக்குப் பின்னால தான் வந்தாங்க. அப்பவே முழி சரியில்லை. கொஞ்சம் அசந்துட்டேன்."

"ரொம்ப அடியா கணேஷ்?" என்று கௌரி, கணேஷைத் தன் மார்பின் மேல் சாய்த்துக்கொண்டாள்.

"என்ன வசந்த்... நீங்க பாஸை இப்படி அடிவாங்க வெச்சுட்டு லெட்ரின் போயிட்டீங்க. நல்லவேளை, உயிர் தப்பிச்சார்."

"நீங்க என்ன பண்ணிங்க... டேபிளுக்குக் கீழே பதுங்கியிருந்தீங்க."

"கணேஷ், நீங்க துப்பாக்கி வெச்சுக்கணும்."

ராஜேந்திரன் செல்லில் அவனைக் கூப்பிட்டார். "கணேஷ், என்ன ஆச்சு? அந்த கார்ல போனவங்க யாரு?"

"ஒரு நடிகையுடைய பிரஸ்மீட்ல வந்து கலாட்டா பண்ணி என்னை அடிக்க முயற்சி பண்ணாங்க."

"அந்த காரை ஏர்போர்ட்ல தேக்கி வெச்சிருக்கோம். ஒரு கம்ப்ளெயிண்ட் எழுதிக்கொடுங்க. அவங்களை அடையாளம் காட்ட முடியுமா?"

"கொஞ்சம் டயர்டா இருக்கேன். வசந்தை அனுப்பறேன்.

"என்ன இது தேஜோமயி பிரஸ்மீட்ல கணேஷா?"

"வழில போற வம்பை விலைக்கு வாங்கியிருக்கோம் ராஜேந்திரன்."

"என்ஃபோர்ஸ்மெண்ட்காரங்க, சி.பி.ஐ., நார்க்காட்டிக்ஸ் எல்லாருக்கும் உங்களைப் பத்தி நோட் அனுப்பிச்சிருக்காங்க. அது என்ன யவனிகா மேட்டர்... ஏதாவது கடத்தலா?"

"அதாங்க மெயின் கதை. இது உப கதை. ராஜேந்திரன், அந்த கேஸைப் பத்திகூட உங்ககிட்ட நான் பேசணும்."

"முதல்ல உடம்பைப் பார்த்துக்கங்க. இந்த மாதிரியெல்லாம் அடிபட மாட்டீங்களே... வசந்த் என்ன செய்துக்கிட்டிருந்தார்? உங்க மெய்க்காப்பாளராச்சே..."

"டாய்லெட்ல இருந்தான்" என்றான்.

வசந்த் அவனை சுடுவதுபோல முறைக்க...

"வரச்சொல்லுங்க" என்றார் ராஜேந்திரன்.

போனை வைத்த கையோடு கணேஷின் செல்போன் மறுபடி ஒலித்தது.

"கணேஷ், நான் ராஜ செல்லையா பேசறேன். நீங்க இனிமே யவனிகா மேட்டரை விசாரிக்க வேண்டாம். போதும்... விட்டுருங்க. கௌரி இருக்காளா அங்க?"

"இருக்காளே..."

"கொஞ்சம் அவகிட்ட போனைக் கொடுங்க."

"கௌரி, ராஜா கூப்பிடறார்."

கௌரி சற்று நேரம் கேட்டுக்கொண்டிருந்தாள். அதன்பின் நிதானமாக, "சிலை கிடைச்சுருச்சு கணேஷ்" என்றாள்.

10

கணேஷ் வியப்புடன், "எப்படிக் கிடைச்சுதாம்?" என்றான்.

"அது சரியாத் தெரியலை. கிடைச்சுருச்சு. இனிமே அவங்களைத் தேடச் சொல்ல வேண்டாம்னுட்டாரு ராஜா."

வசந்த், "நாங்க என்ன கேனையங்களா?" என்றான் கோபத்துடன்.

"இரு வசந்த்."

"இல்லை பாஸ்... இவங்க எல்லாரும் சேர்ந்துக்கிட்டு நம்மகூட ஒரு விளையாட்டு விளையாடறாங்கன்னு தோணுது. சிலை தொலைஞ்சுருச்சு, தேடுங்கறது. நாம லோலோன்னு சிம்மி நாய் பொறை பிஸ்கட்டுக்கு அலையற மாதிரி, அலைஞ்சு தேடறது... திடீர்னு கிடைச்சாச்சு, தேடாதேங்கறது. எத்தனை டயம் வேஸ்ட்! மூணு கேஸை அட்ஜர்ன்மெண்ட் வாங்கிட்டு அலைஞ்சமில்லை."

"சும்மா இல்லை வசந்த். அதுக்குண்டான பணத்தைக் கொடுத்துருன்னுட்டாரு."

"இது காயத்தில் மண்ணு தடவறது. கௌரி, உங்க ராஜ செல்லையாகிட்ட சொல்லுங்க. எங்க மேல அனாவசியமா சந்தேகம் வரும்படியா ஒரு நிலைமை வந்ததுக்குக் காரணம் அந்தச் சிலை தேடறதில் நாங்க தலையை நுழைச்சதாலதான். இதுக்கெல்லாம் விளக்கம் தேவை."

"அவர்கிட்ட இதையெல்லாம் சொல்றேன் வசந்த்."

"சொன்னா மட்டும் போதாது. கூப்பிடுங்க அவரை."

கணேஷ், "வசந்த் சும்மாரு. கௌரி நீங்க போகலாம். உங்க வேலை முடிஞ்சிருச்சில்லை. உங்க மேல பழி நீங்கிடுச்சில்லை... சந்தோஷம்தானே? அதனால நீங்க போகலாம். ராஜாகூட நான் பேசிக்கிறேன்."

"ஏதாவது தப்புப் பண்ணியிருந்தா என்னை மன்னிச்சுருங்க கணேஷ். எனக்கே இது புரியலை."

"மன்னிப்போம் மறப்போம்" என்றான் வசந்த். "முதல்ல எடத்தைக் காலி பண்ணுங்க. இனியும் உங்ககூடப் பேச எங்களுக்கு டயம் இல்லை... குட்பை!"

"ஏதாவது வேலை?"

"தண்ணி லாரி வந்தா சொல்லி அனுப்பறேன்."

கௌரி மிகுந்த துக்கத்தில் இருந்தாள். "கணேஷ்... நீங்களும் கோவிச்சுட்டிங்க. என் நிலைமையைப் புரிஞ்சுக்கலை."

"ஒரு காரியம் பண்ணுங்க கௌரி... யவனிகா சிலை காணாமப் போயி கிடைச்சுருச்சு. அதை ஒரு முறை எங்களுக்கு காட்டவாவது காட்டிருங்க. முடிஞ்சா இங்க கொண்டாந்து காட்டுங்க. அல்லது நாங்க அங்க வரோம்" என்றான்.

"நிச்சயம் கேட்டுப்பாக்கறேன்" என்றாள்.

அவள் மிகுந்த வேதனையுடனும் மனவருத்தத்துடனும் புறப்பட்டுச் செல்லுமுன், "ஒரு வாரம் அலைஞ்சதுக்கு உண்டான ஃபீஸுக்கு எங்க பார்ட்னர்ஷிப் கம்பெனியிலிருந்து ஒரு பில் வரும்னு உங்க ராஜாகிட்ட சொல்லுங்க. இனி இந்த மாதிரி ஜுஜுபி மேட்டரை எல்லாம் கொண்டு வராதீங்க."

அவள் சென்றதும், "இனி சிலையைப் பத்திப் பேச்சே வராது பாரு" என்றான் கணேஷ்.

"எப்படி சொல்றீங்க பாஸ்?"

"பாரேன் செல்லையாவை! இப்பக் கேட்டா 'அப்படி ஒரு சிலை இருக்கா என்ன?'ம்பாரு."

"சுத்தமா புரியலை."

"வசந்த், வரிகளுக்கு இடையில் படிக்கணும். யவனிகா – ப்ரான்சஸ் – மிக விலை உயர்ந்த பொருள் – பல கோடி டாலர் மதிப்பு உள்ளது. அதைத் தெரிஞ்ச ஒருத்தன்தான் திருடிக்கிட்டு போயிருக்கான். அவன் யார்ங்கறது நமக்குத் தெரியாது. இருக்கட்டும்... திருடினவன் அதை கிரே மார்க்கெட்ல விற்க முயற்சி பண்ணியிருக்கலாம். அதுக்குள்ள அதும் மேல பாயறதுக்கு இந்திய அரசாங்கத்தினுடைய அத்தனை இலாகாக்களும் காத்திருக்காங்கன்னு நம்ம மாதிரி அவனுக்கும் தெரிஞ்சிருக்கலாம். அதனால ஓசைப்படாம திருப்பிக் கொடுத்திருக்கலாம்."

"அல்லது இப்படியும் இருக்கலாமே... சிலை எங்கிட்ட இருக்கு· குழந்தையைக் கடத்திட்டுப் போறாப்பல இவ்வளவு ரொக்கம் கொடுத்தா திருப்பித் தர்றேன்னு பேரம் பேசியிருக்கலாமில்லையா?"

"அப்படியும் இருக்கலாம். எதுக்கும் நம்மை ஆளைவிட்டா சரி. இவங்களுக்காக ஒரு வாரம் அலைஞ்சதுக்கு உண்டான ஃபீஸை மட்டும் கேட்டு அவருக்கு ஒரு இன்வாய்ஸ் அனுப்பிடு."

தேஜோமயியிடமிருந்து போன் வந்தது. "கணேஷ்... எனக்கு ரொம்ப ஸாரி. அம்ஜத் ஆளுங்க யாரோ உங்களை மாரா மாரி பண்ணிட்டாங்களாமே கணேஷ். எனக்கு ரொம்ப கஸ்டமாயிருச்சு. இன்னம் அழுதுக்கிட்டிருக்கேன். உங்களை எப்ப வந்து பார்க்கலாம்."

"தேஜு... கொஞ்ச நாளைக்கு நீங்க எங்களை வந்து பார்க்காம

தலைமறைவா இருக்கிறது ரெண்டு பேருக்கும் நல்லது. கவலைப் படாதீங்க. அடிதடி எங்களுக்கு சகஜம். அவங்களைப் பிடிச்சுட்டாங்க. தூங்க பார்த்துக்கறோம்."

"பெரிசா அடி எதுவும் இல்லையே... ஸாரி கணேஷ்."

"என்ன... கொஞ்சம் ஸ்விம்மிங் பூல்ல பாஞ்சதில ஜலதோஷம். அங்க இங்க ஊமைக் காயம்."

"என்னாலதான இதெல்லாம்."

"இல்லை தேஜு... நான் சொன்ன முட்டாள்தனமான ஐடியாவும் காரணம். அம்ஜத் இவ்வளவு பொறாமைக்காரன்னு தெரியாமப் போச்சு."

"அதான் ப்ராப்ளம் கணேஷ்! தலை உடைக்கிறான்."

"போலீஸ்கிட்ட சொல்லியாச்சு. இனிமே அவன் உங்ககிட்ட வந்தா கைது பண்ணிருவாங்க. பயப்படாதீங்க."

செல்போன் தொந்தரவாக அடிக்க... அதை வசந்த் எடுத்தான். கௌரி படபடப்பாக, "ராஜா பில் ஏதும் அனுப்ப வேண்டாம். எமவுண்ட் எவ்வளவுன்னு சொன்னா போதும். கேஷா பே பண்ணிர்றேங்கறாரு. அப்படி இன்வாய்ஸ் பண்ணித்தான் ஆகணும்னா 'ஃபார் சர்வீஸஸ் ரெண்டர்டு'ன்னு 'யவனிகா'ங்கிற பேரை எங்கேயும் குறிப்பிட வேண்டாம்ங்கறாரு."

"ஏனாம்?"

"யவனிகா அவர்கிட்ட இருக்கறது யாருக்கும் தெரியக் கூடாதாம். விஷயம் விபரீதமாய்டுமாம்."

"அப்டியா... அந்தச் சிலையை நாங்க பாக்கணுமே!"

"இப்ப சந்தர்ப்பம் சரியில்லை. சமயம் வர்றப்ப காட்டறேன்னு சொன்னார்."

"ஸ்ஸரி" என்று வசந்த் போனை வைத்துவிட்டு, "பாஸ்... நீங்க சொன்னது போல ஆயிருச்சு. இனிமே யவனிகா தலைமறை வாய்டுவா பாஸ். இது என்னவோ பனிக்கட்டி நுனின்னுதான் தோணுது. கடலுக்குள்ள உள்ள பாக்கி என்னன்னு கண்டுபிடிக்க வேண்டாமா?"

"வேண்டாம். இந்த மேட்டர் நம்மை விடாது."

"அதுக்குள்ள உங்களை ஆளை அனுப்பிச்சு அடிச்சானே அம்ஜத், அவனை ஒரு வழி பண்ணணும். ஏர்போர்ட் போலீஸ் அவுட்போஸ்ட்ல அவங்களை டீடெய்ன் பண்ணி வெச்சிருக்காங்களாம். விசாரிச்சுட்டு வந்துர்றேன். நீங்க இருங்க" என்றான் வசந்த்.

"உடம்பெல்லாம் வலிடா..."

"ஒரு லார்ஜ் பிராந்தி அடிங்க பறந்துரும்!"

அந்தச் சிறிய போலீஸ் ஸ்டேஷனில் அவர்களை லாக்கப் ரூமில் அடைத்து வைத்திருந்தார்கள். அங்கேயிருந்த இன்ஸ்பெக்டர், "உங்களுக்கு இந்தி தெரியுமா?" என்றார்.

"தமிழ்ங்க" என்றான் வசந்த். "இந்தி பரவாயில்லாமப் பேசுவேன்."

"இந்தியைத் தவிர வேற ஏதும் பேச மாட்டங்கறான். சொல்றதைப் பார்த்தா இவன் வேற பார்ட்டி மாதிரி தெரியுது."

"வேற பார்ட்டியா..?"

"ஆமாங்க... அம்ஜத் ஷாவுக்கும் இவங்களுக்கும் சம்பந்தமில்லை. ஏதோ நடுவாந்தர வாடகை அடிதடி பார்ட்டி மாதிரி இருக்கு. ஹை ஹைன்னு குதிரை ஓட்டிக்கிட்டு என்ன பாஷையோ..."

"அவங்களுக்கு நம்ம பாஷை வேற மாதிரி இருக்கும் இன்ஸ்பெக்டர்... நாம 'தெரியுமா'ன்னா அவன் 'தேரிமா' உங்கம்மான்னு நெனைச்சுக்கிட்டு எதுக்குடா எங்கம்மாவை இழுக்கறேம்பான். இவங்களை எத்தனை நேரம் கஸ்டடில வச்சிருக்கலாம்?"

"வேணும்னா காலை வரைக்கும். வச்சிட்டு நியூசன்ஸ் கேஸ், டிஸ்டர்பிங் தி பீஸ்னு சைதாப்பேட்டைக்குக் கூட்டிட்டுப் போகலாம்... எனக்கென்னவோ இவனை ஏவிவிட்டவங்க வேற பார்ட்டின்னு தோணுது. அம்ஜத் ஷாவுக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லைங்கறான். அப்படித்தான் சொல்றானா... இல்ல இவன் இந்தி சரியா புரியலையோ..."

"ராஜேந்திரன் என்ன சொன்னார்."

"லக்கேஜை சோதனை போட்டு ஏதாவது சந்தேகத்துக்கு இடமா இருந்தா, உள்ளே தள்ளிருங்கன்னாரு."

"பார்த்திங்களா?"

"ஒண்ணு ரெண்டு பான்பராக் பாக்கெட்டைத் தவிர வேற எதுவும் அகப்படலை. காலை ஃப்ளைட்டுல வந்து, காட்டின பார்ட்டியை அடிச்சுட்டு சாயங்காலம் போற பார்ட்டிங்க. குறிப்பா சினிமா நடிகைங்களை டார்கெட்டா வெச்சிருக்காங்க. சமீபத்தில அது யாரு மனீஷா கொய்ராலா... அவங்ககூட புரொட்டெக்ஷன் கேட்டாங்க. ஏர்போர்ட்லருந்து அடைகாத்து அழைச்சுட்டுப் போய் ஓட்டல்ல விட்டோம். எதுக்கும் கணேஷை ஜாக்கிரதையாவே இருக்கச் சொல்லுங்க. இவங்க ரெண்டு பேரை என்ன செய்ய..?"

"கொஞ்சம் புடிச்சுக்கங்க இவனை" என்றான் வசந்த்.

லாக்கப் ரூமில் உட்கார்ந்திருந்தவனை வசந்த் தலையைப் பிடித்து நிமிர்த்தினான்.

"ஏண்டா... எங்க பாஸை அடிக்க தில் இருக்காடா உனக்கு?"

"சமஜ் நஹி சமஜ் நஹி" என்றான்.

"என்ன சொல்றான்..?"

"புரியலைங்கறான்."

அவன் தாடையில் முஷ்டியில் வெடித்து ரத்தம் வரப் பல் சிதற ஒரு அடி அடித்துவிட்டு "இது எந்த பாஷையிலும் புரியும்" என்றான் வசந்த்.

அவன் சுருண்டு கீழே படுத்துக்கொள்ள, அவனுடைய அடியாள் மண்டி போட்டு வசந்த்தை வணங்க, "சர்க்கார், சர்க்கார் முஜே மாப் கர்தோ சர்க்கார்" என்றான்.

"மாப்பு கேக்குதா? இதுக்கு பேரு மாப்பு இல்லை, ஆப்பு!" என்று முழங்காலால் அவன் வயிற்றில் உதைக்க...

"ரொம்ப அடிக்காதீங்க... செத்து கித்து வெக்கப் போறான்."

"ஏண்டா, கணேஷ்மேல கை வைப்பிங்களாடா.... பசங்களா" என்ற வசந்த், "ரெண்டு பேத்தையும் விட்டுருங்க இன்ஸ்பெக்டர்" என்றான்.

"கவலைப்படாதீங்க... நாலு தட்டு தட்டிர்றேன்."

வசந்த் திரும்பி வந்ததும், "பாஸ்... உங்களை அடிச்சதுக்கு ரெண்டு பேத்தையும் ஆசை தீர தட்டிட்டேன் பாஸ். எனக்கே கை வலிக்குது. ஒரு தடவை சவுனா பாத் எடுத்துக்கணும். இவங்களுக்கெல்லாம் காட்டு நியாயம்தான் சரி. கோர்ட் – கேஸுன்னு போட்டு இழுக்கறதுக்குப் பதிலா... கேஸை ப்ரஸ் பண்ணலை... விட்ருன்னுட்டேன். ராஜேந்திரன் கேட்டா சொல்லிக்குங்க" என்றான்.

அப்போது, "கணேஷ் வீடு இதுதானா?" என்று விசாரித்துக்கொண்டு ஒருவர் வந்தார். அவருக்கு அறுபது வயதிருக்கும். ஜில்பா வைத்திருந்தார். நரைத்த, அடர்ந்த தலைமயிர். பின்னால் தள்ளி வாரிப் பெரிசாகக் குங்குமம் இட்டிருந்தார். சிமெண்ட் கலரில் ஜிப்பா போட்டிருந்தார். அதன் பையில் அழுக்கு விளிம்பில் காகிதங்கள் துருத்திக்கொண்டிருந்த நோட்டுப் புத்தகம் வைத்திருந்தார்.

வசந்த், "என்னங்க ஏதாவது கோயில் சமாச்சாரமா, அடுத்த மாசம் வாங்க கிருத்திகைக்கு."

"கோயிலுக்கு வரலைங்க. என் பேர் சாமிநாத ஸ்தபதி. கும்பகோணம்."

"வக்கீல் வீட்டுக்கு வந்திருக்கீங்க?"

"நான் சிலை செய்யறவங்க... வெண்கலச்சிலை!"

# 11

**சா**மிநாத ஸ்தபதி, சோழர் காலத்திலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டவர் போலத் தோன்றினார். நவீன யுகத்தின் ஒரே ஒரு அடையாளம், அவரிடமிருந்த மஞ்சள் பையும் அதில் அருள்மிகு ஏதோ ஒரு அம்மன் கும்பாபிஷேகத்தின்போது நன்கொடை என்று பச்சையில் தேதியிட்டு எழுதியிருந்ததும்.

வாழ்க்கையில் பல மேடுபள்ளங்களைக் கண்டவர் என்பதற்கு அடையாளமாக, அவர் முகத்தில் சுவடுகள் தெரிந்தன. அவர் யாரையும் நேராகப் பார்க்காமல், ஒரு மூலையைப் பார்த்துக்கொண்டே பேசினார்.

"சிலைக்கு மோல்டு கொடுக்கச் சொல்லியிருந்தாங்க. அது ரெடியாயிடுச்சுங்க. அதை இழைக்கணும். இந்த விலாசம் கொடுத்திருந்தாரு..."

"யாரு?"

"இந்த ஐயா."

வசந்த், கணேஷைப் பார்த்தான். "பாஸ், புதுசா ஒரு குழப்பம்."

"குழப்பமில்லைங்க. இன்னும் ஒரு மூணு நாள் வேலைங்க. அப்படியே ஒரிஜினல் மாதிரியே இழைச்சுருவேங்க. பணம்கூட இன்னும் வாங்கிக்கலைங்க."

"உங்ககிட்ட முன்மாதிரி மோல்டுக்குச் சிலையைக் கொடுத்தவரு என்ன சொன்னாருங்க?"

"ஏதோ ராஜா பேரு சொன்னாருங்க. ரெண்டு நாள்ல திருப்பிக் கொடுத்துரணும்னு சொன்னாருங்க."

"பேரு என்ன சொன்னாரு... நடேசனா?"

"இருக்கலாங்க... ஞாபகமில்லைங்க."

"எப்படி இருந்தார்? நெத்தியில பச்சை குத்தின பொட்டு?"

"ஆமாங்க!"

"நடேசன்தான் பாஸ்!"

"பொண்ணு யாரும் கூட வந்தாங்களா?"

"இல்லை. நேரா கும்பகோணத்தில் சாரங்கபாணி கோயில் வாசல்ல சொம்பு தட்டிக்கிட்டிருந்தேங்க. 'சாமிநாதன்'

திறவகு நீங்கதானா?'ன்னாங்க. ப்ளெஷர் கார்ல அழைச்சுட்டுப் போயி, ரெண்டு செட் நெய்த் தோசையும் டிகிரி காபியும் வாங்கிக் கொடுத்துட்டு, சிலையை எடுத்துக் காட்னாருங்க. ஆடிட்டனுங்க... கண்ல ஆனந்த பாஷ்பமா நீரு வடிஞ்சதுங்க. காதலியை இழந்து, திரும்பப் பெற்றாப்பல அந்தச் சிலையைப் பத்திக் கேள்விதான் பட்டிருக்கேன். கண் முன்னால யவனிகா! சிலைங்கள்ல நால்ல ஒண்ணு, அதிரூப சுந்தரமான வடிவுங்க. கன்னத்துல ஒரு வெட்கம் தெரியும், பாருங்க... எந்தவிதமான மிகையும் இல்லாம, அப்படியே ரெண்டு ஸ்தனங்களும் செவ்விளநீர் போல, துடை ரெண்டும் மகரத்துவஜன் கோயில் கம்பமோனு அண்ணாமலை ரெட்டியார் சொன்னாப்ல, உலகத்திலேயே பேரழகிங்க அவ! அவளைப் பிரதியெடுக்கறதைப் பெருமையா கருதுறேன். இன்னும் ஒண்ணு ரெண்டு நகாசு வேலைதான் பாக்கி."

"நீங்க கும்பகோணமா?"

"ஆமாங்க... எங்க முப்பாட்டனாருக்கு முப்பாட்டனாருக்கு முப்பாட்டன்தான் ஒரிஜினல் யவனிகாவைச் செய்திருக்கணும். எங்க காலத்துக்கு மறுபடி வந்து எட்டிப் பார்க்கிறா அந்தத் தேவதை! கன்னத்துல ஒரு குழி தெரியும், பாருங்க... அதைத் தேய்க்கறதுக்கே ஒரு வாரம் தேவைங்க. உலகத்திலேயே நாலு சிலைதாங்க. மூணு பரதேசம் போயிருச்சு."

"தெரியும்பா... ஏம்ப்பா, சரியா சொல்லு... பணம் இங்க வந்து வாங்கிட்டுப் போகும்படி சொன்னாரா?"

"ஆமாம்... முதல் மோல்டை ஊத்திக்க, பொருள் வாங்கப் பத்தாயிரம் கொடுத்துட்டுப் போனாரு. ரகசியமா மிச்ச வேலையைக் கவனிக்கலாம்னாரு."

வசந்த், "பாஸ்... சார் முஷ்ரப் மாதிரி புது குண்டு போடறாரு..."

அவன் பயந்து, "ஐயோ... குண்டு இல்லைங்க. சிலை!"

கணேஷ் நிதானமாக யோசித்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவ்வப்போது மூக்கை உருவிக்கொண்டான். சில சமயம் சிரித்துக்கொண்டான்.

"பாஸ், இதுல சிரிக்கிற மாதிரி ஏதாவது இருக்குதா என்ன?"

"வசந்த், நீ என்ன புரிஞ்சுக்கிட்டே இதுல?"

"சிம்பிள்! கேஸ் க்ளோஸ்... சிலையை டூப்ளிகேட் எடுக்க ஏற்பாடு செய்திருக்காங்க. சிலை காணாமப் போகவும் இல்லை, ஒரு எழவும் இல்லை! திருட்டு போறா மாதிரி காட்டிட்டு, வெளியே எடுத்துட்டுப் போய் மோல்டு எடுத்துட்டுத் திருப்பி வெச்சாச்சு. இதில் கௌரியோட இன்வால்வ்மெண்ட் புரியலை. சிலை, ஒரு கரன்ஸி மாதிரி பண்டமாற்று."

"சிலை எங்க இப்போ?"

"அது இந்தியாவைவிட்டுப் பறந்து போயிருக்கணும். அந்தக் கடுதாசியைப் பார்த்தமில்லை... நியூயார்க்கிலிருந்து!"

"வேலை முடிஞ்சப்புறம் ஒரு லச்சம் தரேன்னாருங்க."

"பையில என்னய்யா?" என்றான் வசந்த்.

"வெத்தலைங்க... அரம், சிற்றுளி, பவுடர், பாலீஷ், செடி - கொடி சமாச்சாரங்க..."

அவர் தன் பையைக் காலி பண்ணத் துவங்கி, "சிலை இருக்குதுங்களா?" என்றார்.

"இல்லை... இப்பவே கடையைப் பரப்பாதீங்க."

"கொஞ்ச நேரம் இருங்க. ஏதாவது பத்திரிகை பாக்கறீங்களா?"

"பணத்தைக் கொடுத்தா, ரெண்டு மணி பஸ்ஸைப் பிடிச்சுப் போயிருவேங்க... வேலை கெடக்கு!" என்று தரையில் உட்கார்ந்தார்.

"சோபாவில் உட்காருங்க, தாராளமா"

அடுத்த அறையில் சென்று கணேஷ், ராஜேந்திரனுக்கு போன் செய்தான். எல்லா விவரங்களையும் அவரிடம் மறைக்காமல் சொன்னான்.

"எனக்கு ஒண்ணுமே புரியலை ராஜேந்திரன். சிலை திருட்டுப் போனதாக ஏன் காட்டணும்? பிரதி எடுத்துத் திருப்பி வெச்சுர வேண்டியதுதானே?"

"கணேஷ், சிலை நாட்டைவிட்டு வெளியே போயிட்டதாக இண்டர்போல்ல தகவல் கிடைச்சிருக்கு. அந்த ஸ்தபதியை விடாதீங்க... அங்கேயே வெச்சிருங்க. வந்து விசாரிக்கிறேன். ஃபிலிம் ஸ்டாரை என்ன பண்ணீங்க?"

"ஏன் கேக்கறீங்க? அந்த பிரஸ் கான்ஃபரன்ஸ் அமர்க்களத்துக்குப் பிறகு தேஜோமயியை பீச்ஹவுஸ்ல தலைமறைவா இருக்கும்படி சொல்லியிருக்கேன். எனக்கு ஆபத்து வந்தாற்போல அவளுக்கும் வரலாம்னு எச்சரிக்கைதான். அவள் போரடிக்கிறது என்று நச்சரித்துக் கொண்டே இருக்கா. அகால வேளைகளில் அழைத்துத் தொந்தரவு செய்றாள். வசந்த்துக்கு விடாமல் பல பேரிடமிருந்து போன் வருது. கன் யு இமாஜின்... 'அகில உலக தேஜோமயி நற்பணி மன்ற'த்தின் சார்பில் இளைய தலைவர் வசந்த், ஏதோ ஒரு ரத்த தானத்துக்கோ, கம்ப்யூட்டர் வகுப்புக்கோ தலைமை தாங்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறான்!"

"எங்க போய்க்கிட்டிருக்கோம் கணேஷ்?"

"எல்லாம் சம்பத் ஏற்பாடு செய்றார் என்பது தெரிகிறது. கேட்டா, 'ஐயோ... அதை ஏன் கேக்கறே? இதை ஒண்ணும் பண்ண முடியாது. மாசா மாசம் அவங்களுக்குக் கப்பம் கட்டியாகணுமாம்!"

"மாட்டேன்னா என்ன செய்வாங்க?"

"மாட்டேன்னு யாருமே இண்டஸ்ட்ரில சொல்றதில்லை."

"சொல்லிப் பாருங்களேன்."

"ராஜேந்திரன், எதுக்கு வம்பு? அவளுக்கு இருக்கப்போற புகழ் மூணு வருஷம். இது தமிழ்நாட்டில் வேலை இல்லாத இளைஞர்கள் அதிகம்ங்கறதை நிரூபிக்கிறது. ஒருவிதத்தில் 'டிஸ்ட்ரி பியூஷன் ஆஃப் வெல்த்'... மேலும், புதுப் படம் வந்தா நட்சத்திரம் கட்டி, ஒட்டி, ஊர்வலம் போய், ஒரு வாரத்துக்காவது தியேட்டரை ரொப்பறாங்க. இண்டஸ்ட்ரி மரணப் படுக்கையில இருக்கிற நிலையில, இதெல்லாம் ஆக்ஸிஜன் போல."

இதனிடையே அம்ஜத் மறுபடி மறுபடி செல்போனில் தொந்தரவு பண்ணிக்கொண்டிருந்தான். அவன் பாடம் எதுவும் கற்றுக்கொண்ட வனாகத் தெரியவில்லை. ராஜேந்திரனுடன் தொலைபேசிவிட்டு கணேஷ் புறப்படுமுன் ஸ்தபதியை முன்னறையில் எட்டிப் பார்த்தான். சோபாவில் உட்கார்ந்திருந்தவரைக் காணவில்லை!"

"சாமிநாதன்..."

"ஸ்தபதி!" என்று வசந்த்தும் விளித்துப் பார்த்தான்.

சோபாவில் அந்தக் கும்பகோணம் மஞ்சள் பை அப்படியே இருந்தது.

"பாத்ரூம்ல போய்ப் பாரு வசந்த்."

"இல்லை."

"எங்க போயிருப்பார்? ஒரு வேளை காபி கீப்பி சாப்பிட அடுத்தாற் போல் எங்கயாவது போயிருக்காரோ?"

அப்போதுதான் வசந்த் சோபாவைக் கவனித்தான். "பாஸ், சோபாவுல பாருங்க..."

அங்கே லேசாக ரத்தக்கறை இருந்தது. அது, மெல்லிய நேர்க்கோடாக சோபாவிலிருந்து இறங்கி, மெள்ள அந்த அறையில் மற்றொரு கதவை நோக்கிச் சென்றது.

வசந்த், "சம்திங் ராங் பாஸ்... சம்திங் வெரி ராங்! எங்கேயோ ஆரம்பிச்சு, எங்கேயோ போயிடுச்சு. சாமிநாதன், சாமிநாதன்... கொஞ்ச நாழி முன்னாடி இருந்தீங்களே? எங்க போனீங்க சாமிநாதன்?"

அடுத்த அறையில் வாசலில் ஸ்தபதி சாமிநாதனின் உடல் கிடந்தது. ஒரு கால் மடங்கி, ஒரு கால் நீண்டு, மண்டையில் கபால வெடிப்பில் உடைந்து, உள்ளே கொஞ்சம் வெள்ளையாகத் தெரிய... அவர் முகத்தில் எந்தவித அதிர்ச்சியும் இல்லாமல், முற்றிலும் எதிர்பாராத விதத்தில், ஒரு வேளை பின்புறத்திலிருந்து அடிபட்டிருக்கலாம் என்று தோன்றியது.

அவர் கையில் இருந்த கும்பகோணத்துக்கான பஸ் டிக்கெட்டை, அங்கே இல்லாத யாரிடமோ காட்டிக்கொண்டிருந்தார். முகத்தில் லேசாகச் சிரிப்பு இருந்தது.

"வசந்த், முதல்ல இந்தக் கௌரியைக் கூப்பிடு."

"கௌரி, கணேஷ் ஹியர்... கும்பகோணத்துல இருந்து ஒரு ஆளை நீ இங்கே அனுப்பிச்சியா?"

"புரியலை..."

"சாமிநாத ஸ்தபதின்னு வெண்கலச் சிலை பண்றவரு!"

"இல்லை கணேஷ்... ஒரு வேளை நடேசன் அனுப்பிச்சாரோ என்னவோ... அவருக்குத்தான் கும்பகோண ஸ்தபதிங்களை எல்லாம் தெரியும். ஏன்... என்ன இப்ப?"

"சாமிநாத ஸ்தபதி இங்க வந்து, மண்டையைப் போட்டுட்டார். உடனே வா... எனக்கென்னவோ நீ உண்மையை முழுக்க இன்னும் சொல்லலைனு பட்சி சொல்லுது. நல்லா மாட்டிவிட்டம்மா எங்களை நீ!"

"லா ஸ்கூலுக்கு ஒரு அப்ளிகேஷன் போட வேண்டியிருக்கு. அதை முடிச்சுட்டு வரேன் கணேஷ்!" என்றாள்.

வசந்த் வியப்புடன் "பாஸ்... இந்த கேஸுக்கு ரெண்டு பக்கம் இருக்கு. மேம்போக்கா சிலையைத் தேடற ஒரு பக்கம், பின்னணியில் அந்த யவனிகா சிலையை வெச்சுக்கிட்டு ஏதோ ஒரு பெரிய இண்டர்நேஷனல் தாதா. டூப்ளிகேட் சிலை, அடிதடி, காலையில் ஒரு பிரேதம்! இப்படி ஒரு விபரீதமான குழப்பம்."

"எனக்கு மெள்ளத் தெளிவு ஏற்பட்டுக்கிட்டிருக்கு வசந்த்."

"எனக்கென்னவோ விசிஷ்டாத்வைத தத்துவ ஞானம் போல அல்லது ஹாகிங்குடைய ஸ்ட்ரிங் தியரி போல இருக்குது."

"கொஞ்சம் யோசிரா."

"தேஜோமயியை மனசில உலவவிட்டு யோசிக்கிறதாவது. 'எந்தத் திராட்சைப் பழத்தைப் பார்த்தாலும் சாப்பிடத் தோணலை அவ கண் மாதிரி இருக்கறதாலே'ன்னு ஒரு புதுக்கவிஞர் சொன்னாப்ல..."

"இவங்களுக்கெல்லாம் வேற வேலை இல்லயாடா?"

"அவங்களைக் கேளுங்க... வக்கீல் வேலையே வேஸ்ட்டும்பாங்க."

இதற்குள் அருகாமை காவல் நிலைய அதிகாரிகள் நிதானமாக வந்து விசாரிக்கத் துவங்கினர். "கணேஷ் சார்... இந்த ஆளு யாருங்க?"

"என்னைப் பார்க்க வந்தவர். எனக்கே முத முதல்ல இப்பதான் பரிச்சயம். அதுக்குள்ள..."

"கட்சிக்காரரா... ஏதாவது கேஸ் விஷயமா? சொத்துத் தகராறா... உறவுக்காரங்க போட்டுத் தள்ளிட்டாங்களா..?"

"அப்படித் தெரியலைங்க. இவர் சிலை செய்யறவர். கும்பகோணத்துக்காரர். சாமிநாத ஸ்தபதின்னு பேரு."

"சிலை ஆர்டர் கொடுத்திருந்தீங்களா..?"

"விவரமா சொல்றேன். நீங்க ஒரு எஃப்.ஐ.ஆர். போட்டுக்கங்க. கமிஷனர் ராஜேந்திரன் இதில இன்டரஸ்ட்டட். முதல்ல அவருக்குத் தகவல் சொல்லிடுங்க. அவரே இங்க வர்றதாதான் சொல்லியிருந்தார்."

ராஜேந்திரன் வந்தபோது அவருக்கு விவரம் ரேடியோவில்

சொல்லப்பட்டிருந்தது. "எங்க அந்த ஆசாமி?" என்று சுற்றுமுற்றும் பார்த்து, விறைப்பான சல்யூட்டை வாங்கிக்கொண்டார்.

"என்னைப் பார்க்க வந்தவர், போயிட்டார் ராஜேந்திரன்."

"கும்பகோணத்துக்கா?"

"இல்லை, இன்னும் கொஞ்சம் மேல..." என்றான் வசந்த்.

"ஓ இவரையா! வசந்த், உங்க ப்ளாக் ஹ்யூமரை இன்னும் விடலை நீங்க... எத்தனை வருஷமாச்சு?."

"அடுத்த அறைக்குப் போய்த் திரும்ப வர்றதுக்குள்ள... கால் மணியில எல்லாம் நிகழ்ந்து போச்சு." இருவரும் கீழே கிடந்தவரைப் பார்த்தனர். "மண்டைல நல்ல அடி. ஏதோ ஒரு கனமான பொருளால் அடிபட்டிருக்கார். ஸ்கல் வெடிச்சிருக்கு. மூளைல அடிபட்டா வலி கிடையாது வசந்த், தெரியுமோ?"

"சொல்லாதீங்க..." என்றான் வசந்த். "எனக்கு இருந்த பசியெல்லாம் போயிருச்சு.

போட்டோ பிடிப்பவர்கள் வந்து, ஆம்புலன்ஸ் வந்து, கைரேகைக் காரர்கள் வந்து, 'ஸீன் ஆஃப் க்ரைம்' ஆசாமிகள் அனைவரும் வந்து மந்தமாகத்தான் காரியங்கள் நகர்ந்தன. ஸ்தபதி மெள்ள மெள்ள நிறம் மாறிக்கொண்டிருந்தார். ஸ்ட்ரச்சர் இழுக்கப்பட்டதற்குத் தகுந்தவாறு தலையாட்டிக்கொண்டு சென்றார். முகம் நீலமாகி, உதடு கறுப்பாகி... வசந்த் அந்தப் பக்கம் திரும்பிக்கொண்டான். "சில சமயம் மூணு நாளைக்குக்கூட நெறம் மாறாது. பொன் வறுவலா இருக்கும். சில சமயம் அரைமணியில மாறிடும். உடம்புவாகு அப்படிங்க. கெட்ட திரவங்கள்..."

"யோவ்!"

"கணேஷ் தனியா வாங்க..." என்று கணேஷின் அலுவலறைக்கு அழைத்தார் ராஜேந்திரன். மேஜை முன் உட்கார்ந்துகொண்டு ஒரு நோட்டுப்புக்கை உருவி "உங்ககிட்ட ஏதாவது தியரி இருக்குதா? இவரை யார் கொன்னுருக்க முடியும்... எதுக்காக வந்தார்.?"

"சிலைக்கு மோல்ட் பண்ணியாச்சு. அதுக்கு பினிஷிங் டச்சஸ் கொடுக்கணும்... அதுக்கும் பணம் வாங்கறதுக்கும் வந்தார். நான் ஆடிப்போயிட்டேன். எங்ககிட்ட பணம் வாங்க யார் அனுப்பிச்சாங்க. எங்களுக்கும் சிலைக்கும் என்ன சம்பந்தம், காணாமப் போனதைத் தேடினதைத் தவிர. கேக்கறதுக்குள்ள ஆள் காலி."

"நான் சில விவரங்கள் தரேன்... பொருந்துதா பாருங்க கணேஷ்."

"சொல்லுங்க."

"உங்ககிட்ட சிலை கேக்க வந்ததுக்குக் காரணம் அதை மற்ற தெரிஞ்ச இடங்களில் ஒரு எட்டு கோஷ்டி தேடிக்கிட்டிருக்கிறதால சிலையை மறைச்சு வெக்க சரியான இடமா உங்க ஆபீஸைத் தேர்ந்தெடுத்திருக்கலாம்."

"யாரு?"

"அது போகப் போக தெரிய வரும். அண்மையில நியூயார்க்ல ஒரு பிரைவேட் கலெக்ஷன்ல இந்தியாவிலிருந்து மெடீவல் பீரியடைச் சேர்ந்த ஒரு சிலை மிக அதிக விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறதா எங்களுக்கு இன்டெலிஜென்ஸ் ரிப்போர்ட் வந்தது. இதுக்குண்டான பணம் நிகராகுவா, கொலம்பியா, ஆப்கன் பெல்ட் மூலம் டிப்ளமாட்டிக் மெயில்ல கை மார்ற பணம்னு தெரிஞ்சுது. சிலைக்குக் கொடுத்த பணம் நியூயார்க், சான்பிரான்சிஸ்கோ, ஐரோப்பிய நகர தெருக்கள்ல கிராம் கிராமா போதைப் பொருட்களை விக்கப் பயன்பட்டு ஒரு கிராம், ஒரு டாலர்னு வயல்கள்ல ஆரம்பிச்சு நூறு டாலர், உயர் ரகம் ஆயிரம் டாலர்... பத்தாயிரம் வரை விலை போவுது."

"ஐ ஸீ... இந்தப் பண்டமாற்றுக்கு அந்நிய செலவாணி சிலை! பணக்காரங்களுடைய அந்தரங்கக் கலை ஆர்வம்!"

"ஆமாம். அதில சமீபத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கிறதா தெரியுது."

கணேஷ், "டூப்ளிகேட்டை வுட்டுட்டாங்க!"

"ப்ரிசைஸ்லி! யாரோ ஒரு மிடில்மேன் போலி சிலையைப் பிரதி எடுத்து சப்ளை பண்ணி பணம் வாங்கிட்டான். அவங்க கடும் கோபமாகித் தீர்த்துக்கட்ட ஆளை அனுப்பிச்சிருக்கலாம்."

"அப்ப, இன்னும் ஒண்ணு ரெண்டு மட்டை விழும்."

"உத்தரவாதமா! என்னதான் போதைப்பொருள் வியாபாரமா இருந்தாலும் இவங்களுக்குள்ள ஒரு தொழில் நியாயம்... ஆனஸ்டி உண்டு. இந்த மாதிரி ஏமாற்ற மாட்டாங்க. போதைப் பொருளோ, சிலையோ, ஒரிஜினல் மால்தான் புழங்கும். நடுவில நம்மூர்க்காரங்க புத்தியைக் காட்டவுமே ரொம்ப ரொம்பக் கடுப்பாயிட்டாங்க."

"ராஜேந்திரன், நீங்க எதுக்கும் இந்த யவனிகா மியூஸியம் டிரஸ்ட் ஆசாமிங்க மூணு பேரையும் விசாரிக்க வேண்டி வரும்."

"யார் யாரு..."

"ராஜ செல்லையா, நடேசன்னு ஒருத்தர், அப்புறம் அவங்க க்ரூப் சேர்மன் செல்லையாவுடைய பிரதர் பிரபல இண்டஸ்ட்ரியலிஸ்ட் ராமையா. அப்புறம் கௌரிங்கற பொண்ணு க்யூரேட்டர், செக்ரட்டரி. முதல்ல சிலை காணாம போனதை ரிப்போர்ட் பண்ணவங்க."

கீழே கிடந்த உடலைப் போர்வை போர்த்தி எடுத்துச் செல்வதைக் கவனித்தார்கள்.

"இவன்தான் முதல் பலி."

"அடுத்தது?"

"நீங்ககூட இருக்கலாம். எதுக்கும் எச்சரிக்கையா இருங்க. உங்க பேரும் அடிபடுது..."

"ஐயோ... வெட்டி வம்புங்க. வேலில போற ஓணான்! எதுக்குத்தான் தோள்ல போட்டுக்கிட்டமோ... இதில மாட்னமோ! நாங்க பாட்டுக்கு ஹேபியஸ் கார்ப்பஸ், ரிட் ஒத்திவைப்பு, எலெக்ஷன் பெட்டிஷன், கோலா கம்பெனி நஷ்ட ஈடுன்னு இருந்தவங்க இந்தச் சூழல்ல மாட்டிக்கிட்டோம்."

கணேஷ், "அப்ப யவனிகா சிலை இந்தியாவைவிட்டுப் போகலைன்னு தெரியுது..."

"ஆமாம்... டெல்லி சர்க்கார் வேற தீவிரமா தேடிக்கிட்டிருக்கு இதை. இட்ஸ் டூ ஹாட் நௌ. இப்பவும் ஓனரைக் கேளுங்க. 'சிலையா... அப்படின்னா என்ன? கறுப்பா... சிவப்பா?'ன்னு கேப்பாங்க."

"கேட்டுட்டாங்க."

"அந்தச் சிலை இன்னும் ரெண்டு காவு வாங்கிட்டுத்தான் வெளி வரும்" என்றார் ராஜேந்திரன்.

"ஒன் டு த்ரீ... ஒன் டூ" என்று டான்ஸ் டைரக்டர் சொடுக்க, பின்னணியில் தகர டப்பா ஒலிப்பது போல தாளவாத்தியங்கள் ஒலிக்க... மஞ்சள் ரவிக்கை, பச்சைப் பாவாடை, காவி கலர் கைக்குட்டைகள், வெள்ளை ரிப்பன் அணிந்து தேசிய ஒருமைப்பாடாய் நாற்பது பெண்கள் மத்தியில் தேஜோமயி காலில் பிளந்த கன்னங்கரேல் டிரஸ்ஸில் ஒரு ஸ்டெப் வைத்துவிட்டு, நாற்காலியில் போய் உட்கார்ந்துகொண்டு நாற்பது தடவை டச்-அப் பண்ணிவிட்டு, மாதுளை ஜூஸை உறிஞ்சிக்கொண்டிருந்தபோது அருகே பாடி கார்டாக இருந்த வசந்த்துக்கும் அவளுக்கும் கீழ்க்காணும் உரையாடல் நிகழ்ந்தது.

"ஏங்க... நீங்க கேக்கவே மாட்டீங்களா?"

"என்ன?"

"இந்தப் பொண்ணுங்க உங்ககூட ஆடறாங்களே யாருன்னு..."

"இவங்க ஜூனியர் ஆர்ட்டிஸ்டுங்க..."

"நான் அதைக் கேக்கலை. கதைல இவங்க யாரு?"

"கதைல இவங்க கிடையாது" என்றாள் எளிதாக.

வசந்த் சட்டென்று முகத்தில் வெளிச்சம் போட்டது போல ஆனான். "சிம்பிளா சொல்லிட்டீங்க. மரமண்டை எனக்குத் தெரியலை பாருங்க. இதாங்க சூட்சுமம். வெறும் அடிக்குறிப்புகள், பின்குறிப்புகள், இடுப்புகள்... உங்களுக்கும் மூளை இருக்குது."

"மஜாக் பண்றீங்களா வசந்த்."

அப்போது அங்கே வந்த சம்பத், "வசந்த், உனக்கு நான் எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை. இன்னும் மூணு நாள் அடை காத்துட்டேன்னா ஷெட்யூல் முடிஞ்சு படம் டப்பிங் போயிடும். காவல் போட்டுக்கலாம். அதுக்குள்ள ஏதாவது அசம்பாவிதமா நடக்காம இருக்கணுமேன்னு திருப்பதி பெருமாளைப் பிரார்த்திச்சுக் கிறேன்... என்ன ஆச்சு... உங்க ஆபீஸ்ல ஏதோ கெட்ட காரியமாமே...?"

"மர்டர்! எப்ப முடியும் இன்னிக்கு ஷூட்டிங்?"

"இதோ, லஞ்ச் ஆனப்புறம்."

அப்போது அவனைக் கவனித்தான். பின்னணியில் ரிஃப்ளெக்டர் அருகில் நின்றுகொண்டிருந்தான். "யாருப்பா அது?" என்று காமிரா மேன் அதட்டிக்கொண்டிருக்க... அவன் தன் பாண்ட் பைக்குள் எதையோ தேடுபவன் போலத் தோன்றினான். வசந்த் உஷாரானான். அவனை மெள்ள அணுகினான். வசந்த் அணுகுவதை அவன் கவனிக்கவில்லை. அவன் தேஜூவை அணுகினான். தேஜூவுக்கு ஒரு ராட்சஸ எவர்சில்வர் டிபன்பாக்ஸில் மதிய உணவு வந்தது. ஒரு பெண் சாப்பிட இத்தனை அயிட்டங்களா? பொரியலிலேயே எட்டு வகை. அவியல், வத்தல் குழம்பு, மீன் வறுவல், பாஸ்மதி அரிசி, நம்மூர் அரிசி, ஒரு பாத்திரம் நிறைய கட்டித் தயிர், ஊறுகாயில் எட்டு வகை.

தேஜூ இவற்றையெல்லாம் ஸ்பூனால் மாதிரி பார்த்துவிட்டு ஐஸ்க்ரீம் புடிங் மட்டும் உட்கொண்டாள்.

அவன் மிக அருகே வருவதை வசந்த் உணர்ந்தான். அருகில் தனியார் செக்யூரிட்டியிடம் சொல்லி, "அந்தாளை விசாரிச்சு ஓரம்கட்டு" என்றான்.

# 13

செக்யூரிட்டி ஆசாமிகள் அந்நியனை வசந்திடம் கூட்டி வந்தார்கள். "யார்யா நீ?" என்று அதட்டினான்.

"அய்யா நான் வந்து... வந்து... தேஜூவுடைய பரம ரசிகங்க. அவங்க படம்னா எனக்குப் பைத்தியம். ஒவ்வொரு படத்தையும் பத்து முறை பார்ப்பேன். ஷூட்டிங் நடக்கிறதா சொன்னாங்க... பாத்து, கையெழுத்து வாங்கிட்டுப் போயிரலான்னு..."

"பைக்குள்ள என்ன?"

"ஒண்ணுமில்லைங்க..."

"ஆட்டோகிராப் எதில வாங்குவ?"

"நோட்லங்க" என்று அழுக்கான ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினான். "இதில எப்படியாவது.. ?"

"பார்த்தா முனிசிபல் கழிப்பறை மாதிரி இருக்குது நோட்டு. இதிலயா?"

"அய்யா... வேற காசில்லைங்க... ஏழை ரசிகங்க."

"யோவ்! உண்மையைச் சொல்லு. எதுக்கு வந்தே?"

"உண்மையிலயே ஆட்டோகிராப் வாங்கறதுக்கு."

"அடி வாங்கிருக்கியா?"

"புரியலைங்க..."

"அடி புரியலையா... கன்னத்தில, கழுத்தில, தாடைல உதை. நிஜமா அடிச்சா பல் பேந்து ரத்தம் சிந்துமே..."

அவன் சற்று பயத்துடன் சிரித்தான். "கேலி பண்றிங்கய்யா..."

"கேலி இல்லை" அவன் தாடையில் தட்டி, "இதான் முதல் அடி! பாரு, தேஜூவுடைய படமெல்லாம் பாத்திருக்கல்ல... கடைசியா அவங்க நடிச்சு வெளிவந்த படம் என்ன சொல்லு!"

"அதாங்க, பேர் சட்டுனு ஞாபகமில்லை."

"சட்டுனு ஞாபகமிருக்கிற படமா சொல்லு... ஒரு படம் பேரு சொல்லு?"

"ஜோதி..."

"அந்த மாதிரி படமே கிடையாது!"

அவன் திருதிருவென்று விழித்தான்.

"சொல்லுப்பா... யூனிட்டே காத்திருக்கமில்லை..."

அவன் வசந்த்தைப் பரிதாபமாகப் பார்த்தான். "நான் கையெழுத்துக்கு வரலைங்க..."

"அப்படி வா! எதுக்கு வந்தே?"

"சிலை இருக்கறதா சொன்னாங்க."

"என்ன சிலை?"

"ஏதோ தேவதை சிலைன்னாங்க..."

"யாரு?"

"ஒரு பார்ட்டிங்க. கச்சலா, காதில் ரோமம் வெச்சுக்கிட்டு, குல்லா போட்டுக்கிட்டு ஒருத்தர். சிலையைக் கொண்டாந்தா பத்தாயிரம் தர்றதா சொன்னாங்க. திருடிக்கிட்டு வரச் சொன்னாங்க."

"யோவ்... சிலை வேற கதைய்யா. அது இங்க இல்லை!"

"இங்கதான் தேடச் சொன்னாங்க. பெட்டிங்கள்ல, டிபன் பாக்ஸ்ல..."

"புரியலை... உன்னை ஒருத்தர் தேஜோமயி ஷூட்டிங் ஸ்பாட்ல யவனிகா சிலையைத் தேடி எடுத்து வரச் சொன்னாங்களா?"

"ஆமாங்க..."

"திஸ் இஸ் அமேஸிங்! இந்தாளை விடாதீங்க. சேரோட கட்டிப் போடுங்க" என்றவன் செல்லைத் தட்டி,

"பாஸ்... வசந்த் பேசறேன். உங்களால நம்ப முடியுமா? யவனிகா சிலையை தேஜோமயிகிட்ட தேடறதுக்கு ஒரு ஆள் வந்து நிக்கறான்."

"தப்பா சொல்ற. அது வேற கதைடா!"

"வேற கதைதான். தேஜுவுக்கும் இதற்கும் ஸ்நானப்ராப்திகூட கிடையாது. இருந்தாலும் எப்படி..?"

"அவன் யாரு?"

"பாத்தா, பாத்திரத் திருடன்போல இருக்கான். கீழ்மட்ட கையாள் போலத் தெரியுது. யாரோ அனுப்பிச்சிருக்காங்க. யார் அனுப்பிச்ச துன்னு தட்னா தெரியும். இதிலருந்து உங்களால ஏதாவது புரிஞ்சுக்க முடியறதா?"

"சிலையைப் பல பேர் பல இடங்களில் தேடிக்கிட்டிருக்காங்க வசந்த். அதான் இதற்கு அர்த்தம்!"

"யவனிகாவுக்கும் தேஜுவுக்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்கு. யோசிச்சுப் பாரு..."

"பாஸ், நீங்க வேற புதுசா புதிரைப் போட்டுக்கிட்டுப் போறீங்க. என்ன சம்பந்தம்? இதுவரைக்கும் ரெண்டு கதையையும் வேற வேறன்னு தான் நினைச்சேன்."

"போசிடா முட்டாளே!"

"ஒரே சம்பந்தம் கௌரிதான்!" என்றான் வசந்த்.

"புரியுதா... கௌரிதான்! ஒண்ணு பண்ணு. அந்தப் பொண்ணு ரொம்ப டீப்னு தெரியுது. மூஞ்சுறு மாதிரி இருந்துக்கிட்டு அமுக்குணியா இருக்குது. நீ ஒண்ணும் இனிமே அவளை விசாரிக்காதே. நான் போன் பண்ணி வரவழைக்கிறேன். என்கிட்ட காதல் தேவ்னு குழையறா."

"காதலா!"

"ஆமா... தெய்வீகக் காதல்! எனக்குப் பெரிய்ய லெட்டர் எழுதி 'மணந்தா உன்னைத்தான் மணப்பேன்; இல்லை பிணந்தான்'னு எழுதியிருக்குது கிறுக்கு. அதை வரவழைச்சு நைச்சியமா பேசி என்னம்மா மேட்டர்னு விசாரிக்கிறேன்."

"போனாப்போறதுனு கைல ஒரு முத்தம் வேணா கொடுத்துப் பாருங்க."

"உன் பாடிகார்ட் வேலை முடிஞ்சதில்லை? என்ன ஷூட்டிங் நடக்குது!"

"ஏன் கேக்கறீங்க... அங்க ஏரியாவிலேயே மொத்தம் அரை மீட்டர் துணிதான் இருக்கும். அதை கிழிச்சுக் கிழிச்சு நாற்பது பெண்கள் போட்டுக்கிட்டு, தொப்புள்ள வெயிலடிக்க வச்சு ஒரு அரை மணியா எடுத்துக்கிட்டிருக்காங்க."

"தேஜோமயி என்ன பண்றாங்க?"

"செல்போன்ல வாய் ஓயாமப் பேசிக்கிட்டிருக்காங்க. இந்த உலகமே வேஸ்ட் பாஸ்!"

"மொத்தம் முந்நூறு கோடி ரூபாய் புரளுது வருஷத்துக்கு."

கணேஷ் கூப்பிடுகிறான் என்றதும் கௌரி உடனே வந்தாள்: "எனக்குப் பயமாயிருச்சு கணேஷ். உங்க ஆபீஸுக்கு வரவே தயக்கமாயிருச்சு. ஏதோ கொலை விழுந்துருச்சாமே?"

"ஆமா... கும்பகோணத்தில இருந்து வந்த ஸ்தபதி ஒருத்தர் என்கிட்ட சிலையைக் கேட்டுக்கிட்டு வந்தார். உக்கார வெச்சு திரும்பறதுக்குள்ள அவரை யாரோ அவசரமா கொலை பண்ணிட்டுப் போயிட்டாங்க கௌரி. இப்பகூட லேட் இல்லை... என்கிட்ட ஏதும் எதையாவது மறைக்கிறியா?"

"இல்லையே... இல்லையே" என்றாள் வேறுபக்கம் திரும்பிக் கொண்டு.

"கௌரி... உன் லெட்டர் கிடைச்சுது."

அவள் முகம் சிவந்தது.

"ஸாரி... பைத்தியக்காரத்தனமா ஏதோ எழுதிட்டேன். எல்லாம் வாபஸ்!"

"அதில ஏதும் தப்பும் இல்லை! உன் மனசில இருக்கறதை எழுதிட்டே. நான் உன்னைப் பத்தி தீவிரமா மேற்கொண்டு யோசிக்கணும்னா, நமக்குள்ள ரகசியம் எதுவும் இருக்கக் கூடாது. பரஸ்பர நம்பிக்கை. அதான் முக்கியம் இல்லையா?"

கௌரியின் கண்களில் நீர் வடிந்தது.

"கணேஷ், நான் உங்களுக்குத் தகுதியானவளே இல்லை!"

"ஏன் கௌரி அப்படிச் சொல்றே. நீ ஸ்மார்ட் கேர்ள். இன்டெலிஜெண்ட் கேர்ள்."

"உங்ககிட்ட பொய் சொல்லிட்டேன்."

"பரவாயில்லை. இப்ப நிஜத்தைச் சொல்லு. பொய் சொல்லிட்டேன்னு ஒப்புத்துக்கறதுக்கே பரந்த குணம் வேணும்."

கௌரி, கணேஷின் மார்பில் சாய்ந்து சற்றுநேரம் அழுதாள். மூக்கைச் சிந்தினாள். "முதல்லருந்தே நடந்ததைச் சொல்லிடறேன். சிலை காணாமப் போகவே இல்லை!"

"அப்படித்தான் தெரியுது!"

"அந்தச் சிலையைக் கண்காணிக்க என்னை ஏற்பாடு செய்திருந் தாங்களா... ஒரு நாள் காலைல வந்து பார்க்கறேன்... சிலையைக் காணம். எனக்குப் பதற்றமாயிட்டது. ராஜா சார் ரொம்பத் திட்டினார். அவருக்கு இந்த யவனிகா சிலைமேல ரொம்ப ரொம்ப ஆசை. அதன் சரித்திரம், வேலைப்பாடு பற்றியெல்லாம் பெரிய ஆராய்ச்சிப் புத்தகமே எழுதிக்கிட்டிருக்கார். நிஜமாகவே யோக்கியமான கலை யார்வம் கொண்டவர். எனக்கு அவருடைய நம்பிக்கையை இழந்துட்ட மேன்னு ரொம்ப வருத்தம். ராஜா சாருக்கு அந்தச் சிலை ரொம்ப விலை மதிப்புள்ளது, அதும் பேர்ல பல பேருக்குக் கண் இருக்கும்னு தெரியும். இந்தச் சமயத்தில்தான் சிலை திருட்டுப் போயி மறுபடியும் கிடைச்சிருக்கு."

"சிலை மறுபடி கிடைச்சப்புறம், அதை நீ எப்பவாவது பார்த்தியா?"

"இல்லை. இப்ப வினோதமா சிலை என்கிட்ட இருந்ததையே மறந்துருன்னு ராஜா சார் சொல்லிட்டார். கவர்ன்மெண்ட்ல அதால பெரிய பிரச்சினைன்னு தெரியுது. அதனால சிலை இருக்கா இல்லையா, கிடைச்சுதா கிடைக்கலையா எல்லாமே மர்மமாயிருச்சு. சிலையோட மதிப்பு கோடிக்கணக்கிலன்னு டாலர்லயே சொல்றாங்க. அதனால பல பேர் அதைக் கவர முயற்சிக்கிறாங்கன்னு தெரியுது. எல்லார் கைலேர்ந்தும் மாயமாய் மறைஞ்சு போயிட்டா யவனிகா."

"இப்ப இதில யாரை சந்தேகப்படுவே கௌரி?"

"எனக்கென்னவோ அந்த நடேசன் மூலம்தான் ஒரு பெரிய வியாபாரம் நடந்திருக்குன்னு தோணுது."

"அவரை நான் சந்திக்க ஏற்பாடு பண்றியா?"

"தாராளமா. உங்களுக்கில்லாமலா... கணேஷ், ஒண்ணு மட்டும்

சொல்லுங்க... என் காதல் கடிதத்தை நீங்க கேலி பண்ணலைதானே?

"சேச்சே."

"உங்களுக்கு நிறையப் பேர் இந்த மாதிரி கடிதம் எழுதியிருப்பாங்கதானே?"

"உண்மையைச் சொல்லப்போனா எனக்கு யாரும் எழுதினதில்லை. எல்லாம் வசந்த்துக்குத்தான் வரும். பெரிசு பெரிசா ஏதாவது படம் ஒட்டி..."

"காதலைப் பத்தி என்ன நினைக்கறீங்க? சும்மா உடல் கலப்பில்லாம மனசில ஒருத்தரைக் காதலிக்கக் கூடாதா? காதலுக்கு செக்ஸ் தேவைதானா?"

"பாரும்மா... எனக்கு இதையெல்லாம் யோசிக்க நேரமில்லை. எல்லாமே ஆண்ட்ரோஜென், ஈஸ்ட்ரோஜென் சமாச்சாரம் என்பது தான் என் கருத்து. நான் காதலிக்கிறதா இருந்தா என்னால அடையவே முடியாத ஒரு விஷயத்தைக் காதலிப்பேனான்னு தோணுது. அது செக்ஸுவலா இருக்கணும்னு தேவையில்லை. அருமையான – மிக அருமையான – மிக மிக அருமையான ஒரு வழக்காகூட இருக்கலாம். நான் சொல்றது உனக்குப் புரியறதா? உதாரணமா, இந்த யவனிகா சிலை மர்மத்தை உடைக்கிறதில எனக்கு ஒரு காதல் ஏற்பட்டிருக்கு. இந்தப் பெண் யவனிகா கண்ணாமூச்சி காட்டறா. என்னைக் கண்டுபிடிங்கன்னு அந்தந்த மூலைகளில கலகலன்னு சிரிக்கிறா. அவளைக் கண்டுபிடிக்கிறதில உள்ள சவால் எனக்குப் பிடிச்சிருக்கு. இப்பக்கூட நீ முழு உண்மையைச் சொல்ற மாதிரி தெரியலை. எதுக்கோ தயங்கறியா?"

"இல்லை கணேஷ். எனக்குத் தெரிஞ்சவரை இதுதான் உண்மை!"

"வா நடேசனைப் போய் பார்க்கலாம்!"

# 14

நடேசனின் ஆர்.ஏ.புரம் ஃப்ளாட், சென்ற முறை பார்த்ததைவிட இன்னும் சிதிலமாகி இருந்தது. அலமாரியின் மேல்தட்டில் அலட்சியமாக ஐந்நூறு ரூபாய் நோட்டுக்கட்டு தெரிந்தது. கணேஷ் அதை அலட்சிய விரல்களால் சிதார் வித்வான் போல ஒரு முறை மீட்டிவிட்டு, "என்ன... பணம் கிடைச்சிருச்சா நடேசன்?" என்றான்.

நடேசன் அதைப் பார்த்து, "இது ஒரு வீட்டுக்குக் கொடுத்த அட்வான்ஸ்ங்க.

"நியூயார்க் பார்ட்டி கொடுத்த பணமா இது?"

"இல்லீங்க... உள்ளூரு. தண்டையார்பேட்டை!"

"நடேசன், எனக்கென்னமோ நீங்க ஒரு பெரிய அபாய மான விளையாட்டுக்குள்ள தெரிஞ்சோ தெரியாமலோ பூந்துட்டீங்க... இப்பக்கூட உங்களை எங்களால காப்பாத்த முடியும்னு தோணுது..."

"நான் ஒரு ஏழை புரோக்கர்ங்க. என்னைக் காப்பத்தறதுக்கு எதுவுமில்லீங்க. அன்றாடங்காச்சிக்கு 'இஸட்' கிரேட் செக்யூரிட்டில்லாம் தேவை இல்லீங்க. இந்தப் பணத்தைக்கூட பாங்க்ல போடத்தான் கிளம்பிட்டு இருந்தேன். நீங்க எதையோ நினைச்சுக்கிட்டு, என்னை வலுக்கட்டாயமா காப்பாத்த விரும்பறீங்கனு தோணுது."

நடேசன் பேசிக்கொண்டிருக்கும்போது அந்த அறையிலிருந்த மற்ற பொருள்களை மெதுவாகக் கண்ணோட்டமிட்டான் கணேஷ். பிரதானமாக ஒரு குவார்ட்டர் பாட்டில் டிப்ளமாட் விஸ்கியும் நின்றுபோன ஒரு கடிகாரமும் சமீபத்திய 'தினத்தந்தி' இதழில் ஒரு சுழிக்கப்பட்ட அறிவிப்பையும் கவனித்தான்.

'சென்னைத் துறைமுகத்துக்கு எம்.வி. யவனிகா சனிக்கிழமை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் க்ளியரன்ஸ் விரும்புபவர்கள் பி. ராமசாமி, க்ளியரிங் அண்ட் ஃபார்வார்டிங் ஏஜெண்ட், 27–டி, செகண்ட் லைன் பீச், சென்னை–1 அவர்களை இன்வாய்ஸ்களுடன் அணுகவும்...'

கணேஷ் அதை அவரிடம் காட்டி, "இதுல உங்களுக்கு ஏதாவது பார்சல் வருதா?"

“இல்லையே...”

“கப்பல் பேரு எப்படி யவனிகா?”

“எத்தனையோ கப்பல்... எத்தனையோ பேரு... ஆந்தோலிகாங்கிற பேர்லகூட ஒரு கப்பல் இருக்குது.”

“வீட்டு புரோக்கருக்கும் துறைமுகத்துக்கு வரும் கப்பலுக்கும் என்ன சம்பந்தம்? இதை எதற்குச் சுழிச்சு வெச்சிருக்கீங்க?”

அவர் அந்தக் கேள்விக்குத் தயாராக இருந்தமாதிரி, “சில க்ளையண்ட்ஸ் வெளிநாட்டுல இருக்கிறவங்க, அங்கிருந்து ஃபர்னிச்சர் போன்ற சாமான்களையெல்லாம் அனுப்பி, என்னை கலெக்ட் பண்ணிக்கச் சொல்லி, அதுக்குண்டான கமிஷனைக் கொடுப்பாங்க.”

“அப்படிங்களா?” என்று கணேஷ் கேட்ட விதத்திலேயே, அவன் அதை நம்பவில்லை என்பது தெரிந்தது.

“கௌரி... இவர் பொய் சொல்ற மாதிரி தெரியலையா உனக்கு?”

கௌரி தலையசைத்தாள். “அப்படித்தான் நினைக்கிறேன்.”

கணேஷ் அவர் தோளில் தட்டி, “பொய் சொல்றது ஆரோக்கியக் கேடு. நீங்க எதுவும் மறைக்காம என்கிட்ட சொல்றது நல்லது. எப்ப வேணா போன் பண்ணுங்க. இது என் செல் நம்பர். வா கௌரி” என்று புறப்பட்டான்.

காரில் கிளம்பியவுடன், ஒரு டிராஃபிக் அடைப்பினால் காளியப்பா ஆஸ்பத்திரி நாற்சந்தியில் நிற்கவேண்டி இருந்தது. அப்போது நடேசன் வேகமாக ஒரு எஸ்டீடி. பூத்துக்கு வந்து, கூண்டுக்குள் வித்தியாசமான அசைவுகளுடன் யாருடனோ கோபத்துடன் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

இம்மாதிரியான வன்மையான அசைவுகளை அவனிடத்தில் இதுவரை கணேஷ் பார்த்ததில்லை. போக்குவரத்து தெளிவாக, கணேஷ் புறப்பட்டுச் சென்றான். பாலத்தைத் தாண்டி மந்தவெளிப் பாக்கம் சென்றுகொண்டிருக்கும்போது, அவனுடைய செல்போன் ஒலித்தது. சிக்னல் கொஞ்சம் சுரத்தில்லாமல் கேவியது.

“கணேஷ்... காப்பாத்துங்க... யவனிகா, யவனிகா...” அதன்பின் மௌனம். அந்த அறைகூவலில் இருந்த பயமும் எச்சரிக்கையும் கணேஷுக்கு ஏதோ விபரீதம் நிகழ்ந்துவிட்டது என்பதைச் சிலிர்த்து உணர்த்தியது.

“எங்க திரும்பறீங்க?”

“மறுபடியும் நடேசன்.”

“என்னாச்சு?”

“அங்க போனா தெரியும்...”

கணேஷ், வசந்த்துக்கு டெலிபோன் செய்தான். “வசந்த், ஆர் யூ ஃப்ரீ?”

"ஏன் பாஸ்? தேஜோமயிகூட லஞ்ச் சாப்டுக்கிட்டு இருக்கேன். ஏதாவது அவசரமா?"

"அப்படினுதான் தோணுது. நடேசனைப் பார்க்கப் போயிருந்தேன். திரும்பி வரப்போ, ஏதோ விபரீதம் நடந்திருக்கும் போலத் தெரியுது..."

"கௌரிகூட இருக்காளா?"

"இருக்கா... ஏன்?"

"அப்புறம் பேசறேன்... என்ன பாஸ்? இந்த கேஸ்ல சென்ற இடமெல்லாம் இறப்பு. ஒவ்வொரு சமயம் இண்டியன் கிரிக்கெட் டீம் விக்கெட் விழறாப்ல, அஞ்சு ஓவருக்கு ஒரு பலி விழுதே... எங்கு போய் முடியும்?"

"இரு, தாவாதே... இன்னும் நடேசனுக்கு என்னாச்சுங்கிறது ஊர்ஜிதமாகலை."

"எனக்கென்னவோ அது ஆயிடும்போல இருக்குது. சாமிநாத ஸ்தபதி வலதுகாலை மடக்கிக்கிட்டுப் போய்ச் சேர்ந்தாரு. இவரு ஒரு மாறுதலுக்கு இடதுகாலை..."

"வசந்த், ரொம்பக் கொடூரமா பேசறே. தேஜோமயிக்கு வேற யாரையாவது காவல் போட்டுட்டு, நேரே ஆர்.ஏ. புரம் வந்து சேரு."

அவர்கள் போனபோது, சிறுவர்கள் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்தார்கள்.

தொலைக்காட்சியில் எல்லா ஃப்ளாட்டுகளிலும் 'ஆசைப்படு பெண்ணே, ஆசைப்படு... ஓசைப்படாமல் நீ ஆசைப்படு' என்று எதிரொலித்துக்கொண்டிருந்தது. மாடிக்கு வந்து கதவைத் தட்டினதில், அது தானாகத் திறந்துகொண்டது.

கணேஷ் உள்ளே நுழைந்தான். கௌரி இரண்டு கைகளையும் உதறிக்கொண்டு உள்ளே வர மறுத்தாள். தொலைக்காட்சி மாறியிருந்தது. 'மஞ்சள் ஊஞ்சலாய், நெஞ்சம் கொண்டதாய் மாங்கல்யம்... அன்புக்குச் சிறையே மாங்கல்யம்...'

"பயப்படாதே... வலதுகாலை முதல்ல வெச்சு மகளே வா."

"எதுக்கும் வசந்த் வந்துரட்டும். ஆளு இறந்து போய்ட்டாரா... நீங்களே பார்த்துச் சொல்லுங்க" என்றாள்.

கணேஷ் உள்ளே போனபோது நடேசன் திவானில் ஏறக்குறைய சயனித்துக்கொண்டிருந்தார். கண்கள் திறந்திருந்தன. தன்னை எது வந்து தாக்கியது என்று ஆச்சரியப்படுவதற்குள் இறந்துபோய் விட்டதாகத் தெரிந்தது. வசந்த் வரும் வழியிலேயே போலீஸுக்குத் தகவல் சொல்லியிருக்க வேண்டும். சைரன், ஆம்புலன்ஸ் ஒலிகளுடன் போலீஸ் ஜிப்ஸி வந்து நின்றது. கிரிக்கெட் சிறுவர்கள் தங்கள் ஆட்டங்களை நிறுத்தி வேடிக்கை பார்க்க மாடிப்படியை அடைத்தார்கள். 'ஒதுங்கு ஒதுங்கு' என்று கான்ஸ்டபிள் சொல்ல உள்ளே அவர்கள் நுழைய, "என்னாச்சுங்க... ஹார்ட் அட்டாக்

மாதிரி தெரியுது" என்றார் இன்ஸ்பெக்டர்.

"போன் பண்ணது யாரு?"

வசந்த், "நான்தான் சார். ஹார்ட் அட்டாக்காகவும் இருக்கலாம். இல்லே, அதிர்ச்சி, வன்முறை இப்படி ஏதாவதுமா இருக்கலாம். எதுக்கும் விசாரிங்க."

"நீங்க யாரு?"

"நாங்க வக்கீலுங்க. இவரைச் சந்திக்க வந்தோம்."

"வெளில அழுதுக்கிட்டு இருக்கே அந்தப் பொண்ணு?"

"அதுதான் எங்களைக் கூட்டிட்டு வந்துச்சு."

"இங்க வாங்க."

கௌரி விக்கி விக்கி அழுதாள்.

"எனக்கும் இதுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லீங்க!"

"அதெல்லாம் அப்புறம் விசாரிக்கலாம்" என்று திவானில் சாய்ந்திருந்த நடேசனின் கழுத்தில் விரல் வைத்துப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

"இது அப்பவே போய்டுச்சு" என்றார்.

மேலாகப் பார்க்கும்போது எந்தவிதக் காயமோ ரத்தமோ தெரிய வில்லை. மிகவும் உன்னிப்பாகப் பார்க்கையில் போலீஸ் அதிகாரியின் பார்வைக்கு அது தெரிந்தது. அவர் கணேஷிடம் காட்டினார்.

"குண்டு வெளியே போன இடம் தெரியுது பாருங்க. ரொம்பக் கிட்டக்க துப்பாக்கிய வெச்சு சுட்டுருக்காங்க. பலிஸ்டிக்ஸ் ஆளுங்க நிச்சயம் துப்பாக்கிய அடையாளம் கண்டுபிடிச்சுருவாங்க" என்று சொல்லிவிட்டு அறையெங்கும் தேடினார்.

"இங்க எங்கயாவது குண்டு இருக்கா பாருங்க."

வசந்த் நிதானமாகத் தேடி துப்பாக்கி ரவை பல சிதறல்களுக்குப் பிறகு ஒரு மேஜையின் ஓரத்துக்கும் சுவருக்கும் உள்ள இடைவெளியில் இருப்பதைக் கவனித்தான். இருவரும் வெளியே வந்தார்கள். இதற்குள் வேடிக்கை பார்க்கும் ஜனங்கள் அதிகரித்துவிட்டனர்.

அவர்களிடம் இன்ஸ்பெக்டர், "ஏதாவது துப்பாக்கி வெடிக்கிற சத்தம் கேட்டுதாயா?" என்று விசாரித்தபோது அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு உதட்டைப் பிதுக்கினார்கள்.

"நீங்க எதுக்கும் ராஜேந்திரனைக் கூப்பிட்டு சொல்லிடுங்க பாஸ்" என்றான் வசந்த்.

ராஜேந்திரன் வந்தபோது, "என்ன கணேஷ், ரொம்பக் குழப்புதே..." என்றார்.

"எனக்கென்னமோ இது ஒரு விதமான கொலை அலையோன்னு தோணுது. இது எங்க போய் முடியும் என்பது பிரமிப்பாய் இருக்கிறது.

அந்த ஸ்தபதிக்கும் இந்த நடேசனுக்கும் என்ன சம்பந்தம்? சிலைக்கு மோல்ட் செய்ய ஸ்தபதியை இவர் பணித்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இரண்டு கொலைக்கும் பொது யவனிகாதான்."

வசந்த் "பாஸ்... அந்தச் சிலை இந்தியாவுலதான் இருக்கு. அது கிடைக்கிறவரைக்கும் இந்த மாதிரி விபரீதச் சம்பவங்கள் நிகழலாம். யாரோ சிலையைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் கிடைக்கவில்லை என்றால் தீர்த்துக்கட்டிவிடுவார்கள் போலிருக்கு. இனி நாம் எல்லோருமே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

"கணேஷ்... உங்களை நான் பிறகு விசாரிக்கிறேன், டேக் கேர்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் ராஜேந்திரன். வசந்த், கணேஷ், கௌரி மூவரும் காரில் கிளம்பியபோது அதன் பின்புறக் கண்ணாடியில் ஒரு மாருதி வேன் அவர்களைப் பின்தொடர்வது தெரிந்தது.

# 15

தற்செயலோ, தெய்வாதீனமோ...

கணேஷ், "வசந்த்... ஏ.ஸி. போடு. ரொம்ப புழுக்கமா இருக்கு!"

பவர் விண்டோ இயங்க... அது முழுசாக மூடினபின், துப்பாக்கிக் குண்டு அதன்மேல் வெடித்து, அந்தக் கண்ணாடியின் ஜப்பானியத் தொழில்நுட்பத்தால், பட்ட இரண்டு இடங்களில் சட்டென்று அப்படியே ஒட்டிக் கொண்ட இரண்டு வைரச் சிதறல்கள் தோன்றின.

வசந்த்துதான் ஓட்டிக்கொண்டிருந்தான். ஒரு நிமிஷம் வண்டி நிலைகலங்கி, இடது ஓரத்தில் சென்றுகொண்டிருந்த ஒரு மீன்பாடி வண்டியைத் தள்ளிவிட்டுச் சுதாரித்து, மறுபடி நேராவதற்குள் கௌரியின் அலறல், பின்னால் வந்துகொண்டிருந்த ஒரு சில பிரேக்குகளின் தீற்றல் இவையெல்லாம் கேட்க...

அவர்களைத் தாக்கிய அந்த மாருதி வேனின் உள்ளே இருந்த இருவரை அவர்களால் ஒருசில செகண்டுகள் முகத்துக்கு முகம் பார்க்க முடிந்தது. அவன் விரல்களால் செய்த சைகையில் மரண எச்சரிக்கை இருந்தது. இருவரும் முன்ஸீட்டில் வீற்றிருந்தார்கள். இருவரிடமும் ரைஃபிள் வகை துப்பாக்கி இருந்தது. அந்த மாருதி வேன் அவர்களை மிக வேகமாகக் கடந்து சென்றது.

வசந்த் உடல் முழுவதும் வியர்த்திருந்தான். "மை காட்... மை காட் பாஸ்..." கணேஷின் புஜத்தைத் தொட்டுப் பார்த்து, "பாஸ், உயிரோடு இருக்கிறோமா?" என்றான். கார் அவர்களை அறியாமல் ஒரு மிகப் பெரிய விபத்தில் இருந்து தப்பித்து, இடது ஓரத்தில் யு டர்ன் அடித்து, ஏதோ ஒரு படுகோணத்தில் ஒரு பாலாஜி கஃபேயை நோக்கி நின்றிருந்தது.

கௌரி விக்கித்துப்போய்ப் பேசுவது அறியாமல், "கணேஷ்... வசந்த்... ஆர் யு ஆல்ரைட்..." என்றாள்.

வசந்த், "டாப் ஆஃப் தி வோர்ல்ட். என்ன முட்டாள் தனமான கேள்வி இது?"

அவள், அவர்களிடையே இருந்த இடத்தில் ஏறக்குறைய தரையில் விழுந்திருந்தாள். கணேஷ் மிகமிக உன்னிப்பாக

அந்த மாருதி வேன் திரும்ப வருகிறதா என்பதைக் கவனித்தான். கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான்.

"என்னாச்சுங்க... பங்க்ச்சரா?"

"இல்லீங்க... பட்டப்பகலில் சுட்டுட்டு ஓடுறாங்க."

அவர்களை வசந்த் எந்தவிதமான உணர்ச்சியும் இல்லாமல் பார்க்க, அந்த இடத்தில் கூட்டம் அதிகமாக... "திரும்பி வந்தாலும் வருவாங்க. எல்லாம் ஒதுங்கிடுங்க..." என்று வசந்த் சொல்ல, கூட்டம் சட்டென்று விலகியது. கணேஷ் செல்லில் பேசிக்கொண்டிருந்தான்.

"பாலம் தாண்டி, பாலாஜி கஃபே அருகில்... உடனே... உடனே நீங்க வந்தாகணும் ராஜேந்திரன். எங்கமேல ஒரு அசாசினேஷன் அட்டெம்ப்ட். ரொம்ப ஆடிப்போயிருக்கிறோம். தலைகால் புரியலை. உங்ககூட இதை அக்குவேறு அலசணும். உங்க ஆபீஸிலேயே பத்திரமான ஒரு இடம் எங்களுக்குத் தேவைப்படுது. மற்றபடி, எங்க ஆபீஸோ, தெருவோ... நான் இந்த கேஸை விசாரிச்சுட்டுப் போகிற இடங்களோ எதுவும் பத்திரமா தெரியலை..."

ராஜேந்திரன், "கணேஷ்... ஒன்று மட்டும் சொல்ல முடியுமா, பாருங்க... உங்க ரெண்டு பேர்ல யாராவது அவங்களைக் கிட்டத்துல பார்த்திங்களா? அன்னிக்கு பார்க் ஷெரட்டன்ல உங்களை ஸ்விம்மிங் பூல் பக்கத்துல தாக்க வந்தாங்களே... அவங்களுக்கும் இவங்களுக்கும் ஏதாவது முக ஒற்றுமை இருந்ததா?"

"இல்லை ராஜேந்திரன், அது அடிதடி பார்ட்டி. இது ரைஃபிள் பார்ட்டி. இரக்கமற்ற இரண்டு ஜோடிக் கண்களைத்தான் என்னால் அருகே காணமுடிந்தது..."

"சருமத்தின் நிறம் எப்படி இருந்தது? காக்கேசியன், இரானியன் அல்லது கறுப்பா இருந்தாங்களா?"

"மின்னல் வேகத்துல நடந்த விஷயம். அவ்வளவு உன்னிப்பா கவனிக்க முடியலை..."

"அதிர்ஷ்டவசத்துல தப்பிச்சீங்க... அஞ்சு நிமிஷத்துல உங்களுக்குப் பாதுகாப்பு அனுப்பறேன். ஜாக்கிரதையா இருங்க. இதோ வந்துருவோம்..."

அவன் செல்போனை மடக்கியதும், அது மீண்டும் ஒலித்தது. திரையில் அதன் நம்பரைப் பார்த்தபோது, புதிய எண் என்பது தெரிந்தது.

கேட்டதில், "கணேஷ் யாரு?"

"நீங்க யாரு?" என்றான் கணேஷ்.

"ராஜ ராமையா, கேள்விப்பட்டது இல்லையா?"

"ராஜா... ஹூ?"

"ஆர்.ஆர். இண்டஸ்ட்ரீஸ் சேர்மன். நீ எந்த யுகத்துல இருக்கே?"

"என்ன வேணும் உங்களுக்கு? சொல்லுங்க..."

"என் தம்பி ஏதோ ஒரு சிலை மேட்டர்ல மாட்டிக்கிட்டு என்னென்னமோ மிரட்டல் கடிதங்கள் எனக்கு வந்துட்டிருக்கு. நீதான் அதை ஏதோ நோண்டறதா கேள்விப்பட்டேன். எனக்கு இந்தச் சிலையெல்லாம் அலர்ஜி. என்னுடைய தொழிலுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் இருக்கணும். அதனால, என்ன பிரச்சினைன்னு உடனே என்கிட்ட வந்து சொல்லு. கார் அனுப்பறேன். எங்க அனுப்பணும்?"

"சார், நான் இப்ப கமிஷனர் ராஜேந்திரனைச் சந்திக்கப் போறேன். அவரைச் சந்திச்சப்புறம் அங்கே வரேன். அதைவிட, நீங்க கமிஷனர் அலுவலகத்துக்கு வந்துட்டா பத்திரம்னு நினைக்கிறேன்..."

"வரேனே... ஏன்?"

"இப்பத்தான் ஒரு கொலைத் தாக்குதலில் இருந்து தப்பிச்சு, ஒரு உலுக்கு உலுக்கப்பட்டு மீண்டிருக்கிறேன். அதனால, புதிய இடங்களுக்குப் போவதற்குத் தயக்கமா இருக்குது..."

"ஓஓ! தட் சீரியஸ்... நான் வேணா உனக்குக் காவலுக்கு ஆள் அனுப்பவா?"

"இல்லீங்க... ராஜேந்திரன் வந்துருவாரு!"

"அப்ப, இன்னும் அரைமணியில கமிஷனர் அலுவலகத்துக்கு நானும் வரேன்..."

எழும்பூரில் கமிஷனர் அலுவலகம் சுறுசுறுப்பாக இருந்தது. பச்சை தட்டிய நிழல்களில் மக்களும் போலீஸ் அதிகாரிகளும் ஊடாடிக் கொண்டிருக்க... வசந்திடம் ஒருவர் பழுப்பு நிறக் காகிதத்தைக் காட்டி, "இந்த ஆபீஸ் எங்கிருக்குதுங்க?" என்று விசாரிக்க...

அவருக்குப் பதில் சொல்வதற்கு முன் ஒரு கான்ஸ்டபிள், "மேட்டர் என்ன... இங்க வாங்க..." என்று ஆவலாகத் தள்ளிக்கொண்டு சென்றார். உள்ளே நடந்து செல்லும்போது, கணேஷ் கண்களில் எச்சரிக்கையுடன் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே நடந்தான். எந்த நிமிஷத்திலும் எந்த மூலையிலும் ஒரு துப்பாக்கி முனை தெரியுமோ என்று பயப்பட்டான்.

கௌரியைப் பத்திரமான இடத்தில், ஒரு பெண் போலீஸ் அதிகாரியுடன் உட்கார வைத்துவிட்டு ராஜேந்திரனின் அலுவலகத்துக்குள் நுழைந்தபோது, எதிரே உட்கார்ந்திருந்தவர் ராஜ ராமையாவாக இருக்க வேண்டும் என்பதை ராஜ செல்லையா முகத்தோற்ற ஒற்றுமையிலிருந்து யூகிக்க முடிந்தது.

ராஜேந்திரன், "கணேஷ்... இவர் யாருனு தெரியுமில்லே... இந்தியத் தொழில்நுட்பத்தின்..."

கணேஷ் குறுக்கிட்டு, "கேள்விப்பட்டிருக்கிறேன். இவரும் இருக்கிறதால, இந்த விவகாரத்தை முழுசா விசாரிக்கலாம்."

ராமையா, "அந்தச் சிலை விலை மதிப்பு இல்லாததா?" என்று கேட்டார்.

"அப்படித்தான் உங்க தம்பி சொல்றார்..."

அவன் இந்தமாதிரி குப்பையெல்லாம் ஏகத்துக்கும் சேகரிச்சு வெச்சுக்கிட்டு, என்னுடைய காசை விரயம் பண்ணி... இதாவது பரவாயில்லை, இந்தக் கடிதத்தைப் பாருங்க." என்று காட்டினார்.

கடிதம் ஆங்கிலத்தில் இருந்தது. அதில் 'இருபத்து நாலு மணி நேரத்துக்குள் சிலை எங்களிடம் வந்து சேரவில்லையென்றால் மற்றொரு கொலை...'

"நான் என்ன தப்பு செய்தேன்? எனக்கெதுக்கு இந்த எச்சரிக்கை வரணும்? ஏதோ கூடப்பிறந்த தோஷத்துக்காக, எங்கப்பா இவனையும் பார்த்துக்கச் சொல்லிப் பிரிஞ்சு போனதால, அவன் கேட்ட குப்பையெல்லாம் வாங்கிக் கொடுத்து, வீட்டைக் கொடுத்து, பணத்தைக் கொடுத்து, கம்பெனிக்கு எவ்வளவு பெரிய ஓவர்ஹெட் பாருங்க... போர்டுல இவனைச் சேர்த்தா, மீட்டிங்ல எல்லாம் தூங்கறான்.

என்னை விட்டுருங்க அண்ணாச்சி... நான்பாட்டுக்கு ஒரு மூலையில பொருள் சேர்த்துக்கிட்டு சந்தோஷமா இருக்கேன். எனக்கும் இவன்கூட மன்றாடி அலுத்துப் போச்சு. இப்ப, இவனோட பொழுதுபோக்கால என் உயிருக்கே ஆபத்து வந்துதுடுச்சு. எல்லா ஃபேமிலிலயும் இதுமாதிரி தறுதலை, தண்ணி தெளிச்ச கேஸ் இருந்தே ஆகணும் போல...

கணேஷ், நீங்க அவனுக்குச் சொல்லுங்க... ராஜேந்திரன், உங்களைப் பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்களாவது அவனுக்கு அட்வைஸ் பண்ணுங்க..." என்றார்.

கமிஷனர் அலுவலகத்திலிருந்து இருவரும் விலகிச் சென்றபோது, "கணேஷ்... என்கூட பங்களாவுக்கு வர்றீங்களா? உங்களுடைய பாதுகாப்பும் யோசனையும் இப்ப ரொம்பத் தேவையா இருக்கு. எனக்கென்னமோ இதுல சம்பந்தப்பட்டவங்க எல்லார் உயிருக்கும் ஆபத்து இருக்கிற மாதிரி பயம் வந்துடுச்சு. நான் இப்ப என்ன செய்யணும், சொல்லுங்க."

"உங்களுக்கு பிரைவேட் ஏஜென்ஸியுடைய பாதுகாப்பு இருக்குதுல?"

"இருக்காங்க... ஆனா, அவங்களால என்னைப் போதுமான அளவுக்குப் பாதுகாக்க முடியுமானு தெரியலே."

"கொஞ்ச நாளைக்குத் தேவையில்லாம வெளியே போகாதீங்க. உங்களுடைய சுற்றுலா நிரல்களையெல்லாம் மாத்திக்கிட்டே இருங்க.

பொய் என்று நினைக்கிறேன். அது எப்படி நாலாயிரம் கோடிக்கு உண்டான கணக்கு கடைசி நாப்பத்தைந்து பைசா வரைக்கும் சரியா இருக்க முடியும்? ஒரு பத்து பைசாவாவது குறைய வேண்டாமா?"

இதற்கு கணேஷ், "வசந்த், இது ஒரு விதமான சம்பிரதாயம். ஒரு நிறுவனத்தின் ஆரோக்கியத்தைப் பல கோணங்களிலிருந்து பார்க்க முடியும். இதில் பொதிந்துள்ள பொய்களை நன்கு தேர்ந்த ஆடிட்டரால் மிகச் சுலபமாகக் கண்டுபிடித்துவிட முடியும். நாம் பார்க்க வேண்டியது சில குறிப்பிட்ட விஷயங்கள். Debt equity ratio பற்றித் தெரியுமா உனக்கு?"

வசந்த், "ஆளை விடுங்க பாஸ்" என்றான். "எனக்கு debt மட்டும்தான் தெரியும். நம்ம ஆபீஸுக்கு மொத்தக் கடன் பதினேழு லட்சம் இருக்கு. பாங்க்கில் தலை தின்னுகிறார்கள்... அது தெரியும். பேசாமல் அந்த ராமையா சொன்ன அட்வான்ஸை வாங்கியிருக்கலாம். ஆனா, அந்த ஜாதியில்லை நாம்."

கணேஷ் அதைக் கவனிக்காமல் ஆர்.ஆர். இண்டஸ்ட்ரீஸின் வரவு செலவு கணக்கைக் கூர்ந்து படித்துக்கொண்டிருந்தான். ஏதோ அர்த்தம் கண்டு லேசாக விசிலடித்தான். 'என்னால் நம்ப முடியவில்லை' என்றான். யோசித்துக்கொண்டு மேலும் கீழும் நடந்தான். டெலிபோனை எடுத்து யாரையோ அழைத்தான். எக்னாமிக் டைம்ஸ் செய்தித்தாளில் ஆர்.ஆர். இண்டஸ்ட்ரீஸின் பங்கு மதிப்பைக் கவனித்தான். அது ஒரு நாளில் பதினைந்து ரூபாய் உயர்ந்திருந்தது. அதற்கு முன்தினம் மற்றொரு பதினைந்து. "வசந்த், டு யு வாண்ட் டு மேக் மனி?"

இதற்குள் அவன் டெலிபோனில் அழைத்திருந்த பத்மனாபன் என்பவன் அவனை விளிக்க, "பத்து, ஆர்.ஆர். இண்டஸ்ட்ரீஸ் ஷேர்கள் ஒரு நூறாவது வாங்கிப் போடு. விஷம்போல ஏறிக்கொண்டே போகிறது."

மறுமுனையில், "ஸாரி கணேஷ்... காலையில் மார்க்கெட் திறந்தவுடன் க்ளோஸ் ஆகிடும். நீ ஏதாவது ஆர்.ஆர்.ஷேர் வெச்சிருக்கிறாயா?"

"நூறு இருக்கும்..." என்றான். "நாற்பத்திரண்டு ரூபாய்க்கு வாங்கினது."

"இன்னி தேதிக்கு நாலாயிரத்து எண்ணூறு... விக்கிறியா?" என்று கேட்டான் பத்மனாபன்.

"என்ன ஓடிக்கிட்டு இருக்கு... இப்படி விலை ஏறிக் கிடக்குதே..."

"ஒரு புது கம்பெனில வெளிநாட்லருந்து ஒரு பெரிய முதலீடு வருது. அந்த கம்பெனி ஸ்டாக் வந்ததும் ஆர்.ஆர். இண்டஸ்ட்ரீஸ் ஸ்டாக்குகளும் மாற்றிக்கொள்ளலாம் என்று ஒரு பேச்சு. ஒரே வாரத்தில் ஆர்.ஆர். சேர்மன் இந்தியாவின் மிகப் பெரிய பணக்காரனாகிவிட்டான். பிரேம்ஜி, நாராயண மூர்த்தி, அம்பானி

16

"அப்ப உனக்குப் பணம் வேண்டாம்... விநோதமான லாயர்யா நீ" என்றார் ராமையா.

வசந்த் அவரை அற்பமாகப் பார்த்தான். அது எந்த விதத்திலும் அவரைப் பாதித்ததாகத் தெரியவில்லை. தன்னுடைய வாழ்நாளில் சகல சலுகைகளையும் விலை கொடுத்தே, பண ஆசை காட்டியே பெற்றவருக்கு, இவ்விருவரும் மறுப்பது விந்தையாக மட்டும் இருந்தது. மற்றொரு கோணத்திலிருந்து அதை அணுகினார்.

"என்னுடைய ஆர்.ஆர்.இண்டஸ்ட்ரீஸின் புதிய கம்பெனிக்கு உன்னை லீகல் அட்வைசராக நியமித்து டிரைவருடன் மெர்சிடிஸ் கார், ஃப்ளாட்..." என்று அவர் சொல்லி முடிப்பதற்குள் அவர்களிருவரும் தங்களுடைய வாகனம் ஏறிப் புறப்பட்டனர்.

வசந்த் கொதித்தான். "கொஞ்சநஞ்சம் பாக்கியிருக்கும் நியாயத்தையும் அழிப்பவர்கள் இவர்கள்தான் பாஸ். இவன் கடவுளையே விலை பேசுகிற வம்சம்" என்றான்.

வசந்த்தின் செல்போன் ஒலிக்க, "ஹாய் தேஜு, நான் சொன்னபடி நகராம பத்திரமாதானே இருக்கே? இன்னும் அரை மணி நேரத்துல வந்துடறேன். ஷூட்டிங் நல்லா நடக்குதா? இன்றைய பங்குக்குத் தமிழ் சினிமாவைக் காப்பாற்றியாகிவிட்டதா?" என்று அவன் கேட்டது அவளுக்குப் புரியவில்லை. கணேஷைத் திரும்பிப் பார்த்து அவனுடைய புன்னகையின் கடைசியைப் பிடித்துவிட்டான்.

அலுவலகத்துக்குச் சென்றதும் கணேஷ் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாத சில காரியங்களைச் செய்தான். ஆர்.ஆர். இண்டஸ்ட்ரீஸின் வலைதளத்தை இன்டர்நெட்டில் வரவழைத்து அதன் வண்ண வண்ணப் பக்கங்களையும் வருடாந்திர வரவு செலவுக் கணக்குகளையும் உன்னிப்பாகப் பார்த்தான். அவன் கேட்ட ஒவ்வொரு தகவலையும் அவர்கள் அலுவலக கம்ப்யூட்டருடன் இணைந்திருந்த அச்சு இயந்திரத்தில் படியெடுத்துக் கொடுத்தான் வசந்த்.

"இதெல்லாம் உங்களுக்குப் புரியுதா பாஸ்..? எனக்கென்னவோ கம்பெனியுடைய பாலன்ஸ் ஷீட்டில் வலது பக்கமும் இடதுபக்கமும் ஒரு பைசா விடாம பொருந்துவதே

கார்ல எப்பவுமே முன்ஸீட்ல உட்காருங்க. கார் பாதுகாப்பானது தானே?"

"பி.எம்.டபிள்யூ. புல்லட் ப்ரூஃப் செய்தது!"

"அப்ப கவலைப்படாதீங்க. பதினஞ்சு நாளைக்கு எங்கேயும் நகராதீங்க. அதான் என்னால சொல்ல முடியும்."

"நான் வந்து, ஒரு ஜி.டி.ஆர். இஷ்யுக்காக ஜெனீவா போக வேண்டியிருக்கிறது."

"கான்சல் பண்ணிடுங்க."

"முடியாது... புதுசா ஒரு கம்பெனி ஆர்.ஆர். இண்டஸ்ட்ரீஸ் சார்புல ஆரம்பிக்கிறோம். ஏறக்குறைய அம்பது மில்லியன் டாலர் இன்வெஸ்ட் பண்றாங்க வெளிநாட்லருந்து. எங்க கம்பெனி, அதற்கு ஈடான ஷேர்கள் கொடுக்கப் போறாங்க. இது ரொம்பப் பெரிய இஷ்யூ..."

கணேஷ், "என்னைக் கேட்டால், நீங்க இப்ப வெளிநாட்டுக்குப் போறது பத்திரமில்லை."

அவர் அதற்குச் சற்றும் எதிர்பாராமல், "உன்னை யார்டா கேட்டா? வெளிநாடு போகணும்... சரியான அட்வைஸ் கொடுனா, போகாதேங்கிறது என்ன ஒரு கேனத்தனமான யோசனை... நீ என்ன மாதிரி லாயர்?"

வசந்த் முகம் சிவந்து, காது சுருங்கி, "வாங்க பாஸ் போகலாம்... சாருக்கு யோசனை தர எவ்வளவோ லாயர்ங்க இருப்பாங்க. வாங்க, போகலாம்..." என்றான்.

"உனக்கு எவ்வளவு பணம் வேணும்? இந்த கேஸை எடுத்துக்கோ... அதுக்குத்தானே இப்படி மழுப்பறே?"

கணேஷ் நிதானமாக, "உங்களுடைய பணத்திமிரு, சில நாசூக்கான விஷயங்கள்ல கண்ணை மறைக்குது. பணம் எங்களுக்கு முக்கியமில்லை..."

அவர் செல்போனை எடுத்து, "கிருஷ்ணசாமி... ஒரு பத்து லட்ச ரூபாய் கேஷ் எடுத்து வை. நான் லாயரோட வீட்டுக்கு வரேன்..." என்றார்.

கணேஷ் உண்மையாகவே முகம் சிவந்து கோபித்து, "உனக்கெல்லாம் விவஸ்தையே கிடையாதுயா..." என்று திறந்திருந்த கார் கதவைப் புறக்கணித்துவிட்டு, "வசந்த்... வா, போகலாம்... இந்த ஆளை இனிமே நம்ம வாழ்நாள்ல பார்க்க வேண்டாம்..." என்றான்.

எல்லோரையும் ஒரே தாவில் ஓவர்டேக்."

"நம்ப முடியவில்லையே... யாரிந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள்?"

"என்னென்னமோ பேசிக்கிறாங்க. சரி, உன்னுடைய ஸ்டாக்கை விக்கிறாயா?"

கணேஷ் சற்று யோசித்து, "விற்று விடு" என்றான்..

அவன் டெலிபோனை வைத்ததும் வசந்த் வாய் திறந்து, "என்ன பாஸ்?" என்றான்.

"ரொம்ப நாள் தாங்காது. விழுந்துரும்!"

கணேஷ் அதன்பின் யவனிகா சிலை பற்றி ஒரு சரித்திரப் புத்தகத்தை வசந்த்திடம் எடுத்து வரச் சொன்னான். "வலையில் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கிறேன்" என்றான். அந்தத் தேடல் தெரிந்த விவரங்களைத் திரும்பத் தந்தது. சிலைகளின் ரிப்ளிகா ஒன்று நியூயார்க்கில் மெட்ரோபாலிடன் மியூஸியத்தில் இருப்பதன் புகைப்படம் இருந்தது. "அளவு சின்னதாக இருக்கும் போல."

"ஆமாம் பாஸ். ஒரு ஷாம்பேய்ன் பாட்டில் உயரம்தான் இருக்கிறது. இந்த பாட்டில் நாற்பது மில்லியன் டாலர் உசத்தியானது."

கணேஷ் சட்டென்று வெளிச்சம் போட்டது போல, "ஐ காட் இட் வசந்த்."

"என்ன பாஸ்?"

"அப்புறம் சொல்றேன்... நாம மறுபடி ராமையாவைச் சந்திக்கலாம், உடனே."

"இப்பத்தான் அவன் முகத்திலேயே முழிக்க வேண்டாம்னீங்க."

"கதை மாறிடுச்சு...வா."

இருவரும் அவசரமாக ராமையாவின் பங்களாவுக்குச் சென்றபோது காவல் மிக மிக பலமாக இருந்தது. மெஷின்கன் அணிந்த காவலர்கள் காத்திருந்தார்கள். கேட் அருகே இருந்த இன்டர்காம் வழியே "அவர் வெளியே போயிருக்கிறார்" என்று பதில் வந்தது. கணேஷ் தன் கார்டைக் கொடுத்து அதன் பின்னால் 'நான் மனசு மாறி விட்டேன்" என்று எழுதினான்.

வசந்த் படப்பிடிப்புத் தளத்துக்குச் சென்றபோது வழக்கம்போல் படத்துடன் சம்பந்தமில்லாத ஒரு காட்சியை அகேலா கிரேன் வைத்து எழுபதடியிலிருந்து எடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்த கிரேன் அபாயகரமாக மேலும் கீழும் அல்லாடிக்கொண்டிருக்க... 'நாகரா'விலிருந்து பாடல் திரும்பத் திரும்ப ஒலிக்க... ஒரே நடன

அசைவு இருபத்தாறு தடவை ஒத்திகை பார்க்கப்பட்டு ஓகேயானது.

"என்ன வசந்த், ஒரே அடிதடி கொலையாமே?" குரல் கேட்டுத் திரும்பினால் சம்பத் நின்றுகொண்டிருந்தார்.

"இவ்வளவு கஷ்டப்பட்டு ஒரு ஷாட்ட நாள் பூரா எடுக்குறாங்க. அந்த உயரத்துல இருந்து இத்தனை பெண்களைப் படம் எடுத்தா சென்சார் அனுமதிக்கவா போறான்? எவ்வளவு வேஸ்ட் பாரு. இதுக்கு அந்த கிரேனுக்கு ஒரு நாளைக்கு முப்பதாயிரம். இப்பக்கூட கதை என்னனு யூனிட்ல இருக்கிற நூத்தம்பது பேரையும் கேளு... ஒருத்தனுக்கும் தெரியாது."

இருவரும் மேலே பார்த்தார்கள். கிரேனில் காமிராமேனும் அவருடைய உதவியாளரும் ஆளுக்கொரு பேஸ்பால் தொப்பியணிந்து நாள் முழுவதும் வெயிலில் சருமம் பழுப்பாகி, கீழே இருப்பவர்கள் யாரையோ அதட்டிக்கொண்டிருக்க, டைரக்டர் "கட் இட் ராவ்காரு. இந்த ஷாட்டுக்குக் குறுக்கே ஒரு வெள்ளைக் குதிரை நடந்துபோனா எப்படி இருக்கும்?" என்றார். சம்பத், "போச்சுரா... இப்ப இவர் காட்டுக் குதிரை கேட்பார். அவங்க தேமலா ஒரு ஜட்கா வண்டிக் குதிரையைக் கூட்டிட்டு வருவாங்க. இன்னிக்குப் படப்பிடிப்பு நடந்த மாதிரிதான். நாளைக்கு எல்லோரும் ராஜஸ்தான் புறப்படணும்."

அப்போது தூரத்தில் ஒரு கப்பல் கார் படப்பிடிப்புக்கு வருவதையும் அதிலிருந்து இறங்கியவர் படப்பிடிப்பில் ஒருவரிடம் தனியாகச் சென்று சற்று நேரம் பேசிவிட்டு ஒரு பார்சலைக் கொடுத்துவிட்டுச் செல்வதையும் வசந்த் கவனித்தான். 'இவரை எங்கயோ பார்த்திருக்கிறேனே' என்று யோசித்தான். சட்டென்று அது ராமையா போலிருந்தது. அவனுக்குப் புரியவில்லை. அவர் எங்கே இங்கே என்று தலையைச் சிலிர்த்துக்கொண்டான்.

"வசந்த், வா... உட்காரலாம். நீ இருவத்தொண்ணு ஆடுவியா?"

அப்போது வசந்தின் கவனத்தை விளிம்பில் தெரிந்த ஒரு வெள்ளைநிற அம்பாஸடர் கவர்ந்தது. அதன் நான்கு கதவுகளும் ஒரே சமயத்தில் திறந்து வெளிப்பட்டவர்கள் அதன் டிக்கிக்குச் சென்று நிதானமாக எதையோ வெளியில் எடுத்து வைப்பதையும் கவனித்தான். தூரத்திலிருந்து அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. வசந்த் அவர்கள் தோற்றத்தையும் சரியாகக் கவனிக்கவில்லை. "சம்பத் இவங்க யாரு... பின்னால இருந்து என்ன எடுக்குறாங்க?" என்று கேட்டபோது, "இவங்களும் சாங்ல ஒரு பகுதியா இருக்கும். 'முக்காபுலா' மாதிரி எடுக்குறாங்க போல..." சம்பத் சொல்லி முடிப்பதற்குள் வசந்த் ஒரு ஆச்சரிய விஷயத்தைக் கவனித்துத் துடித்துப்போனான்! அந்த கிரேனின் உச்சியில் இருந்த காமிராமேனும் அவருடைய உதவியாளரும் அடிபட்ட பறவைபோல சொத்...சொத் என்று வசந்தின் காலடியில் விழுந்தார்கள்.

அதன்பின் அலறல்கள். அங்கும் இங்கும் எங்கும் மெஷின்கன்னின் சீரான வெடிப்புச் சிதறல்கள். அவர்கள் எந்தவித இலக்குமின்றி கிடைத்த திசையில் சுட்டுக்கொண்டிருந்தார்கள். வசந்த் இதை முதலில் படப்பிடிப்பின் பைத்தியக்காரத்தனமான மற்றொரு அங்கம் என்றுகூட நினைத்தான். நினைத்து முடிப்பதற்குள் அவர்கள் பட்பட்டென்று கார் கதவைச் சாத்திக்கொண்டு புறப்பட்டு எந்தவித அவசரமுமின்றி சென்று மறைந்தார்கள்.

அவர்கள் விலகியபோது அந்த இடம் ஒரு சிறிய யுத்தகளம் போல் இருந்தது. இங்கும் அங்கும் படப்பிடிப்பைச் சார்ந்த அப்பாவிகள் ஐந்தாறு பேர் கீழே கிடந்தார்கள். ஓரிருவர் இன்னும் இறக்காமல் வலியால் துடித்துக்கொண்டிருந்தார்கள். அவரவர் அருகே ஒரு சிறிய ரத்தக்குளம். அந்தக் காட்சியின் முழுத் தாக்கமும் அவர்களுக்கு உறைப்பதற்குச் சற்று நேரமாயிற்று.

வசந்த்தின் முதல் கவலை தேஜோமயியும் அந்தப் பெண்களும்தான். நல்லவேளை, இடைவேளையில் அவர்கள் அங்குமிங்கும் சிதறி இருந்தார்கள். தேஜோமயி அங்கு பார்க் செய்திருந்த ஏர்கண்டிஷண்ட் வேனுக்குள் உட்கார்ந்திருந்தாள். இதனிடையே சைரன் அலற போலீஸ் ஜிப்ஸிகளும் ஆம்புலன்ஸும் வந்து சேர, வசந்த்தின் செல்போன் இடைவிடாது ஒலித்ததை அவன் கவனிக்க வில்லை. போலீஸ் படையினர் ஜீப்பிலிருந்து குதித்து கையில் ரைஃபிள்களுடன் அந்தக் குழப்பத்தில் இன்னும் கொலையாளிகள் இருக்கிறார்களா என்று தேட, "அவங்க அப்பவே போயிட்டாங்க" என்று நாலைந்து பேர் குரல் கொடுத்தார்கள்.

"எந்தப் பக்கம் போனார்கள்?" என்று இன்ஸ்பெக்டர் அதட்டிக் கேட்டார்.

"சரியா தெரிலீங்க. வந்தாங்க, சுட்டாங்க, போனாங்க. ஹாலிவுட் படம் மாதிரியெல்லாம் கோலிவுட்ல நடக்கும்னு எதிர்பார்க்கலீங்க. எங்களுடைய துப்பாக்கியெல்லாம் வெத்துங்க. ஐயோ, நம்ம செல்வராஜுக்குச் சரியான அடி பாருங்க... ஆள் போய்ட்டானா? இந்த வருஷம்தான் கல்யாணம் ஆகி பொண்டாட்டி கர்ப்பமா இருக்கிறா..."

இன்ஸ்பெக்டரை வசந்த் அணுகி, "சார், என்ன நடந்துகிட்டு இருக்கு நம்ம நாட்டுல?"

"இந்தப் படப்பிடிப்பில் எங்கேயோ ஒரு மாஃபியா கும்பல் சம்பந்தப்பட்டிருக்கிறது. மும்பைக்காரர்களா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"இல்லீங்க... இந்தச் சம்பவத்துக்கும் படப்பிடிப்புக்கும் சம்பந்தமிருக்கிறதா தெரியலை."

இன்ஸ்பெக்டர் கீழே கிடந்தவர்களை நோக்கி நடந்துகொண்டே "நீங்க யாரு?" என்றார்.

"ஐயம் வசந்த், லாயர்... தற்காலிகமா ஹீரோயினுக்கு மெய்க்காப்பாளன்."

"ஓ, யூ ஆர் தி ஃபேமஸ் லாயர். கணேஷுடைய ஃபேமஸ் அசிஸ்டண்ட்..."

"இதான் சார் என்னுடைய தலைவிதி. கணேஷ் பெயரை ஒட்ட வைக்காமல் என் பெயரைச் சொல்லவே மாட்டீங்க."

செல்போன் மறுபடியும் ஒலிக்க, வசந்த் சற்று விலகிச் சென்றான்.

வேடிக்கை பார்க்க வந்த கூட்டத்தைக் கட்டுப்படுத்த போலீஸ் அக்கறை கொண்டிருந்தது.

"பாஸ், ஒரு மிகப் பெரிய ஷூட் அவுட். நம்ப மாட்டீங்க... வந்தாங்க, கார் கதவைத் திறந்தாங்க, சுட்டாங்க, கூலா திரும்பிப் போனாங்க... அவசரமேயில்லாம."

கணேஷ் "யாரைப் பார்த்து சுட்டாங்க?"

"இலக்கில்லாமல் சுட்டாங்க. யாரையும் குறி வைக்காம, ஏதோ ஒரு கோபத்தின் வெளிப்பாடாக. சமீபத்துல ஜம்முல் அறியாத மக்களைக் குறிவெச்சு அடிச்சுட்டுப் போனாங்களே அந்த மாதிரியான முயற்சி போலத்தான் தோணுது."

"கார்ல வந்தவங்களைக் கிட்டப் பார்க்க முடிந்ததா?"

"இல்லை. பாஸ், நம்பினா நம்புங்க... நான் அந்த அபத்தமான படப்பிடிப்பின் ஒரு பகுதி என்று அவர்களை நினைத்தேன். துப்பாக்கி தான் நிஜம். அந்த காமிராமேன் தெய்வாதீனமாக ஒரு ரிஃப்ளெக்டர் மேல் விழுந்து மழுப்பப்பட்டுத் தப்பிச்சிருக்கார்."

"ஸோ, எந்த க்ளூவும் இல்லை?"

"இருக்கு பாஸ். அவங்க வர்றதுக்கு அஞ்சு நிமிஷம் முன்னாடி ஒரு கார் வந்து தூரத்துல நின்னுச்சு. படப்பிடிப்பில் ஒருத்தரிடம் ஏதோ பேசிவிட்டு ஒரு விஸ்கி பாட்டிலையோ எதையோ கொடுத்துட்டுப் போனாங்க. தூரத்துல பார்த்தேன். அந்தாளு ராமையா மாதிரி இருந்தார்."

"ஆர் யூ ஷ்யூர் வசந்த்?" என்ற கணேஷின் குரலில் ஒரு புதிய

பரபரப்பு இருந்தது.

"நீ உடனே வா. நமக்கு நிறைய வேலை இருக்கு."

"முதல் வேலை இந்த கேஸை விட்டு விலகி ஹரித்வார், ரிஷிகேஷ் எங்கேயாவது போய் ஒளிஞ்சுக்க வேண்டியது. இந்த மாதிரி காட்டுத் தனமா சுட்டுட்டுப் போறவங்களை நம்ம வாழ்க்கைல பார்த்ததே இல்லை. இவங்களுக்கெல்லாம் சட்டமே கிடையாது."

இன்ஸ்பெக்டர், வசந்தை அணுகி "நான் ராஜேந்திரன் சார்கூட பேசினேன். கமிஷனர் அலுவலகத்துக்கு வரச் சொல்லியிருக்கார். நீங்க வேற ஏதாவது பார்த்தீங்களா?" என்று கேட்டார்.

வசந்த், ராஜ ராமையா வந்து போனதைச் சொல்லலாமா என்று நினைத்தான். யோசித்ததில் கணேஷிடம் கேட்டுக்கொண்டு அந்த விவரத்தைச் சொல்லலாம் என்று தீர்மானித்தான். இதனிடையே படப்பிடிப்பைச் சேர்ந்த ஒருவர் இன்ஸ்பெக்டரிடம் "முதல்ல அம்ஜத்னு அந்த இந்திக்காரனை பிடிங்க. அவன்தான் இதுக்கெல்லாம் முக்கியமான காரணம். மும்பை அடிதடி பார்ட்டிய அனுப்பிச்சு இந்தப் பெண்ணை கிலில வெச்சிருக்க விரும்புறான். இதனால படப்பிடிப்புக்கு எவ்வளவு தொந்தரவு தெரியுமா?"

"எனக்கு அப்படித் தெரியலை" என்றான் வசந்த்.

இந்தச் சம்பவம் சென்னை நகரையே பீதிக்கும் பரபரப்புக்கும் உள்ளாக்கிவிட்டது. ஒருநாள் படப்பிடிப்பு ரத்து செய்யப்பட்டது. எல்லா ஷூட்டிங் ஸ்தலங்களிலும் பலமான போலீஸ், தனியார் பாதுகாப்பு கேட்கப்பட்டது. தேஜோமயி எங்கிருக்கிறாள் என்பது பரம ரகசியமாகிவிட்டது. "எனக்கும் அதற்கும் சம்பந்தமேயில்லை. தேஜூவும் நானும் ஜஸ்ட் ஃப்ரெண்ட்ஸ், அவ்வளவுதான். அவளைப் பார்த்து ஒரு மாதமாகிவிட்டது. எனக்கும் அவளுக்கும் கல்யாணம் என்பதெல்லாம் பொய்" என்று மும்பையில் ஸ்டார் டி.வி. நிருபர் களுக்குப் பேட்டி கொடுத்திருந்தான் அம்ஜத்.

டெல்லியில் நாடாளுமன்றத்தில் கேள்வி–பதில் நேரத்தில் இது எழுப்பப்பட்டது. மந்திரி பதிலளிக்கும்போது இதில் ஐ.எஸ்.ஐ. சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று சொன்னார். கோடம்பாக்கம் வாரம் முழுவதும் ஸ்தம்பித்த நிலையில் இருக்க, வெளிப்புறப் படப்பிடிப்புகள் ரத்து செய்யப்பட்டு செட்டுக்கு உள்ளேயே கதை நடக்கும்படி மாற்றி எழுதினார்கள்.

அந்த வாரம் செய்தித்தாள்களில் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக ஒரு விளம்பரம் வந்தது.

"விற்பனைக்கு : அரிதான மிக அழகான சோழர் காலத்துச் சிற்பம் அங்கீகரிக்கப்பட்ட அருங்காட்சியகங்களுக்கு விற்கப்படும். ஒரு வாரத்துக்குள் தொடர்பு கொள்ளவும். முகவரி : ஆர்.ஆர்.வசந்த், எம்.எல்., அட்வகேட், தம்புச்செட்டி தெரு, சென்னை–1. செல்போன் எண் : 984023456"

வசந்த் இந்த விளம்பரத்தைக் காலையில் பார்த்தபோது பதறிப்போய் கணேஷுக்கு டெலிபோன் செய்தான். "பாஸ், காலை பேப்பர்ல பெருசா விளம்பரம் வந்திருக்கு என் பேரைப் போட்டு. நம்ம ஆபீஸ் அட்ரஸைப் போட்டு."

"நீ சீக்கிரம் நேர்ல வா. எல்லா விவரமும் சொல்றேன்."

வசந்த் அலுவலகத்துக்குச் சென்றபோது "அந்த விளம்பரத்தைக் கொடுத்ததே நான்தான்" என்றான் கணேஷ்.

"என்ன பாஸ், என்னை மாட்டிவிடுறீங்க? செல்போன் நம்பரை வேற குடுத்து..."

"அந்த நம்பரை நீ சரியா பாரு" என்றான் கணேஷ்.

வசந்த் உன்னிப்பாகக் கவனித்ததில் அதில் ஒரு இலக்கம் தப்பாக இருந்தது.

"என்ன குழப்பம் இது?"

"யவனிகாவைத் தேடுற முயற்சில கடைசிக் கட்டத்தை நாம நெருங்கிட்டு இருக்கோம்னு நினைக்கிறேன்."

"அதாவது குழப்பத்தின் உச்சஸ்தானத்துக்கு வந்துட்டோம்னு சொல்லுங்க."

"இல்லை வசந்த். எனக்கு ஒரு குழப்பமும் இல்லை. என் மனசுல சில யூகங்கள் இருக்கு. அவை சரிதானா என்று பார்க்க முதல் கட்டம் இந்த விளம்பரம்."

"நீங்க என்ன எதிர்பார்க்கிறீங்க?"

"இந்த விளம்பரத்தைப் பார்த்து முதல்ல ஒருத்தன் போன் பண்ணுவான். நம்பர் தப்பாயிருக்கும். மறுபடி மறுபடி முயற்சிப்பான். அதுக்கப்புறம் நம்மைச் சந்திக்க நேரா ஆபீஸுக்கே வருவான்."

"பாஸ், என்ன இது விபரீத விளையாட்டு? படப்பிடிப்புல நடந்த துப்பாக்கி உற்சவத்தைப் பற்றி நீங்க படிக்கவே இல்லையா? கன்னா பின்னான்னு எந்தவிதக் குறிக்கோளும் இல்லாமல் கண்ட திசைல சுட்டாங்க. அவங்கள விளம்பரம் கொடுத்து வரவழைக்கப் போறீங்களா? அதுவா உங்க நோக்கம்? மேலும் எப்படி என் பேரை நீங்க விளம்பரத்துல கொடுக்கலாம்?"

"வசந்த், பயப்படுறியா?"

"ஆமாம் பாஸ். ப்யூர் அண்ட் சிம்பிள் அட்ரினலின் கலந்த பயம். நான் அம்பேல். கறுப்புக் கண்ணாடி, தலையில் ஹேட், ரெயின்கோட் போட்டுக்கிட்டு அடுத்த பிளேனையோ டிரெயினையோ பிடிச்சு மோஹன் பாரி அல்லது திப்ருகர் அல்லது பதான்கோட் அப்படினு ஏதாவது ஒரு இடத்துக்கு டிக்கெட் வாங்கிட்டு..."

கணேஷ் குறுக்கிட்டு, "வசந்த், உனக்கு மூளையே கிடையாதா? இந்த விளம்பரத்தைப் பார்த்துட்டு வரவங்க நம்மை சுட்டுக்கொல்ல வருவாங்கன்னா நினைக்கிற?"

"பின்னே?"

"வியாபாரம் பேசுவாங்கடா முட்டாளே! எப்படியாவது நம்மகிட்ட அந்தச் சிலையோ அதைப் பற்றிய விவரமோ இருக்கிறதா காட்டிக்கிட்டா அவங்க நம்மைச் சிலை கிடைக்கிற வரைக்கும் சுட மாட்டாங்க, புரியுதா?"

"நம்மகிட்ட சிலையில்ல... நாம சொன்னது பொய் அப்படினு அவங்களுக்கு தெரியறப்ப என்னாகும்? புல்லட்புரூஃப் வெஸ்ட் ஒண்ணு விக்கிறாங்களாமே, அது எங்க கிடைக்கும்?"

"பயப்படாதே வசந்த், நான் இந்த விளம்பரத்தை அரசாங்க அனுமதியோடதான் கொடுத்திருக்கிறேன். என்ஃபோர்ஸ்மெண்ட் டைரக்டரேட், நார்க்கோடிக்ஸ் பீரோ இப்படிப் பல இலாகாக்கள் நம்மோட ஒத்துழைக்கத் தயாரா இருக்காங்க. நாம ஆபீஸ்ல தனியா இருந்தாலும் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு கேட்டுரலாம். எனக்கு முக்கியமா ஒரு விஷயம் தெரிஞ்சாகணும்... அவங்களுடைய கோபத்தின் இலக்கு என்ன? சிலை கிடைக்காததா அல்லது வேறு ஏதாவது அதனுடன் கொடுக்க வேண்டியது ஏமாற்றப்பட்டதா?"

"அவங்க என்கிறீங்க... அது யாரு?"

"சிலையை விலைக்கு வாங்கினவங்க. அதனால ஏதோ ஒரு விதத்துல ஏமாற்றப்பட்டவங்க."

அப்போது அலுவலகத்தின் அழைப்பு மணி ஒலித்தது.

"ஹூ இஸ் வசந்த் ஹியர்?"

# 18

தோற்றத்தில் அவன் இந்த தேசத்தவன் என்று சொல்ல முடியவில்லை. நல்ல சிவப்பாக இருந்த மூஞ்சியைத் தாடி, மீசை மறைத்தது. செம்பட்டைத் தலைமயிரை அலட்சியமாகப் பின்தள்ளியிருந்தான். குறைபட்ட ஆங்கிலத்திலும் உருதுவிலும் பேசினதை கணேஷால், அவன் ஆரம்ப காலத்தில் டெல்லியில் இருந்தபோது தெரிந்த இந்தியை வைத்துக்கொண்டு புரிந்துகொள்ள முடிந்தது. வந்தவன் அதிகமும் பேசவில்லை.

"எங்கே அந்த பத்மாஷ்?"

"இந்த அறையில் யாரும் பத்மாஷ் இல்லை..."

"ராமையா ராமையா என்று சொன்னார்கள். விளம்பரம் கொடுத்தது நீதானா?"

"ஆம்..."

"உன் பெயர் வசந்த்தா?"

"இவன் வசந்த், நான் கணேஷ்."

வசந்த், "ப்ளீஸ்டு மீட் யு..." என்று நீட்டிய கையைத் தட்டித் தள்ளினான்.

"சிலை உன்னிடம் இருக்கிறதா?"

"இருக்கலாம்..."

"என்ன பதில் இது?"

"உன் சீட்டுகளை மேஜை மேல் வை, நான் என் சீட்டுகளை வைக்கிறேன்..." என்றான் கணேஷ்.

அவன் சற்று நேரம் தன் பச்சைக் கண்களால் முறைத்துப் பார்த்தான். முழங்கால் வரை தொங்கிய ஏராளமான அங்கிக்குள் கைவிட்டு ஒரு துப்பாக்கியை எடுத்து, அதைத் தயார்ப்படுத்தினான். "இதைப் பார்த்திருக்கிறாயா?"

"வால்த்தர்!" என்றான் கணேஷ்.

"சுட்டால் என்ன ஆகும்?" மௌனத்தில் அதன் 'க்ளிக்' கேட்டது.

"சுடுவதற்கு அவசியம் இல்லை."

"சிலை இருக்கிறதா, சொல். உன்னிடம் பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. போலீஸ் சூழ்ந்திருக்

கலாம். இதோ பார், ராமையாவைப் போல தோக்கா கொடுத்தவன் உலகத்திலேயே இருக்க முடியாது. நாற்பது மில்லியன் வாங்கிக் கொண்டு, நேற்றைய டூப்ளிகேட் சிலையைக் கொடுத்து ஏமாற்றி விட்டான். எந்த வியாபாரத்திலும், அது தங்கமாக இருந்தாலும் தந்தமாக இருந்தாலும் சந்தனமாக இருந்தாலும் புலித்தோலாக இருந்தாலும் வியாபாரத்தில் நியாயம் வேண்டும். ஃபால்த்து பொருளைக் கொடுத்து ஏமாற்றினால், என்ன ஆகும் என்பது தெரியாது உன் எஜமானனுக்கு..."

"அவன் என் எஜமானன் இல்லை."

"அவன் எந்த விலைமகள் மகனாக இருந்தாலும் எங்களைப் பற்றித் தெரியாது. சிலை கிடைக்கிறவரைக்கும் கொலை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும். கண்டபடி சுடுவோம்."

"அறியாதவர்களைச் சுடுவதில் அர்த்தம் இல்லை. துப்பாக்கிக் குண்டுகள்தான் விரயம்..."

"எங்களுக்கு யார் செத்தார்கள், யார் பிழைத்தார்கள் கவலை இல்லை. உங்கள் அரசால், போலீஸால் எங்களைத் தொட முடியாது. எங்களிடம் இருக்கும் ஒரே பெரிய ஆயுதம் பயம், பீதி. நாங்கள் எதற்கும் துணிந்தவர்கள். இன்றைய தினம் இந்த நாட்டில் தற்கொலைப் படையே இருபது பேர் ஊடுருவியிருக்கிறார்கள். எந்தத் தலைவனையும் எந்த நிமிஷமும் ஒழிக்க முடியும். ராமையாவிடம் சொல்லு... ஒளிந்துகொண்டிருக்கிறான். எப்படியும் வெளியே வந்துதான் ஆக வேண்டும். அப்போது அவன் மூளை சிதறும். அதைச் சொல்லிவிடு. அடுத்த வெள்ளிக் கிழமைக்குள் அதைக் கொண்டு வரவில்லை என்றால், இந்த ஆபீஸையும் சேர்த்து வெடி வைத்துவிடுவோம். அவன் பங்களா, மாளிகை, அவன் போகுமிடமெல்லாம் சுடுவோம் எந்த நாட்டிலும். இலக்கில்லாமல், குறியில்லாமல்..."

வசந்த் மெள்ளத் தன் செல்போனை பைக்குள் நிரடுவதைக் கண்டு அவன்பால் துப்பாக்கியைக் காட்டிச் சுட்டான்! அது, அவன் பாண்ட்டைக் கிழித்துக்கொண்டு சுவரில் பட்டுச் சிதறியது. "உன் செல்போனையும் காலையும் சேர்த்துச் சுட வேண்டுமா?" என்றான்.

"வேண்டாம்..." என்ற வசந்த் கையை உயர்த்தினான். செல்போன் தவறி விழுந்தது.

"கமான், போலீஸுக்குச் சொல்லு. என்னைக் கைது செய், பார்க்கலாம்..." அவன் விழிகளில் உக்கிரம் கசிந்தது.

"என்னிடம் சிலை இல்லை. ராமையாவிடம் சொல்லிப் பார்க்கிறேன்..."

அவன் துப்பாக்கியை கணேஷ் முன் நீட்டினான். "பின் எதற்கு விளம்பரம் கொடுத்தாய்?"

"உன்னை வரவழைத்து, உனக்கு என்ன வேணும் என்பதைத் தெரிந்துகொள்ள..."

"உண்மை இதுதான். நாங்கள் ஏமாற்றப்பட்டோம். பணம் முழுதும் க்ரெடிட் சுவிஸ்ஸில் கொடுக்கப்பட்டது. சிலையை நிபுணர்கள் சோதித்ததில் போலி என்பது தெரிந்தது. அந்தப் பக்கம் மியூஸியத்தில் இருந்து பணம் வரவில்லை. நிறுத்திவிட்டார்கள். எப்படிப்பட்ட ஏமாற்று வேலை பார்த்தாயா? இதற்காக அந்த ராமையா மூன்று முறையாவது சாகப்போகிறான்."

"அந்த யவனிகா சிலையை விற்றதே தப்பு. அது இந்திய அரசுக்கு உடைமையானது. தேசியச் சொத்து" என்றான் கணேஷ்.

அவன் சற்றும் எதிர்பாராமல் மறுபடி சுட்டான். அது இப்போது கணேஷைத் தவறி, சுவரில் மாட்டி இருந்த அவன் டிகிரி சர்டிபிகேட் மேல் பட்டுச் சிதறியது. "பின் எதற்காக அதை விற்றீர்கள்? பணம் வாங்கினீர்கள்?"

"என்னைக் கொல்வதால் உனக்கு லாபமில்லை."

"வெள்ளிக்கிழமைவரை உன்னை விட்டுவைக்கிறோம். அதன்பின் உனக்கும் உள்ளது வேட்டு..."

வசந்த் பயத்தில் உறைந்து, ஓரத்தில் ஒதுங்கியிருக்க... அவன் போகிற போக்கில் மேஜையில் வைத்திருந்த முசாம்பியை எடுத்தான்.

"பழம் வேண்டுமா? எடுத்துக்கொள்" என்றான் கணேஷ்.

அவனுக்குப் பழம் தேவை இருக்கவில்லை. அதை உள்ளங்கையில் வைத்து, ஒரே அழுத்தில் பிழிந்தான். விரலிடுக்கில் சாறு வழிந்தது.

"இப்படித்தான் நீ சாவாய்..." என்றான்.

அவன் சென்றதும் வசந்த், "பாஸ்... சாத்துக்குடி மாதிரி சாவப் போறமா? எங்கே இந்த கௌரி? அவதான் இந்த வம்புல நம்மை மாட்டிவிட்டா."

"சின்னத் திருட்டுனு நினைச்சேன். இது சர்வதேச அளவுல போய், மாஃபியா ட்ரக் கார்ட்டெல்னு... என்ன இப்படிச் சுடறான்!"

"அடுத்த முறை இவன் குறி தவறாது பாஸ்..." என்று உடைந்த கண்ணாடிச் சில்லுகளைப் பொறுக்கினான்.

"வெள்ளிக்கிழமைவரை டயம் கொடுத்திருக்கான்..."

"ஏன் பாஸ், என்னவோ சொன்னீங்க... ராஜேந்திரன் போலீஸ் பாதுகாப்புப் படையே கொடுத்திருக்கார், நம்மை ஒரு ஈ அண்டாதுனு..."

"நாளைலருந்துதான் கேட்டிருந்தேன்."

"நாசமாப் போச்சு! இப்ப ஒளிவதற்கு இடம் தேடணுமா?"

"இதற்கெல்லாம் காரணபுருஷரான ராஜ ராமையாவைப் பார்க்கணும்."

போன் செய்ததில், "அவர் வெளிநாடு போயிருக்கார்."

"அவருடைய இ–மெயில் அட்ரஸ் வேணுமே..."

"தெரியாதுங்களே..."

"எந்த நாட்டுக்குப் போயிருக்கார்?"

"அதும் தெரியாதுங்களே..." என்றாள், அந்த இனிய குரல் பெண்மணி.

"இதையாவது செய்கிறாயா? அவர் டிம்பக்டுவிலிருந்தோ, பெச்சுவானாலாந்திலிருந்தோ போன் செய்தால், கணேஷ் போன் செய்தார்... தலை போகிற காரியம் என்று சொல்கிறாயா?"

"கணேஷா... ஜஸ்ட் எ மினிட்!"

அவள் போனை 'ஹோல்டில்' போட்டாள். சற்று நேர சங்கீதத்துக்குப் பின் "ராமையா ஸ்பீக்கிங். என்ன கணேஷ்... என் ப்ரபோசலுக்கு ஒப்புக்கிட்டியா?"

"வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்துட்டீங்களா?"

"விஷயம் என்ன சொல்றா?"

அதன் மரியாதைக் குறைவை நிராகரித்து, "விஷயம் விபரீதமாகி விட்டது. நீங்கள் செய்த துரோக காரியத்தால்..."

"என்ன செய்தேன்?"

"போலி சிலையை விற்றுப் பணம் வாங்கிப் புது கம்பெனியில் போட்டுவிட்டீர்கள். ஓவர்நைட் பணக்காரராகிவிட்டீர்கள். உங்கள் கம்பெனியைப் பற்றி முழு விவரமும் கிடைத்துவிட்டது. கேபிடல் எக்ஸ்பென்சையும் ஆபரேட்டிங் எக்ஸ்பென்சையும் போட்டுக் குழப்பித் தப்பாக டிவிடண்ட் கணக்குப் பண்ணி..."

"இதெல்லாம் சகஜம். எல்லா கம்பெனியும் செய்வதுதான்!"

"சிலையை என்ன செய்தாய்?"

"சிலையா..? நானா? சிலை பிசினஸ் எல்லாம் என் தம்பி..."

"பாரு ராமையா... யுர் கேம் இஸ் அவுட். பாசாங்கு வேண்டாம். இந்த விற்பனைக்கும் உன் சகோதரனுக்கும் சம்பந்தமில்லை. அவர் உண்மையான ஆர்ட் லவர். இந்த வியாபாரம் முழுவதும் நீதான் என்பது பளிச்சென்று வெளிச்சத்துக்கு வந்து, நீ செய்த விபரீத காரியத்தின் ரத்தச்சுவடு நகரமெங்கும் பரவுகிறது. இதுவரை எட்டு பேரைக் காவு வாங்கிவிட்டது. ஒரு பெரிய சர்வதேசக் கூலிக் கொலைப் படையே உன்னைத் துரத்திக்கொண்டிருக்கிறது. இந்த விவகாரத்தில் சம்பந்தப்படாதவர்களைச் சகட்டுமேனிக்குச் சுட்டுக் கொன்றுகொண்டிருக்கிறது. சினிமா படப்பிடிப்பில் நடந்ததை டி.வி–யில் பார்த்தாய் அல்லவா? அப்பாவிகள் ஆறு பேர் செத்து விழுந்தார்கள்..."

"என்ன சொல்கிறாய் என்றே புரியவில்லை!"

கணேஷ் இதுவரை தன் வாழ்நாளில் அத்தனை கோபப்பட்டது இல்லை. "யூ பாஸ்டர்ட்! தேசத் துரோகி, தேசத்தின் சொத்தை வெளிநாட்டுக்கு விற்க முயற்சி செய்தது உன் முதல் குற்றம். அதற்கான பணத்தை வாங்கிக்கொண்டு வெளிநாட்டில் ஏமாற்றியது இரண்டாவது குற்றம். அந்நியச் செலவாணிக் குற்றம் மூன்றாவது. அமெரிக்காவின் தெருக்களில் போதைப் பொருள்கள் விற்க உதவியது நான்காவது குற்றம்..."

"போடா! படப்பிடிப்பில் யாரோ சுட்டால் நான் என்ன செய்ய முடியும்? எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை..."

"படப்பிடிப்பில் உன்னை வசந்த் பார்த்தான். உன்னைத் தேடி வந்துதான் சுட்டிருக்கிறார்கள். இதோ பார்... சிலை எங்கே சொல்! அதைக் காட்டினால்தான் நாமெல்லோரும் உயிர் தப்ப முடியும்!"

"அந்தச் சிலைக்கு ஒரு தனியார் ஜெர்மன் மியூசியம் அறுபது மில்லியன் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது..."

"மற்றொரு போலியா?"

"அதற்குச் சமயமில்லை. இந்த முறை நிஜம். ம்யுனிச் போய்க் கொண்டிருக்கிறேன். பாரு கணேஷ்... இந்த வியாபாரத்தில் ஏமாற்று வேலைகள் சகஜம். நெருப்போடு விளையாடும் த்ரில் இது. நான் செய்தது நம் தேசத்துக்கு நல்லது. பாடாவதி வெண்கலச் சிலைக்கு யாரோ பைத்தியக்காரன் அத்தனை காசு தருகிறேன் என்கிறான். அந்தக் காசை வாங்கி நம் பொருளாதாரத்தில் முதலீடு செய்து என்ன செய்தேன்? எனக்காகவா செய்தேன்? என் கம்பெனியில் போடுகிறேன். அதன் ஷேர் மதிப்பு உயரும். மக்கள் பணக்காரர் களாவார்கள். நான் செய்தது தேச சேவை. கணேஷ், நீ இதைப் பற்றிக் கவலைப்படாதே. ஒரு வாரத்தில் டம்... டும் என்று சுட்டுவிட்டு அடங்கிவிடுவார்கள். இந்தக் கும்பலை எனக்குத் தெரியும். லஸ்கர்-இ-தோய்பாவையே பார்த்தவன் நான். பயப்படாதே... வேணுமென் றால் உனக்கு பாதுகாப்பு அனுப்புகிறேன். நல்ல ரைஃபிள் வேணுமா?"

"உனக்கு விவஸ்தையே கிடையாது. கடைசியாக நான் சொல்லும் அறிவுரை இது. சிலையை அரசாங்கத்திடம் கொடுத்துவிடு... அது நாட்டின் சொத்து!"

"புல்ஷிட்! என்னிடம் இப்போது சிலை இருந்தால்தானே கொடுப்பதற்கு..."

"நான் இதை நம்பவில்லை... சிலை உன்னிடம்தான் இருக்கிறது. யாரிடமோ கொடுத்து வைத்திருக்கிறாய்."

"கண்டுபிடியேன்..." என்றவர், "கணேஷ்! நீ புத்திசாலி லாயர். என்னிடம் புத்திசாலிகளுக்கு எப்போதுமே மதிப்பு. எப்போது உதவியோ, வேலையோ வேண்டுமெனில் வா... உடனே தருகிறேன். நீ கேட்ட சம்பளம், நீ கேட்ட நிபந்தனைகளின் பேரில்" என்றார்.

"துரோகிகளுக்கு நான் வேலை செய்ய மாட்டேன்."

"அப்படியானால் இந்தியாவில் யாருக்கும் நீ வேலை செய்ய முடியாது!"

இதற்குள் வசந்த், நான்கு முறை கணேஷின் முழங்கையைப் பிறாண்டி வற்புறுத்திவிட்டான். போனை வைத்ததும், "பாஸ், என்ன அவன்கூட வளவளன்னு பேசிக்கிட்டு... எனக்கு ஒரு ப்ரிலியண்ட் ஐடியா தோணிச்சு. அதைச் சொல்லத்தான்..."

"என்னடா?"

"அன்னிக்கு ராஜ ராமையா படப்பிடிப்பில் கொண்டுவந்து கொடுத்தானே... பார்சல் விஸ்கி பாட்டில் போல – அதுல என்னங்கறீங்க?"

"என்ன?"

"யவனிகா!"

கணேஷ் சட்டென்று பிரகாசமாகி, "அட, ஆமாடா! இது ஏன் எனக்குத் தோணலை? படப்பிடிப்பில் யார்கிட்டயோதான் கொடுத்து வெச்சிருக்கான்..." என்றான்.

"எப்படிக் கண்டுபிடிக்கிறது?"

"முதல்ல படப்பிடிப்பில் சம்பந்தப்பட்டவங்க பட்டியல் கேக்கலாம்."

"படப்பிடிப்பு ஒரு வாரமா கேன்சல். எல்லாரும் பயந்துகிட்டு வரவே மறுக்கிறாங்க. பாதுகாப்பு பத்தலைன்னு பெரிய ரகளை."

"ஒவ்வொருத்தரா பார்த்துக் கேட்கலாம்னா, முந்நூறு பேராவது இருக்கலாம். இதுக்கு போலீஸ்தான் சரி."

# 19

ராஜேந்திரன் மிகுந்த பரபரப்பில் இருந்தார். அவரை அலுவலகத்தில் சந்தித்தபோது படப்பிடிப்பில் சுடப்பட்ட சம்பவம் பற்றி ஒரு பெரிய மகாநாடே நடந்துகொண்டிருந்தது. அதில் மாநில ஹோம் செக்ரெட்டரிவரை அனைவரும் இருந்தார்கள். கணேஷை உள்ளே வரச் சொன்னார்கள்.

நீண்ட மேஜையில் காபி கோப்பைகள், மேரி பிஸ்கெட் தட்டுகளின் முன் பேசிக்கொண்டிருந்தார்கள் அரசாங்க, போலீஸ் உயர் அதிகாரிகள்.

"மொத்தம் எட்டு பேர் இறந்திருக்கிறார்கள். ஒருவர் நிலைமை கவலைக்கிடம். இந்த வேலையைச் செய்தது மும்பை படப்பிடிப்பு சம்பந்தப்பட்ட அபுசலேம், சோட்டா ஷகீல், சோட்டா ராஜன் கும்பலாக இருக்குமா என்பது முதல் சந்தேகம்!" என்றார் உள்துறைச் செயலாளர். அவர் பெயர் ராமமூர்த்தி ராவ். அரசின் அத்தனை இலாகாவையும் பார்த்துவிட்ட மூத்த ஐ.ஏ.எஸ். ஆபீஸர். லேசில் நிதானமிழக்காதவர்.

ராஜேந்திரன், "சார், லாயர் கணேஷ் வந்திருக்கிறார். அவர் அப்படி நினைக்கவில்லை."

"கணேஷ்! வாங்க வாங்க... தி மோர் தி மெர்ரியர்" என்றார் செக்ரெட்டரி. "நீங்க என்ன நினைக்கிறீங்க? யார் இந்த வேலையைச் செய்திருக்க முடியும்?"

"படப்பிடிப்புக்கும் அந்தக் கும்பலுக்கும் தொடர்பு இல்லை மிஸ்டர் ராமமூர்த்தி" என்றான் கணேஷ்.

"இதைச் செய்தவர்கள் படப்பிடிப்பின்போது வந்து சுட்டுக் கலைத்திருக்கிறார்களே... எல்லாம் அந்த நடிகையால் வந்த வினைதானே... திஜோவோ ஏதோ பேர்..."

"தேஜோமயி."

"யார்யா இது?"

"தேஜோமயி தெரியாதா... எந்த யுகத்தில் இருக்கிறாய் ராம்?" என்றார் ஒரு சக அதிகாரி.

"எனக்குத் தெரிந்த ஒரே நடிகை டி.ஆர். ராஜகுமாரி."

ராமமூர்த்தி தீர்ப்பளிப்பது போல் சொன்னார். "இந்த கேஸை இரண்டு விதமாக விசாரியுங்கள். மும்பை ஃபிலிம்

மாஃபியா வேலையா, இல்லை கடல் கடந்ததா..? இப்போதே டெல்லியில் இருந்து மெயில் வந்தவண்ணமாக இருக்கிறது ராஜேந்திரன்! வியாழக்கிழமைக்குள் ஒரு எஸ்.டி.எஃப். அமைத்து இதன் பாதாளத்தைக் கண்டுபிடியுங்கள். கணேஷ், வாருங்கள் என் ஆபீஸுக்கு... உங்களைத் தனியாகச் சந்திக்க விரும்புகிறேன்."

அவர் அலுவலக அறையில் பரமாச்சாரியார், சத்யசாய்பாபா, மதர் படங்கள் இருந்தன. ஃபைல்கள் மலையாக இருந்தன. வருவோர், போவோர் அதிகமிருந்தார்கள். பர்சனல் செக்ரெட்டரியிடம் "பத்து நிமிஷம் டிஸ்டர்ப் பண்ணாதிங்க" என்றார்.

"சொல்லுங்க... இது என்ன தந்தா?" என்றார் ஒரு மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டு.

"சார், கேஸ் ரொம்ப சிம்பிள். ராஜ ராமையா ஒரு சிலையை வெளிநாட்டில வித்ததினால வந்த வினை இது."

"என்ன சிலை?"

"யவனிகான்னு... சோளா ப்ரான்ஸஸ்ல ஒண்ணு."

"அச்சா அச்சா... கேள்விப்பட்டிருக்கேன். ஏகப்பட்ட கரஸ்பாண்டென்ஸ் டெல்லிலருந்து வந்ததே... டிபார்ட்மெண்ட் ஆஃப் கல்ச்சர், என்ஃபோர்ஸ்மெண்ட், நார்காட்டிக் பீரோனு."

"அதே அதே! இவங்க எல்லாரும் அந்தச் சிலையைத் தேடறாங்க."

"வித்துட்டாரா?"

"சரியா வித்துத் தொலைச்சா மற்றொரு கலாச்சார நஷ்டம்னு விட்டிருக்கலாமே. கும்பகோணத்தில் ஒரு டூப்ளிகேட் செய்து நாற்பது மில்லியனுக்கு வித்துட்டார். பெரிய்ய பித்தலாட்டம். அந்தப் பணத்தை புது கம்பெனியில போட்டு ஸ்டாக் வேல்யுவை உயர்த்தி மறைமுகமா தன்னுடைய சொத்தை அதிகரிச்சு புஸ்தகத்திலுள்ள அத்தனை தப்பும் செய்திருக்கார். இப்ப வேற ஆளுக்கு அறுபதுக்கு விக்கறதுக்கு முயற்சி!"

"போச்சுரா."

"ஆனா, இப்ப அவங்க கோபத்தைக் கிளறிவிட்டாச்சு. கன்னாபின்னான்னு சுட்டுக்கிட்டிருக்காங்க."

"சிலை எங்க இருக்கு?"

"நிச்சயம் ராஜ ராமையா கிட்டதான் இருக்கணும். அதை ரெய்டு பண்ணி கவர்ந்துகிட்டு செய்தித்தாள்கள்ல ஒரு அறிவிப்பு செய்துட்டா மேட்டர் தீர்ந்தது."

"என்ன அறிவிப்பு?"

"சர்க்காருக்கும் நம்ம தேசத்துக்கும் சொந்தமான விலைமதிப்பற்ற சொத்து நாட்டைவிட்டு வெளியே போகாம அவர்கிட்டருந்து பறிச்சு டெல்லி சர்க்கார்கிட்டயே ஒப்படைச்சுட்டோம்னு அறிவிப்பு

கொடுத்துட்டு தொழிலதிபர் ராஜ ராமையாவை கைது பண்ணி உள்ளே போடுங்க."

"என்ன கணேஷ் சொல்றீங்க? ராமையாவை அரெஸ்ட் பண்றதாவது! எந்த ஆதாரத்தின் பேரில் அரெஸ்ட் பண்ண? பதினஞ்சாவது நிமிஷம் ஒரு வக்கீல் படையே அவனை பெயில்ல விடுவிக்கும். அவன் யார் தெரியுமா? பி.எம்–க்கு க்ளோஸ்... வேணும்னா ஒரு ஸர்ச் வாரண்ட் கொடுத்து அவன் பங்களாவைச் சோதனை போட ஏற்பாடு செய்யறேன்."

"சிலை பங்களாவில் இருக்காது. படப்பிடிப்பில சம்பந்தப்பட்டவன் ஒருத்தர்கிட்ட கொடுத்திருக்கான்னு நாங்க எண்ணறோம். படப்பிடிப்பில முந்நூறு பேர் இருந்திருப்பாங்க."

"என்னதான் செய்யணும் சொல்லுங்க... படப்பிடிப்பில இருந்தவங்க லிஸ்ட் கொடுங்க."

அப்போது கணேஷின் செல்போன் லேசாக வற்புறுத்தியது.

'உடனே தொடர்பு கொள்ளவும். விஷயம் சிலை பற்றி. பரமானந்த்' என்று மெசேஜ் இருந்தது. கணேஷ் இதை அதிகாரியிடம் சொல்லத் தயங்கினான். அரசாங்கம் இப்போது வேண்டாம். யார் இந்த பரமானந்த்? முதலில் அதைக் கவனிக்கலாம்.

"சரி சார், வரேன்..."

"உங்களுக்கு எங்க நிலைமை புரியுதில்லை? ராமையாவை ஆதாரமில்லாம அரெஸ்ட் பண்ண முடியாது. இன்னைய தேதிக்கு இந்தியாவிலேயே அவன்தான் அதிக பணக்காரனாம். புதுசா ஒரு கம்பெனி ஆரம்பிச்சு ஒரு ஜி.டி.ஆர்ல எக்கச்சக்கத்துக்கு ஸ்டாக் மதிப்பு உயர்ந்து..."

"எல்லாம் சிலையினாலதான் சார். நான் உங்களுக்கு அப்புறம் விவரமா சொல்றேன்" என்றான் கணேஷ்.

அவர் அறையைவிட்டு வெளியே வந்ததும் செல்போனில் கூப்பிட்ட நம்பரைக் கண்டுபிடித்து அதை ஒத்தினான்.

"பரமானந்த் இருக்காரா?"

"பேசறேன் கணேஷ்... எப்ப உங்க ஆபீஸ் வருவீங்க?"

"நீங்க யாரு?"

"உங்களை நான் சந்திக்கணும்."

"எதுக்கு?"

"ஒரு பார்சல் மேட்டர்."

"எங்க இருக்கீங்க?"

"உங்க ஆபீஸ்லதான் காத்திருக்கேன். சீக்கிரம் வாங்க... எனக்குப் பயமா இருக்குது, இந்த சனியனை வெச்சுக்கிட்டு. என்னைப் பேட்டை பேட்டையா துரத்தறாங்க."

"யாரு?"

"அவங்க..."

"அவங்கன்னா யாரு?"

"அவங்க யாருன்னே தெரியாதே. கெட்டவங்க. நிழல் மாதிரி ஒரு வெத்து குண்டன் பின்னாடியே வரான். ராமையா சாரை போன்ல பிடிக்கவே முடியலை. இதை எங்கிட்ட கொடுத்துட்டுப் போயிட்டார்."

"எதை?"

"திறந்துகூடப் பார்க்கலை. சிலையாட்டம் கனமா இருக்குது. என்னமோ அபாயகரமான வஸ்து."

"ஓ மைகாட்! பரமானந்த்... அங்கேயே இருங்க. நான் உடனே வரேன். உள்ள போய் ரெஸ்ட் ரூம்ல கதவைச் சாத்திக்கங்க. அங்க என் கிளார்க் சத்யராஜ் இருப்பான், அவன்கிட்ட போனைக் கொடுங்க."

கொடுத்தார்.

"சத்யராஜ், அந்தாளைப் பத்திரமா உக்கார வை. அவர் இருக்கறதை யார்கிட்டயும் சொல்ல வேண்டாம். போன் பேச வேண்டாம். கதவைத் திறக்க வேண்டாம்."

"போகணும் போகணும்னு தவிக்கிறாரு கணேஷ் சார். யாரோ துரத்தறாங்கன்னு கிலில இருக்காரு. அடிக்கடி ஜன்னல் வழியா பாக்கறாரு."

"கைல ஏதாவது வெச்சிருக்காரா?"

"ஒரு பெரிய பை... கனமான பொருள் இருக்கும் போல."

"நான் உடனே வரேன்... பாத்துக்க அவரை" என்றான் கணேஷ்.

அலுவலகத்தை அடைந்தபோது வாயிற்கதவை சத்யராஜ் சாத்தியிருந்தான். தட்டினதில் பதிலே இல்லை. "சத்யராஜ், நான்தான் கணேஷ்டா... திற கதவை."

மெள்ள உள்புறம் தாள் விலக்கப்பட்டுத் திறந்தது.

"எங்கே அந்த ஆளு?"

அவன் காட்டின திசையில் அந்த பரமானந்த் நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். மூன்று நாட்களில் மூன்று வருஷம் வயசு கூடினவன் போலத் தோற்றமளித்தான். கண்களின் கீழ் கறுப்பு வளையமும் தாடியும். சில நாள் ஒளிந்து வாழ்பவன் போலத் தெரிந்தது. கண்களில் கலப்பில்லாத பீதியும் கிலியும் தெரிந்தது.

"காப்பாத்துங்க கணேஷ் சார். நான் இங்க வந்து சேர்ந்ததே பெரிய அதிர்ஷ்டம். வீட்டில் வந்து கலாட்டா பண்ணிட்டுப் போயிருக்காங்க. பிள்ளைகளைப் பிடிச்சு வெச்சுப்பேன்னு பயமுறுத்தியிருக்காங்க."

"படபடப்பா இருக்கீங்க. கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக்கங்க. விஷயம் என்ன சொல்லுங்க. ராஜ ராமையாவை எப்படித் தெரியும்?"

"அவர் என் பழைய எஜமானர். அவர் வந்து இந்த பார்சலை படப்பிடிப்பின்போது கொடுத்து இதைப் பத்திரமா வெச்சுக்கச் சொல்லி, ஒரு வாரம் கழிச்சு எங்கே கொடுக்கணும்னு சொல்றேன்னு கொடுத்துட்டுப் போயிட்டார். அவர் எனக்கு எவ்வளவோ செய்திருக்கார். இந்தப் படத்தில் நான் பார்ட்னரா இருக்கறதே இவருடைய பண தயவினால்தான். அதனால ஒப்புத்துக்கிட்டேன். வந்தது வினை.

அவர் என்கிட்ட இதைக் கொடுக்கறதை யாரோ பார்த்திருக்காங்க. யாரோ விசாரிச்சிருக்காங்க. அதிலருந்து ஆரம்பிச்சது துரத்தல். முதல்ல போன்கால் வந்தது. 'சிலையைக் கொண்டுவந்து கொடுக்கலைன்னா தலை போயிடும்'னு ஒருத்தன் ஓட்டை இங்கிலீஷ்ல மிரட்டறான். என் பெண்டாட்டிக்கு போன் பண்ணி பயமுறுத்தி யிருக்கான். பயந்து போய் ராஜா சாருக்கு போன் செய்தா 'அப்படித்தான் வெத்தா விரட்டுவாங்க. தலைமறைவா இரு. எக்காரணத்தைக் கொண்டும் சிலையைக் கொடுத்துராதே. ஒரு வாரம் கழிச்சு வாங்கிக்கறேன்'கறார். பொண்டாட்டியை அவ அம்மா வீட்டுக்கு அனுப்பிச்சுட்டேன். ஒரு குண்டன் எதிர்வீட்டு வாசல்ல காலைலருந்து காத்திருக்கான். பின்பக்கமா ஓடிவந்துட்டேன்."

அவன் மெள்ள ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். "வந்துட்டான்... நான் கிளம்பறேன்."

"இருங்க இருங்க... பரமானந்த். சத்யராஜ் எட்டிப் பாரு."

சத்யராஜ் பார்த்ததில் "யாருய்யா?"

"எதுத்தாப்பல நெருப்புக் குச்சியைக் கடிச்சுட்டு பேஸ்பால் குல்லா போட்டுக்கிட்டு பச்சை பனியன்" என்றான் பரமானந்த்.

"அவன்தான்னு எப்படிச் சொல்லுவே?"

"வரான் பாருங்க, ஊர்க்காரனா பாருங்க."

"வரட்டும்." கதவு தட்டும் சத்தம் கேட்டது. அவன் முகத்தில் பீதி கறுப்பாகப் பரவியது.

"உள்ளே போய் பெட்ரூம்ல இருங்க. நாங்க பார்த்துக்கறோம்."

கணேஷ் கதவைத் திறந்தான்.

"யெஸ்."

"திஸ் மேன் கம்?" கழுத்தில் கறுப்புக் கயிறும் அடிதடிக்கு என்றே வடிவமைக்கப்பட்டவன் போல் மார்பில் தசைகளின் திரட்சியும் தெரிந்தன. சின்ன மூக்கு ஏதோ அடிபட்டு சப்பையாகி இருந்தது.

"விச் மேன்?"

அவன் கையில் இருந்த காகிதத்தில் கிறுக்கலாகப் பரமானந்த் என்று எழுதியிருந்தது.

"பரமானந்த்? நோ, நோபடி ஹியர்."

"ஷ்யூர்..."

"ஷ்யூர். ஹண்ட்ரட் பர்சன்ட்."

"ஹி கம், யு டெல் மி, ஐ கில் ஹிம்" என்றான் சிக்கனமாக.

"ஓய்?"

"நோ ஓய். ஐ கில் ஹிம்" என்றான்.

"வந்தால் சொல்கிறேன்" என்றான் கணேஷ். "ஆனால், எங்களுக்கு பரமானந்த் என யாரையும் தெரியாது."

"ஐ வெய்ட் ஹியர். ஒன் டே. டுடே ஐ வெய்ட் டில் ஹி கம்."

"ஓ யெஸ்... இட்ஸ் ஃப்ரீ கண்ட்ரி" என்றான் கணேஷ்.

அப்போது கணேஷின் செல்போன் சிணுங்கியது. மறுமுனையில் கௌரி, "வஸந்த் இருக்காரா?" என்றாள்.

"நான் அப்புறம் பேசுகிறேன்" என்று கணேஷ் சொல்லி முடிப்பதற்குள் அவன் என்ன நினைத்தானோ, திடீர் என்று கணேஷை மீறி "ஐ வாண்ட் டு ஸீ" என்று தள்ளிக்கொண்டு உள்ளே வந்தான்.

"வெயிட் எ மினிட் மிஸ்டர். திஸ் இஸ் மை ஆபீஸ். யு காண்ட் கம் இன் லைக் திஸ்."

"ஐ திங்க் ஹி இஸ் ஹியர்." உள்ளே வந்து மூர்க்கத்தனமாக சாமான்களை உருட்டிப் புரட்டிப் போட்டு, திரைகளை விலக்கி, கதவுகளைத் திறந்து அவசரமாகத் தேடினான். அந்தப் படுக்கை யறைக்குள் நுழைந்தான்.

உள்ளே பரமானந்த் இல்லை!

அவன் முழுவதும் திருப்திப்படாமல் "நாட் ஹியர்... ஐ வெய்ட்... ஐ கம்பேக்" என்று புறப்பட்டுச் சென்றான். செல்போனில் வேற்று மொழியில் பேசினான்.

அவன் போனதும் "பரமானந்த்... பரமானந்த்" என்று தேடிப் பார்த்தான். "எங்கய்யா அந்தாளு?"

"அவன் உள்ள வந்ததுமே பின்பக்கமா கம்பி நீட்டிட்டாருங்க" என்றான் சத்யராஜ்.

"சிலையை என்ன செஞ்சார்?"

"விட்டுட்டுப் போயிட்டாருங்க!"

## 20

**க**ணேஷுக்கு உள்ளம் பதறியது. இத்தனை நாள், ஏன்... இத்தனை நூற்றாண்டுகளாக இத்தனை பேரை அலைக்கழித்த அந்தச் சிலை இப்போது அவன் படுக்கையறையில் அநாதையாக ஓர் அழுக்கு கித்தான் பையில் செய்தித்தாள் சுற்றி, புறக்கணிக்கப்பட்ட தொட்டில் குழந்தை போலக் கிடக்கிறது.

கணேஷுக்கு அதைத் தொடுவதற்கே தயக்கமாக இருந்தது. இந்தச் சிலை சோழர் காலத்து நூற்றாண்டுகளின் சரித்திர மேடு பள்ளங்களையும் கடந்து வந்தது. புனிதமானது. இதைப் பற்றி நிறையப் படித்திருக்கிறான். ராஜசேகர வர்மன் ராஜேந்திர சோழனின் மூன்றாவது ஆண்டிலிருந்து ப்ரசஸ்திகளை கணேஷ் பார்த்திருக்கிறான். யவனிகா ப்ரான்ஸஸ் என்பது இரண்டாம் ராஜேந்திரன் திருமலவாடி இன்ஸ்க்ரிப்ஷன்ஸில் இருந்திருக்கிறது! **உடையார் வீர ராஜேந்திரன் செய்விச்சது ஊர்வசி, ரம்பை, மேனகை, திலோத்தமை,** என்றும் குறிப்புகள் உள்ளன.

கி.பி.1060–ஐச் சேர்ந்த அற்புதமான நான்கு சிலைகளைப் பற்றித் தனியான ஆராய்ச்சி புத்தகங்களே நாற்பது இருக்கின்றன. இன்றைய கரன்சியில் நாற்பதிலிருந்து அறுபது மில்லியன் டாலர் மதிப்பிடப்படும் அந்தச் சிலை படுக்கையில் அநாதையாகக் கிடந்தது.

அதன் செய்தித்தாள் சுற்றலை மெள்ள விடுவித்தபோது கணேஷ் 'அப்பா... இத்தனை அழகான சிலையா!' என்று பிரமித்தான். வெண்கலமா, தங்கமா... சொல்ல முடியாதபடி நடுவாந்தரப் பளபளப்பு. இவள் நால்வரில் எந்தத் தேவதையோ தெரியவில்லை. கண்ணைப் பறிக்கும் அழகு என்பார்களே அது இதுதானோ? ஒரு கணம் வெட்கங்களை மறந்து கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்கலாம் போலத் தோன்றியது. அப்புறம்தான் இது வெறும் வெண்கலச்சிலை... நகம், சதை, தலைமயிர் எல்லாம் எவ்வளவு தத்ரூபமாக இருந்தாலும் தொடுவதற்கு உறுதியான உலோகம் என்கிற நினைவு வந்தது.

அதன் முகத்திலும் வெட்கம் இருந்தது– அது கன்னத்தின் குழைவிலா, சற்றே கீழ்நோக்கிய பார்வையிலா, இல்லை தன் நிர்வாணத்தைப் பற்றிய ஏதோ ஒரு தயக்க

உணர்வினாலா? ஸ்ரீரங்கத்தில் ஒய்சாளர் காலத்துக் கற்சிலை ஒன்றில் இதே வெட்கத்தைப் பார்த்திருக்கிறான் கணேஷ்.

அந்தச் சிலையில் விரசமோ, ஆபாசமோ இல்லை. வினஸ் டிமைலோ சிலையின் நிர்வாணம் யாருக்காவது விபரீத எண்ணங்களைக் கொடுக்குமோ?

இந்தச் சிலையின் நிர்வாணம் பாதியளவு... நகைகள் அணிந்திருந்தாள். மெல்லிய இடுப்பு, இள மாங்கனிகள் மொட்டுடன் தெரிந்தன. மிகையில்லாத உடற்கட்டமைப்பு. ஒவ்வொரு கோணத்தில் பார்த்தாலும் புதுசாகத் தோன்றினாள்.

'என்ன பாஸ்..?' குரல் கேட்டுத் திரும்பினான்.

"எங்கடா போயிட்ட..? யவனிகா பாரு."

"அட, இதான் சிலையா..? நம்மகிட்ட வந்திருச்சா! இதுக்கா போய் இந்த அல்லாட்டம்! பெருமாள் கோயில் வாசல்ல வெளக்கு வெச்சுக்கிட்டு ரெண்டு செலை நிக்குமே அது மாதிரித்தானே இருக்குது."

"டேய், உனக்குக் கலாரசனையே கிடையாதா?"

"எனக்குச் சிலை வேண்டாம். ரியல் போதும் பாஸ்... மேலும் சைஸ் சரிப்படாது."

"நாசமாப் போனே!"

"சரி... கௌரி பைத்தியம் போன் பண்ணிச்சா?"

"வர்றதா சொன்ன ஞாபகம்" என்றான் கணேஷ்.

"பாஸ்... எப்படி உங்ககிட்ட வந்து இந்தச் சிலை சேர்ந்தது? எங்கும் போய் ரங்கனைச் சேவிங்கற மாதிரி..."

"ராஜ ராமையா ஃபிலிம் ஷூட்டிங்ல ஒப்படைச்ச ஆளு பயந்து போய் வுட்டுட்டுப் போயிட்டான். யாருமே தொடப் பயப்படறாங்க."

"ஏன்?"

"ஏனா... கேனத்தனமா கேக்கறே! இதைத் துரத்திகிட்டே ஏ.கே. 47-ம் வால்த்தரும் வந்துகிட்டே இருக்கு."

அப்போது கதவு தட்டப்பட, "வந்தாச்சு... வாசப்பக்கம் சமாளிக்கறேன். இங்கயே இரு... சிலை படுக்கை அடியில இருக்கட்டும்."

"வாடியம்மா யவனிகா... உன்னால எங்களுக்கெல்லாம் எத்தனை இம்சை!" அதைக் கைத்தாங்கலாக எடுத்தான். படுக்கையடியில் வைத்தான்.

சற்று முன் வந்து மிரட்டியவன் வெளியே நின்றுகொண்டிருந்தான்.

"பரமானந்த் கம்?"

"நோ! வெய்ட்டிங் ஃபர் ஹிம் லைக் யு."

"ஹௌ கேம்?"

"மை அசிஸ்டண்ட்."

"கால்!"

"இன் பாத்ரூம்... டோண்ட் ஒர்ரி. வி வில் ஹாண்ட் பரமானந்த் ஓவர்."

அவன் இருக்கலாமா, போகலாமா என்று யோசிப்பது போல இருந்தது.

"வாண்ட் டு ஸ்டே? வாண்ட் எ கோக்? கமான் இன்"

"நோ ஐ எம் தேர். ஹிம் கம், யு கால், ஐ கில்" தெருவில் காட்டினான்.

அங்கே ஒரு டாடா சுமோ நின்றுகொண்டிருந்தது. அதில் நான்கு ஐயந்திரிபற்ற கெட்ட காரியர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் துப்பாக்கி முனைகள் தெரிந்தன. அந்த சந்தே மரண வாசனைக்குக் காத்திருந்தது! காற்றில் ஓர் எச்சரிக்கை இருந்தது.

குறுக்கே நடந்து அந்த வண்டியில் ஏறிக்கொண்டான்.

கணேஷ் உள்ளே சென்றான்.

"இப்ப என்ன செய்யறது பாஸ்? இந்தச் சனியன் மடியில வந்து விழுந்துருச்சு."

"எப்படியாவது சர்க்கார் வசம் ஒப்படைக்கணும். அதான் நம்ம முதல் பொறுப்பு. இது தேசிய சொத்து."

"போன் பண்ணிரலாம்."

"போன் பண்ணினா வீட்டு வாசல்ல தீபாவளி பண்டிகை மாதிரி ஷூட் அவுட் நடக்கும். அதைத் தவிர்க்க முடியாது."

"எப்படியும் இது போலீஸுடைய கடமை. அவங்ககிட்ட நிலைமையை முழுக்கச் சொல்லிட்டு, அவங்க சொல்றதைக் கேட்டுக்கிட்டு நாம பதுங்க வேண்டியதுதான். இது பெரிய பார்ட்டி."

கணேஷ் கொஞ்ச நேரம் யோசித்தான். பிறகு போனை எடுத்து, "ராஜேந்திரன்... ஒரு அன்லிஸ்டட் நம்பர் கொடுங்க" என்றான். கொஞ்ச நேரம் அதில் ராஜேந்திரனோடு பேசினான்.

"சிலை எப்படி இருக்கு?"

"ரொம்ப அழகா இருக்கு. நீலகண்ட சாஸ்திரியுடைய லேட்டர் சோளாஸ்ல ஒரு ப்ளேட் இருக்கு."

"அதை ஒரு முறை பார்த்துருங்க. இந்த சிலைதானே... தெளிவா தெரியுமில்லையா?"

"ஆமாம்!"

"வேன்ல எத்தனை பேர் இருக்காங்க?"

"ஏழு எட்டு பேர் சுமோல வந்திருக்காங்க. எல்லாரும் கன் வெச்சிருக்காங்க."

"கணேஷ், ஆள் சேதம், உயிர் சேதம் இல்லாம சிலையை உங்க ஆபீஸ்லருந்து எடுக்கணும்னா, மாடி ஏறி குதிச்சுப் பின் பக்கத்திலிருந்து இறங்கி வர முடியுமா?"

"நான் வேற ஒரு யோசனை சொல்றேன் ராஜேந்திரன்" என்றான் கணேஷ்.

"என்ன?"

"கொஞ்சம் ரிஸ்க்தான். நீங்க முழுபலத்தோட வாங்க. அவங்களை கொஞ்ச தூரத்தில் இருந்து மெகா போன்ல கூப்பிட்டு 'சுடாதே... கமிஷனர் பேசறேன். உனக்குத் தேவையானது சிலைதானே... அதைக் கொடுக்கத் தீர்மானிச்சுட்டோம். அரசாங்கம் அனுமதிச்சிருச்சு'ன்னுட்டு அறிவிச்சுருங்க. நாங்களும் அவங்கள கூப்பிட்டு சொல்லிடறோம்."

"சிலையைக் கொடுக்கச் சொல்றீங்களா?"

"இல்லை."

"புரியலை."

"ப்ரில்லியண்டா ஒரு ஐடியா. வர்றப்ப மயிலாப்பூர் வழியா வாங்க. மாதவப் பெருமாள் கோயிலை அடுத்துச் சின்னதா ஒரு சந்நிதி இருக்கு, மங்களதேவி சந்நிதின்னு... அதுக்கு முன்னே இருக்கும் ஏதோ ஒரு ஆழ்வார் சந்நிதியில் அவருக்குப் பத்தினியா பூஜை புனஸ்காரம் ஏதும் இல்லாம ஒரு சிலை இருக்கு. அப்படியே பவனிகா சிலை மாதிரியே இருக்கும்."

"இன் அதர் வேர்ட்ஸ்..."

"இன்னொரு டூப்ளிகேட் சிலையைக் கொடுத்துட்டு ஒரிஜினலை பத்திரப்படுத்தி ட்ரெஷரில் ஒப்படைச்சுரணும்..."

"எதுக்கும் நான் சொன்னபடி புத்தகத்தை ஒரு முறை பாத்துருங்க. போட்டோ இருக்கு. சரி, மயிலாப்பூர்ல என்ன எடம் சொன்னீங்க?"

போனை வைத்ததும் "பாஸ், இது பெரிய்ய ரிஸ்க்."

"நம்ம ரெண்டு பேரால ஒண்ணும் முடியாது. தந்திரம் வெல்லாது. முரட்டுத்தனமான பார்ட்டி. அவங்ககிட்ட அத்தனை வன்முறை இருக்கு. விஷயம் விபரீதமாயிட்டா எதிர்கொள்ள பெரிய போலீஸ் படை தேவைப்படும். கொஞ்சம் மூச்சுவிட போலீஸுக்கு டயம் கொடுத்துட்டா அவங்க மேற்கொண்டு ஒரிஜினல் சிலையைப் பத்திரப்படுத்திட்டாங்கன்னா அப்புறம் சமாளிச்சுருவாங்க."

"நாமெல்லாம் என்ன ஆவோம்?"

"அவங்க கோபத்துக்குள்ளாவோம். எல்லாரையும் தாக்க வருவாங்க. ராஜ ராமையா, நான், நீ எல்லாரும் எச்சரிக்கையா இருக்கணும். இதோ இவளும்தான்."

கௌரி நின்றுகொண்டிருந்தாள். "இவளாலதான் எல்லாம்."

"ஹாய் கணேஷ், பாத்து நாளாச்சு..."

"அதனால என்ன... இடைக்காலத்துல ஒண்ணும் விசேஷமா நடக்கலை. பத்து பேரு செத்தாச்சு. அங்கங்கே துப்பாக்கி வெடிச்சாச்சு. மற்றபடி எல்லாரும் சௌக்கியம்தான் கௌரி."

"எனக்குக் கிட்ட வரவே பயமா இருந்தது. அட்மிஷன்ல வேற பிஸியா இருந்துட்டேனா... பெங்களூர்ல எடம் கெடைக்கும் போல தோணுது... கணேஷ், என்னாலதான் உங்களுக்கு இவ்வளவு டென்ஷன். அதுக்கு மன்னிப்பு கேட்டுக்கத்தான் வந்தேன்."

அவள் உள்ளே நுழைவதற்குள் எதிரே சுமோவிலிருந்து அவன் இறங்கி வந்தான்.

அவசரமாக அவளை மூர்க்கத்தனமாகச் சோதனை போட்டான். "கர்ள் ஹூ?"

"மை காட்! வாட்ஸ் திஸ்?" என்றாள்.

"கம்னு இரு... சாவடிச்சுருவானுக."

"வாட்ஸ் இட் மிஸ்டர்?"

"யு நோ பரமானந்த்?"

"பரமானந்த்? வாட் பரமானந்த்?"

"ஹூ இஸ் ஷி?"

கணேஷ் அவளைப் பார்த்துக்கொண்டு "ஷி இஸ் கவர்மெண்ட் ஆப் இண்டியா! தே அக்ரி. ப்ளீஸ், கெட் சம் ஒன் ஹூ கன் ஸ்பீக் பெட்டர் இங்கிலீஷ்." (இவள் இந்திய அரசு. அவர்கள் ஒப்புக் கொண்டுவிட்டார்கள். ஆங்கிலம் சரியாகப் பேசத் தெரிந்த வனை அழைத்து வா.)

"பர் வாட்?" (எதற்கு?)

"டு கிவ் எவே யவனிகா. தி ஸ்டாச்சூ" (யவனிகா சிலையை ஒப்படைப்பதற்கு.)

அவன் இங்கிருந்து தன் சகா ஒருத்தனைக் கூப்பிடச் சென்றபோது,

"கௌரி, கம்னு தலையாட்டிக்கிட்டு இரு. பெரிய ப்ளான்."

"சிலை எங்க?"

"இங்கதான் இருக்கு... பெட்ரூமுல!"

அவள் வாயடைத்துப்போனாள்.

"முதல்ல வாயைப் பாதாளக் கிடங்கு மாதிரி திறக்காதே. சந்தேகப்படுவாங்க."

"குடுத்துரப் போறீங்களா?" என்றாள் ரகசியமாக.

"கம்முனு இரு."

அவர்கள் இருவர் வந்தார்கள். "ஹி நோஸ் குட் இங்கிலீஷ்."

கணேஷ் அவனிடம் "போலீஸ் வருவார்கள். ஒரிஜினல் சிலையைக் கொண்டு வருவார்கள். அதை உங்களிடம் கொடுத்துவிட உத்தரவு சர்க்காரிடமிருந்து வந்துவிட்டது. சிலையை எந்த நாட்டுக்கு எடுத்துச் செல்கிறீர்கள்?"

"அமெரிக்கா."

"நாங்கள் அமெரிக்க அரசுடன் தொடர்பு கொண்டு சிலையை விடுவிக்க பிரயத்தனம் செய்கிறோம்... நீங்கள் வன்முறை எதுவும் இல்லாமல் வாங்கிச் செல்லும் பட்சத்தில்."

அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். தீர்மானித்தார்கள்.

"உன் பெயர் என்ன?"

"கணேஷ்."

"சிலை உண்மையானதுதான் என்று நிரூபிக்கும்வரை உன்னையும் சிலையுடன் அழைத்துச் செல்வோம்" என்றான்.

## 21

கணேஷ் அந்தக் கோரிக்கையின் அதிர்ச்சியை உள்வாங்கிக்கொண்டு பயமோ, தயக்கமோ காட்டாமல், "நியாயமான கோரிக்கை. தாராளமா கூட வரேன். சிலை உத்தரவாதமானது என்று தெரிந்து கொண்டபின், என்னை நீங்கள் விடுதலை செய்வீர்கள் அல்லவா?"

"உன்னால் எங்களுக்கு வேறு பயன் இல்லை."

"சிலை நம்பகமானதுதான் என்று யார் சர்டிபிகேட் தருவார்கள்?"

"அதிகம் கேள்வி கேட்கிறாய். உன்னை இந்த இடத்திலேயே தீர்த்துவிடலாமா என்று தோன்றுகிறது. பாதுகாப்பிற்குத் தேவைப்படுவதால், உன்னை விட்டு வைத்திருக்கிறோம்."

"தமிழ்நாடு போலீஸ் உன்னைச் சும்மா விடாது. யாரையும் கொன்றுவிட்டு இந்த மாநிலத்தைவிட்டு உன்னால் வெளியே போகமுடியாது."

"வசந்த்... சும்மாயிரு!" என்றான் கணேஷ்.

அவன் தீப்பிழம்பு போலக் கோப விழிகளால் வசந்த்தை நோக்கி, "உங்கள் இண்டியா போலீஸ், இண்டர்போல் அமெரிக்கா... எவனும் எங்களுக்குப் பொருட்டல்ல. உன்னை உயிரோடு வைத்திருப்பது ஒரு காரணத்துக்காகத்தான், சிலையை மதிப்பிடும் வரைக்கும்... இல்லையென்றால், இப்போதே, நீங்கள், இந்தக் கட்டடம், தெரு, எல்லாம்... பூம்!" என்று கிட்டே வந்து சத்தமிட்டான்.

"என்ன பாஸ், இப்படிச் சொல்றான்?"

"கொஞ்ச நேரம் கம்னு இரு..."

"இப்பவே காலியா நாம? ஒரு ஹேர்கட்கூடப் பண்ணிக்காம..."

"வசந்த்!"

"சிலை எப்போது வரும்?"

"போலீஸ் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் காத்திருக்கிறோம்."

"வசந்த்! கமிஷனரைக் கேளு... தமிழ்ல பேசு..."

வசந்த், ராஜேந்திரனுடன் அன்லிஸ்டட் நம்பரில் பேசினான். கணேஷிடம் கொடுத்தான்.

"ராஜேந்திரன், சிலையைப் பாத்தீங்களா? யவனிகா மாதிரிதானே இருக்கு?"

"இருக்கு! அதை எடுக்கறதுல பிரச்சினை வரும்."

"என்ன?"

"ஆழ்வாருடைய பத்தினியை அந்தப் பீடத்திலிருந்து எடுத்து மூளியா வைக்கவே கூடாதாம். மற்றொரு சிலையை பிரதிஷ்டை பண்ணிட்டுத்தான் இந்தச் சிலையை அலம்பறதுக்குக்கூட, ஸாரி... திருமஞ்சனம் பண்றதுக்குக்கூட அனுமதிப்பாளாம்."

"ராஜேந்தின், இது ஒரு நேஷனல் க்ரைசிஸ்னு சொன்னீங்களா?"

"சொல்லியாச்சு. அதனாலதான் சிலை மாற்றத்தையே அனுமதிக்கிறாங்க."

"இப்ப என்னங்கறீங்க?"

"அந்த இடத்துல உங்க யவனிகா சிலையை வெச்சுட்டுத்தான், ஆழ்வார் பத்தினியை நீக்கமுடியும்..."

"என்னடாது வம்பாப் போச்சு!"

"ஒண்ணு செய்ய முடியும். கணேஷ், பின்னால சந்துல ஒரு ஜிப்ஸி அல்லது மோட்டார் ஸைக்கிள் கொண்டுவந்து காத்திருக்கோம். எப்படியாவது அந்த யவனிகாவைச் சந்து வழியா கொடுத்துடுங்க. முதல்ல ஆழ்வாரைத் திருப்திப்படுத்திட்டு, அவர் பக்கத்துல தற்காலிகமா இந்த யவனிகாவை வெச்சுட்டு..."

கணேஷ், "குட் ஐடியா!" என்றான்.

"வசந்த், நீ அந்தச் சிலையை எடுத்துக்கிட்டு... பின்பக்கமா ராஜேந்திரன் ஆள் வருவார், அவங்ககிட்ட கொடுத்துடு..."

"பின்பக்கம் கதவெல்லாம் அடைச்சுட்டோமே பாஸ்..."

கணேஷ் எரிச்சலுடன், "என்ன எழவு வேணா பண்ணு... சுவத்தை உடை. ஏறிக் குதி... ஒரு நாளைக்கு எனக்கு இந்த டென்ஷன் போதும்."

"கவலைப்படாதீங்க பாஸ்... இப்ப சிலையைப் பின்பக்கமா கடத்திடணும். அவ்வளவுதானே? டன்!" என்றான்.

"சீக்கிரம்! அத்தனை பேரும் ட்ரிகர் ஹாப்பி..."

சற்று நேரத்தில் வசந்த் உடல் சிராய்ப்புகளுடன் வந்தான். "குடுத்தாச்சு பாஸ்! பாத்ரூம்ல ஒரு இடைவெளி இருந்தது. ஆஸ்பெஸ்டாஸ் கூரையைப் பேத்து..."

"விவரம் வேண்டாம். சிலையைக் கொடுத்தாச்சுல்ல?"

"ஆச்சு! இப்ப என்ன?"

"ராஜேந்திரன் ஆழ்வார் தர்மபத்தினி சிலையோட வரப்போறார் இப்ப..."

"அந்த மேட்டரை எப்படிச் சமாளிக்கப் போறீங்க?"

"எந்த மேட்டர்?"

"உங்களையும் கூட அழைச்சுட்டு போவம்னு சொல்லியிருக்கானே?"

"போகணும்!"

"என்ன பாஸ் அசால்ட்டா சொல்றீங்க?"

"அந்தப் பிரச்சினை வரட்டும்... முதல்ல அதுக்குள்ள என்னென்ன தடாலடியோ, பார்க்கலாம்..."

"பாஸ்! எந்தக் காரணம் கொண்டும் நீங்க அவன்கூடப் போகக்கூடாது. வேணும்னா, என்னை அனுப்புங்க. இல்லை, என்னையும் கூட்டிட்டுப் போங்க. உங்களைத் தனியா அவங்ககிட்ட விடவே மாட்டேன். நோ வே! நீங்க யாரு? இந்தத் தேசத்துக்கு எத்தனை முக்கியம்!"

"பாரு, நம்ம தேசத்துக்கு யாரும் முக்கியம் இல்லை... அதுபாட்டுக்கு ஓடும்..."

"நோ வே! நான் நிச்சயம் குறுக்கே பாஞ்சுருவேன்..."

"டேய்! கிறுக்குத்தனமா ஏதும் செய்து, காரியத்தைக் கெடுத்துடாதே எல்லாம் நிஜத் துப்பாக்கி."

"இருந்தால் என்ன பாஸ்... வெடிச்சா, என் மேல வெடிக்கட்டும்!"

"என்மேல அவ்வளவு பாசமாடா உனக்கு?"

"பின்னே என்ன?" என்று கண்ணைத் துடைத்துக்கொண்டான். "உங்களை விட்டா எனக்கு யாரு... அப்பா, ஒண்ணுவிட்ட மாமா எல்லாம் நீங்கதானே!"

அப்போது வெளியே ராஜேந்திரனின் குரல் மெகா போனில் எதிரொலித்தது.

"சுடாதீர்கள்! சிலையைக் கொண்டுவந்திருக்கிறோம். எப்படி ஒப்படைப்பது என்று சொல்லுங்கள்..."

இப்போது இந்த இடத்தில் ஒரு விநோதமான இரைச்சலான ரிமோட் உரையாடல் நிகழ்ந்தது.

"ஒருவன் மட்டும் முன்னால் வரவும்!"

"கைகளைப் பின்னால் வைத்துக்கொள்ளவும்..."

"ஆயுதத்தைக் கீழே போடவும்..."

"மேல்சட்டையைக் கழற்றவும்..."

"சிலையைக் காட்டவும்..."

மற்றொருவன் கணேஷை அணுகினான். "நீ வா."

அருகே இருந்த வசந்த் கூட வந்தான். "என்னைச் சேர்க்கலாம். என்னிடம் ஆயுதம் இல்லை..." என்று ஒட்டிக்கொண்டான். அவன் வசந்த்தின் உடல் முழுவதும் சோதனை போட்டான்.

மெள்ள ஒரு அதிகாரி சிலையுடன் வர, அதை வாங்கிக்கொண்டு கணேஷையும் வசந்த்தையும் அவர்கள் வண்டிக்குள் திணித்தார்கள்.

போலீஸிடம் "எங்களைத் தொடரவோ, சுடவோ முயற்சித்தால், இவர்கள் இருவரும் முதல் பலி" என்றார்கள்.

ராஜேந்திரன், "கணேஷ்... என்ன இது? நீங்க எதுக்குப் போறீங்க?"

"சிலைக்கு உத்தரவாதமா."

"இல்லை கணேஷ்... இது சரியில்லை. உங்களை அழைச்சுட்டுப் போறதை எங்களால் பார்த்துக்கிட்டு இருக்க முடியாது..."

"ராஜேந்திரன், ப்ளீஸ்! எக்குதப்பா ஏதும் செய்துடாதீங்க. காரியம் கெட்டுடும்."

"கணேஷ்! அதிரடிப்படை வர்றவரைக்கும் தாமதம் பண்ணுங்க..."

"அதிரடிப்படையைவிடத் தந்திரத்தால இவங்களை வெல்லணும்னு தோணுது."

"இல்லை கணேஷ்... ரொம்ப ரிஸ்க்!"

"பேசிக்கொண்டே இருக்காதே... வண்டிக்குள் ஏறு..."

"எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்? தெரிய வேண்டும்."

"உனக்குத் தெரிய வேண்டியதில்லை..."

"சிலை உண்மையானது என்று யார் சான்றிதழ் தரப்போகிறார்கள்?"

"அதுவும் உனக்குத் தேவையற்ற விவரம்."

"விஷயம் தெரிந்தவர்களால்தான் சொல்ல முடியும்."

"விஷயம் தெரிந்தவர்தான்!"

"யார்?"

"உனக்கு எதற்கு அந்த விவரம்?"

"என்னை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்? இந்தியாவுக்குள்ளா, வெளியேவா?"

"அபத்தமான கேள்வி."

இதற்குமேல் தாமதிக்க முடியவில்லை.

கொட்டுவாயில் இருக்கும்போது கமாண்டோ படையினர் வந்தார்கள். "ராஜேந்திரன், அவர்களைச் சுட வேண்டாம் என்று சொல்லுங்கள்..." என்று கணேஷ் பதறினான்.

அவர்கள் வருவதை இவர்கள் உடனே கவனித்து, இந்த வண்டியில் தயார்நிலையில் வைத்திருந்த பஸூக்காவை இயக்க, எதிரே ஒரு சிறிய பூகம்பம் வெடித்துப் புழுதி படர்ந்தது. அதனிடையில் குழப்பமாக

ஆணைகள் உலவின.

"முட்டாள்களா, அறிவில்லாதவர்களா... எங்கள் சக்தி தெரியவில்லையா?"

மற்றொரு வெடி ஒரு ஜிப்ஸியை வானத்தில் கன்னாபின்னாவென்று 'ஆடித் தள்ளுபடி' போர்டு வரை அனுப்பியது. கணேஷ் கதறினான். "ராஜேந்திரன், இட்ஸ் நோ யூஸ்... நோ யூஸ்...! ஸ்டாப் எவ்ரிதிங்..."

அவ்விடத்தில் இறுதியில் மௌனம் நிலவ... கணேஷ், வசந்த், போலி யவனிகாவுடன் அந்த வேனில் புறப்பட்டனர். மூலை திரும்பியதும் அந்த மஞ்சள் காரைப் பார்த்தார்கள்.

"ஓ காட்... இது வேறயா!"

"கணேஷ், கணேஷ்... எங்கே போறீங்க?" என்ற குரல் ஜன்னலில் சன்னமாகக் கேட்டது.

தேஜோமயி!

"தேஜு, முதல்ல இந்த இடத்தை விட்டுப் போயிடு. க்விக்..."

தேஜோமயி சந்தர்ப்பச் சூழ்நிலையைக் கவனிக்காமல் சுற்றிலும் பார்க்காமல், "வசந்த்... மறுபடியும் ஷூட்டிங் ஸ்டார்ட்... பிரேக் விட்டிருந்தாங்க. உங்களைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். கிட்டத்தான் ஷூட்டிங்..." என்றாள்.

"குட் நியூஸ். ஷூட்டிங் ஆரம்பிச்சுருச்சு!"

அந்தப் பெண் காரைவிட்டு இறங்கினாள்.

"லட்கி கோன்..." என்றான் ஒருவன்.

"ஐயோ... பார்த்துட்டாண்டா!"

"ஷூட்டிங் போல்தி ஹை. குச் ஃபிலிம் ஸ்டார் ஸா லக்தி..."

"இவளையும் வளைத்துப் போடு... பணம் கேட்கலாம்!"

"போச்சு."

அவன் அப்படிச் சொன்னதும் அந்தப் பெண் மூர்க்கத்தனமாக வேனுக்குள் இழுக்கப்பட்டாள். "ஏய்... ஏய்... வெயிட் எ மினிட்..." மெல்லிய எதிர்ப்புகள் பலிக்காமல், வேனுக்குள் இழுக்கப்பட்டு வசந்த், கணேஷ் இடையில் திணிக்கப்பட்டாள்.

"ஐயோ... இவங்கள்லாம் யாரு?" என்றாள்.

உடனே அழ ஆரம்பித்தாள்.

"இப்போது அழுவதால் எந்தப் பயனும் இல்லை..." என்றான் வசந்த். "ஏன் முகம் ஒருமாதிரி மாறிப்போச்சு. மேக்கப்பா?"

"சுப்!" என்று அதட்டினான் ஒரு துஷ்டன். அவனுடன் இருந்த உப துஷ்டன், "வர்ணா மார் காவோகி..." என்று துப்பாக்கியால் ஓங்கினான்.

அவள் இன்னும் அழத் துவங்க... வசந்த், "பாரு! நாம் இப்போது

ஏதும் செய்றதுக்கில்லை..."

"எங்க கூட்டிட்டுப் போறாங்க? அவங்கள்லாம் ஷாட் ரெடி பண்ணி வெயிட் பண்ணிக்கிட்டிருப்பாங்களே... பக்கத்துலதான் ஷூட்டிங்... ட்ராப் பண்ணிடுங்க."

"நீ ஷூட்டிங்குக்குத் தேவையா?"

"ஆமா! ஃபைட்டு..."

"எல்லாம் கான்சல்... இப்ப எங்களை... 'ஹாஸ்டேஜ்னா' தெரியுமா... பிணைக் கைதிகளா கூட்டிக்கிட்டுப் போறாங்க. முட்டாள்தனமா நீயும் வந்து மாட்டினே!"

"எங்க... வேர் ஆர் யு டேக்கிங் அஸ் மிஸ்டர்?"

அவன் "உப்பர்..." என்றான்.

ஒரு பெரிய பத்து மாடிக் கட்டடத்தை வண்டி சுற்றிவந்து நின்றது.

"பாஸ், இந்தப் பொண்ணு வந்து..."

"வசந்த், சும்மா வா."

அண்ணாசாலையை ஒட்டி பீட்டர்ஸ் ரோட்டில் புதிதாகக் கிளம்பிய பல மாடி அலுவலகக் கட்டடங்களில் ஒன்றில் அந்த வேன் நின்றிருந்தது. உள்ளே உட்கார்ந்திருந்தவர்கள் அனைவரும் சலனமற்றுப் பார்த்துக்கொண்டிருக்க...

வேடிக்கை பார்க்க எட்டிப் பார்த்த சிறுவன் ஏ.கே.47 அசால்ட் ரைஃபிளைக் காட்டி, "நிஜத் துப்பாக்கிங்களா?" என்றான்.

"போடா, வேலையைப் பார்த்துக்கிட்டு..." என்று வசந்த் அதட்டினான். கணேஷ், அவர்களில் தலைவன் போல இருந்தவனிடம் "இப்போது என்ன?" என்றான்.

"வா, இவனும் பெண்ணும் வரட்டும். தப்பிக்க முயலாதே... சுட்டுவிடுவோம்."

"தப்பிக்கற உத்தேசம் இல்லை..." என்றான் கணேஷ். வசந்த் அதை ஆமோதித்தான். அவன் கண்கள் சுற்றிலும் அலைந்தன, எங்காவது போலீஸ்காரர்கள் தென்படுகிறார்களா என்று. யாரையும் காணவில்லை. சீக்கிரமே, சீக்கிரமே ஏதாவது செய்தாக வேண்டும்.

அபத்தமாக இருந்தது. லிஃப்ட்டில் சிலர் கணேஷை அடையாளம் கண்டுகொண்டு சிரித்தார்கள். அவர்கள் பார்வையில் வித்தியாசமான அர்த்தம் இருந்தாலும் அதைக் கவனிக்க கணேஷுக்கு அக்கறை இல்லை என்று சொல்லலாம்.

"கணேஷ், ஆர் யு ஆல்ரைட்? ஏன் ஒருமாதிரி இருக்கீங்க?" என்றார் ஒருவர்.

பின்னால் மூன்று பேர், அவர்களுடன் சம்பந்தமே இல்லாத முகஜாடையுடன் அழுக்கு உடை [illegible]ர்கள். லிஃப்ட்டில் இருப்பவர்களை 'ஹாய் போ' என்று அதட்டி தள்ளிக் காலி பண்ணி விட்டார்கள். அவர்கள் [illegible] மாடி பட்டனை ஒருவன் அழுத்தினான். மற்றவர் [illegible] இருக்க... இவர்களுடன் மூன்று பேர் வந்தார்கள்.

சிலையை சீனியர் வைத்திருந்தான். மௌனமாக வந்தார்கள். அந்த இடத்துக்கு அடிக்கடி வந்திருப்பவர்கள்போலத் தெரிந்தது. ஒரு [illegible] மௌனமான ரிவால்வர் கைத்துப்பாக்கியை அவ்வப்போது [illegible]

முதுகில் அழுத்தினார்கள்.

"எங்க கொண்டுட்டுப் போறாங்க?" என்றாள் அந்தப் பெண்.

"சுப்..." என்று அதட்டினான்.

நடுக்கத்தில் இன்னமும் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள்.

எட்டாவது மாடியில், ஒரு மிக நவீன அலுவலகத்துக்குள் சென்றார்கள். மூலையில் இருந்த மேஜையருகில் இவர்களுக்காகக் காத்திருந்தவருக்கு நாற்பது வயசிருக்கும். 'இவர்தான் சர்டிபிகேட் கொடுக்கப் போறாரா? இவரை எங்கேயோ பார்த்திருக்கேனே!'

அசப்பில் மெகா சீரியல் அப்பா போல இருந்தார். அத்தனை சாதுவான ஒருவரையும் இந்த முரடர்களையும் பொருத்திப் பார்க்கவே முடியவில்லை. ஒரு பெரிய டார்ச்சர் பார்ட்டியை எதிர்பார்த்தார்கள்.

"வாங்க மிஸ்டர் கணேஷ், உங்களைப் பத்திக் கேள்விப்பட்டிருக்கேன். உங்களுக்கு இத்தனை அசௌகரியம் கொடுக்கறதுக்கு மன்னிக்கவும்..."

"நீங்கதான் சர்டிபிகேட் கொடுக்கப் போறீங்களா?"

"நான் இல்லைப்பா... என்னவோ பிஸினஸ் நடக்குது. ஆபீஸ்ல பல நாள் ஒண்டியா விட்டுட்டுப் போயிடறானுங்க. இவங்க வியாபாரம் என்னன்னு சொல்ல முடியுமா கணேஷ்? பால் மாதிரி வெளுப்பா பவுடர் விக்கறானுங்க..."

கணேஷ் கவனிக்கவில்லை. அவனுக்கு உள்ளம் பதறியது. காட்டப்பட்டது ஆழ்வார் பத்தினியின் சிலை. யவனிகா போலத் தோற்றமுள்ளது. இதை நிச்சயம் மாமா கண்டுபிடித்துவிடுவார். ஏதாவது செய்தே ஆக வேண்டும். அவர்கள் துப்பாக்கி முனைகள் வெடிக்கத் தயாராக இருந்தன.

பையில் வைத்திருந்த சிலையை எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். "ஹூம்... இதுதான் ஒரிஜினல் என்கிறீர்களா?"

"ஆமாம்... பின்னே? உங்களுக்கு இதுல விஷயம் தெரியுமா?" என்றான் கணேஷ். அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. இவன் இல்லை 'எக்ஸ்பர்ட்'. இவன் ஏதோ ஒரு அலுவலகத்தின் மானேஜர். இவன் மூலம் ஏதோ நடக்கப்போகிறது. என்ன என்பது விந்தையாக இருந்தது.

"தெரிஞ்சுக்கலாம்..." – மெகா சீரியல் மேஜை மேல் சிலையை வைத்தார். மேஜையின் இழுப்பறையிலிருந்து எதையோ எடுத்தார்.

"வசந்த், என்னடா இது?"

"சிம்பிள், டிஜிட்டல் காமிரா பாஸ்!"

சிலையை இப்போது பார்க்கையில் மோசமான பிரதியாகத்தான் தோன்றியது. "எங்கே யவனிகா, எங்கே இந்த சிலை? இதைப் போய்க் கொடுக்கச் சொன்னேனே... முட்டாள்!" என்ற கணேஷ் பதற்றமடைந்தான்.

"உங்க பேரு என்ன சார்?"

"பேரு முக்கியமில்லை. ராஜுன்னு செளகரியத்துக்குக் கூப்பிடுங்க. நான் இந்த ஆபீஸ்ல எடுபிடி, கேர்டேக்கர் மாதிரி. பாதி என்ன எழவு பேசறான்னே தெரியாது. சம்பளம் மூணு மாசம் சேர்த்துச் சேர்த்து வரும். பல நாள் ஒண்டியா உக்கார்ந்திருப்பேன். போன்கால் வரும்..."

"ராஜு சார்... நீங்க சர்டிபிகேட் கொடுத்துட்டா, இந்த நாடு பெரிய அளவில் பயனடையும். இந்த நாட்டுடைய சொத்து வெளியே போகாமக் காப்பாற்ற முடியும்..."

"எப்படி? எனக்குப் புரியலை. நான் யார்? பூச்சி..."

"பேசாதே... வேலையைப் பார்..." என்று அந்த முரடன் அதட்டினான். "ஆமாம்... என்னை அதட்டுறா..."

வசந்த் ஏறக்குறைய முணுமுணுப்பாக, "ராஜு... எப்படியாவது தேசத்தின் கௌரவத்தைக் காப்பாத்துங்க."

"என்ன சொல்றீங்க?" என்று அந்தச் சிலையை, அவர் ஒரு துணியால் துடைத்தார்.

"இதுக்கு நீங்கதானே சர்டிபிகேட் கொடுக்கப்போறீங்க?"

"நானா... ஐயோ, நான் இல்லை. நான் வெறும் தபால் ஆபீஸ். வர்ற மெயில் எல்லாம் பட்டுவாடா பண்ணணும். இவனுகளுக்கு ஊத்திக் கொடுக்க குடி, குட்டி... அதை ஏன் கேக்கறே? யாருய்யா இவங்க?"

"உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாதே! அதான் பிரச்சினை. என்னவோ எக்ஸ்போர்ட் ஹவுஸ்னு வெச்சிருக்கான். என்ன எக்ஸ்போர்ட்னு இதுவரை எனக்குத் தெரியாது. கேட்டா, டென்மார்க்லருந்து பால்ங்கறான்... ஒரு நாள் ராஜஸ்தான்ங்கறான்..."

"சிலையை என்ன பண்ணப்போறீங்க?"

"இது அமெரிக்காவிலிருந்து வரணும்..."

"போச்சுடா! இதை அங்கே அனுப்பிக் காத்திருக்கப் போறீங்களா?"

"ஒரு விதத்துல அதான்..."

"புரியலை."

"பாரேன்..."

அந்த காமிராவை ஒரு கம்ப்யூட்டருடன் இணைத்தது, சிலையை வெவ்வேறு கோணங்களில் போட்டோ பிடித்தார். அந்தப் படங்களை நெட் மூலம் ஃபைல் அட்டாச்மெண்ட்களாக அனுப்பி வைத்தார். "இது ஒண்ணு சொல்லிக் கொடுத்திருக்கான்..." காலை ஆட்டிக் கொண்டு காத்திருந்தார்.

"நியூயார்க் போயிட்டு, அங்கே உள்ள ஒரிஜினல்கூட கம்பேர் பண்ணிட்டுத் தகவல் சொல்லிடுவாங்க. மெயில் மூலம் இதோ வந்துடும்..."

"ராஜு, அதுக்குள்ளே நீங்க ஏதும் செய்ய முடியாதா?"

"என்ன செய்யணும்?"

"சிலை சரியா இருக்குனு சொல்லிடுங்களேன்."

"எதுக்குச் சொல்லணும்?"

"தேசத்துக்கு நல்லது நடக்குமே!"

அவர் முகம் சுருங்கியது. "இந்தத் தேசம் எனக்கு என்ன நல்லது செஞ்சிருக்கு, சொல்லு?"

கணேஷ் மௌனமாக இருக்க, "இந்த ஒண்ணரையணா வேலைக்கு எத்தனை அலைய வேண்டியிருக்கு தெரியுமா? எனக்கு என்ன செஞ்சுது இந்தத் தேசம்?"

"அதிகம் பேசாதே... அதிகம் பேசாதே... வேலையைப் பார்..."

அவர் எடுத்த போட்டோக்கள் அச்சுக் கொட்டினாற்போல் நானா பக்கங்களிலும் நானாவித போஸ்களிலும் துல்லியமாகக் கடல் கடந்து, வலை மூலம் நியூயார்க் சென்றன.

"இந்தாளு அந்த டைப் போல பாஸ்..."

"என்ன டைப்?"

"'தேசம் எனக்கு என்ன செஞ்சுது' டைப்!"

"தலைவிதிடா வசந்த், இங்கே வந்து மாட்டினோம்... இன்னும் கொஞ்சம் நேரத்துல இங்கே தீபாவளி..."

"சும்மா பார்த்துக்கிட்டே இருக்கியே... அழுறதைத் தவிர, ஏதாவது செய்யேன்..." என்றான் பெண்ணிடம்.

"நான் என்ன செய்வேன்? எனக்கு ஷூட்டிங் இருக்கு, காத்திருப்பாங்க... ஒரு நாள் பேட்டா போச்சு..."

"நீ யாரு? முதல்ல தேஜோமயின்னே நினைச்சேன். அவங்க குரல் கேட்டுதே... அவங்க கார்ல இல்லையா?"

"இருந்தாங்க... நல்லவேளை, அவங்க ஜீன்ஸ் பாண்ட்ல முன்ஸீட்ல உட்கார்ந்திருந்தாங்க..."

"உன் பேரு?"

"அன்புலக்ஷ்மி... சினிமாக்குக் கவிதானு மாத்திக்கிட்டேன்..."

"அன்புலக்ஷ்மியே பரவாயில்லை... நீ யாரு?"

"தேஜு மேடம்க்கு டூப்பு!"

"எதுக்கு... டான்ஸுக்கா?"

"இல்லை... ஃபைட்டுக்கு!"

கணேஷ் பிரகாசமாகி, "இதை முன்னாலே சொல்லித் தொலைக்க மாட்டியோ?"

"ஏன்?"

"சொல்றேன்..." என்றான்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், கட்டடத்தை மெள்ள போலீஸ் சுற்றி வளைத்தனர். கட்டடத்தைச் சேர்ந்தவர்களை ஒவ்வொருத்தராக வெளியே அனுப்பிவிட்டு, மாடிக்கு மாடி அவர்களே ஆக்கிரமித்துக்கொண்டார்கள்.

இவர்கள் கணித்திரைக்கு எதிரே காத்திருந்தார்கள்.

போலீஸின் க்விக் ஆக்ஷன் படையினர் சத்தமிடாமல் கதவருகே வந்து நின்றார்கள். கதவின் கைப்பிடியை முயன்றார்கள். அது மெள்ளத் திறந்தது. ஒரு இன்ச் இடைவெளி விட்டு, உள்ளே மேஜை விளிம்பில் அசால்ட்டாக உட்கார்ந்திருந்தவனையும் கணேஷ், வசந்தையும் அந்தப் பெண்ணையும் சப்–இன்ஸ்பெக்டர் பார்த்தார்.

"உள்ளே பூந்துரலாமா?"

"பொறு... ஒரு ஆளு கன் வெச்சுக்கிட்டு கணேஷ் முதுகுல பதிச்சிருக்கான்!" அவர் கையில் கைக்கு அடக்கமான ஒரு டாரஸ் 45 இருந்தது. உலகிலேயே அதிவேகமான ஆட்டோமேடிக் பிஸ்டல் அது!

சிலை மேஜைமேல் இருந்தது. அனைவரும் கணித்திரையில் கவனமாக இருந்தார்கள். அந்தப் பெண், "தலையெழுத்து... இங்கே வந்து மாட்டிக்கிட்டேன், பாரு!"

கணேஷ் ஜன்னல்களைப் பார்த்தான். அனைத்தும் ஏ.ஸிக்காக இறுகச் சார்த்தியிருந்தன. ஓரக்கண்ணால் அந்த இடைவெளியைப் பார்த்தான். போலீஸ் நிற்பதைப் பார்த்துவிட்டான்.

"வந்துடுத்து... பதில் வந்துடுத்து!" என்றார் ராஜு.

கணேஷ் கணிப்பொறித் திரைக்கு அருகே சென்றான். போகும்போது அன்புலக்ஷ்மியிடம் முணுமுணுத்தான்.

இ–மெயில் செய்தி வந்திருந்தது –

'நீ அனுப்பிவைத்த போட்டோக்களை யவனிகா போட்டோவுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில், உங்களிடம் இருப்பது மறுபடியும் போலி என்பது தெரிகிறது. அடுத்த பிளானை உடனே செயல்படுத்தவும். முதலில் ராமையாவை அழிக்கவும். எங்களுக்குப் பெருத்த ஏமாற்றம். அடுத்த ஆணைக்குக் காத்திருக்கவும்...'

அந்தக் கோப விழிக்காரன் செல்போனில் அவசரமாகப் பேசினான். மற்றொருத்தன், கணேஷின் நெற்றிப் பொட்டில் துப்பாக்கி வைத்தான்.

"வெயிட்! இதைப் பேசித் தீர்க்கலாம்..."

"செய்தி தெளிவாக வந்துவிட்டது. ஆணையும் வந்துவிட்டது.

இனி பேச எதுவும் இல்லை."

"ராமையாவைத்தான் கொல்லச் சொல்லியிருக்கிறது."

"நீயும்தான் ஏமாற்றுக்காரன். இந்திய நாய்கள் அனைவருமே ஏமாற்றுக்காரர்கள்."

ட்ரிக்கரில் அவன் விரல் பதிய, கமாண்டோ காப்டன் அப்போதுதான் கதவு வெடித்து உள்ளே நுழைந்தவர், நிலைமையை உடனே புரிந்துகொண்டு "டோண்ட் ஷுட்" என்று சுடும் ஆணையை ரத்து செய்தார்.

அவன் சட்டென்று அந்தப் பெண்ணை இழுத்துப் பிடித்துக் கொண்டான். அவள் நெற்றியில் துப்பாக்கியை வைத்தான்.

"நான் சொன்னதைச் செய்" என்றான் கணேஷ்.

"கணேஷ் சார், என்ன பண்ணணும் இப்ப?"

"அவன் துப்பாக்கியைப் பிடுங்கித் தருவியா?"

"தரேன்."

"எப்படிப் பண்ணுவே?"

"இப்படி" என்றாள். சற்றும் எதிர்பாராத விதமாக தன் நெற்றியில் துப்பாக்கி வைத்தவன் கையைப் பிடித்து மடக்கி, முழங்காலால் வயிற்றில் உதைத்து, கராத்தே சாப் அடித்து வளைத்து, துப்பாக்கியைப் பிடுங்கி, அதைக் கணேஷிடம் தூக்கி எறிந்தாள்.

இதற்குள் கமாண்டோ காப்டன் சுதாரித்துக்கொண்டு மற்ற இருவரையும் திறமையான அசைவுகள் மூலம் மடக்கி வீழ்த்தி, முழங்காலால் மார்பில் வைத்து அழுத்தினார்.

ஒரு துப்பாக்கி வெடித்தது. ஒரு கை உதறி உதறி ரத்தம் சிந்தியது. ராஜு மேஜைக்கடியில் ஒளிந்துகொண்டார்.

"என்னை விட்டுடுங்கப்பா... நான் வெறும் பட்டுவாடா!"

## 23

அந்தப் பெண் ஒரு தீரச்செயல் புரிந்துவிட்டாலும் இன்னும் கை நடுங்கிக்கொண்டுதான் இருந்தாள். "ஒரு நிமிஷம் உயிரே போச்சுன்னு நினைச்சேன் அண்ணே... சமயத்தில் ஞாபகப்படுத்தினீங்க. அட ஆமா... இவங்களை என்னால கவுக்க முடியும். அதுக்குத்தானே நாலு வருஷம் கராத்தே கத்துக்கிட்டு எல்லா பெல்ட்டும் வாங்கினேன்."

"கை குடு... முதல் தடவையா நிஜமா சண்டை போட்டிருக்க. படம் இல்லை... நிஜம்!"

"அண்ணே, அது என்ன சிலைங்க?"

"அது பெரிய கதை. என்னை அண்ணேன்னு கூப்பிடாதே" என்றான் வசந்த். இதனிடையில் கைது செய்தவர்களை போலீஸ் வண்டியில் அடைக்கும்போது வேனில் இருந்தவர்கள் எதிர்பாராமல் சுட்டதில் ஒரு காவல் அதிகாரி காயம்பட்டு விழுந்தார். கைது செய்தவர்களைக் கைவிடாமல் அவர்கள் நிழல் தேடிப் பதுங்கிக் கொள்ள... போலீஸுக்கும் அவர்களுக்கும் துப்பாக்கிச்சூடு பரிமாறிக் கொள்ளப்பட்டது. ரேடியோவில் மேலும் படையினரைக் கேட்க, அந்த ஸ்தலம் ஒரு மினி யுத்தகளமாகிவிட்டது.

அந்த இளம் இன்ஸ்பெக்டர், "மேலும் போலீஸ்படை வருகிறது" என்று இரைச்சலாக ஒலிபெருக்கியில் அறிவித்தார். அவர்கள் அராபிக் போன்ற பாஷையில் பேசிக்கொண்டார்கள். சட்டென தங்கள் சகாக்களைப் புறக்கணித்து மற்றவர்கள் வேகமாகச் சீறிப் புறப்பட்டார்கள். அவர்களை ஒரு ஜீப் தொடர "கடைசிவரை துரத்துங்க... எங்க போவாங்க பார்த்துரலாம்..."

நாச்சியார் சிலையை அந்த இளம் இன்ஸ்பெக்டர் ஆராய்ந்து,

"இதுக்கா இத்தனை அல்லாட்டம்... துப்பாக்கி வெடி?"

"இந்தச் சிலை இல்லைங்க. இது போலி. அவங்க தேடற சிலை வேற... அதுதான்னு சொல்லிக்கிட்டு கொஞ்சம் டயம் வாங்கினோம், இவங்ககிட்ட. இவங்க செக் பண்ணி 'சிலை நிஜம் இல்லை'ன்னு கண்டுபிடிச்சுட்டாங்க... அதனால தகராறு..."

"சுத்தமா புரியலைங்க. நிஜ சிலை எங்க பின்ன?"

"அது ஆழ்வார் சந்நிதியில மயிலாப்பூர் பக்கத்தில் இருக்குது."

"அது எப்படி அங்கே போச்சு?"

"போலீஸ்தான் அங்க வெச்சாங்க."

"அங்க ஏன் வெக்கணும்?"

"வெக்காட்டி போலி சிலையை எடுக்க முடியாதுங்க."

இன்ஸ்பெக்டர் தன் தொப்பியைக் கழற்றித் தலையைத் தடவிக் கொண்டார்.

"பிச்சுக்கப்போறீங்களா?" என்றான் வசந்த். "விடுங்க, எல்லாம் செட்டில் ஆயிருச்சு. இப்ப அந்த ஆழ்வார் சந்நிதிக்குப் போயி இதை வெச்சுட்டு உண்மையான சிலையை அரசாங்கத்திடம் ஒப்படைச்சுட்டா தீர்ந்தது மேட்டர்."

ராஜேந்திரனுக்குக் கணேஷ் போன் செய்தபோது அவர் சந்நிதியை நோக்கித்தான் சென்றுகொண்டிருக்கிறார் என்பது தெரிந்தது.

கணேஷ்-ும் வசந்த்தும் ஒரு போலீஸ் காரில் தம் அலுவலகத்தில் இறங்கிக்கொண்டனர். அவர்கள் வேன் வாசலில் நிறுத்தியிருந்தது. துப்பாக்கிக் குண்டின் ஷெல்கள் பல இடங்களில் பதிந்திருந்தன. சற்று முன்னர் இந்த இடத்தில் பரவிய அபாயத்தை நினைவுபடுத்தியது.

"வசந்த், பெட்ரோல் இருக்கான்னு பாத்துரு. தர்மராஜனுடைய ஃபைல் பின்ஸீட்டில் இருக்குது. அதை எடுத்துக்கிட்டு வந்துரு" என்று கணேஷ் அலுவலகத்துக் கதவை நோக்கி நடந்தான்.

வசந்த் வேனை சாவி போட்டுத் திறக்க முயற்சித்தபோது ஏற்கெனவே திறந்திருந்தது! வசந்த் உஷாராகிவிட்டான்!

"பாஸ், திறக்கமாட்டேன்..."

"ஏண்டா?"

"புறப்படறப்ப பூட்டியிருந்த காரு இப்ப கதவு திறந்திருக்கு..."

"இப்ப என்னங்கறே?"

"ஏதாவது வெடிக்கிற பொருள் வெச்சிருக்கலாம். கொஞ்சம் ஒதுங்குங்க."

"டேய், நீ எதும் பண்ணாதே... ஸ்ரீதரமூர்த்தியைக் கூப்பிட்டுர்றேன்... இரு..."

மொபைலில் கணேஷ் தன் நண்பன் ஸ்ரீதரமூர்த்தியை அழைத்தான்.

"என்ன கணேஷ், ரொம்ப நாளாச்சு?"

"ஸ்ரீ, ஏன் கேக்கறே போ... சரியான ஒரு வெண்கலச் சிலை வம்பில மாட்டிக்கிட்டு சோழர் காலத்துக்குப் போய் வந்தாச்சு."

"கேள்விப்பட்டேன்... எதுக்கு போன் பண்ணே?"

"எங்க வேனை யாரோ 'டாம்பர்' பண்ணிருக்கிற மாதிரி தெரியுது... கண்டுபிடிக்கணும்."

"பாத்துட்டா போச்சு."

"வசந்த், சொல்லுரா..."

வசந்த் போனை வாங்கி விவரித்தான்.

"கதவு திறந்திருந்ததா?"

"திறந்திருந்தது."

"ஸ்டியரிங்கிட்ட புதுசா கம்பி ஏதாவது தெரியறதா?"

"கதவை முழுக்கத் திறக்கறதுக்கே தயக்கமா இருக்கு ஸ்ரீ..."

"கொஞ்சம் திறந்திருக்கில்லை?"

"திறந்திருக்கு!"

"உனக்குக் கண்ணு இருக்கில்லை?"

ஸ்ரீ இப்படித்தான் பேசுவான். ஆனால், இந்த வெடி சமாச்சாரங்களில், எலெக்ட்ரிக்கல் சாகசங்களில் விற்பன்னன். சர்க்யூட் டயாக்ரம், மேன்யுவல் ஏதும் தேவையில்லாமல், சிக்கலான ஜப்பானிய எலெக்ட்ரானிக் சாதனங்களை ரிப்பேர் பண்ணி உயிர் கொடுத்துவிடுவான்.

"திறந்த பகுதில ஏதாவது ஒயர் தெரியறதா?"

"இல்லை."

"புதுசா ஏதாவது ரிலே... ப்ராக்சிமிட்டி ஸ்விட்சு ஏதும்..?"

"ஏதும் கண்ல படலை."

"அப்ப உள்ள பாரு..."

"உக்காரலாமா ஸீட்ல?"

"உக்காராதே... அதில் ஏதாவது ட்ரிக்கர் இருக்கலாம். ஸ்டியரிங் பக்கத்துல புதுசா ஒயர் ஏதாவது தெரியறதா? சொல்லு..."

"தெரியுது. இப்பக் கதவு பக்கத்திலயும் ஒரு ஸ்விட்சு மாதிரி தெரியுது."

"தெரியுதா? அப்ப ஏன் வெடிக்கலை?"

"வெடிக்கணுமா?"

"யு ஆர் லக்கி... ஒதுங்கிடு... மேல எதும் செய்யாதே... நான் வரவரைக்கும் கார்கிட்ட போகாதே. கொஞ்சம் சுகுரா கேட்டுப்பாரு... எதும் கெடியாரச் சத்தம் கேக்குதா? டைமர் எதாவது இருக்கா பாரு."

"சொல்லத் தெரியலை ஸ்ரீ."

"ரிஸ்க் எடுக்காதே... நான் வர்ற வரைக்கும் காத்திரு. போலீஸ் பாம் ஸ்க்வாடுக்குச் சொல்லிடு."

ஸ்ரீ போன தடவை பார்த்ததற்குச் சற்றுப் பெருத்திருந்தான். வாசனைப் புகையிலை மணம் கமழ, பல்லிலே வெற்றிலைக் காவி தெரியச் சிரித்தான்.

"இன்னும் இந்தப் பழக்கத்தை விடலையா நீ?"

"எதுக்கு வுடணும்? பாச்சலர்... குழந்தையா, குட்டியா? அப்பா அம்மா கிடையாது."

"நானும் அப்படித்தானே ஸ்ரீ?"

"நீ கணேஷ்ப்பா... உனக்குக் கெட்ட பழக்கம் எதும் தேவையில்லை."

"அடப் பாவி."

"ஸ்ரீ, நீ மாறவே இல்லை... சரி, பாரு" என்றான் வசந்த்.

அவன் ஸ்டியரிங் அருகில் இருந்த ஒயரைப் பார்த்தான்.

"ஜாக்கிரதை ஸ்ரீ..."

"நீ நகரு. நெர்வசா இல்லாதவனை நெர்வசாக்கறே."

அவன் அந்த ஆரஞ்சு நிற ஒயர், இன்ஜின் பக்கம் போவதைப் பார்த்தான். அது பேட்டரிக்கு இணைக்கப்பட்டிருந்தது. "இக்னிஷனுக்கு வேற போறது!"

ஸ்ரீ அதை ஆராய்ந்தான்.

"ஸ்டார்ட் பண்ணா வெடிச்சிருக்குமா?"

"அவ்வளவு சிம்பிளா தெரியலை. இது என்ன, டேப்ரிக்கார்டருக்குப் போறது..."

காரின் டேப்ரிக்கார்டரில் இருந்து ஒரு டேப்பை வெளியே எடுத்தான்.

"டேப் உன்னுதா வசந்த்?"

"அப்படித் தெரியலை... புதுசா இருக்கு."

"போட்டுப்பாரு... இதில எதோ செய்தி இருக்கு."

"வா, உள்ள போகலாம்."

"அது வரைக்கும் வெடிக்காதே?"

"வெடிக்காதுன்னுதான் நினைக்கிறேன். வெடிச்சா என்ன? இன்னொரு வேன் வாங்கிக்க... மகிந்திரா ஒண்ணு புதுசா கொண்டு வந்திருக்கான், முழங்கால் இடிக்காம. வாங்கிக்க."

"என்ன விளையாடறியா ஸ்ரீ? நாங்க என்ன நோட் அடிக்கிறமா?"

"சிட்டிலயே பெரிய லாயர்ங்க... முதல்ல இந்த வேனைச் சுத்தி யாரும் அண்டாம, ஒரு அட்டைல எலும்புக்கூடு எழுதிக் கொண்டுவா. கயிறு, மஞ்சடேப் எதாவது சுத்திவரக் கட்டு."

அலுவலகத்து டேப்ரிகார்டரில் அந்த டேப்பைப் போட்டுப் பார்த்தபோது தடுமாறும் ஆங்கிலத்தில் டேப் பேசியது.

'இன்ஜினை அணைத்து வெளியே வரும்போதே நீ சுக்குநூறாக வெடிப்பாய். எவ்விதத்திலும் எங்களை ஏமாற்றிவிட்டு உங்களால் தப்பிக்க முடியாது... குட்பை!"

"நல்லவேளை..."

"புரிஞ்சுபோச்சு" என்றான் ஸ்ரீ. "காருக்குள்ள போய் இன்ஜினை ஸ்டார்ட் பண்ணா ஆக்டிவேட் ஆகும்... இன்ஜினை அணைக்கிற போது பூம்! வசந்த், தப்பிச்சடா... நல்லவேளை. ஆக்டிவேட் ஆகலை. ஒரு கட்டர் கொண்டுவா."

"என்னது?!"

"கட்டர்னா தெரியாது? கட்டிங் ப்ளையர்."

"ஸ்ரீ வேண்டாம்... ரிஸ்க்டா... பாம் ஸ்க்வாடு வரட்டும். வண்டியை டோ பண்ணிண்டு மைதானத்துக்கு வெளியே கொண்டு போய்டுவாங்க."

"அதெல்லாம் தேவையில்லை. நீ கட்டர் கொண்டு வாயேன். கணேஷ், நீ சொல்லு... என் திறமைல நம்பிக்கை இருக்கா இல்லையா? வெட்டட்டுமா, வேண்டாமா?"

"ஜமாய் ராஜா."

"ஆமா, நீங்க சொல்வீங்க... ரெண்டு பேரும் பாச்சலர்."

"நீ மட்டும் என்னவாம்?"

"கல்யாணம் பண்ணிக்கப் போற பாச்சலர். டேய், வெடிச்சுரப் போறதுரா... எல்லோரும் கூண்டோட கைலாசம்..."

"ஆறிலயும் சாவு... நூறிலயும் சாவு."

"அந்தத் தத்துவம் மத்தவங்களுக்குடா ஸ்ரீ. ஏன் இந்தப் பிடிவாதம்?"

"பாரு... இதில இருக்கற த்ரில் உலகத்தில் பெண்கள்கிட்டகூடக் கிடையாது."

அவன் சுவரில் மாட்டியிருந்த டூல் பாக்ஸிலிருந்து ஒரு கட்டரை எடுத்துக்கொண்டு காரின் அருகே சென்றான்.

கட்டிங் ப்ளையரின் வாயை அகலமாக்கினான்.

அந்த வெடிமருந்துடன் இணைத்திருந்த கம்பியை "வெட்டுரா மவனே" என்று வெட்டினான். "கட்டக்!"

வசந்த் காதைப் பொத்திக்கொண்டான்.

"அவ்வளவ்தான்... ஆச்சு."

"நான் உயிரோட இருக்கனா?"

அவன் வெடிமருந்தை விரலில் எடுத்து முகர்ந்து பார்த்து "ஆர்டி எக்ஸ்! இந்த க்வாண்டிட்டி வெடிச்சிருந்தா தம்புசெட்டி சந்தே காலி."

"மகா தைரியம்டா."

"பைத்தியம் மாதிரி பேசாதே. அது எப்படி வெடிச்சிருக்கும்? ஒரு த்ரீவே ஸ்விச்சு வெச்சிருக்கான். சிம்பிள் மெக்கானிசம்... ஆன் பண்ணி ஆஃப் பண்ணாத்தான் வெடிக்கும். ஆன் பண்ணவே

இல்லையே... வேலை செய்யறதுக்கு."

ஸ்ரீயை வியப்பாகப் பார்த்தான். "உனக்குப் பயமே இல்லையாடா?"

"இதில உள்ள த்ரில் எதிலயும் கிடையாது."

அப்போது கணேஷின் செல்போன் ஒலித்தது.

"கணேஷ், உடனே வா... ராஜ ராமையா பேசறேன். பெரிய ஆபத்து... என்னைக் காப்பாத்து!"

"எங்கருந்து பேசறீங்க ராமையா?"

"காருக்குள்ளருந்து!"

# 24

ராஜ ராமையாவின் குரலில் அவசரமும் அச்சமும் இருந்தது. கணேஷ் "என்ன ப்ராப்ளம்?" என்றான்.

"கார் வெடிக்கப் போவுது... நாங்க காருக்குள்ள இருக்கோம்..."

"யார் யார் இருக்கீங்க?"

"நானும் டிரைவர் கண்ணுசாமியும்."

"அப்படியா... வெடிக்கப்போறதுன்னு எப்படிச் சொல்றீங்க?"

"இதோ, இதைக் கேளு..." என்றார்.

'இன்ஜினை அணைத்து வெளியே வரும்போதே நீ சுக்குநூறாக வெடிப்பாய். எந்தவிதத்திலும் எங்களை ஏமாற்றி விட்டு உன்னால் தப்பிக்க முடியாது. குட்பை.'

"ஓ... உங்களுக்கும் டேப் வந்துருச்சா ராஜா? காரை ஸ்டார்ட் பண்ணியாச்சா?"

"பண்ணிட்டான் இந்தப் பாழாப்போன டிரைவர். இப்ப கதவைத் திறக்க பயமா இருக்குது. கணேஷ், எப்படியாவது எதாவது செய்து கதவைத் திறந்து என்னை வெளியே விட்ருப்பா."

"இன்ஜின் ஓடிக்கிட்டிருக்கா..?"

"ஆமாம்... அணைக்க பயமா இருக்கு. எதையும் தொடவே பயமா இருக்கு. வெடிச்சுருமோன்னு..."

"நிச்சயம் வெடிக்கும். எங்களுக்கும் இந்த மாதிரி ஒரு பயமுறுத்தல் டேப்ல இருந்தது. நல்லவேளை, காரைக் கிளப்பறதுக்கு முந்தியே பார்த்துட்டம். ஒரு எக்ஸ்பர்ட்டை வெச்சு எடுத்துட்டம்."

"நாங்க கிளப்பிட்டமே... இப்ப நான் என்ன செய்யணும்?"

"யோசிச்சு சொல்றேன்."

"சீக்கிரம் சொல்லுப்பா."

"எங்களை யோசிக்க விடுங்க. அதுவரைக்கும் உங்களுக்கும் எதாவது குலதெய்வம் இருந்தா... அதைவிட 'யவனிகா காப்பாத்து... யவனிகா காப்பாத்து'ன்னு ஜெபம் பண்ணிட்டு இருங்க..."

செல்லை அணைத்த கணேஷ், ஸ்ரீயைப் பார்த்தான். "ஸ்ரீ... நம்ம மாதிரியே கேஸு. ஆனா, ஆசாமி காரை ஸ்டார் பண்ணிருக்காரு... இன்ஜினை அணைச்சா வெடிக்கும்."

"பட்சி யாரு?" என்றான் ஸ்ரீ.

"அது பெரிய கதை. இந்தாளுதான் சிலையை வெளிநாட்டில வித்தவரு. அதும் மகாப் பெரிய டபிள் க்ராஸ். ஏமாந்தவங்க பழி வாங்கறங்க."

வசந்த், "பாஸ்... நாம் ஏன் இதில தலையிடணும்? ராஜ ராமையா செய்த மகத்தான குற்றத்துக்கு மகத்தான தண்டனை கிடைச்சாச்சு. வெடிச்சு சாகட்டும். நாம ஏன் அவரைக் காப்பாத்தணும்?"

ஸ்ரீ, "அப்ப நான் கிளம்பட்டுமா?"

"இரு இரு" என்றான் கணேஷ்.

"என்ன பாஸ், சாஃப்டாயிட்டீங்க... இந்தாளு நம்மை என்ன திட்டு திட்டினான். என்ன அதட்டு அதட்டினான். அற்பமா பூச்சி போல மதித்தான்."

"சிலையை வித்தது பெரிய குற்றம்தான்! ச்... ச்... இருந்தாலும் மனிதாபிமானம்னு ஒண்ணு..."

"மனிதாபிமானம் மனிதர்களுக்குத்தான் பாஸ். இவன் ஒரு புழு. தேசத் துரோகி!"

கணேஷ் தலையை ஆட்டினான். "அதுக்காக இவன் ஒரு நிமிஷத்தில் செத்துப் போறதில எனக்கு இஷ்டமில்லை. செய்த காரியத்துக்கு இவனை அரஸ்ட் பண்ணி ஜெயிலுக்கு அனுப்பிச்சு விசாரிச்சு, மெள்ள மெள்ள இத்தனை செல்வச் சிறப்பில் வாழ்ந்தவனைக் கொசுவும் மூட்டைப்பூச்சியும் கடிச்சு, அடிமட்ட சிறைக் கைதிங்ககூட மூத்திரமும் பாத்ரூமுமா சில நாளாவது களி சாப்பிட்டு, சில நாளாவது ஜெயில்ல உதை வாங்கணும்."

"அதெல்லாம் நடக்கும்கறீங்களா? கைதான மறுகணமே ஒரு லாயர் பட்டாளம் வரும். பெயில் வாங்கிண்டு வெளியே வந்து டி.வி. காமிராவைப் பாத்து சிரிப்பான். டாட்டா காட்டுவான். சாவட்டும் பாஸ்..."

"ஸ்ரீ, நீ சொல்லு... இதை இப்படியே விட்டுரலாமா?"

அவன் வாசனைப் புகையிலையை வாயில் அடக்கிக்கொண்டு மணக்க மணக்க, "ஆளு எப்படிப்பட்டவனோ... எனக்கு வெடிகுண்டை ஷெயலட்றதாக்கிறதில ஷவால் இருக்கு. முதல்ல அவன்கூட பேஷறேன்."

"துப்பு முதல்ல... பேசறதே புரியலை."

கணேஷ், ராமையாவை செல்போனில் கூப்பிட்டான்.

"கணேஷ், எத்தனை நாழி போன் பண்ண! செத்து சுண்ணாம் பாயிட்டிருக்கேன்."

“இந்த அதட்டல்தானே வேண்டாம்ங்கறது.”

“நான் பின்ஸீட்டில் உட்கார்ந்திருக்கேன். வெளியே வரலாமா சொல்லு. ப்ளாடர் வெடிச்சுரும் போல இருக்குடா.”

“ ‘டா’ வா.. ?”

வசந்த் “அதான் சொன்னேனே... இந்தாளுக்கு உதவி பண்ணவே வேண்டாம்னு. ராங்கி புடிச்ச ஆளு.”

ஸ்ரீ போனை வாங்கிக்கொண்டான். “என் பேர் ஸ்ரீதரமூர்த்தி. நான் இதில உங்களுக்கு உதவி பண்ண முடியும். நான் கேக்கற கேள்விங்களுக்குப் பதில் சொல்லணும்.”

“சீக்கிரம் ஏதாவது செய்யுங்கடா...”

“மறுபடியும் ‘டா’ங்கறான்! பாருங்க எங்களையெல்லாம் ‘டா’ போட்டு பேசக் கூடாது. மயிரே போச்சுன்னு பேசாம வெடிக்கட்டும்னு விட்டுருவோம்.”

“ப்ளீஸ்... எதாவது செய்யுங்கடா.. !”

“மறுபடி ‘டா!’”

“என்ன சொல்லணும்?”

“ ‘எதாவது செய்யுங்க முதலாளி’ன்னு...”

“எதாவது செய்யுங்க முதலாளி.”

“தட்ஸ் பெட்டர். நீ பெரிய கோடீஸ்வரனாமே. உன்னைக் காப்பாத்தினா கோடி ரூபா தருவியா?”

“முதல்ல காப்பாத்து... தர்றேன்”

“இன்ஜின் ஓடிக்கிட்டிருக்கா?”

“ஆமாம்.”

“அணைக்காதே. கதவு எதையும் திறக்காதே. கதவிலயும் டிரிகர் வெச்சிருப்பாங்க. என்ன காரு?”

“பி.எம்.டபிள்யூ.”

“வாவ்! பவர் விண்டோஸா.. ?”

“ஆமாம்.”

“ஜன்னலைத் திறக்கறது ரிஸ்க்கு. எங்கயாவது ஸ்பார்க் அடிச்சு வெடிக்கும். ஒண்ணு செய்... காரை பக்கத்தில் எதாவது மைதானத்துக்கு ஓட்டிப் போகச் சொல்லு.”

“சீக்கிரம் வாப்பா. ப்ளாடர் வெடிச்சுரும்போல இருக்கு.”

“இப்ப உனக்கு உயிர் முக்கியமா... ஒண்ணுக்கு முக்கியமா? ஒண்ணுக்கு வரும்... போகும். அடக்கிக்க... இல்லை, காருக்குள்ளேயே போய்க்க, ஸீட் கவரை மாத்திக்கலாம்.”

“எதாவது செய்ப்பா... காரை எங்க ஓட்டிண்டு வரது.. ?”

"பக்கத்தில் எதாவது ஸ்கூல், கார்ப்பரேஷன் மைதானம் இருந்தா அங்கே கொண்டு போ... நான் வரேன்."

"கார்ப்பரேஷன் ஸ்கூல் மைதானம் இருக்கு... கிரிமேஷன் கிரவுண்டு பக்கத்திலே."

"பொருத்தமான இடம்! அங்க போங்க. அங்க வெச்சு டிஃப்யூஸ் பண்ணலாம். எதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆச்சுன்னா, அங்கேயே மிச்சமுள்ள பிச்சல் பாகங்களைப் புதைச்சுரலாம்."

"அப்படியெல்லாம் சொல்லாதப்பா."

"ஏன் சிலையை வித்தியாம்?"

"விக்கலியே... டூப்ளிகேட்டுன்னா கொடுத்தேன். அவங்களை கேட்டுப் பாரு."

"முயற்சி பண்றேன். உன் விதிப்படி நடக்கட்டும். இன்ஜினை மட்டும் அணைக்கவே கூடாது."

கணேஷும் வசந்த்தும் ஸ்ரீயின் பழைய ஃபியட் மில்லிசெண்டோ காரில் அந்த மைதானத்துக்குச் சென்றார்கள்.

"'என்னதான் நடக்கும் நடக்கட்டுமே'க்கு அப்பால பாட்டே இல்லையா ஸ்ரீ உன்கிட்ட?"

"ஓல்டு இஸ் கோல்டு. பாகவதர் கேக்கறியா... 'உனைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ'..."

மைதானத்தில் ராஜ ராமையாவின் கப்பல் கார் நட்ட நடுவே நின்றுகொண்டிருந்தது. இவர்கள் அதிலிருந்து நானூறடி தள்ளி நிறுத்தினார்கள். ஸ்ரீ இறங்கிக்கொண்டான்.

"ஸ்ரீ... ஜாக்கிரதையா இரு. காப்பாத்தணும்னு கட்டாயமில்லை. இவன்லாம் உலகத்தின் மேல் படிஞ்ச அழுக்கு."

"கவலைப்படாதே." ஸ்ரீ அந்த காரை அணுகி உள்ளே எட்டிப் பார்த்தான். ராஜ ராமையா முழங்கால் முட்டியை இறுக்கிக்கொண்டு பின்ஸீட்டில் உட்கார்ந்திருக்க, காரின் இன்ஜின் ஓடிக்கொண்டிருந்தது. அகலமான விஸ்தாரமான கார். ஸ்ரீ ஸ்டியரிங் அருகில் ஆரஞ்சு வண்ண ஒயர் இருப்பதைப் பார்த்தான். கண்ணாடிக் கதவை லேசாகத் திறக்கச் சொன்னான்.

"வாண்டாம்யா... வெடிச்சு வெக்கப் போவுது."

"பவர் விண்டோ லீவரை அழுத்தாதே... கண்ணாடியைக் கையால அழுத்திக்க. இந்தப் பக்கம் நான் அழுத்தறேன். ஒண்ணும் ஆவாது. உன் பேர் என்ன?"

"கண்ணுசாமி ஐயா... சம்சாரம், அம்மா, மூணு குழந்தைங்கய்யா... என்னை நம்பி வாழுறாங்க. அத்தனையும் பொட்டைப் புள்ளைங்கையா. ஒண்ணு எட்டாவது. ஒண்ணு மூணாவது."

"உன் சுயசரித்திரத்தை நான் கேட்டேனா? அதுக்கும் கண்ணாடிக்

கதவுக்கும் என்ன சம்பந்தம்? அழுத்துய்யா... சரியா அழுத்தி கீழ்வாகா அமுக்கு."

ஸ்ரீ அழுத்தித் தழைத்ததிலேயே கண்ணாடி கொஞ்சம் இடைவெளி விட்டு இறங்கியது. ராஜ ராமையா வியர்வை வெள்ளத்தில் மூழ்கியிருந்தார். "பாரு... இன்ஜினை ஆஃப் பண்ணா கார் வெடிச்சுரும். அதனால் டிரைவர் ஸீட்டுக்கு வா. கண்ணுசாமி, எவ்வளவு பெட்ரோல் இருக்குது..?"

"எம்ப்டி காட்டுதுங்க. அஞ்சு லிட்டர்தான் இருக்கும்."

"பத்து நிமிஷம் 'ஐடில்'ல ஓடுமில்லை?"

"ஓடும்ங்க."

"பத்து நிமிஷத்துல ஒரு யாகம் பண்ணலாம். வண்டியை 'பார்க்'ல போடுங்க. கொஞ்சம் ஆக்ஸிலேட்டர் கொடுத்து வைங்க. ஐடில்ல அணைச்சுராதீங்க. அதுக்குன்னு ரொம்ப கொடுக்காதீங்க. ஸீஸ் ஆயிடும்."

"ஆவாதுங்க. வேணும்னா காலை வெச்சுக்கறேன்."

"லேசா வெச்சுக்கங்க."

"இன்ஜினை ஆஃப் பண்ணா என்ன ஆவுங்க?"

"வண்டி வெடிக்கும்ங்க!"

"ஐயோ..!" `

"ஐயோதான்! நீங்க எப்படியாவது உங்க எஜமானரை ஜன்னல் கண்ணாடியைத் திறந்து வெளியே குதிக்க வெச்சுருங்க. அப்புறம் நீங்களும் குதிச்சுருங்க. ராமையா, நீ டிரைவர் மடியில உட்கார்ந்துக்கடா. கண்ணுசாமி. அவனை வெளியே தள்ளு."

ô£ü ô£¬ ñö£ – இந்தியாவிலேயே முதல் மூன்று பணக்காரர்களில் ஒருவர் உடலெங்கும் சிறுநீரால் நனைந்து ஜன்னலைவிட்டு வெளியே உருண்டு விழுந்தார்.

"கண்ணுசாமி, நீங்களும் வந்துருங்க..."

வெளியே வந்தவர் உடனே செல்போனை எடுத்துப் பேசினார்.

"அப்புறம் பேசலாம். முதல்ல பத்திரமான தூரத்துக்கு ஓடிவாங்க எல்லாரும்."

ஓடும்போது கணேஷ், "'தாங்ஸ்'னு ஒரு வார்த்தை உங்க அகராதியில கிடையாதா!"

"தாங்ஸ். உன் ஃபீஸ் எவ்வளவுன்னு ஆபீஸ்ல சொல்லு. ட்ராஃப்ட் அனுப்பச் சொல்றேன். இந்த டெக்னீஷியனுக்கு உள்ளதையும் சேர்த்து பில் போட்டுரு."

கணேஷ், ராமையாவையே உற்றுப் பார்த்தான். "உங்களைக் காப்பாத்தினது தப்போன்னு தோணுது."

"ஐயோ... என் வாலெட்டை கார்லயே வெச்சுட்டு வந்துட்டேனே."

"இப்ப வாலெட் முக்கியமில்லை. தொலையட்டும்!"

"அதில என் அத்தனை கார்டும், ஒரு முக்கியமான டிராப்டும் இருக்கு."

ஸ்ரீ "வெயிட் வெயிட்!" என்று எச்சரிப்பதற்குள் ராமையா காரை நெருங்கித் திறந்த ஜன்னல் வழியாகத் தன் பர்ஸை எடுக்க முற்பட்டபோது,

அந்த கார் வெடித்து நூறடி தள்ளியிருந்த அவர்கள் நால்வரையும் தூக்கி எறிந்தது. ராஜ ராமையா உருத் தெரியாமல் நெருப்புப் பிழம்போடு கலந்தார்.

## 25

அந்த வெடி வெடித்ததில் வட்டாரமே நடுங்கியது. "பாஸ், தப்பிச்சோம்" என்றான் வசந்த்.

"இல்லைடா... இன்னும் நமக்கு அபாயம் விலகலை. இவங்க அத்தனை பேரும் பிடிபடற வரைக்கும் நமக்கு போலீஸ் பாதுகாப்பு தேவையா இருக்கும்."

போலீஸ் படையினர் ஸ்தலத்துக்கு விரைந்தபோது ராஜ ராமையா உருத் தெரியாமல் எது காரின் சிதறல், எது ராஜ ராமயைாவின் கை என்று தேட வேண்டியிருந்தது.

"ஒரு சிலையை வித்ததுக்குப் பெரிய தண்டனைதான்" என்றான் கணேஷ்.

"இதில நம்ம மனசாட்சி க்ளியரா இருக்கு. காப்பாத்தினோமில்லை."

"இவர் தப்பிச்சிருக்கலாம். தண்டனையைத் தானே வரவழைச்சுக்கிட்டார். பேராசையால வந்தது. பேசாம விலகி வந்திருக்கலாம் இல்லையா... எதுக்கு காருக்குத் திரும்பிப் போகணும்?"

"முட்டாள்தனம் செய்தார்."

ராஜேந்திரன் கொஞ்சம் லேட்டாகத்தான் வந்தார்.

"என்ன கணேஷ்... நீங்க போற இடத்தில எல்லாம் வெடிக்குது? இறந்தது ராஜ ராமையாதான்னு உத்தரவாதமா தெரியுமா? பிரஸ் ஸ்டேட்மெண்ட் கொடுக்கணும்."

"அவர்தான். ரோலெக்ஸ் வாட்ச் இன்னும் ஓடிக் கிட்டிருக்கு பாருங்க."

"இது யாரு?"

"கண்ணுசாமி... டிரைவர். தெய்வாதீனமா தப்பிச்சார். அடையாளம் சொல்வார். சாட்சி சொல்வார். கண்ணுசாமி... என்ன நடந்ததுன்னு சார்கிட்ட விலாவாரியா ஆபீஸ்ல சொல்லணும்."

"சரிங்க ஐயா. எனக்கு ஒரு டிரைவர் வேலை போட்டுக் கொடுங்க."

"சரிதான்... முதல்ல உயிரோடு இருக்கியே, அதே பெரிசு" என்றான் வசந்த்.

"சிலை என்ன ஆச்சு ராஜேந்திரன்?"

"ஆழ்வார் கோயில்லதான் இன்னும் இருக்கா யவனிகா..."

"நீங்க போகலையா?"

"போனேன். ஆனா, அங்க கதை மாறிடிச்சு."

"என்ன சொல்றீங்க?"

"போய்ப் பாருங்க. இப்போதைக்கு அந்தச் சிலையை ஆழ்வார்கிட்டருந்து மீட்க முடியாது."

"இந்தச் சிலையைக் கேக்கறாங்களா... நியாயம்தானே."

"விஷயம் அத்தனை சிம்பிள் இல்லை. போலீஸ் பாதுகாவல் போட்டு சிலை அங்கேயே இருக்கட்டும்னு விட்டு வெச்சிருக்கோம். ஒரு வெண்கலச் சிலைக்கு இத்தனை சிக்கல். எனக்குப் புரியவே இல்லை கணேஷ்."

"சென்ட்ரல் கவர்ன்மெண்ட்காரங்களுக்கு என்ன பதில் சொல்வீங்க?"

"அவங்க நேரடியா அந்தச் சிலைய க்ளெய்ம் பண்ணிட்டு எடுத்துட்டுப் போகட்டும். நாங்க இதில தலையிடப் போறதில்லைன்னு செக்ரெட்டரிகிட்டருந்து ஆர்டர் வந்துருச்சு."

"புரியலை ராஜேந்திரன். இதோ... இந்தச் சிலையை மறுபடி எடுத்துக்கிட்டுப் போய்க் கொடுக்கவேண்டியதுதானே... கதை முடிஞ்சிருச்சுன்னு நினைச்சேன்."

"இல்லை... திசை திரும்பிடுச்சு" என்று அவர் விலகினார். அதில் ஏளனமான அல்லது விபரீதமான அர்த்தம் ஏதாவது இருந்தால் அதைப் புரிந்துகொள்ள இருவருக்கும் பொறுமை இல்லை.

அலுவலகம் திரும்பினார்கள். அவர்கள் கேட்டிருந்த போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. அவர்கள் அலுவலகத்துக்குள்ளே சென்றபோது,

"கௌரி, எப்படி இருக்கீங்க. எல்லா ஆக்ஷனும் முடிஞ்ச பிற்பாடு வர்றீங்க?"

"ஒரே போலீஸா இருக்கு... பையெல்லாம் சோதிச்சாங்க கணேஷ். விடைபெறத்தான் வந்தேன்."

"எங்கே போறீங்க?" கணேஷ் தனக்கு வந்த இ–மெயில் கடிதங்களை கம்ப்யூட்டரில் நோட்டம் விட்டான்.

"பெங்களூர்ல போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்ல அட்மிஷன் கிடைச்சிருக்கு" என்றாள் கௌரி.

"வெரிகுட்! உங்க கேரியருக்கு நிச்சயம் உதவும்."

"இப்பக்கூட சொல்லுங்க கணேஷ். நான் டிக்கெட்டை உடனே கான்சல் பண்ணிட்டு இங்கேயே உங்களுக்கு அசிஸ்டெண்ட்டா சேர்ந்துக்கறேன்."

"இன்னொரு அசிஸ்டெண்ட் தேவையில்லீங்க" என்றான் வசந்த்.

"வசந்த், நான் உங்ககூட பேசலை."

"நான் உங்ககூடத்தான் பேசறேன். பாஸ், உங்களுக்கு இன்னொரு அசிஸ்டெண்ட் தேவைங்கறீங்களா..?"

"ஆமாடா..." என்றான் கணேஷ் கடிதங்களை மேய்ந்துகொண்டே..

"என்னது!"

"உன்னால எல்லா கேஸையும் சமாளிக்க முடியலை. உன்னை அசிஸ்டெண்ட்னு சொல்றதைவிட பார்ட்னர்னுதான் சொல்லணும்."

"ஐஸ் வெக்காதீங்க."

"ஒரு புது அசிஸ்டெண்ட் சேத்துக்கறது நல்லதுதான். கௌரி, உங்க பயோடேட்டாவைக் கொடுத்துட்டுப் போங்க. பார்த்துட்டு இன்னும் ரெண்டு நாள்ல சொல்லிடறேன். அதுவரை பெங்களூர் போக வேண்டாம்."

கௌரி "தாங்க் யூ கணேஷ்! இது என் பாக்கியம்..." என்றாள் சற்று தயக்கத்துடன்

கௌரி அப்படியே உற்சாகத்தில் கணேஷைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுப்பாள் என்று வசந்த் எண்ணினான். அவள் அப்படியெல்லாம் செய்யாமல், "பயோடேட்டாவைக் கொண்டு வரேன்" என்று அரைமனதாகச் சொன்னாள்.

அவள் சென்றதும், "என்ன பாஸ்... நிஜமாவே உங்களுக்கு ஆள் தேவையா..? என்கிட்ட சொல்லலையே... அவ பொம்பளை பாஸ்... ரொம்ப ப்ராப்ளம் வரும். இன்னொரு பாத்ரூம் கட்டணும்" என்றான்.

"இவ்வளவு நாள் இத்தனை கிளையண்டுகளோட பழகிருக்கே... இந்தப் பொண்ணைப் புரிஞ்சுக்கலையே நீ..?"

"ஏன் பாஸ்?"

"இவ சேருவாங்கறியா?"

"அப்படித்தான் தெரியுது."

"பைத்தியக்காரா, இவ அமெரிக்கா போகப் போறாடா... அங்கேருந்து ஒரு கல்யாண சான்ஸ் வந்துக்கிட்டிருக்கு இவளுக்கு."

"எப்படிச் சொல்றீங்க?"

"நீ சில நாளா மெயில் பார்க்கலையா?"

"இல்லை பாஸ். இங்கதான் அடியும் தடியும் வெடியுமா இருந்ததே..."

கணேஷ் மேஜை மேல் வைத்திருந்த மெயில் கடிதங்களிலிருந்து ஒரு கடிதத்தைத் தேர்ந்தெடுத்து வசந்திடம் காட்டினான்.

'அன்புள்ள கணேஷ், நெட் மூலம் கௌரி என்கிற பெண்ணின் விவரங்கள் எனக்குக் கிடைத்தது. இந்தப் பெண்ணின் போட்டோவை

ஜேபெக் ஃபைலாகப் பார்த்தேன். அழகு என்று சொல்ல முடியாவிட்டாலும் புத்திசாலித்தனமான தோற்றத்தில் ஓர் அழகு இருக்கிறது. எனக்கேற்ற மனைவி இவள்தான் என்று தீர்மானிக்கும் முன் இவளை உங்களுக்குத் தெரியுமா... தெரிந்திருந்தால் இவளைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன என்று சொல்வீர்களா? உங்களுக்கு ஒரு கேஸில் உதவி செய்வதாக மெயிலில் எழுதியிருந்தாள். உண்மையா?"

"பாஸ், கடிதம் தப்பா இருக்கு."

"ஏண்டா?"

"கௌரியை அழகா இருக்கானு எழுதியிருக்கு."

"பியூட்டிங்கிறது ஸ்கின் டீப் இல்லைடா."

"வேற என்ன?"

"அழகு உள்ளுக்குள்ள இருக்கு!"

"உள்ளுக்குள்ளன்னா எங்க? பான்க்ரியாஸ்கிட்டயா? போங்க பாஸ்... நான் என்னவோ கௌரியெல்லாம் கல்யாணம் பண்ற கேஸாவே கருதலை."

"நீ பாரேன்... நிச்சயம் கல்யாணம் நடக்கும்."

"ஏன்?"

"இ–மெயில் எழுதின சேஷாத்ரியை வேற யாரும் கல்யாணம் கட்டிக்க மாட்டாங்க."

"சேஷாத்ரி? எனக்கு அடுத்த பேட்ச்?"

"ஆமாடா."

"அப்ப சரியான பொருத்தம்தான். வாழ்க நலமுடன். உடனே பதில் எழுதிருங்க... 'உனக்கேத்த மனைவி கௌரிதான்'னு."

"ஏதோ என்னைத் தொந்தரவு பண்ணாம இருந்தா சரி."

"பாஸ், உங்களை சீரியஸாகத்தான் கேட்கிறேன். நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களா, இல்லையா?"

"பண்ணிக்கத்தான் போறேன், என் ஆதர்சப் பெண் கிடைச்சவுடனே."

"'ஆதர்சப் பெண்ணைத் தேடற ஆணைக் கடவுள்தான் காப்பாத்தணும். அப்படி அவ கிடைச்சுட்டா அந்தப் பெண்ணையும் கடவுள்தான் காப்பாத்தணும்'னு ஒரு பொன்மொழி உண்டு."

"எனக்குக் கல்யாணம் பண்ணிக்க வேண்டிய காரணங்கள் மெள்ள மெள்ள குறைஞ்சுக்கிட்டு வருது வசந்த்... இன்னும் ஒரு வருஷத்தில் பண்ணிக்கலைன்னா இப்படியே இருந்துடலாம்னு யோசனை."

மத்தியானம் இருவரும் தள்ளிப்போட்ட கேஸ்களில் கவனமாக இருந்தார்கள். தேஜோமயியை எச்சரிப்பதற்காக ஷூட்டிங் நடக்கும் இடத்துக்கு வசந்த்தை கணேஷ் அனுப்பி வைத்தான். அப்படியே

ஆழ்வார் சந்நிதியிலிருந்து எடுத்த சிலையைத் திருப்பித் தந்துவிடுமாறு சொன்னான்.

புறப்பட்ட கையோடு வசந்த்திடம் இருந்து போன் வந்தது. "பாஸ், நீங்க ஒருமுறை ஆழ்வார் பக்கம் வந்துட்டுப் போங்க."

"என்னடா?"

"மயிலாப்பூர் குளம் தாண்டி லஸ் வரைக்கும் க்யூ நிக்குது. டிராஃபிக் ஜாம். என்னால கோயிலை நெருங்க முடியலை."

"புரியும்படியா சொல்லு."

"யவனிகாவைத் தரிசிக்க அத்தனை பெரிய க்யூ."

"அவ்வளவு கலை ஆர்வலர்களா?"

"ஆர்வமும் இல்லை. மண்ணாங்கட்டியும் இல்லை. யவனிகாவுக்குத் தெய்வப்பதவி வந்துடுத்து."

"ஏய், புருடா விடாதே."

"இல்லை பாஸ்... யவனிகா 'அருள்மிகு யவனிகாயம்மையோ... யவனிகா பரமேசுவரி சந்நிதானம்'னோ மாறியாச்சு. அமர்க்களம்... நீங்க வாங்களேன்."

கணேஷ் அங்கே சென்றபோது கச்சேரி ரோட்டில் காரை நிறுத்தி நடக்க வேண்டியிருந்தது. சந்து வழியாகச் சிறிய தெப்பக்குளத்தைத் தாண்டி முன்பெல்லாம் வெளிச்சம் இல்லாத அந்த சந்நிதியை அடைந்தபோது வண்ண விளக்குகள் பகலிலேயே ஜகஜ்ஜோதியாக எரிந்தன. அங்கிருந்து ஆரம்பித்து சவுக்குக் கம்பங்களால் சீராக்கப்பட்டு மக்கள் வரிசை ஒரு கிலோமீட்டருக்குமேல் நீண்டிருந்தது. பார்க்கப் பார்க்க நீளம் அதிகரித்துக்கொண்டே சென்றது. கணேஷ் வசந்த்தைத் தேடினான்.

சந்நிதியை விட்டு வெளியே வருகிறவர்கள் மஞ்சள், குங்குமம், துளசிமாலையுடன் வந்தார்கள். "மொத்தம் நாப்பத்தெட்டு வாரம் வரணுமாம்."

அங்கிருந்த வயதானவரிடம் தனியாக விசாரித்தான்.

"ஐயா, இங்க என்ன ஓடிண்டிருக்கு?"

"அர்ச்சகர் கனவிலயும் மற்ற பல பேர் கனவிலயும் அன்னை யவனிகா பரமேஸ்வரி தோணியிருக்கா."

"யவனிகா பரமேசுவரியா... யார் அது?"

"அதாம்பா ஆழ்வாருடைய தர்மபத்தினி. என்ன ஆச்சு... ஒரு நாள் திடீர்னு விக்கிரகத்தைக் காணலை. அப்படியே அந்த இடம் மூளியா ஆயிடுத்து. ராத்திரி அர்ச்சகர் கனவில வந்து 'நான் தெய்வஸ்தானம் பெற மேல்கோட்டைக்குப் போயிருக்கேன். கவலைப்படாதே. மறுபடி என் பீடத்துக்கு வந்திருவேன்'னு சொல்லி இருக்கா. சொன்னபடியே வந்துட்டா. உக்கிரமாயிட்டா. வேண்டிண்ட

காரியங்கள் பலிக்கிறதாம். வியாதிகள் குணமாய்டறதாம். குறிப்பா சர்க்கரை வியாதி, ஆஸ்துமா, எய்ட்ஸ் எல்லாம் பளிச்சுனு ஒரு வாய் துளசி தீர்த்தத்தில் குணமாறதாம்."

அப்போதுதான் வசந்த் வந்து சேர்ந்தான். "பாஸ், நம்ப மாட்டீங்க. ஒரு பக்கம் தேங்காயை உடைச்சுத் தள்ளறாங்க. ஒரு பக்கம் உருள்றாங்க. ஒரு பக்கம் மொட்டை ஓடிண்டிருக்கு. ஒரு பக்கம் ரோஸ் கலர்ல புடவைகள்."

"சிலை என்னடா ஆச்சு?"

"அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு அலங்காரங் களுடன் யவனிகா பூவும் பொட்டும் புடவையுமா பிரமாதமா தரிசனம் தந்துகொண்டிருக்கா."

"இதெல்லாம் எப்ப ஆச்சு?"

"ரெண்டு நாள்ல எட்டு பேர் கனாவில தோன்றிருக்கறதா பேச்சு."

கணேஷ், "உண்மையிலேயே இந்தத் திருப்பத்தை நான் எதிர்பார்க்கலைடா. வாய் வார்த்தை – 'வேர்ட் ஆஃப் மவுத்'க்கு இத்தனை சக்தியா?"

ராஜேந்திரன் அறையில் தேநீர் அருந்திக்கொண்டிருக்கையில்கூட கணேஷுக்கு இந்த மாற்றத்தை முழுவதும் கிரகிக்க முடியவில்லை.

"சிலையைத் திருப்பிக் கொடுத்துட்டீங்களா கணேஷ்?"

"அதை வாங்கி ஆழ்வார் பக்கத்துல வெச்சாச்சு. இப்ப யவனிகாவுக்கு தனியா சந்நிதி பிரதிஷ்டை. அது வேற டிபார்ட்மெண்ட் ராஜேந்திரன். இந்த ஜனங்களை என்ன பண்ணுவீங்க?"

"அவங்க எதையாவது நம்ப விரும்பறாங்க. நான் போஸ்டிங் ஆயிருந்தபோது மும்பைல வியாழக்கிழமைகள்ல வழிபடற பிளாட்பாரம் பிள்ளையார் பாத்திருக்கேன். சாந்தாக்ரூஸ் வரைக்கும் க்யூ நிற்கும் வியாழக்கிழமைகள்ல. அதுபோல திடீர்னு ஏதாவது ஒரு அம்மனோ, பிள்ளையாரோ பிரபலமடையறாங்க. இனி இது நம்ம கையை விட்டுப் போயிருச்சு கணேஷ்."

# 26

அதன்பின் கணேஷும் வசந்த்தும் சிலை பற்றிய கவலைகளை ஒத்திப்போட்டிருந்தார்கள். அந்தக் கோரச் சம்பவத்தை நினைவுபடுத்தும் வகையில், அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் பாதுகாப்புக்கு போலீஸ் ஒருவர் ரைஃபிளுடன் வருவார்.

அலுவலக வாசலில் தட்டி போட்டுப் பெரும்பாலும் உறங்கிக்கொண்டிருப்பார். சமையல்கூட ஓடிக்கொண்டிருந்தது. அவர்கள் காரில் செல்லும்போதெல்லாம் சட்டென்று முன்ஸீட்டில் வந்து உட்கார்ந்துவிடுவார். மெள்ளமெள்ள நாள் முழுதும் இல்லாமல், காலையிலிருந்து மாலைவரை வந்தார். பின், சில நாள் மட்டும் வந்தார். அப்புறம் வரவேயில்லை!

ஒருமுறை மயிலாப்பூர் சிறிய தெப்பக்குளத்தருகில் செல்லும்போது வசந்த், யவனிகையம்மையின் திருக்கோயிலில் இன்னமும் கூட்டம் அம்முவதாகவும் திருப்பதி போல தோமாலை சேவையெல்லாம் நடக்கிறது என்றும் பெரிசாக மண்டபம் கட்டிவிட்டார்கள்... கோபுரம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சொன்னான்.

"சிலையைப் பார்க்க முடிஞ்சுதா?"

"ம்ஹூம்... ஆபரணங்களும் மாலைகளும் போட்டு மறைச்சு, லேசா முகம் மட்டும் தெரியுது. அதுலயும் பெரிசா ஒரு திலகம். ஒரு நாளைக்கு முத்துமாலை, ஒரு நாள் துளசிமாலை, ஒரு நாள் கருவேப்பிலை மாலை. ஒரு நாள் வெண்ணெயாலேயே மூடிடறாங்க..."

"அதை மீட்கவே முடியாதுனு சொல்லு..."

"சான்ஸே இல்லை பாஸ்... எனக்கென்னவோ யவனிகை அம்மையின் சக்தி மேல நம்பிக்கை வந்துடுச்சு. எல்லாமே ஏதோ தெய்வச் செயல்னு தோணுது."

"நான்சென்ஸ்!"

"வந்து பாருங்க... ஜனங்களோட நம்பிக்கை வெள்ளத்தை..."

அவர்களுக்கு இரண்டு செய்திகள் கிடைத்தன. ஒன்று – வெடி வைத்து கணேஷ்–வசந்த்தையும் ராஜ ராமையா வையும் கலக்கி, அவர் மரணத்துக்குக் காரணமாக இருந்த

கும்பலை மும்பையிலும் பரோடாவிலும் கைது செய்துவிட்டார்கள் என்ற செய்தி. அதனால்தான் பாதுகாவலை வாபஸ் வாங்கி விட்டார்களாம்!

மத்திய சர்க்கார் கலாச்சாரப் பிரிவிலிருந்து ஒரு டெபுடி செக்ரெட்டரி சென்னைக்கு வந்திருப்பதாகவும் அவர்களைச் சந்திக்க விரும்புவதாகவும் மற்ற செய்தி.

அவர் பெயர் துர்கா பிரஸாத். நடுத்தர வயதினராக, கொஞ்சம் தொப்பை போட்ட உடலுக்கு சஃபாரி சூட் பொருத்தமாக இருந்தது. இந்தியில் பேசினார். அவ்வப்போது ஆங்கிலம் பேசும்போது உத்தரப் பிரதேசத்தவர் என்பது தெரிந்தது ('ஸ்டார்ட்' என்பதற்கு 'இஸ்டார்ட்'!).

"அந்தச் சிலை நாட்டின் பரம்பரைச் சொத்து. அதை மீட்டு, டெல்லி அருங்காட்சியகத்தில் வைத்து எல்லோரும் பார்க்கும்படி செய்ய வேண்டும், அதற்கு என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்... மாநில அரசு கைகழுவிவிட்டது..." என்றார்.

"அதற்குத் தாயார் அம்மன் மற்ற சில பேர் கனவில் தோன்றி, 'என்னை டெல்லிக்குக் கொண்டு போய்விடுங்கள்' என்று சொல்ல வேண்டும்..."

துர்கா பிரஸாத் அதை சீரியஸாக எடுத்துக்கொண்டு "அதை எப்படி ஏற்பாடு செய்வது?" என்றார்.

"யாருக்காவது பணம் கொடுத்துப் பொய் சொல்ல வையுங்கள்..." என்றான் வசந்த். "விஷயம் எல்லை மீறிவிட்டது மிஸ்டர் பிரஸாத்... ஒரு முறை அந்தக் கோயிலுக்குச் சென்று பாருங்கள்..."

"அது எங்கே இருக்கிறது?"

"மயிலாப்பூரில்."

"நீங்களும் வருகிறீர்களா? என் மனைவி ஒரு பட்டுப்புடவை வாங்கிவரச் சொன்னாள். அதையும் முடித்துவிடலாம்..."

அவர்கள் சென்றபோதும் நல்ல கூட்டமாக இருந்தது. சர்க்கார் வண்டியைப் பார்த்துவிட்டு, அதன் அர்ச்சகர் திருமலாச்சாரி மூவரையும் சந்திக்க வந்தார்.

"நம்மை மீறின தெய்வசக்தி என்னமா விளையாடறது, பாருங்கோ..." என்று பெருமையுடன் க்யூவைக் காட்டினார்.

"சுவாமி, இந்தச் சிலை..."

"சிலைனு சொல்லாதீங்கோ... விக்கிரகம்!"

"சரி, இந்த விக்கிரகம் சோழர் காலத்துல செய்த தேவதைகள் சிலைகளில் ஒண்ணு ஸ்வாமி. யவனிகா ப்ரான்ஸஸ். ரம்பா, ஊர்வசி, மேனகா, திலோத்தமைனு நாலு சிலையும் உலகம் பூரா கலாபிமானிகளுக்குத் தெரிஞ்சது. 'உடையார் வீர ராஜேந்திரன்'ங்கிற சோழ ராஜா செய்விச்சது..."

"அதேதான்... தெரியும்!" என்றார்.

"யவனிகாங்கறது கி.பி.1060–61ஐச் சேர்ந்த அற்புதமான நான்கு சிலைகள். அதைப் பத்தித் தனியா ஆராய்ச்சிப் புத்தகங்களே நாற்பது இருக்குது! அற்புதமான சோழர் காலத்துப் பஞ்சலோகச் சிலைகள். மொத்தமே நாலுதான் உலகத்துல இருக்கு. ஒண்ணு – ஜெர்மனி ம்யூனிச்ல ஒரு பிரைவேட் கலெக்‌ஷன்ல. ஒண்ணு– நியூயார்க் மெட்ரோபாலிட்டன் மியூஸியம் ஆஃப் ஆர்ட்ல. ஒண்ணு– பிரிட்டிஷ் மியூஸியத்துல. நாலாவதுதான் இது."

"தெரியும்! ராஜ செல்லையாங்கறவருடைய பிரைவேட் கலெக்‌ஷன்ல இருந்தது. ராஜ கங்கையாவுடைய சொத்து. அவர் மூத்த மகன் பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்ட். இதை விற்க முயற்சிபண்ணி, மண்டை உடைஞ்சு செத்தார். எல்லாம் தெரியும் சுவாமி. தந்தி பேப்பர்ல விலாவரியா போட்டிருந்தானே!"

"இது தெய்வத்தின் சிலை இல்லை. ஒரு நடன பெண்ணின் சிலை..." என்றார் துர்கா பிரஸாத். "மேல்நாட்டுச் சரித்திர ஆராய்ச்சியாளர்கள், கலாபிமானிகள் எல்லாம் இந்தச் சிலையின் துல்லியமான வடிவத்தைத்தான் பார்க்க விரும்பறாங்க. புடவைகட்டி, பொட்டிட்டு, துளசி மாலை போட்டு அல்ல... இதை மியூஸியத்துல வைக்க வேண்டும்... கோயிலில் அல்ல..."

"ஜி! அதுவும் எங்களுக்குத் தெரியும். அதுக்குத்தான் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமாவாசையின்போது அம்மன் நிர்மால்ய தரிசனம் தருவா. நகையோ, ஆபரணமோ, வஸ்திரமோ... எதும் இல்லாம! அப்ப வெள்ளைக்காராள் கூட்டம் வரும், பாருங்க... வெளிநாட்டிலிருந் தெல்லாம் பஸ் பஸ்ஸா வந்து சேருவா... ராஜ செல்லையாகூட அப்பத்தான் தரிசனத்துக்கு வருவார்..."

"இதிலிருந்தே தெரியலையா, இது அம்மனில்லைனு..."

"அப்படினு நினைச்சுண்டிருக்கீங்க. என் கனாவுல என்ன சேதி வந்தது, தெரியுமா? 'டேய் திருமலை... என்னை எல்லோரும் வெறும் போகப்பொருளா நடன ஸ்த்ரீனு நினைச்சுண்டிருக்கா. திரேதாயுகத்துல அஷ்டபுஜங்கர்னு ஒரு முனிவரை நிந்தனை பண்ணினதால, இந்தக் கணிகை வடிவம் பெறுமாறு சபிக்கப்பட்டேன். இதுக்குப் பரிகாரம் என்னன்னு அந்தக் கோபக்கார ரிஷியையே கேட்டேன். நைமிசாரண்யத்துல போய், மலையடிவாரத்துல பெருமாளை நினைச்சுண்டு, ஓம் நமோ நாராயணாய நமஹனு சொல்லி நூறு வருஷம் தபஸ் இருக்கணும். அதன் பின்னால், உனக்கு ஆழ்வார் பத்தினியா பிறப்பேற்படும். பிறகுதான் இடப்பெயர்ச்சி கிடைக்கும். தெய்வ ஸ்தானம் மீளும்னு சொன்னார்'னு சொல்லிச்சு!"

"இது உங்க கனாவுல வந்ததா ஏன் சாமி புரூடா விடறீங்க?"

"நம்பிக்கையில்லைன்னா இடத்தைக் காலிபண்ணிட்டுப் போடா..."

என்றார் நெற்றியைச் சுருக்கிக்கொண்டு.

"வசந்த், சும்மாரு... நீங்க சொல்லுங்க சுவாமி."

"என் கனாவுல மட்டும் இல்லை. மாடவீதியில் சிங்கன், கச்சேரி ரோடுல கோவிந்து, அப்றம் பொம்மக்கானு கோயிலைக் கூட்டிப் பெருக்கறவ, அப்றம் பாத்திரக்கடை ஷண்முகக்கனி எல்லோர் கனாவுலயும் தோணியிருக்கா. அவா சொன்னாப்பலேயே ஆழ்வார் தர்மபத்தினி கொஞ்ச காலம் காணாமல் போய், தவம் இருந்து மறுபடி தெய்வப் பதவி அடைஞ்சு வந்திருக்கா. இந்தத் தேவதை வடிவம் எல்லாம் டெம்பரரி..." என்றார்.

துர்கா பிரஸாத் புரியாமல், "க்யா போல்தேன் ஹை.. ?" என்றார்.

கணேஷ், "இஸ்கோ சாரான்ஸ் எ ஹை கி யஹான் ஸே மூர்த்திகோ நிகால்னா பஹுத் முஷ்கில் ஹை..." (இதன் சாராம்சம் என்னவென்றால், இங்கிருந்து சிலையை நீக்குவது ரொம்பக் கஷ்டம்.)

"ஐ வில் கெட் எ கோர்ட் ஆர்டர்!"

"ஜி! தெய்வத்துக்கு முன்னால எந்த கோர்ட் ஆர்டரும் செல்லாது. நீங்க இந்துதானே... துர்கா பிரஸாத்னா பிராமின் நேமா இருக்கு!"

அர்ச்சகர் உடைந்த இந்தியில், "துர்கா பிரஸாத்ஜி, நீங்கள் இந்தச் சிலையை நீக்க முற்பட்டால், எல்லா இந்து அமைப்புகளும் எதிர்ப்பு தெரிவித்து மறியல் செய்வார்கள். இந்துக்கள் தூங்கும் சிங்கங்கள். எழுப்பாதீர்கள்..." என்றார். மூணு நாள் தாடியுடன் உக்கிரமாகத் தோற்றமளித்தார். காவி நிற மேல்வேஷ்டியில் 'ராம, ராம' என்று எழுதியிருந்தது.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கையிலேயே, கையில் பிரம்புத் தட்டுடன் மக்கள் நூற்றுக்கணக்கில் பொறுமையுடன் நின்றுகொண்டு, அம்மன் திரை திறக்கக் காத்திருந்தார்கள். மணியடித்து கற்பூர ஆரத்தி காட்ட, யவனிகா தரிசனம் தர... எல்லோரும் கன்னத்தில் போட்டுக்கொள்ளும் சத்தமே பெரிதாகக் கேட்டது.

"ஐ வில் ரிப்போர்ட் டு தி செக்ரெட்டரி, அண்ட் தி மினிஸ்டர். வி வில் ஆல்சோ ப்ரொஸீட் இன் தி கோர்ட்" என்று அவர் கூறிவிட்டுப் புறப்பட, அவருக்கு 'அருள்மிகு யவனிகையம்மன் சந்நிதி, மயிலை' என்று அச்சடித்த பையில் தேங்காய், பழம், தொன்னையில் கடலைப் பருப்பு சுண்டல், ஒரு தாயத்து (உங்கள் மனைவியை அணியச் சொல்லுங்கள்) அளிக்கப்பட்டன.

துர்கா பிரஸாத் புரியாமல் விழித்துக்கொண்டேதான் வெளியே வந்தார். "கணேஷ்! இதற்கு ஒரு பொதுவான ஆங்கிள் இருப்பது இப்போதுதான் தெரிகிறது."

"இந்த நாட்டில்ல எதற்குத்தான் இல்லை?"

"எதற்கும் நீங்கள் சென்னை கோர்ட்டில் எங்கள் இலாகாவின் சார்பில் ஒரு பெட்டிஷன் போட்டு வையுங்கள். இந்தச் சிலையின்

சரித்திர ஆதாரங்களைக் காட்டி, இதைத் தெய்வப்பதவியிலிருந்து மீட்க. எகிப்தில் இவ்வாறு ஒரு கேஸ் அபு சிம்பல் கோயிலின் இடமாற்றத்தில் ஏற்பட்டது."

துர்கா பிரஸாத்தை அனுப்பிவிட்டு அலுவலகத்துக்குச் சென்றபோது, சம்பத் போன் பண்ணியிருந்தார்–தேஜோமயி, கணேஷைப் பார்க்க வருவதாகவும் ஒரு முக்கியமான விஷயம் பேசவேண்டும் என்றும்.

கணேஷுக்குப் புரியவில்லை. "தேஜுவைப் பற்றிய லேட்டஸ்ட் 'கிசுகிசு' என்ன வசந்த்?" என்றான்.

"சில நாளா பார்க்கலை பாஸ். வெள்ளிக்கிழமை பேப்பர்படி, இப்ப ஒரு கிரிக்கெட் ப்ளேயரைக் கல்யாணம் கட்டிக்கப் போறதா பேச்சு..."

"அம்ஜத்?"

"அவன் ஜெயில்ல இருக்கானே, தெரியாதா?"

"எதுக்கு?"

"லைசென்ஸ் இல்லாமத் துப்பாக்கி வெச்சிருந்ததுக்கும் ஷூட்டிங் போறப்ப அரிதான ஒரு மான்குட்டியைச் சுட்டுத் தள்ளினதுக்கும்..."

தேஜோமயி சற்று சதை போட்டிருந்தாள். இன்னும் இரண்டு படத்தில் அக்கா வேஷத்துக்கு ப்ரமோஷன் ஆகிவிடுவாள் போலத் தோன்றியது.

"தேஜு! நீ எக்சர்சைஸ் பண்றதில்லையா?"

"பண்ணணும் கணேஷ்! சம்பத் சார், சொல்லுங்க..."

"ஒரு மெகா பட்ஜெட் படத்துக்கு ஆஃபர் வந்திருக்கு கண்ணா... கதைக்காக டைரக்டர் அலையா அலைஞ்சிண்டிருக்கார். உன்னை வந்து பார்க்கச் சொல்லியிருக்கேன்."

"சம்பத், நான் வக்கீல்..."

"வக்கீல்கிட்ட எத்தனையோ கதைகள், எத்தனையோ கேஸ்கள் இருக்கும். அதுல ஒண்ணை அவுத்து விடேன்! ஒரு பெண் வக்கீலை வெச்சு... ஐடியா! இந்த யவனிகா சிலைக் கதையையே படம் பண்ணலாமே... நியூஸிலாந்து போறப்ப, கதாநாயகி ஏர்போர்ட்ல சிலையைப் பார்க்கிறா!"

"சம்பத், ப்ளீஸ்... ஏற்கெனவே குழப்பத்துல இருக்கேன்."

"யவனிகா சிலை கதையை எடுத்தா, வெடிமருந்துக்கே பட்ஜெட் பத்தாது" என்றான் வசந்த்.

அப்போது அவள் செல்போன் எண்களை ஒத்தி, "ஹாய் பார்த்தோ... ஸ்வீட்டி! மை டியர் பெங்காலி பாய்..." என்று துவங்கினாள். கணேஷ் முகம் சுளித்தான்.

தேஜோமயி தனிமையை விரும்பி, அடுத்த அறைக்குச் செல்ல... இப்போது கணேஷின் டெலிபோன் ஒலித்தது.

"கணேஷ்... கௌரி பேசறேன், சாண்டாகிளாராவிலருந்து..."

"சரியா கேக்கலை... எங்கிருந்து, சாந்தோமா?"

"சாண்டாகிளாரா, கலிஃபோர்னியா... இன்னிக்குத்தான் வந்தேன். ஸாரி, உங்களைக் கல்யாணத்துக்கு அழைக்கலை. எல்லாமே அவசரம்... காலையில சேஷாத்ரி வந்து, மத்தியானம் பெண்பார்த்து, சாயங்காலம் வீட்டோட கல்யாணம்..."

கணேஷ், "வாழ்த்துக்கள்..." என்றான்.

"வசந்த் இருக்காரா?"

வசந்த் போனை வாங்கி, "என்ன கௌரி... கல்யாணமாயிடுச்சா! ஏமாத்திட்டீங்க... நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருந்தேன்."

"கேலி பண்ணாதீங்க... சிலை என்னாச்சு?"

"சிலையா! அது பெரிய கதை... மெய்ல் அட்ரஸ் குடுங்க. விவரம் எழுதறேன்."

"சரி வசந்த்... பை."

தேஜு அறையை விட்டு வெளியே வந்து, "கணேஷ் சார். நான் உங்ககூடத் தனியா பேசறது..." என்றாள்.

"பேசறது... வசந்த் இருக்கிறதா, போறதா?"

"வசந்த், நீயும் இருக்கறது..."

"ஓ! அந்த கிரிக்கெட் மேட்டரா? புத்தி சொல்லுப்பா இவளுக்கு... அலையறா!" என்றார் சம்பத்.

தேஜு, "நான் பார்த்தோவைக் கல்யாணம் பண்ணிக்கலாமா? சொல்லு கணேஷ்..."

"இண்டியன் டீம் ப்ளேயர் பார்த்தோ முகர்ஜி?"

"ஆமாம்!"

"அவனுக்குக் கல்யாணம் ஆயிருச்சே! குழந்தைகூட இருக்கே... அவனை எங்க புடிச்சே?"

"ரெண்டு பேரும் திருப்தில சந்திச்சப்ப லவ் ஆயிருச்சு! எல்லாத்தையும் வுட்டுட்டு வர்றேன்னு சொல்லுது..."

"இது எங்கேயோ கேட்ட மாதிரி இருக்கே! பாரு தேஜு... கல்யாணம் ஆனவங்களை விட்டுரு. யாரை வேணா கல்யாணம் கட்டிக்க. ஆனா, கட்டிக்கறப்ப எத்தனை பேர் மனசு புண்படும்னு யோசிச்சுப்பாரு... அதை மினிமைஸ் பண்ணு. அழகான மனைவி, குழந்தை இருக்கறவங்களை விட்டுரு. நீ பண்ணிக்கணும்னா, இருக்கானே வசந்த்..."

"பாாஸ்...!" என்றான் அதட்டலுடன்.

"இவன் மாதிரி கணவன் கிடைக்கக் குடுத்து வெச்சிருக்கனும் நீ... என்ன வசந்த், ஏற்கெனவே ரிகர்சலும் பார்த்தாச்சு..."

"கொஞ்சம் இருங்க" என்று வசந்த், சட்டென்று வாசல் கதவைத் திறந்து, காணாமல் போனான்.